LB
N29
77093

OF THE ... MADRAS
12 MAY 1930



S. A. KUMARASWAMI ACHARI.

Kughamayam.

# Vaidya Rathna Vachana Bhushanam.

*COMPILED FROM*
Several Practical Sources

BY

**S. A. KUMARASWAMI ACHARIAR AVL.**
OF PORTO NOVO
Pandit in Astrology and Medicine

AND BY

**P. A. KRISHNASWAMI PILLAI AVL.**
Member of the Madura Tamil Sangam
AND TAMIL PANDIT
Luthern Mission Girls School, Porayar

PUBLISHERS OF
Paladeepikai, Jothidaganitham, Putpabantham, Neelakandathajeekam, Sripathi Jathaka Karma Baddhathee, Silparathnakaram, Visvakarmeeya Ayathiporuththa Vizhakkam, Machcha Sastram, etc.

AND PUBLISHED BY
**S. A. MUTHUKUMARASWAMI,**
*Astrologer,*
PORTO NOVO.

*Copy Right.* 1929. *Registered.*

PRINTED AT
THE MANORANJINI PRESS.
2, RAMANUJA IYER STREET.
SOWCARPET, MADRAS
1929.

77093
LB 1129

உ

குகமயம்.

குமார குருப்யோ நம:

# ரத்ந வசன பூஷணம்.

இது

…பபந்தம்' 'சோதிடகணிதம்' 'நீலகண்ட
…பதி ஜாதகபத்ததி' 'சிற்பரத்நாகரம்'
…நீய ஆயாதிப்பொருத்த விளக்கம்'
…ரம்' இவைகளின் பதிப்பாசிரியர்கள்
பறங்கிப்பேட்டை

…சாதிட வைத்திய பண்டிதர்

… ர. குமாரஸ்வாமி யாச்சாரியாரவர்களாலும்
…மிழ்ச் சங்கத் தங்கத்தவரு ளொருவரும்
…சை லுத்தரன் மிசியோன் பெண்கள்
…டசாலைத் தமிழ்ப்பண்டிதருமான

அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையவர்களாலும்

…ல அநுபவ முறைகளினின்றும்

திரட்டப் பெற்று,

…யார்களின் சிஷியனும் சித்தாந்த கணித
ஜோதிஷனுமான

பறங்கிப்பேட்டை

சு. ஏ. முத்துக் குமாரஸ்வாமியால்
பதிப்பிக்கப் பெற்றது.

சுக்கில ஞு சிம்மரவி

1929

(Copy right registered)

PRINTED AT
THE MANORANJINI PRESS,
2, RAMANUJA IYER STREET, SOWCARPET MADRAS.

உ

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம:

# முன்னுரை.

செவ்வி திகழ்பொகுட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று.

உலகிற் றோன்றிய எல்லாப் பிறப்புக்களுள்ளும் மனிதுப் பிறப்பே மாண்புடைத்து. எற்றுக்கெனின், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிது காண்" என்னும் ஆன்றோர் திருவாக் கிருத்தலி னென்க.

இத்திறப் பிறவியாம் நற்றிறப் பிறவி யுடையார் சுகமுடையரா யிருந்தாலன்றி யெத்திற நன்மையும் எய்தப் பெறா ரென்க.

ஒருவாறு மனிதர் சுகாசுக மநுபவிக்க வேண்டியவர் களே யெனினும், "நோய்க்கிடங் கொடேல்," நோயற்ற வாழ்வே "குறைவற்ற செல்வம்" என்னும் முதுமொழிகளின்படி எதிரதாக் காக்கு மறிவுடையாராயின் சுகதேகிகளாகவே வாழ்ந்து மிளிர்ந் தொளிர்வர்க ளென்க.

ஒருவேளை செய்காரியத் தாழ்ச்சி, உணவு, உடை இடம், காலம் முதலியன வேறுபடல் மிகல் குறைதல் முதலியவற்றான் இடருண்டு முந்நாடிகளாற் பீடிக்கப்பட்டு

நோய்வாய்ப்படுவாரு முளர். இத்திறத்தர் தம்மிடர் நீங்கி நன்மை அடையுத் தமது சரீரத்தின் சுகாசுகங்களையும் வியாதியின் சமனம் நிதானம் முதலியவற்றையும் அறிந்து நன்மை யடைதலே மேலென்ப. எற்றுக்கென்னின் அவ் வைத்தியம்:—

நண்ணிய நோயை நாடா தோட்டு
மண்ணிய நோயை யக்கண மகற்று
மாண்பினை யாக்கு மருந்ததைத் தந்து
ஆண்மை யளிக்கு மறிவை யுதவுங்
காலக் கிரம கடுநோ யழிக்குஞ்
சாலச் சிறந்த தகைய தென்ப
வருமுன் காக்கும் வந்தபின் காக்கும்
வருங்காற் காக்கும் வகையது மருளுந்
திருத்தமில் மனத்தைத் தெளிவுறச் செய்ய
விருத்தலா லிதுவே யிணையில தென்க.

மேற்கூறிப் போந்தவாறு மனிதன் சுகமுறுவதற்கு வேண்டிய நன்னெறிகளைக் காட்டி ஆதரிக்கும் வைத்திய சாஸ்திரமே எல்லாக் கலைகளுள்ளும் மேம்பாடுடைத்தாம். ஏனெனில், பிறப்புக்களில் மனுஷப் பிறப்பு சிறப்புடைத்தா யிருத்தல் போலச் சாஸ்திரங்களுள்ளே வைத்திய சாஸ்திரமே சிறப்புடைத்தாம்.

மனிதன் எப்போது தோன்றினனோ அப்போதே மருத்து சாஸ்திரமும் தோன்றியிருத்தல் வேண்டும். எற்றுக்கென்னின் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்னும் முதாட்டி மொழியும் ஈண்டைக் கேற்புடைத்தா யிருத்தலா னென்க. ஆகவே, இதற்கு ஒரு காலவரை யறை ஏற்படுத்த முடியாது. எனவே அதனை ஆக்கவும் ஆளவும் வந்த ஆசிரியர்களின் காலவரையறையையும் திட்டமாய் வரைதற் கொண்ணுது. மனிதர்களுள்ளே, சிறந்த புண்ணிய புருஷனையோ தேவர்களுள் சிறந்த தேவனையோ போற்றிப் புகழாத வேத ஆகம புராண இதிகாசங்கள் இருக்குமேல் வைத்தியத்தைப் புகழாத நூல்களு மிருக்கும்.

பொதுவாக அந்நூல்களை ஆக்கியவர்கள் தேவர்கள் என்றும் முனிவர்கள் என்றும் ஆயுர்வேதர்களென்றும் மருத்துவர்களென்றும் பல படித்தாய்ப் பகருமிப் பாரதகண்டம். எஃதெவ்வாறுயினும் எமக் குடன்பாடே! "யார் குற்றினும் அரிசியாவதே சரி" என்று கூறும் உலக மொழிப்படி வைத்தியத்தை யாராக்கினும் நாம் கொள்ளத் தக்கவர்களே யாம். இந்தச் சித்தாந்தத்திற்கு முரணுக ஆசியரைப் பற்றியும் மருந்து ஆக்கும் முறைகளைப் பற்றியும் தர்க்கித்துக் கொண்டிருத்தல் வீண் காலப்போக்கே யன்றிப் பிறிதொன்று மின்றும்.

மலையகராதி தொகையகராதி முதலியவற்றைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் மருத்துவர் சொல் புலப்படாது மயங்கும் மயக்கத்தை அறவே நீக்கி உலகுக்கு இதம் செய்ய வேண்டி எளிய நடையில் நூலியற்றுவதே ஆசிரியர்கள் கடமை என்ப.

எம்மாசிரியர் கற்பித்த அக்கட்டளைப் பணிச் சிரமேற்கொண்ட யாங்களும் எங்கள் சிற்றறிவிற் கெட்டியவரை பல ஆயுர்வேத யோக சித்த முனிவராதி ஆன்றோர் பல்லோர் ஆக்கியருளிய அரும் பெரு நூலை ஆழ்ந்தறிந்து அவனிக் கணி யென இதனை யாக்கியுள்ளோம்.

அன்றியும் எமதிச்சிறு நூலில் சூரணம் கஷாயம் பாகு மாத்திரை பற்பம் செந்தூரம் மெழுகு தைலம் லேகியம் தீநீர் முதலிய முறைகள் பற்றி அணிவகுத்து எங்கள் முன்னோர்களால் அநுசரிக்கப்பட்டுச் சுமார் 35 வருஷகாலமாக எங்கள் அநுபவத்தில் உள்ள முறைகளை வெளியிட்டிருத்தலுமன்றிப் பொதுவாகவும் கலம்பகமாகவும் சிற்சில முறைகளைத் தீட்டியுமுள்ளோம்.

எங்களரும்பெரு முயற்சியாலாக்கப்பெற்றுள்ள இவ்வைத்திய ரத்ந வசன பூஷணத்தை வைத்திய உலகம் ஆதரித்து எங்களை ஆசீர்வதிக்குமாக. சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,
சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி.
ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை.

பறங்கிப்பேட்டை,
சுக்கிலஹு
சிம்மரவி. 12உ.



உ
குகமயம்.
ஓம் குமார குருப்யோநம:

# பதிப்புரை.

உலகம் தழைக்க இறைவன் உணர்த்திய உபவேதங்களு - சிறந்தோளிர்வது ஆயுர்வேதம். அதனைப் பின்பற்றியே பற்பல சித்தர்கள் ஆக்கிய நூல்கள் வழி நூல்களாம். அவற்றுட் சில மறைபொருட் கிளவிகளாய் மிளிர்கின்றன. இத்தன்மைத்தாய மருத்துப் பாரதம் முதலிய நூல் பொருள்களை ஆய்ந்த பண்டிதர்களே அரிய வல்லுநராவர்.

ஆகவே தெள்ளிய நடையில் ஒள்ளிய பொருள்களையுடையனவாய் எவ்வெச் சமயத்தும் பண்டிதர் உதவியின்றித் தாம்தாமே அறிந்து சிகிச்சை செய்து கொள்ளுவதற்கு ஏற்றனவாய் உள்ள நூல்களே போதிய நன்மை பயக்கும் நூல்களாம். இத்திற நூல்களையே எத்திறப் புலவர்களும் உச்சிமேற் கொள்ளா நிற்பர்.

மேற்கண்ட இம்முறையைத் தழுவிய இந்த வைத்திய ரத்ந வசன பூஷணம் பறங்கிப்பேட்டை எனது தமயனார் ஸ்ரீமாந் சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரியார் அவர்களாலும், எனது தமிழாசிரியர் ஸ்ரீமாந் ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை அவர்களாலும் ஆக்கப் பெற்றிருக்கின்றது.

இவ்வரிய நூல் யாவர்க்கும் நன்மை பயக்கும் என்னுந் துணிபை பற்றுக் கோடாக்கொண்டு இதனை வெளியிட்டுள்ளேன்.

சாதுக்கள் க்ஷேமார்த்தம் எல்லாம் வல்ல எம்மிறை முருகன் திருவருளால் இந்நூல் இனிது வாழ்க. சுபம்.

இங்ஙனம்,
சு. ஏ. முத்துக்குமாரஸ்வாமி,
சித்தாந்த கணித ஜோதிஷன்.

பறங்கிப்பேட்டை,
சுக்கிலஹு
சிம்மரவி. 30உ.

உ

சிவமயம்

## சிறப்புப்பாயிரம்.

இது

சீகாழி லூத்தரன் மிசியோன் உயர்தரபாடசாலைத்
தமிழ்ப்பண்டிதரும் காழிக்கழக ஆசிரியருமாகிய
வித்வ ஸ்ரீமாந்: ப. அ. முத்துத் தாண்டவராய
பிள்ளையவர்கள்
இயற்றியது.

உயிருடல் சார்த லொன்றிய கரும
முயிரினைப் பற்றிய வொருதிற னதலால்
கன்மக் கிளையக் கருது முடற்கு
வன்ம நோய்சில் வருந்தரு ணத்தே

அதனால்,

காலமும் பிணியும் கருதி மாந்தர்க்குச்
சாலுமெய்ப் பிணியைத் தவிர்த்திட வேண்டிச்
சோதிடக் கண்ணுஞ் சுருதி யாயுளு
மோதின னுணர்த்தின னுயர்மறைத் தலைவன்
ஆங்கவை யிரண்டும் பாங்குறப் பயின்று
பற்பல சித்தர் பகர்ந்த முறையையும்
நற்பொரு ளாயுள் நாவலர் முறையையும்
தேறு விதங்கொள் யூநாநி முறையையும்
பாற்பட வகுத்து மேற்படுங் கிரமத்து
முன்னுரை பதிப்புரை முள்ளிய கஷாயம்



பாகுசெய் மாத்திரை பற்பஞ்செந் தூரம்
மெழுகொடு தைலம் விழுமிய லேகியந்
தீநீர் பூபதி திகழும் பதங்கம்
மேநீர்க் கலம்பகம் விரித்துஓர் நூலா
வைத்திய ரத்ந வசன பூடணம்
தைத்திரி யந்தான் சதிர்பெறு மிதுவெனப்
பதிப்பித் தருளிய பாவலன் யாரெனில்
மாதர்செம் முகத்து மைந்தர்தங் கண்ணெனக்
காதலிற் சேயிதழ்க் கமலச் செறிவிற்
கறங்கிசை வண்டமர் காமருந் தடவைப்
பறங்கிப் பேட்டை பண்புறும் பதியி
லேகாம் பரற்றழூஉ மினியவட் பணியும்
ஏகாம் பரற்கிங் கியைந்த தோன்றல்
கணித நூற் கவிஞன் காசினி வாழ்வார்க்
கணியெனும் வைத்திய நாதற் கினியன்
சத்துவ குணத்துச் சாது
முத்துக் குமார சுவாமிமு தறிஞனே.

---

உ

இது

பறங்கிப்பேட்டை இயற்றமிழ்ப் பிரபந்த
வித்வ ஸ்ரீமாந் திருநெறித்தமிழ்
ஆ. நாராயணஸ்வாமிப் பிள்ளையவர்களால்
இயற்றப்பெற்ற
நேரிசை யாசிரியப்பா.

உலகெலா முதலிய வுயர்மறைப் பனவன்
நிலவிய மன்னுயிர் நீக்கமில் பெற்றி
யமைதரப் பெரீஇய வாக்கம் பிணிதபக்
கமைதவிர் ஆயுளே கவினப் பெறுபவை

யம்மறை யாறே செம்மைகொள் காலம்
வருபிணி வருக்க மருவிய தாமே
தவிர்வகை யாதி தழுவிய முறையே
யவிர்தாத் திருத்துபு வாவன வுளவே
யாங்கதின் றிட்ப நுட்பமு மறிந்தே
பாங்குறற் பால பிரிந்துகொண் ணிலேயே
யகத்திய னுக மிகுத்தமாத் தவத்தரும்
பன்னூன் முறையின் மன்னுமா றுணர்த்த
வருமருத் துவநூன் மலிந்தன திரட்டியும்
பொருவரு சித்தர் புகன்றவை கொண்டும்
நாணு விதங்கொள் யூநாநி யுங்கொடு
தண்டமிழ் தழைப்ப வெண்டகு முறைமை
தேற்றமீக் கூர வாற்றுவித் ததுவே
பண்டித வைத்திய பண்புணர் தகுதி
கொண்டன கண்டு குயிற்று துறையில்

சுத்திசெய் வகையை தோமற வயத்தி
ஒத்தநற் சூரண முணர்த்து கஷாயம்
பாகுகொண் மாத்திரை பற்பஞ்செந் தூரம்
வாகமர் மெழுகு தைல வகையே
இலேகியத் தீநீ ரென்பன பதங்கம்

நிலாவிய பூபதி நிறைபற் றுகைவிரி
கலம்பக மெனவே யிலம்பக முறவே
வைத்திய ரத்ந வசன பூடணமென்
செய்திற நறுநூற் செய்தமைத் தனரால்
சோதிட கணித மாதிட முணர்த்து

பன்னூற் பலமிக பதிப்பித் துதவியோர்
வான்பெய ரலேஇய வருபற் காலே
தேன்பொதி மலரே செம்மணி பலவே
தேன்பொதி மலரே செம்மணி பலவே
சங்தொடு மகிலே கந்தலின் ஞாழலே
வருக்கை பலவே பெருக்கு மாவே



யாயர் தங்குடி யேயபால் தயிர்நெய்
வனைய கொளவே யிறைமாட் டன்பு
மேனிலை தாவரு மெய்யடி யவரிற்
றிகழ்சீர் சுவேதச் செழுநதிப் பாங்கர்
ககன மளாய கடிமதிற் கிருட்டின

புரிமாப் பெரும்பதி யுரியமாத் தவத்தர்
விச்சுவப் பிரம விழுத்தகு குலத்தில்
வகாம் பரமா லிருந்தவப் புதல்வனாய்
வாகார் குணத்த மகிபனாய்ப் பல்கலை
விற்பன விவேக விளக்கமார் தலத்தனாய்

குமார சரணங் குலாவு மனத்துக்
குமாரச் சுவாமி குணக்கோ மானும்
தன்னிடை செழீஇய தகைசால் நண்பின்
மன்னிய தாத்தின் வளர்தரு வீர
சைவ வேளாண் டணிமர பிலங்கப்

பொய்தவி ரப்பாச் சுவாமிதன் புதல்வனாய்ச்
செந்தமிழ்ச் சங்கந் தந்த வங்கத்
தொருவ னிலக்கண மருவு மிலக்கிய
சாத்திரந் தெரிந்த சதுரன் சொல்வல
காத்திரன் முருகன் கழன்பற வாத

சரவணச் சுவாமி சரண மறவான்
பிறைசைப் பதியி னிலறபெறு லுத்தரன்
மிசியோன் கழகத் தொசிவிலா சிரியன்
கிருட்டினச் சுவாமியென் றெருட்டுமாப் புலவனும்
திருத்திய விந்நூற் பொருத்திய வாக்கமும்

இருவர்தந் துணிபும் மருவிய நலனும்
ஒருவழி கொளவே யுலகம் புகழ
பதிப்பா சிரியப் பலன்மிகப் பெற்றனன்
துதிப்பார் துதிக்குந் துறைகொள் வாக்கியோர்
முன்னவன் முன்னவ னாக முகிர்கலை —

பின்னவன் றன்னுழை பெற்றனன் அவனே
யணிமணி யாடகத் தமைக்குமாப் பணியிற்
றிணிபொருள் செறியத் தேற்றிய வாங்கு
கணித வகையிற் கணிப்பறு சோதிடப்
பன்மாண் பெறுபலன் பகர வல்லான்

றன்பா லடைந்தவர் தமக்கினி யோனாய்
பன்னரு ஞானப் பண்டிதன் குமரன்
பொன்னடி மறவாப் பொற்பமை தரவே
வாழிய செல்வ மலிதரு நலத்த
உத்தம குணத்தி னுறவோன்
முத்துக் குமாரச் சுவாமிமா முகிலே.

---

உ

இது

சென்னை சிந்தாதிரிப்பேட்டை செந்தமிழ்க்கவியும்

ஸ்ரீ அம்பிகாசாலை யதிபருமான

பிரமஸ்ரீ சி. கி. சுந்தராச்சாரியார் அவர்களால்,

இயற்றப் பெற்றது.

உலகேற்று மகத்தியமா முனிசித்த
ரான்றோர்க ளுவந்து வைத்த
பலவாற்று மருத்துவநூற் பற்பலவு
மாராய்ந்து பண்பிற் றேர்ந்து
நலந்தோற்று மவுடதங்க ளியற்றிப்பல்
பிணியோரை நாடிக் கண்டு
குலம்போற்று மனுபவமாய்க் கைவந்த
முறையெல்லாங் குறிப்பிற் கொண்டு



உலகோர்கட் குதவவொரு வைத்யரத்ந
வசனமென்றே யொருநூ லாக்கிப்
பலபேர்கள் கற்கவுநற் சிகிச்சைகள்செய்
துய்யவுநோய் பரிந்து கண்ட

நிலமாரு மிமம்போனில் லாதொளிக்க
வும்மகியி னிலவத் தந்தான்
சலமாரிப் பண்டிதன்யா ரென்னில்மகான்
கம்பளமா சாமி யானோன்

இன்னணநன் னுறணையே பறங்கிநகர்
விசுவகுல மேகம் பப்பேர்
மன்னவநற் றவவுருவா முத்துகுமா
ரஸ்வாமி மாக்கண் ணாளன்
பின்னமிலா தச்சில்பதிப் பித்தெவர்க்கும்
வெளியாக்கிப் பெருமை யுற்றான்
பன்னூலு மிந்நூற்போற் பண்டிதர்க்குங்
கிட்டாது படித்துய் வீரே

---

உ

இது

தில்லையாளி முருகானந்த வைத்திய சாலையி னதிபரும்;

தமிழ் வித்துவானு மாகிய,

திருவாளர்: நா. தம்பியப்ப செட்டியாரவர்களால்,

இயற்றப் பெற்றது.

உறைமதி முடிகொள் பெம்மான்
உயர்நில மக்க ளுய்ய
மறைதரு கலைக ளாதி
மன்னவைத் தனன வற்றுட்
கறையறு முபவே தத்தின்
கண்ணதா மருத்து நூலு
முறைதர பெருமந் நூலி
னுண்மையா ருரைக்கற் பாலர்.

அன்னதோ நூலி னுக்க
மருந்தவ முனிவர் பல்லோர்
துன்னிருள் கடிந்த தூயர்
துரிசறத் தொகுத்து வைத்த
தின்னிலை யனைத்துந் தேர்ந்திங்
கிதும்பொரு ளெனத்தி ரட்டி
மன்னிட வைத்திய ரத்ந
வசனபூ டணமா மென்ன. 2.

திருவளர் நூலொன் றுக்கி
செறிவுற வமைத்துத் தந்த
மருவளர் புகழோன் யாரேல்
மலைமக டோய்ந்து மாந்தர்
கருவளர் துன்ப நீக்குங்
கருணையங் கடல்தா னுழி
வருமகன் பிணியொ ழித்த
வாருண நகரின் கீழ்சார். 3.

---

அரும்பவிழ் நெய்தற் பாங்க
ரகன்கரைக் கைதை வேலி
சுரும்பவிர் புன்னைக் கானந்
துள்ளுசேல் விழிநு ளைச்சி
கரும்பினன் மொழியும் போதின்
கந்தமுங் கொள்ளச் சேரும்
பெரும்பொருட் பறங்கிப் பேட்டை
பெயரிய நகரில் வாழ்வான் 4.

கற்பவை யனைத்துங் கற்றுக்
காமனைப் பொருவு மாண்புஞ்
சொற்றகு வலனு மேய்ந்தான்
சுருதிநூல் மொழிந்த வேத



வித்தகன் மரபின் வந்த
விசுவகன் மப்பேர் மேலோன்
முற்படு குலத்துத் தோன்று
முதல்வனே காம்ப ரன்செய்

கணித நூற் கடலும் பொன்செய்
கலையெனுங் கடலு முண்டு
துணிதரு முனிவ னென்ன
துறைமுழு துணர்ந்த தொல்லோன்
பணிதரு குகன்பா லன்பு
பரவிய பண்பி னுன்றே
குனிதிகழ் புருவ முத்துக்
குமாரநற் சுவாமி தானே.

இது

பறங்கிப்பேட்டை வித்வ ஸ்ரீமாந்:

C. முகம்மது அப்துல்காதிர் மரைக்கார்

அவர்களால்

இயற்றப்பெற்ற.

நேரிசை யாசிரியப்பா.

பூமலி குவட்டுப் பொதிய மாதவன்
நாமலி புகழி னற்றவத் திலங்கு
பன்னிரு வோர்க்குப் பகர்ந்த வாகட
நன்னூற் பலவா நண்ணிப் பொலிவுறும்
அந்நூற் கண்ணே யமைந்து கிடப்பவை
முன்னோ ரனுபவ முறைமைய தாகும்
அத்தகு முறையை யகனில மெல்லாம்
வைத்த வார்வின் மருவினர் கொள்ளத்
தெள்ளிய் நடையிற் றெளிவுறக் காட்டியும்

எள்ளிய பல்பிணி யெய்தா தகற்றவும்
கையே டாக வைபத் திருந்தவை
சேகரித் தெவர்க்கு மீகையிற் கவின
வைத்திய ரத்தின வசனபூ டணமா
முத்தம நூலை யுபகரித் ததவு
பறங்கிப் பேட்டையென் னறங்கொணற் பதியில்
விச்சுவக் குடியி னுச்சித நெறியன்
குமாரச் சுவாமியென் கொற்றவன் றானும்
இமாசலக் குமாரி யீன்றசேய் மறவா
திருட்டினச் சுவாமியாந் தெருட்டுமாப் புலவனும்
வான்முறை வரைந்து கரம்பெறத் தொகுத்தனர்
அரியவின் னறிநூ லச்சியற் றதுவாம்
பெரியமாச் செல்வம் பெற்றன னவனே
முத்துக் குமார முதல்வனை மறவா
முத்துக் குமார சுவாமி
திருமகள் நோக்க மருவுகோ மானே.



குகமயம்.

ஓம் குமாரகுருப்யோ நம :

# வைத்திய ரத்ந வசன பூஷணத்தின்

# உள்ளுறை.


| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| | துதி | 1 |
| 1 | வைத்தியன் தெரிந்து கொள்ளவேண்டிய சிலவிதிகள் | 1 |
| 2 | ரோகங்களின் காலவரையறை | 2 |
| 3 | நோய்க்கு மருந்துண்ணுங் காலம் | 4 |
| 4 | சிகிச்சைக்கு ஏற்ற தினம் | 6 |
| 5 | நாடி யிலக்கணம் | 8 |
| 6 | தூதனின் இலட்சணம் | 17 |
| 7 | நோயகன்ற பின் ஸ்நானம் செய்ய வேண்டிய காலம் | 19 |
| 8 | சுத்தி முறை | 20 |
| 9 | நூல் | 23 |
| | சூரணவினம் | |
| 10 | சுதரிசன சூரணம் | 23 |
| 11 | சுகபேதி விரேசினி | 24 |
| 12 | காயச் சூரணம் | 24 |
| 13 | தாளிசபத்திரி சூரணம் | 25 |
| 14 | தீபாக்கினி சூரணம் | 25 |
| 15 | ஏலாதி சூரணம் | 25 |
| 16 | வேறு | 26 |
| 17 | வேறு | 26 |
| 18 | மல்லிச் சூரணம் | 26 |
| 19 | ஓமச் சூரணம் | 27 |
| 20 | கோஷ்ட சூரணம் | 27 |
| 21 | சந்தனாதிசூரணம் | 28 |
| 22 | பித்தநாச சூரணம் | 28 |
| 23 | வாக்குவல்லப சூரணம் | 29 |
| 24 | பஞ்சதீபாக்கினி சூரணம் | 29 |
| 25 | வேறு | 29 |
| 26 | திராட்சை சூரணம் | 29 |
| 27 | மஞ்சட்காமாலை சூரணம் | 30 |
| 28 | பாஸ்கர சூரணம் | 30 |
| 29 | மேகச் சூரணம் | 31 |
| 30 | மூங்கிலுப்புச் சூரணம் | 31 |
| 31 | பித்தகாங்கைச் சூரணம் | 31 |
| 32 | நிலாவாரைச் சூரணம் | 32 |
| 33 | சணமாந்த நிவாரண சூரணம் | 32 |
| 34 | வல்லாரைச் சூரணம் | 32 |
| 35 | அம்ருதவல்லிச் சூரணம் | 33 |
| 36 | சீரகச் சூர்ணம் | 34 |
| | கஷாயவினம். | |
| 37 | சுரக் கஷாயம் | 34 |
| 38 | வாதசுரக் கஷாயம் | 35 |
| 39 | வேறு | 35 |
| 40 | பித்தசுரக் கஷாயம் | 35 |
| 41 | சிலேட்டும சுரக்கஷாயம் | 35 |
| 42 | வேறு | 36 |
| 43 | ஜன்னிபாதசுரக் கஷாயம் | 36 |
| 44 | திருதீயசுரக் கஷாயம் | 36 |
| 45 | சாதுர்த்திகசுரக் கஷாயம் | 37 |

| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 46 | மருதம்பட்டைக் கஷாயம் | 37 |
| 47 | ஆடாதோடைக் கஷாயம் | 37 |
| 48 | நெருஞ்சிற் கஷாயம் | 38 |
| 49 | திரிபலைக் கஷாயம் | 38 |
| 50 | சிந்திற்கொடிக் கஷாயம் | 38 |
| 51 | தேவதாரு கஷாயம் | 38 |
| 52 | சிந்திற்கொடிக் கஷாயம் | 38 |
| 53 | பற்பாடகக் கஷாயம் | 39 |
| 54 | வில்வக் கஷாயம் | 39 |
| 55 | கருங்காலிக் கஷாயம் | 39 |
| 56 | விஷமஜ்வரக் கஷாயம் | 39 |
| 57 | சர்வசுரக் கஷாயம் | 40 |
| 58 | சர்வ பித்த சந்தனக் கஷாயம் | 40 |
| 59 | சன்னி பாத சுரக்கஷாயம் | 40 |
| 60 | கண்டமாலை நிவாரணக் கஷாயம் | 41 |
| 61 | நீர் பிரிக்குங் கஷாயம் | 41 |
| 62 | திரிபலைக் கஷாயம் | 41 |
| 63 | உதிரச்சிக்கல் நிவாரணக் கஷாயம் | 41 |
| 64 | கையாந்தகரைக் கஷாயம் | 42 |
| 65 | சர்வசுரக் கஷாயம் | 42 |
| 66 | மருந்துண்ட வெப்பத்தாலான சீதபேதிக்குக் குடிநீர் | 43 |
| 67 | சிந்தூர வீறுணி | 43 |
| 68 | இரசவேக சம்ரக்ஷணி | 43 |
| 69 | தந்தரோக நிவாரணி | 43 |
| 70 | சில்விடவேக நிவாரணக் கஷாயம் | 43 |
| 71 | சர்வபித்தரோக நிவாரணக் கஷாயம் | 44 |
| 72 | ஆரோக்கிய பரிபாலனக் கஷாயம் | 44 |
| 73 | பித்தசோகை நிவாரணக் கஷாயம் | 44 |
| 74 | இரசவேக நிவர்த்திக் கஷாயம் | 45 |
| 75 | வீக்க நிவாரணக் கஷாயம் | 45 |
| | **பாகுவினம்** | |
| 76 | துளசி தளம் | 45 |
| 77 | எலுமிச்சம் பழம் | 45 |
| 78 | தாமரைப்பூ | 46 |
| 79 | வேறு | 46 |
| 80 | ரோஜாப்பூ | 46 |
| 81 | வேறு | 46 |
| 82 | சந்தனம் | 47 |
| 83 | வேறு | 47 |
| 84 | நாரத்தம்பழம் | 47 |
| 85 | இனிப்பு மாதளை | 48 |
| 86 | பச்சைத் திராட்சை | 48 |
| 87 | வில்வம் | 48 |
| 88 | புளிப்பு மாதளை | 48 |
| 89 | நன்னாரி | 49 |
| 90 | நெரிஞ்சில் | 49 |
| 91 | இஞ்சி | 49 |
| 92 | வல்லாரை | 49 |
| 93 | காடி | 50 |
| 94 | செம்பருத்திப்பூ | 50 |
| 95 | நாவற்பழம் | 50 |
| 96 | அத்திப்பழம் | 50 |
| 97 | வாதுமை | 51 |
| 98 | முள்ளங்கி | 51 |
| 99 | வெற்றிலை | 52 |
| 100 | காசினியிலை | 52 |
| 101 | பித்தசூடு நிவர்த்திப்பாகு | 52 |
| 102 | யாளிவிரை | 53 |
| | **மாத்திரையினம்** | |
| 103 | ஏலம் | 53 |
| 104 | சச்சிதானந்த பைரவம் | 53 |
| 105 | சன்னிக்குக் குளிகை | 54 |
| 106 | கோடாகுடிக் குளிகை | 54 |





| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 107 | கோரோசனைக் குளிகை | 55 |
| 108 | சுகானந்த மாத்திரை | 55 |
| 109 | கோடோசுழிக் குளிகை | 56 |
| 110 | வேறு | 58 |
| 111 | வேறு | 59 |
| 112 | பைரவ மாத்திரை | 60 |
| 113 | வேறு | 60 |
| 114 | பைரவானந்த மாத்திரை | 60 |
| 115 | ஆனந்தபைரவ மாத்திரை | 61 |
| 116 | வேறு | 61 |
| 117 | வேறு | 62 |
| 118 | சுகானந்தபைரவமாத்திரை | 62 |
| 119 | வேறு | 62 |
| 120 | வாந்திபேதி நிவாரண மாத்திரை | 62 |
| 121 | வேறு | 63 |
| 122 | கஸ்தூரி மாத்திரை | 63 |
| 123 | கோரோசனை மாத்திரை | 63 |
| 124 | வேறு | 63 |
| 125 | குங்குமப்பூ மாத்திரை | 64 |
| 126 | இராமபாணக் குளிகை | 64 |
| 127 | விஷபாதஜன்னி குளிகை | 65 |
| 128 | சன்னிபாதக் குளிகை | 65 |
| 129 | வேறு | 65 |
| 130 | சர்வ சுரநாசக் குளிகை | 65 |
| 131 | வேறு | 66 |
| 132 | வைரமணி மாத்திரை | 66 |
| 133 | தாளக மாத்திரை | 66 |
| 134 | சிவப்பு மாத்திரை | 67 |
| 135 | வெண்காரக் குளிகை | 67 |
| 136 | கிராணிக்குளிகை | 68 |
| 137 | கிரந்திக் குளிகை | 68 |
| 138 | வேறு | 68 |
| 139 | வாதராக்கதக் குளிகை | 68 |
| 140 | நேத்திரரோக நிவாரணக் குளிகை | 69 |
| 141 | சஞ்சீவி மாத்திரை | 69 |
| 142 | வேறு | 69 |
| | **பற்பவினம்** | |
| 143 | வெள்வங்கம் | 70 |
| 144 | வேறு | 71 |
| 145 | முத்துச்சிப்பி | 71 |
| 146 | படிக்காரம் | 72 |
| 147 | அப்ளாக்காரம் | 72 |
| 148 | பிரவாளம் | 73 |
| 149 | வேறு | 73 |
| 150 | வேறு | 75 |
| 151 | வேறு | 75 |
| 152 | வேறு | 76 |
| 153 | வேறு | 76 |
| 154 | நாகம் | 77 |
| 155 | படிக்காரம் | 77 |
| 156 | கந்தகம் | 77 |
| 157 | வேறு | 78 |
| 158 | சங்கு | 78 |
| 159 | மான்கொம்பு | 79 |
| 160 | வேறு | 79 |
| 161 | அஞ்சனக்கல் | 80 |
| 162 | வெள்ளி | 80 |
| 163 | பூரம் | 80 |
| 164 | சலாசத்து | 81 |
| 165 | சுவர்ணம் | 81 |
| | **செந்தூரவினம்** | |
| 166 | குமாரச் செந்தூரம் | 81 |
| 167 | அப்பிரேகம் | 82 |
| 168 | நாகம் | 83 |
| 169 | இரசம் | 84 |
| 170 | வேறு | 82 |
| 171 | வேறு | 85 |
| 172 | வேறு | 86 |
| 173 | வேறு | 87 |
| 174 | வேறு | 89 |

| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 175 | வேறு. | 89 |
| 176 | சண்டமாருதச் செந்தூரம் | 90 |
| 177 | மால்தேவி செந்தூரம் | 90 |
| 178 | இராமபாண செந்தூரம் | 91 |
| 179 | அயம் | 92 |
| 180 | வேறு | 93 |
| 181 | வேறு | 93 |
| 182 | காந்தம் | 94 |
| 183 | வெள்வங்கம் | 97 |
| 184 | வாந்திபேதி நிவாரணச் செந்தூரம் | 97 |
| 185 | உப்பு | 99 |
| 186 | அயம் | 100 |
| 187 | வீரம் | 100 |
| 188 | அக்கினி குமாரச் செந்தூரம் | 101 |
| | **மெழுகுவினம்.** | |
| 189 | கஸ்தூரி | 101 |
| 190 | வேறு | 101 |
| 191 | வேறு | 102 |
| 192 | இலிங்கம் | 102 |
| 193 | காந்தம் | 102 |
| 194 | வீரம் | 103 |
| 195 | வேறு | 103 |
| 196 | வேறு | 104 |
| 197 | வேறு | 104 |
| 198 | கலிங்கம் | 104 |
| 199 | காயம் | 105 |
| 200 | பூரம் | 105 |
| 201 | வேறு | 106 |
| 202 | வேறு | 106 |
| 203 | இரசம் | 106 |
| 204 | வேறு | 107 |
| 205 | கந்தகம் | 107 |
| 206 | சாரம் | 107 |
| 207 | நவலவணம் | 108 |
| 208 | டாலரசம் | 108 |
| | **தைலவினம்** | |
| 209 | குமரி | 109 |
| 210 | பொன்னுங்கண்ணி | 109 |
| 211 | வேறு | 109 |
| 212 | தாமரை | 109 |
| 213 | கீழாநெல்லி | 110 |
| 214 | அறுகு | 110 |
| 215 | வல்லாரை | 110 |
| 216 | தேங்காய் | 111 |
| 217 | நொச்சி | 111 |
| 218 | சந்தனம் | 111 |
| 219 | வேம்பு | 112 |
| 220 | வில்வம் | 112 |
| 221 | நெல்லிக்காய் | 113 |
| 222 | கரிசாலை | 113 |
| 223 | அகத்திக்கீரை | 114 |
| 224 | இலந்தை | 114 |
| 225 | கணைச் சூட்டிற்கெண்ணெய் | 114 |
| 226 | வேறு | 114 |
| 227 | வேறு | 114 |
| 228 | வேறு | 115 |
| 229 | கரப்பானுக்கு எண்ணெய் | 116 |
| 230 | குமரி | 116 |
| 231 | சுரநாசத் தைலம் | 117 |
| 232 | கொம்பரக்கு | 117 |
| 233 | மிளகு | 117 |
| 234 | கீழ்க்காய் நெல்லி | 118 |
| 235 | சந்தனம் | 118 |
| 236 | ஆமலகம் | 119 |
| 237 | விலாமிச்சு | 120 |
| 238 | கூந்தல் வளரும் தைலம் | 120 |
| 239 | பீநச நிவாரண தைலம் | 120 |
| 240 | பெரும்பாடு நிவாரண தைலம் | 121 |
| 241 | இரண நிவாரண தைலம் | 121 |
| 242 | ஆதண்டைத் தைலம் | 121 |
| 243 | தேங்காய் | 122 |





| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 244 | பீஜவாத ரோக நிவாரண தைலம் | 122 |
| 245 | காங்கை நிவாரண தைலம் | 122 |
| | **இலேகியவினம்** | |
| 246 | ஆமலகம் | 123 |
| 247 | கண்டங்கத்திரி | 123 |
| 248 | திரிகடுகு | 124 |
| 249 | மாதுளம்பழம் | 124 |
| 250 | பூசுணிக்காய் | 124 |
| 251 | வேறு | 125 |
| 252 | வேறு | 125 |
| 253 | வில்வம் | 126 |
| 254 | வேறு | 126 |
| 255 | வேறு | 127 |
| 256 | நிலப்பனங்கிழங்கு | 127 |
| 257 | முருங்கைப்பூ | 128 |
| 258 | முருங்கைப்பிசின் | 128 |
| 259 | நெருஞ்சில் | 129 |
| 260 | திராட்சை | 129 |
| 261 | சிவகாந்தை | 130 |
| 262 | அசுவகந்தி | 130 |
| 263 | அதிமதுரம் | 130 |
| 264 | நெல்லிக்காய் | 131 |
| 265 | ஈந்து | 131 |
| 266 | கண்டங்கத்திரி | 131 |
| 267 | திரிகடுகு | 132 |
| 268 | மதனகாமேசுவரம் | 132 |
| 269 | தூதளை | 133 |
| 270 | வெள்ளுள்ளி | 133 |
| 271 | சீரகம் | 133 |
| 272 | வெந்தயம் | 134 |
| 273 | ஜாதிக்காய் | 134 |
| 274 | தென்னம்பூ | 134 |
| | **தீநீர் இனம்** | |
| 275 | ஏலம் | 135 |
| 276 | பெருஞ்சீரகம் | 136 |
| 277 | தாமரைப்பூ | 136 |
| 278 | வெண்டாமரைப்பூ | 136 |
| 279 | ஓமம் | 136 |
| 280 | புதினா | 137 |
| 281 | சந்தனம் | 137 |
| 282 | ஆவாரம்பூ | 137 |
| 283 | துத்திச் சமூலம் | 138 |
| 284 | மணித்தக்காளி | 138 |
| 285 | தாழம்பூ | 138 |
| 286 | காவஜுபான் | 138 |
| 287 | ஓமம் | 139 |
| 288 | அகில் | 139 |
| 289 | சோம்பு | 139 |
| 290 | சிவகரந்தை | 140 |
| 291 | பால் | 140 |
| | **பொதுவினம்** | |
| 292 | சுவர்ண பூபதி | 140 |
| 203 | ஈசுர பூபதி | 141 |
| 294 | இரசபதங்கம் | 141 |
| 295 | வேறு | 142 |
| 296 | வீரபதங்கம் | 143 |
| 297 | குழந்தைகளுக்குச் சுகபேதி | 143 |
| 298 | ஆடாதோடை லேகியம் | 144 |
| 299 | நிம்பாதிக் கஷாயம் | 144 |
| 300 | நெல்லிக்காய் லேகியம் | 144 |
| 301 | வச்சிர கண்டி மாத்திரை | 145 |
| 302 | கந்தகதைலம் | 145 |
| 303 | ஏரண்டலேகியம் | 146 |
| 304 | நாக்குப்பூச்சி நிவர்த்தி கஷாயம் | 147 |
| 305 | குதகவாயுவால் உண்டாகும் வயிற்றுவலிக்குக் கிருதம் | 147 |
| 306 | சிந்திற் கஷாயம் | 148 |

| எண். | உள்ளுறை. | பக்கம். | எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 307 | வயிற்றுப் பொருமல் நிவாரிணி | 148 | 312 | பாவன கடுக்காய் | 150 |
| 308 | தாளிசபத்திரி சூரணம் | 148 | | கலம்பகம். | |
| 309 | ஜலமஞ்சரி | 148 | 313 முதல் 421 | அநேக அரிய பெரிய முறைகள் 108 அடங்கியவை. | 151 முதல். 176 வரை. |
| 310 | சிந்தாதி எண்ணெய் | 149 | | | |
| 311 | தீபனகற்கம் | 149 | | | |




உ

குகமயம்.

# பிழையுந் திருத்தமும்.

இப்பிழைத் திருத்தங்களை அவ்வப்பக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 18 | அல் | அல்லது |
| 3 | 19 | ஹாற்படி | நூற்படி |
| 6 | 2 | தைத்தியஞ் | வைத்தியஞ் |
| 7 | 19 | நாளுங் கோளும் நலமுட | நாளாங் கோள்க ணலமுட |
| ,, | 20 | னவனே | ஞகி |
| 12 | 16 | உண்மை | துண்மை |
| 15 | 18 | அறையக | அறையக் |
| 17 | 12 | சடத்திலுளள | சடத்திலுள்ள |
| 18 | 15 | ரோகஙகள் | ரோகங்கள் |
| 26 | 3 | மத்தி | மத்தித் |
| ,, | 18 | தேன்' | தேன் |
| ,, | 21 | வயிறறுவலி | வயிற்றுவலி |
| ,, | 23 | மல்லி சூரணம | மல்லிச்சூரணம் |
| ,, | 25 | கருவேடபிலை | கருவேப்பிலை |
| 27 | 1 | நெலவி முள்ளி | நெல்வி முள்ளி |
| 29 | 3 | வசம்பம் | வசம்பும் |
| 32 | 5 | பெய்துண | பெய்துண் |
| 35 | 21 | கஷுயஞ் | கஷாயஞ் |
| 39 | 15 | சேத் | சேர்த் |
| ,, | 10 | அதில | அதில் |
| ,, | 24 | நிலவேமபு | நிலவேம்பு |
| 40 | 7 | தாமரை, | தாமரை |
| 43 | தலையங்கம் | | 43 |
| 46 | 8 | நீர்ச்கட்டு | நீர்க்கட்டு |
| 47 | 24 | பழப்பாகை | பழப்பாகு |
| 48 | 17 | போசத்தால் | ரோகத்தால் |
| 50 | 12 | கும | கும் |
| 54 | 1 | 3 நாள | 3 நாள் |
| 65 | 4 | தீர்கலோடு | தீர்தலோடு |
| ,, | 5 | விரேசனமும | விரேசனமும் |
| 66 | 8 | பழச்சாற்றுல | பழச்சாற்றுல் |

# பிழையுந் திருத்தமும்.

இப்பிழைத் திருத்தங்களை அவ்வப்பக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ,, | 26 | கலவத்திட்டு | கல்வத்திட்டு |
| 68 | 21 | குள்கை | குளிகை |
| 71 | 21 | முத்துச்சிப்பி | முத்துச்சிப்பி |
| 72 | 6 | படிக்காசம் | படிக்காரம்: |
| 74 | 9 | கொள்ளுவா ர் | கொள்ளுவார் |
| 76 | 16 | எலுமிச்சம் பழச | எலுமிச்சம் பழச் |
| ,, | 21 | அரை தது | அரைத்து |
| 77 | 22 | கநதகத் | கந்தகத் |
| 80 | 6 | யிலைச்சாற்றில | யிலைச்சாற்றில் |
| 81 | 18 | பற்பம | பற்பம் |
| 88 | 1 | மூடு | மூடும் |
| 93 | 8 | சோகை | சோகை |
| 109 | 17 | அறைக்கா ற | அரைக்கா ந் |
| 110 | 10 | வேப்பப் | வேப்பம் |
| 112 | 8 | கொளளுக | கொள்ளுக |
| 119 | 3 | மச்சோலம் | கச்சோலம் |
| ,, | 25 | மூத்தக்காசு | முத்தக்காசு |
| 123 | 13 | ஆரோக்கிம் | ஆரோக்கியம் |
| 125 | 3 | அ மல பித்தம் | அம்ல பித்தம் |
| 130 | 24 | பததியம் | பத்தியம் |
| 136 | 9 | விதழ்ளை | விதழ்களை |
| ,, | 12 | உஷ்ணப | உஷ்ணப் |
| 139 | 11 | அகில் | அகில். |
| 140 | 7 | உபயோகிக்க | உபயோகிக்க |
| 142 | 12 | கனித்தனி | தனித்தனி |
| 145 | 8 | வச்சிர கணடி | வச்சிரகண்டி |
| 148 | 25 | சலா, | சலா |
| 151 | 16 | மூக்கிலும | மூக்கிலும் |
| 156 | 7 | வைக | வைக் |
| ,, | 9 | பிழிந்தசாறுச | பிழிந்தசாறும் |
| 163 | 2 | நவ்லெண்ணையும் | நல்லெண்ணெயும் |
| 172 | தலையங்கம் | 17 | 172 |



# பிழையுந் திருத்தமும்

இப்பிழைத் திருத்தங்களை அவ்வபக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

| பக்கம். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 23 | முந்நாடிகள ற் | முந்நாடிகள்ற் |
| v | 14 | ஆசியரைப் | ஆசிரியரைப் |
| vi | 19 | குமாரல்வாமி | குமாரஸ்வாமி |
| ix | 25 | முதலிய | முதவிய |
| x | 23 | வைத்தீய | வைத்திய |
| x | 29 | தேன்பொதிமலரே செம்மணிபலவே | |
| xvi | 11 | 29 | 20 |

மேலேகண்டவைகளல்லாத பிழைகளுமிருப்பின் திருத்திக்கொள்ளுக.

உ

குகமயம்

ஓம் குமார குருப்யோநம:

# வைத்திய ரத்ந வசன் பூஷணம்.

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

உம்பர்கோன் பெண்ணு மொருவேட் டுவன்மகளு
செம்பொற் புயங்கொண்ட செவ்வேளே—வம்பவிழ்தார்
மாவேணி யாற்கு மறைவிரித்த மாவேடன்
காவேணிற் கொள்வாங் கனிந்து.

## வைத்தியன் தெரிந்து கொள்ள வேண்டிய சில விதிகள்.

உயர்தர சாஸ்திரங்கள் உரைக்குமாறு:--*சோதிடத்தில் ஒரு சிறிதேனும் ஆராய்ச்சியுடையா னொருவனே வைத்தியத்

* ஓவியன், கவிராயன், வைத்தியன், சோதிடன் ஆதியோர் சந்திராதித்தர் உள்ள பரியந்தம் நிரகாழ்வர் என நூல்கள் தெரிவிக்கினும், இக்கூற்றுக்கள் பிரமாணமின்றிச் செய்யுநரையே சாருமென்க.

தொறையுண்ணுழைதல் நன்றும். எற்றுக்கெனில், அசுவதியிற் சுரந் தொடங்கினால் 9 தினங்களிலும், பரணியில் 5 தினங்களிலும், கார்த்திகையில் 7 தினங்களிலும், உரோகணியில் 21 தினங்களிலும் சுகமுண்டாகு மென்றும், கேட்டை, ஆயில்யம், சுவாதி, திருவாதிரை, கார்த்திகை, பூரம், பூராடம், பூரட்டாதி, பரணி, ரேவதி, சதயம், அநுஷம் இவைகளில் வியாதி கண்டால் மரணத்துக்கு நேரான தொந்தரையுண்டென்றும், மிருக சீரிடத்தில் ஆரம்பித்தால் 5 அல்லது 9 நாட்களில் சுகமா மென்றும், திருவாதிரையில் 5 தினங்களிலோ 3 பட்சங்களிலோ மரண முண்டாமென்றும், புனர் பூசத்தில் 7 ராத்திரிகளிலும், பூசம் ஆயில்யங்களில் 8 தினம் அல்லது நீடித்த காலத்திலேனும் மரண முண்டாகு மென்றும், மகத்தில் 7 இரவு அல்லது அடுத்த மகத்துக்குள்ளேனும் மரண முண்டாகுமென்றும், பூரத்தில் உற்பவிக்கின் 21 ராத்திரிக்குள் சுகமாகுமென்றும், உத்தரத்தில் உற்பவித்தால் 9 இரவுக்குள்ளும், அஸ்தத்தில் 7 இராத்திரிக்குள்ளும், சித்திரையில் 8 இரவு அல்லது அடுத்த சித்திரைக்குள் சுகமாகுமென்றும், சுவாதியில் ஆரம்பித்தால் 10 ராத்திரி அல் 3 பட்சங்களுக்குள் சுகமாகுமென்றும், விசாகத்தில் 25 தினங்களுக்குள்ளேயும், அனுஷத்தில் 10 தினங்களுக்குள்ளேயும் சுகமாகு மென்றும், கேட்டையில் 12 பகல்களிலும், மூலத்தில் 10 ராத்திரிகளிலும், பூராடத்தில் 8 ராத்திரிகளிலும், உத்தராடத்தில் 1 மாதத்திலும் சுகமாகுமென்றும், திருவோணத்தில் 8 ராத்திரிகளிலும், அவிட்டத்தில் 10 ராத்திரிகளிலும் சுகமாகுமென்றும்; சதயத்திலும் பூரட்டாதியிலும் வியாதிகாணில் 6, 12 பகல்களுக்குள்ளே மரணமுண்



டாகுமென்றும், உத்தரட்டாதியில் 1 பட்சத்திலும், ரேவதியில் 8 பகலுக்குள்ளும் சுகமுறுவானென்றும்,

ஞாயிறு செவ்வாய் சனி சதுர்த்தி நவமி சதுர்த்தசி ஆகிய இவ்வாரம் திதிகளோடுகூடிய திருவாதிரை, ஆயில்யம், மகம், சுவாதி, கேட்டை, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதி முதலிய நட்சத்திரங்களில் வியாதி காணின் ஜீவியம் அரிதாமென்றும்,

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, சஷ்டி, அஷ்டமி, அமாவாசை, துவாதசி முதலிய திதிகளில் நோயுண்டானால் மரணமும், * சகுனி முதலிய ஸ்திர கரணங்களிலும் ** விஷ்டி கரணங்களிலும் வியாதி உண்டானால் நாசமும், ஜன்ம நட்சத்திரத்தும் அதன் 19, 7. 5, 3, 10 ஆவது நாட்களிலும் நோயுண்டானால் வருத்தம் நாசம் இவை சம்பவிக்குமென்றும்,

வியாதியால் பீடிக்கப்பட்ட ஒருவனுக்குச் சந்திராஷ்டமத்தும் மேற்கூறப்பெற்ற † தக்தயோகத்தும் 22-வது நட்சத்திரத்து 88-ம் பாதத்தும், அசுபவார கோசாரத்தும் விஷ

---

* சகுனம், சதுஷ்பாதம், நாகவம், கிமஸ்துக்கினம்.

** பத்திரகரணம், பலதீபிகை நூற்படி விஷ்டி ஸ்திரகரணங்கள், பூர்வபக்கத்து அஷ்டமி பௌர்ணமி இவற்றின் முதற்கூறும் சதுர்த்தி ஏகாதசி இவற்றின் பிற்கூறும் கிருஷ்ணபக்கத்துச் சத்தமி சதுர்த்தி இவற்றின் முற்கூறும், திருதியை தசமி இவற்றின் பிற்கூறுமாமென்ப.

† புதன்கிழமையன்று துவிதியையும், செவ்வாய் அன்று பஞ்சமியும், வியாழனன்று ஷஷ்டியும், வெள்ளியன்று அஷ்டமியும், திங்களன்று ஏகாதசியும், சனியன்று நவமியும், ஞாயிறன்று துவாதசியும் அமாவாசியையும் சேர்ந்திடுதலேயாம்.

காடிகள் சம்பவித்த காலத்தும், சந்தியிலும், மரணமுதலிய தசைகளோடு கூடிய அசுபயோகத்தும் மரணம் சம்பவிக்கு மென்றும் அறிய வேண்டுமாகலின். இவ்வாறாயின் அவ்வியாதிகள் நீங்குவதற்காக,

அசுவினி, உரோகிணி, மிருகசிரம், புநர்வசு, புஷ்யம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, அஸ்தம், சித்திரை, சுவாதி, அநுஷம், ஓணம், அவிட்டம், சதயம், ரேவதி இவைகளில் சகல ரோக நிவாரணத்தின் பொருட்டும் வைத்தியம் செய்யவேண்டுமென்றும்,

அஸ்தம், புனர்பூசம், அசுவதி, சித்திரைகளோடு கூடிய சோம, சுக்கிர, பௌம, குருவாரங்களில் சந்திரன் சுக்கிரன் புதன் வியாழன் இவர்களின் வருக்கத்தும் உதயத்தும் சரராசியிடத்தும், அதன் அமிசத்தும், மருந்து உண்டால் சுர நோய் நீங்குமென்றும்,

ஆதித்த வாரத்தில் சதுர்த்தி நவமி சதுர்த்தசிகளோடு ஆதிரை, பரணி, விசாகம், அநுஷம் ஆகிய இவை கலந்துள்ள காலத்தில் ஜன்னிக்கு ஔஷதப் பிரயோகஞ் செய்வித்தல் நன்றென்றும், அன்றியும் நீடித்த நோய்களுக்கு,

ரோகணியோடு கூடிய திரிதியையும் அஷ்டமியும், உத்தரத்தோடு கூடிய சதுர்த்தியும், திருவோணத்தோடு கூடிய பஞ்சமியும், மிருகசிரத்தோடு கூடிய சஷ்டியும், ரேவதியோடு கூடிய சப்தமியும், கார்த்திகையோடு கூடிய நவமியும், பூசத்தோடு கூடிய தசமியும், திரிதியை துவாதசியோடு கூடிய அநுஷமும், கார்த்திகை மகங்களோடு கூடிய திரயோதசியும் கலந்துள்ள உக்கிர யோகங்களில் மருந்து கொடுக்கவேண்டுமென்றும்,



* க்ஷிப்பிர - உக்கிர - சரநக்ஷத்திரங்களோடு கூடிய அமாவாசியை யன்று மர்மஸ்தானங்களுட் சம்பவித்துள்ள, நோய்களுக்கு வைத்தியஞ் செய்யவேண்டுமென்றும்.

திருவோணம், ஆயில்லியம், அசுவதி, திருதியை, அஷ்டமி, திரயோதசி ஆகிய இந்த நட்சத்திரங்களோடும் திதிகளோடுங் கலப்புற்றுள்ள குருவாரத்திலே சர்வவாத ரோகங்களுக்குஞ் சிகிச்சை செய்விக்க வேண்டுமென்றும்,

பிரதமை ஷஷ்டி ஏகாதசி சுவாதி மூலம் பூசம் இந்தத் திதி நட்சத்திரங்களோடு கூடிய குருவாரத்தின் சர லக்கினத்தில் பித்தரோகங்களுக்கு மருந்து கொடுக்கின் வியாதி நீங்குமெனவும்,

துதியை ஷஷ்டி துவாதசி புநர்பூசம் இரேவதி சுவாதி முதலிய இந்தத் திதி நட்சத்திரங்களோடு கூடிய சுக்கிரவார சரலக்கினத்தில் மருந்துதரின் பித்தநோய் முற்றும் போம் எனவும்,

பரணி கார்த்திகை திருவாதிரைகளோடு கூடிய மங்கலவாரச் சரலக்கினத்தில் வாத பித்த சிலேட்டும ரோகங்களுக்கு வைத்தியம் செய்யவேண்டுமெனவும்,

சதுர்த்தி நவமி சதுர்த்தசி சரம் உக்கிரம் இந்தத் திதி நட்சத்திரங்களோடு கூடிய புதன்கிழமையன்று மருந்திடின் இருபது வகைப் பிரமேகங்களும் இனிது குணமாம் எனவும்,

பாபிகளின் வாரம் நக்ஷத்திரம் திதி அம்சம் இவை

---

* க்ஷிப்ரம் = அசுவினி-அஸ்தம்-பூசம்-ஆதிரை-மூலம்.
உக்கிரம் = பரணி-மகம்-பூரம்-பூராடம்-பூரட்டாதி.
சரம் = சுவாதி-புனர்பூசம்-திருஓணம்-அவிட்டம்-சதயம்.

கலந்து, அது பாவராசியான லக்கினமாயிருந்து பாவிகள் எட்டில் இருக்கும்போது குஷ்ட ரோகங்களுக்கு வைத்தியஞ் செய்தல் நலமெனவும்,

ஆயில்லியம் திருவாதிரை அநுஷம் மிருகசீரிடம், விசாகம் கார்த்திகை பரணி இவைகளோடு கூடிய செவ்வாய்க் கிழமை யன்று மகோதரம் முதலிய நோய்களுக்கு மருந்து கொடுக்கவேண்டும் எனவும்,

வக்கிர கிரகத்தால் பார்க்கப்பெற்ற * சாதாரண நட்சத்திரங்கள் விஷ்டி கரணத்துடன் சேராத திதியோடு கூடியிருக்கும்பொழுது க்ஷயரோகத்திற்கு மருந்து கொடுக்கவேண்டு மென்றும்,

குஷ்டம் க்ஷயம் குன்மம் அபஸ்மாரம் ஆகிய இவைகட்கு உபயராசியில் வைத்தியஞ் செய்வித்தலோடு சரத்தில் சூரிய சந்திரர் இருவரும் இருப்பின் நலமாம் என்றும், ஸ்திர ராசியிற் சிகிச்சை புரியாதிருக்கவேண்டு மென்றும்,

சுபமான திதி யோக அம்சங்களோடு கலப்புற்றுள்ள சுபவாரத்தின் சுபர் பார்வையுள்ள ராசியில் ரசாயனம் கொள்ளவேண்டுமென்றும், சூரியன் செவ்வாய் சனி இவர்கள் இலக்கினத்திலேனும் கேந்திரத்திலேனும் இருக்கும் காலமே சர்வநோய்களுக்கும் வைத்தியம் செய்விக்க ஏற்றகால மெனவும்,

சூரியன் சந்திரன் புதன் வியாழன் சுக்கிரன் இவர்களின் வாரமும் வர்க்கமும் உதயமும் சுபமாமெனவும்,

* சாதாரணம்=கார்த்திகை, விசாகம்.

ஷஷ்டி சப்தமி அஷ்டமி சதுர்த்தசி நவமி இவை சுபமெனவும், திதியையும் துவாதசியும் வைத்தியம் செய்விக்கக் கூடாதாவெனவும், பின்னுஞ் சிலர் கூறுமாறு பிரதமை ஷஷ்டி ஏகாதசி இவைகள் நலமாமெனவும் விஷ்டியைத் தவிர்த்து ஏனைய ஸ்திரகரணங்களும் எல்லாச் சுபயோகங்களும் நலமாமெனவும், சரம் உத்தமமெனவும், உபயம் மத்திபமமெனவும், ஸ்திரம் அதமமெனவும், வைத்தியம் செய்யத்தக்க லக்கினத்திற்கு 6, 7, 8, இவ்விடங்களில் எந்தக் கிரகங்கள் இருந்தாலும் நாசம் புரிவரெனவும்,

சதுர்த்தி நவமி சதுர்த்தசி இவை கலப்புற்றுள்ள சனி செவ்வாய் வாரங்களில் நோயாளிக்கு நலந்தரவல்ல ஆதிரை கேட்டை ஆயில்யம் மூலம் மேட கடக கன்னி துலாம் ஆகிய இவை கலந்து செவ்வாய் பலிஷ்டனாயிருந்து எட்டாமிடத்தி லொருவரு மில்லாதிருக்கும் காலமே சத்திரமிடல் புகை போடல் உப்புப் புகையிடல் இவை முதலியன பிரயோகிக்க ஏற்ற காலமாமெனவும் தெரிந்து கொள்ள வேண்டு மாகவினென்க. அன்றியும்,

வேளாங் குமர வேலனை யுன்னி
நாளுங் கோளும் நலமுட னறிந்து
மாளா நோவை மடிப்பவ னவனே
ஆளா மாயு ளளிப்பவ னென்ப.

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

## நாடியிலக்கணம்.

பூமன்னு புராதனியே புவன சத்தி
புண்டரிக மலருறைந்த புனித வல்லி
நாமன்னு கலைவடிவாய் நண்ணு தேவி
நற்றரும சொரூபிணியாம் நாரி நீலி
காமன்னு கணபதியைக் கடம்பன் றன்னைக்
கருதுமவர் வினையகலக் கருதி யீன்ற
மாமன்னு மகேஸ்வரியே வகுத்த நாடி
வகையுரைக்க வருந்துணையென் மனத்தின் ஆதி. (1)

ஆதிபரா பரமாகி யகண்ட மான
அமுதலிங்க ரருளாலே யந்நாள் வாமப்
பாதியிடத் தபிராம வல்லி யாத்தாள்
பரைமனோன் மணிக்குரைத்த பரம நாடி
பூதலத்தோர் நாடிவகை நன்றாய்த் தேர்ந்து
பூதவகை நோய்வகைக ளுளவிற்காண
நீதலத்தில் சொல்லெனவே யெனக்குச் சொன்னாள்
நேர்ந்துரைப்பே னடியது மூலந் தானே. (2)



மூலமெழு பத்தீரா யிரமா நாடி
முளைத்தெழுந்து வலைபோல முடிந்த தோடே
கோலமாய்ப் பதின்மூவா யிரக ரம்புங்
கோவையாய்ச் சூழ்ந்திருக்குங் கூட்டிற் குள்ளே
காலமாம் நாடிபத்து வாயு பத்துங்
கதித்ததெல்லா முக்கோவைப் பகையி னாலே
நாலினொ பிரத்துநா னூற்று நாற்பத்
தெட்டாக நண்ணிடுநோய் நாட்ட மாமே. (3)

நாட்டிலுள்ள மானிடர்க்கு வருநோய் கண்டு
நாடிபத்து வாயுபத்துங் குறியாற் கண்டு
கூட்டிலுள்ள பிணிதீர்க்கு மருந்துங் கண்டு
கொடுப்பதற்குள் ளசாத்தியசாத் தியமுங் கண்டு
ஏட்டிலுள்ள நூன்முறைகை முறையுங் கண்டு
எண்ணரிய வயித்தியனாய் புகழும் பெற்று
தேட்டமுள்ள சுகிர்தகுண முடையோ னாயுஞ்
சிறைமீட்டுப் பிழைக்கவைத்தா லவனே தாதா. (4)

தாதாவென் றுரைப்பதற்குத் தகுமோ விந்தச்
சாத்திரத்தை யிகழ்ச்சிக்குஞ் சண்டா ளர்க்கே
மாதாபி தாவினது மனங்கோ ணாமல்
மகாபெரியோ ருரைக்கின்ற மொழி மீறாமல்
வேதாந்த மூர்த்திகளை யறிந்து போற்றி
மேதைமிகு நீதிகளும் விளங்கத் தோற்றி
காதிலுப தேசகுரு வோதக் கேட்டு
கைசிகிச்சை பெற்றவனே யோக சித்தன். (5)

இதனடுத்த செய்யுள் சிதல் வாய்ப்பட்டு மறைந்தது.

சுற்றின்றி பலநூலும் பார்த்துக் கொண்டு
சுழன்றுழன்ற பண்டிதரே யவிழ்தஞ் செய்து
குற்றமொடு கொடும்பாவஞ் செய்தி டாமல்
குருமுறையா லௌடதங்கள் முடித்துக் கொண்டு
முற்றின்றிக் கொலைமுதன்மா பாவஞ் செய்து
முடியாத வெழுநரகில் வீழ்ந்தி டாமல்
கத்தனடி கண்டுபிணி தீர்க்கத் தானே
கண்டிதமாய்ப் பாண்டித்யங் கருதிப் பாரே. )6)

பாரப்பா நோயதனின் பிராய நேர்மை
பகைத்துவந்த நாட்பிணியைக் கூர்த்த றிந்து
தீரப்பா அவனிடத்திற் குறையுண் டானால்
திருவுளத்தை நோக்கியறம் செய்ய வைத்துச்
சேரப்பா பகைஞரையுஞ் சினேக மாக்கித்
தெளிவாக விருமனது மொருமை யாக
நேரப்பா ஔடதங்கள் கையா லீய
நிச்சயமாய்ச் சித்திக்கு மிதுவே நீதி. (7)

நீதியா யௌடதங்கள் சேர்க்கும் போது
நிர்ணயமாய் சரக்குகளைச் சுத்தி செய்து
ஆதிமங் களவார முகூர்த்தங் கோலி
அளவுடனே யவையிற்றை யரைத்த பின்பு
ஓதியே தெய்வநம சிவாய மென்றே
யுயிரெழுத்தை யுருவேற்றி யுருண்டை பண்ணி
பாதியா யவுடதங்க ளீயும் போது
பரிகார நடக்கைதனக் குறுதி கேளே. (8)



கேளப்பா வயித்தியர்க்கு யோகம் வேணும்
கேட்குமுன்னே சொல்லமெத்த கல்வி வேணும்
தாளப்பா சரக்குவைப்புக் குணமுங் கட்டு
கணப்பொழுதில் நீத்துமுப்பூ வறியு வேணும்
சூளப்பா வியாதிகண்டு அவிழ்த மீயச்
சூட்சுமமாம் புத்திதந் திரமும் வேணும்
நாளப்பா ஜீவர்கள்மீ திரக்கம் வேணும்
நற்குணமாம் வாதிமகன் கிரியை யீதே. (9)

வாதிமகன் வயித்தியன்றன் குணத்தை யாயில்
வாகாகக் கைபார்த்து முகத்தைப் பார்த்துச்
சோதியுடன் மலஜலத்தின் பரிக்ஷை பார்த்துச்
சொல்லிடுவான் வியாதிதனை யறிந்து நன்றாய்ச்
சேதியதே யவனுக்குத் தெளியச் சொல்லித்
தேகத்தைத் தொட்டுமெல்லப் பார்த்துக் கொண்டே
நீதியுடன் கடவுளைத்தான் பணிந்து கொண்டு
நிச்சயமா யவிழ்தவகை யிடுவான் கண்டாய். (10)

கண்டாயோ ஆடவர்க்கு வலக்கை யாகும்
கவின்பெருகு மங்கையர்க்கே விடக்கை யாகும்
உண்டான இடக்கையை வலக்கை யேந்தி
உயர்வான வலமதனை யிடத்தாற் பற்றி
முண்டகமாங் கைதேய்த்து நெட்டி வாங்கி
மூட்டுமூ விரலுக்கு விரலண் டாமே
அண்டாமல் நெல்லிடைக்கு விட்டுப் பார்க்கில்
அசைவாகும் வாதபித்த சேத்ம மாமே. (11)

ஆமென்ற புலனுடைய வாதந் தானே
அப்பனே கோழியுடை நடைபோ லாகும்
ஏமென்ற வுயிருடைய பித்தந் தானே
யிசைமேயுங் காக்கையுடை நடைபோ லாகும்
ஓமென்ற சதமுடைய ஐயந் தானே
ஓட்டமில்லா மந்தியுடை நடைபோ லாகும்
நாமென்ற வாதபித்த சேத்து மத்தின்
நடையிவ்வா றென்றுண்மை நாட்டுங் காணே (12)

காணப்பா வாதமுன்னும் பித்தம் பின்னுங்
கடையாக ஐயமது தோற்ற வேணும்
பேணப்பா பிணியோர்க்குப் படியே கண்டாற்
பிணிதீர்ந்து போயதெனப் புகழ்ந்து கூறு
ஊணப்பா மூவருமே வரிசை தப்பி
ஊணிலாப் பறவையைப்போ லுயர்ந்து நின்றால்
தாணப்பா இப்படியே கண்டோர்க் கெல்லாஞ்
சத்தியமாய் ஜீவிக்குந் தப்பா உண்மை. (13)

உண்மையுள்ள மூவருமே யொடுக்க மாகி
ஒப்பில்லா வாதமது வுலாவி நின்றால்
திண்மைவினை யகற்றிடவே செயலுண் டாகி
சென்மித்து வயிற்றிடையே பித்தம் நின்று
நன்மையாய்க் கனல்மூட்டி தெளிவு தந்து
நயமாகச் சிவமயம தாக்கி வைக்கும்
அண்மைமனங் கலங்காமற் றுணிவு கொண்டு
அருளான அவிழ்தங்க ளறிந்து மூட்டே. (14)



மூட்டிடவே மூவருமே மூட மானால்
மூதண்ட ஜன்னியதன் மூர்க்க மாகும்
மூட்டியே மூவருமே முடுகி நின்றால்
முத்தோஷம் செனிக்கின்ற முறைமை யாகும்
கோட்டிலே வாதமது குளிர்ந்து நின்றால்
குணமில்லை மரணத்தின் கூற தாகும்
வாட்டியே வாதமது மழுங்கி நின்றால்
மறிபடா மரணமென்று மதிக்க லாமே, (15)

மதிக்கலா மூவருமுன் னிட்டு தைத்தால்
வந்தநோய் தீர்ந்துவிடு மரண மில்லை
பதிக்கலா மூவரும்பின் னிட்டு தைத்தால்
பழியாகிப் பிணிமீறும் பகைத்துக் கொல்லும்
குதிக்கலாம் வாதமது கொதித்து நின்றால்
கொடுமைசெயுஞ் சுரங்களது கூற தாகும்
விதிக்கலாம் வாதமது மெலிந்து நின்றால்
வேகமாய் நின்றசுரம் விட்டுப் போச்சே. (16)

போச்சுதப்பா நல்லோர்க்கு வந்த நோய்கள்
பொல்லாத பாவிகட்கு போகாதப்பா
ஏச்சுதப்பா பகைத்துவந்த நோய்க்கு ஞாங்க
ளிதமறியா வயித்தியனி னெளிமை கண்டு
வாச்சுதப்பா இந்நூல்தான் வயித்தி யர்க்கு
வகைதொகையாய் வயித்தியரை ஜெயிக்கத் தானே
ஆச்சுதப்பா முன்சொன்ன இருநூற் றைந்தும்
ஆமிந்த நூலுக்கு ஆதி மூலம். (17)

மூலமெழு பத்திரா யிரமா நாடி
மூளைத்தெழுந்து சுழிந்தவிடம் மொழியொ ணாது
காலனா யிடறுகின்ற நோய்கட் கெல்லாம்
கருவுடனே சுழிமிகுத்த கையிற் குள்ளே
காலையே வாதமது வுதிக்க வேணும்
கடுமத்யம் பித்தமது தோன்ற வேணும்
மாலையே ஐயமது கதிக்க வேணும்
வளமான நாடியென்று மதிக்க லாமே. (18)

காலமே வாதமது மெலிந்து நின்றால்
கதிர்சாயும் பொழுதினிடை மரண மாகும்
பாலமே நடுப்பித்த மெலிந்து நின்றால்
பாநுவுதை யந்தனிலே மரண மாகும்
மாலையே ஐயமது மெலிந்து நின்றால்
மரணமில்லை வந்தநோய் தீர்ந்து போகும்
கூலமா யிப்படியே பகுத்து நன்றாய்க்
குறிப்பறிந்து கூறுவர்கள் பெரியோ ராமே. (19)

ஆமாகேள் அடிதுடிதான் அசைந்து தைத்தால்
அசைவாகக் கடைதுடிதான் புதைந்து தைத்தால்
பூமாகேள் அவிழ்தமிட வியாதி தீர்ந்து
புணர்ப்பாக வுணர்த்துகின்ற நாடி யாகும்
ஓமாகேள் அடிதுடிதான் குறைந்து தைத்து
உரமாகக் கடைதுடிகான் சுரந்து தைத்தால்
வீமாகேள் மணிமந்திர அவிழ்தத் தாலும்
மீளாது விதிமுடிந்த நாடி யாகும். (20)



ஆகமாய் நாடிமுற்றும் பாத மொத்தால்
அவிழ்தமிடப் பிழைப்பார்கள் அதிர்ஷ்ட முண்டு
சோகமாய் நாடிமுற்றும் பாத மற்றால்
தொலையாத மரணமென்று சொல்ல லாகும்
ஏகமாய் நாடிவிழுந் திருக்கி லொன்றே
எழுந்தாலும் நின்றாலும் மரண மில்லை
வேகமாய் நாடிமுற்றும் விழுந்த பின்னை
விழுந்தாலும் நின்றாலும் பிழைப்ப தில்லை. (21)

இல்லையாய்ப் பித்தமுன்னும் வாதம் பின்னும்
எழும்பினால் அசாத்தியத்தின் நாடி யாகும்
எல்லையாம் வாதமுன்னும் பித்தம் பின்னும்
எழும்பிடவே சாத்தியத்தி னாடி யாகும்
மல்லையாம் வாதமது அமர்ந்து நின்றால்
வயிற்றினிடைச் சோறிருந்து மந்த மாகும்
கல்லையாய் வாதமது கதித்து நின்றால்
களைப்புண்டாம் தீபனத்தின் நாடி யாகும். (22)

ஆகமாம் சாஸ்திரத்தின் கூற்றைக் கண்டு
அவனிக்குள் மானிடர்க்கு அறையக் கேளு
மாகமாம் வாதத்தின் சரீரக் காரன்
வாழிப்பாய்த் தேகமுள்ள வடிவ னாவன்
யோகமாம் பித்தத்தின் சரீரக் காரன்
உறுதியாந் தேகமுள்ள குணவா னாவன்
பாகமாம் சேத்துமத்தின் சரீரக் காரன்
பருமனாந் தேகமுள்ள திடவா னாவான். (23)

நாவனும் வாதத்தின் சரீரக் காரன்
நாதமாங் குரல்நீண்டு பேசுமையா
பாவனும் பித்தத்தின் சரீரக் காரன்
பதறியே குரல்விண்டு துடியாம் பேச்சு
கோவனும் சிலேத்துமத்தின் சரீரக்காரன்
குமுறியே குரல்விண்டு இடியாம் பேச்சு
மூவனும் ஜென்மித்த சத்த மல்லால்
மொழிந்தமற்ற சத்தமெல்லாம் பதம தாமே.* (24)

ஆமப்பா வாதசுரம் மலந்தம் பித்து
அங்கமெல்லாம் நொந்துபுண்ணாய்க் குளிருண் டாகும்
பூமப்பா பித்தசுரம் ஜலந்தம் பித்துப்
பித்தமுண்டாந் தேகமுற்று மெரிவுண் டாகும்
காமப்பா ஐயசுரம் உமிழ்தம் பித்துக்
கணுவெலும்பைக் குடைந்துகப நீருண் டாகும்
ஓமப்பா இவைசுரமூன் றல்லா வில்லை
ஓட்டுசுரம் வாயுவினா லுதித்த வாறே. (25)

வாறாக மூரிக்கொட் டாவி விட்டால்
வாதத்தால் வந்தசுரம் வலுத்த தாகும்
பேறாக வாயினினீர் குழப்பங் கண்டால்
பித்தத்தால் வந்தசுரம் பலத்த தாகும்
கூறாகச் சளிசெருமல் சிணுக்குண் டானால்
கொடுங்கபத்தால் வந்தசுரம் கோப மாகும்
மூறாக இவைகளுமூச் சுரங்க ளாகும்
மூர்க்கத்தையொடுக்கவல்லோர் முறையைக்கூறே. (26)



கூறுமே உறைப்பான கலிக்கம் போட்டால்
குலைந்துநின்ற சுரம்பாதி ஒடுங்கிப் போகும்
பாறுமே யழலைசத்தி வாங்கிப் போட்டால்
பாந்துநின்ற சுரம்பாதி ஒடுங்கிப் போகும்
காறுமே ஆக்ராணப் பொடியைப் போட்டால்
கடந்துநின்ற சுரம்பாதி ஒடுங்கிப் போகும்
தீருமே கருமசுத்தி இவைகள் செய்தால்
சடத்திலுள்ள பிணிகளெல்லாந் திருப்ப லாமே.. (27)

ஓமென்ற மலக்கட்டைக் கழிய வைத்தால்
உடலிலுள்ள வாதையெல்லா மோடிப் போகும்
தாமென்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள வேகமெல்லாம் தணிந்து போகும்
கூமென்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாம் குலைந்து போகும்
கோமென்ற இவைமூன்றுங் களங்க மற்றால்
கொல்லவந்த காலனையும் வெல்ல லாமே. (28)

## தூதனின் இலட்சணம்.

சிகிச்சகனை அழைக்க வரும் தூதன் தனது பல்லைக் குத்திக்கொண்டு வந்தழைத்தாலும், இருவருடன் வந்தழைத்தாலும், தலையை விரித்துக்கொண்டு வந்தழைத்தாலும், சிகித்சகன் தைல ஸ்நாநம் செய்யும்போது அழைத்தாலும், தடியைப் பிடித்துக்கொண்டு வந்தழைத்தாலும், உடம்பைச் சொறிந்துகொண்டு வந்தழைத்தாலும், கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றாலும், கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு வந்தழைத்தாலும், சுவரைப் பிடித்துக்கொண்டிருந்தாலும்,

சிவப்பு வஸ்திரம் தரித்துக் கொண்டிருந்தாலும், அவ்வியாதி அசாத்தியமென்றே சிகித்சகன் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

உத்தம வைத்தியன் பிணியாளன் நிமித்தம் (ஓஷதி) ஔஷத மூலிகை முதலாய பொருள்களைத்தேட முயன்று அவைகள் எளிதில் சித்திக்கப் பெறாது பின்னர் அரிதிற் கிடைத்தோ அல்லது வேறு வகையாலோ கிடைக்கப் பெற்றுப் பல்வகைப் பரிபக்குவச்செய்பாக கைபாக தீக்ஷாபாக முறைப்படி பன்முறை முயன்று பகீரதப் பிரயத்தனப் பரிகாரம் செய்யினும் நோயாளி எவ்விதத்தும் சுகமுறானென்க.

முறை தவறாமல் பக்குவம் செய்யப்பட்டு அநேக வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்து நற்பயன் விளைத்துவந்த ஔஷதமானது ஒருவனுக்குப் பிரயோசனத்தைத் தராமல் இருந்தால் அந்தப் பிணியாளிக்குச் சிகித்சையே கிடையாது. ரோகங்கள் சம்பவித்து உடனே அதிக துர்பலமாகிவிட்டாலும், வியாதியஸ்தனுக்குச் செய்யப்படும் ஔஷதமானது பக்குவம் செய்கையில் காரணமின்றி நிறம் மணம் முதலியன மாறுபட்டாலும் அம்மனிதன் பிழைக்கவே மாட்டான். தைலங்கள் செய்யுங்காலத்தில் அவை அதிகமாகச் சீறிக் கொதித்தாலும் பாத்திரம் பழுதுபட்டாலும் அம்மனிதன் பிழைக்க மாட்டான்.

நீடித்த இளைப்பு இருமலுடன் தேகம் சுருங்கி இராஜநாடி பலஹீனப்பட்டு ஈனத்தொனியுடன் இருக்கும் ரோகிக்குச் சிகித்சை செய்யவே கூடாது. ஆனல் காலபேதத்தால் சாத்தியத்திலிருந்து அசாத்தியமாகிறதும் அசாத்தியத்திலிருந்து சாத்தியமாகிறதும் உண்டு எனினும் சிகித்சகன் அஃது அசாத்தியமானதென்றே சொல்லி விடவேண்டும். அசாத்திய நோயுள்ளவர்களுக்குக் கொடுக்கும் மருந்துகளின் வீரியத்தைக் காலமிருத்தியுவால் அனுப்பப்பட்டு ரோகியின்பக்கல் நின்றுள்ள யமதூதர்கள் கெடுத்துவிடுவார்கள்.



## நோயகன்றபின் ஸ்நாநம் செய்ய வேண்டிய காலம்.

நோய் நீங்கிய மனிதன் செவ்வாய் புதன் வியாழன் இவர்களின் வாரம் வர்க்கம் உதயம் இவைகளுள் ஸ்நாநம் செய்தல் நன்று.

ஜந்மாந ஜன்மங்களிலும், ஜன்ம நட்சத்திரத்திற்கு 22-ஆம் நட்சத்திரத்திலும், ஜன்மாந ஜன்மங்களுக்கு 3,5,7 ஆவது நட்சத்திரத்திலும், சந்திரன் 8 இல் இருக்கும்பொழுதும் ஸ்நாநம் செய்யவே கூடாது.

மூலம், பூராடம், திருவோணம், பூரட்டாதி, அசுவனி, பரணி, கார்த்திகை, மிருகசிரம், பூசம், ஆதிரை, பூரம், சித்திரை, விசாகம், அஸ்தம் இவைகளில் ஸ்நாநம் செய்யலாம்.

ஆதிவாரம் அவருடைய அம்சகம் முதலியவைகளில் முழுகுவது நல்லது. சனிக்கிழமைகளில் நீராடுவது மத்தியமம். அஷ்டமி அமாவாசி சதுர்த்தி சதுர்த்தசி நவமி இவைகளில் புனலாடல் கூடாது. கேந்திர திரிகோணங்களிற் சுபர்களும் 11,6,31 இல் அசுபர்களுமிருந்தால் அக்காலத்தில் நீராட்டி நிமலனைப் பூசிக்கின் சுகமுண்டாகும்.

## சுத்தி முறை.

சுக்கு:—சுண்ணாம்புத் தெளிநீரில் ஊறவைத்து ஒரு சாமம் சென்றபின் கழுவி மேற்றோல் நீக்கி வெயிலிலுலர்த்தி எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

மிளகு:—கரிசலாங்கண்ணிச்சாறு அல்லது புளித்த மோர் இவைகளில் ஒரு சாமம் போட்டு வைத்துச் சுத்திகரிப்பதே சுத்தியாம்.

அரிசிதிப்பிலி:—கோசலத்தில் இட்டெடுத்துக் கொள்ளச் சுத்தியாம்.

ஆனைதிப்பிலி:—புளித்த காடியில் இட்டெடுக்கச் சுத்தியாம்.

கடுக்காய் :—அரிசிக் கழுநீரில் 3 நாள் ஊறச்சுத்தியாம்.

நெல்லிவற்றல்:—பாலிலிட் டவிக்கச் சுத்தியாம்.

வெயிலிற் காய சுத்தியாகும் மருந்துகள்:—நிலவேம்பு, கோரைக்கிழங்கு, குரோசாணி ஓமம், வெட்டிவேர், விலாமிச்ச வேர், வெட்பாலையரிசி, இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, வால்மிளகு, கஸ்தூரிமஞ்சள், பிதிர் ரோகணி, பொன் முசுட்டை, கிச்சிலிக்கிழங்கு, கடுகு, கிராம்பு, சாதிபத்திரி, சடாமாஞ்சில், ஏலம், சிறு நாவற்பூ, வாயுவிடங்கம், தாளிசபத்திரி, சதகுப்பை, கருஞ்சீரகம், வெண்கடுகு, சீரகம், சிற்றரத்தை, சாதிக்காய், சிறுதேக்கு, மரமஞ்சள், மஞ்சள், செவ்வியம், காட்டாத்திப்பூ, கண்டதிப்பிலி முதலியனவும் பிறவுமாம்.

இலிங்கம்:—தாய்ப்பால் அல்லது பழச்சாறு இவற்றுளொன்றில் 10 நாள் ஊற வைத்தெடுக்கச் சுத்தியாம்.



பூரமும் இரசச் சிந்தூரமும்:—10நாள் பரியந்தம் தாய்ப் பாலில் ஊற வைக்கச் சுத்தியாம்.

வீரம் : - இளநீரிற் போட்டுக் கொதிக்க வைத்துச் சுண்டிய அந்நீரிலே புரட்டிப் புரட்டியெடுக்கச் சுத்தியாம்.

கந்தகம்:—ஓட்டிலிட்டு நெய்விட்டுருக்கி பசுப்பாலில் ஏழுமுறை சாய்க்கச் சுத்தியாகும்.

தாளகம் :—ஒவ்வொரு முறையாக ஏழுமுறை சுண்ணாம்புநீற்றில் வைத்து மூடி ஏழு முறையாகக் கேசரி (கழுதை) நீரால் தாளிக்கச் சுத்தியாம். (ஒவ்வொருதடவையும் மூடியவெந்த கிளிஞ்சிலின்மேல் கழுதை நீரை ஊற்ற வேண்டுமென்பதே இதன் பொருள்.)

பவளம்:—பழச்சாற்றில் 3 நாள் ஊறச் சுத்தியாகும்.

காந்தம்:—மேலும் கீழுமாக வைக்கப்பட்டுள்ள வரகு வைக்கோலைக் கொளுத்தி யெடுக்கச் சுத்தியாம்.

சலாசத்து:—பழரசத்திலாவது கற்றாழைச் சாற்றிலாவது ஒரு சாமம் ஊறவைத்துலர்த்தி யெடுக்கச் சுத்தியாகும்.

கல்நார்:—எருமை நீரில் 3 நாள் ஊறச் சுத்தியாம்.

வெண்காரமும் படிகாரமும்:—பொரிக்கச் சுத்தி. வெண்காரத்தை மட்டில் சாணிப் பாலிட்டுக் கழுவி யெடுப் பாருமுளர்.

மிருதார்சிங்கி:—எருமை நீரிலிட்டு வைத்தெடுக்கச் சுத்தி.

நாபி:—காய் நீரில் ஊறப் போட்டெடுக்கச் சுத்தியாம்.

இரசம்:—செங்கல் மாவோடரைத்துக் கழுவி ஓட்டறை மஞ்சள் உப்பு முதலியவற்றோடு முறையே யரைத்தரைத்துக் கழுவிக்கொள்ளச் சுத்தியாகும்.

மனோசிலை:—இஞ்சி ரசத்தில் ஒருசாமம் அரைக்கச் சுத்தியாம். பொடித்த மனோசிலையை இரண்டாய் மடித்த மெல்லிய சீலையில் வைத்து முடிந்து இரண்டுபடி கோசலத்தில் டோலாந்தரமாய் எரிக்கச் சுத்தியாம்.

அயம்:—பழச்சாற்றில் 3 நாள் ஊறச் சுத்தியாம்.

வெள்வங்கம்:—நல்லெண்ணெயுடன் உருக்கி புளித்த மோருள்ள ஒரு பாண்டத்தை வாய்மூடி அதில் ஒரு துவாரமிட்டு அவ்வழியாய் ஊற்றியெடுக்கச் சுத்தியாம். இம்மாதிரி மும்முறை செய்தல் வேண்டும்.

கரு வங்கம்:—மேற்கண்டவாறே செய்து சிறிது பிரண்டைச் சாந்து கலந்த கோநீரில் ஊற்றி எடுக்கச் சுத்தியாம்.

அபிரேகம்:—உலையில் வைக்கப்பட்டுத் துருத்தியால் ஊதலூத சிவக்கக் காய்ந்த அப்ரகத்தைக் கொள்ளு வெந்த தண்ணீரில்தோய்த்தெடுத்துக் கொண்டபின்கல்லுரலிலிட்டுக் கட்டப்பாரையாலிடித்து எடுத்துக்கொண்ட தூளை முரட்டுத் துண்டு கட்டப்பட்ட சாலின்மேல் வைத்துச் சம்பாநெல்லுங் கலந்து நீர்விட்டுப் பிசைந்து பிசைந்துகொண்டிருக்கக் கீழிறங்கும் நீரைத் தெளியவைத்துத் தெளிந்த நீரை ஊத்திவிட்டுத் தங்கிய நவநீதத்தைக் காயவைத் தெடுத்துக்கொள்ளச் சுத்தியாம்.

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

"மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற
வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடிவைகுஞ் செவ்வேண்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி."

## சுதரிசன சூரணம்.

சுக்கு, அரிசிதிப்பிலி, கடுக்காய்த்தோல், சந்தனத்தூள் கிராம்பு, கடுகுரோகிணி, சீந்திற்கொடி, திப்பிலிமூலம், வேப்பன்பட்டை இவை வகைக்குப் பலம் 1, நிலவேம்பு பலம் 9, ஆகிய இவற்றைக் கூட்டி யிடித்து வடிகட்டிய மூவிரல் கொண்ட சூரணத்தைச் சீனியுடன் உட்கொள்ள மலைச்சுரம், குளிர்ச்சுரம், முறைச்சுரம், அஸ்திசுரம், புராதனசுரம்முதலியன விலகியோடும். தீபனம் உண்டாகும். தேகம் திடமுறும். இந்தச் சூரணத்தைச் சர்க்கரை நெய் இவற்றோடு கலந்துண்டால் சர்மரோகம், மேகரோகம், (வாதரத்தம்) முதலியனவும் தீரும். இரத்த சுத்தியுண்டாம். இச் சூரணத்தைத் தேங்கா யெண்ணெயிற் குழைத்து மேலுக்குத் தடவினால் சொறி சிரங்கு முதலியன நிவர்த்தியாகும்.

## சுகபேதி விரேசினி.

சுக்கு, மிளகு, திப்பிலி, வால்மிளகு, வாய்விளங்கம், அதிமதுரம், இலவங்கபத்திரி இவை வகைக்குப் பலம் 1, கோரைக்கிழங்கு பலம் 2. கடுக்காய்த்தோல் பலம் 10, இவைகளை இரவியி லுலர்த்தி யிடித்துச் சூரணித் தெடுத்துக் கொண்டு, படுக்கையை விட்டு எழுந்து கால்நாழிகை உலவிய பின்னர் ஒரு தோலா சூரணத்தோடு ஒரு தோலா சர்க்கரையும் சேர்த்து இளஞ்சூட்டுத் தண்ணீரில் கலக்கிச் சாப்பிடக் குமட்டல், ஆயாசம், ஆசனக்கடுப்பு முதலியன நீங்கிச் சுகமாய்ப் பேதியாகும். நாட்டுச் சர்க்கரையைக் கலத்தலே நன்று. தேக பலத்திற்கும் பேதத்திற்கும் ஏற்றவாறு பேதி அதிகமாகவும் குறைவாகவும் ஆகுமானால் சூரணத்தை ஏற்றவாறு குறைத்தும் கூட்டியும் உபயோகித்துக்கொள்க. இது வாத பித்த கப ரோகங்களா லுண்டாகும் சகல பிணிகளையும்ஒருவாறு சாந்திசெய்து பிணி யதிகரிக்கா வண்ணம் பாதுகாக்கும். இதற்கு எளிதில் சீரணிக்கத் தக்க அதிக காரசாரமில்லாத ஆகாரங்களே கொள்ளத் தக்க தென்க.

## காயச் சூரணம்.

வறுத்த சுத்தமான பெருங்காயம் 1 பங்கு, பச்சை வசம்பு 2 பங்கு, அரிசிதிப்பிலி 3 பங்கு, சுக்கு 4 பங்கு ஓமம் 5 பங்கு, கடுக்காய்த்தோல் 6 பங்கு, சித்தர்மூலப்பட்டை 7 பங்கு, கோஷ்டம் 8 பங்கு கொண்ட இச்சரக்குகளை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு கால்பலம் சூரணத்துடன் 1 பலம் தண்ணீர் அல்லது மோர் அல்லது சாராயம் இவைகள் ஏதேனும் ஒன்றுடன் சேர்த்துக் கொடுத்தால் பேதி சொஸ்தமாகும்.



## தாளிசபத்திரி சூரணம்.

தாளிசபத்திரி ஒருபங்கு, மிளகு 2 பங்கு, சுக்கு 3 பங்கு, அரிசிதிப்பிலி 4 பங்கு, மூங்கிலுப்பு 5 பங்கு, ஏலக்காய் அரிசி அரைப்பங்கு, சன்ன லவங்கப்பட்டை அரைப் பங்கு, சீனாக்கற்கண்டு 16 பங்கு சேர்ந்த சரக்குகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு திரிகடிப் பரிமாணம் காலை மாலை உபயோகித்துவர அஸ்திசுரம், அரோசகம், சுவாசம், காசம், க்ஷயம் இவை நீங்கும். மூங்கிலுப்பை நீக்கிக் கூகைநீர் கொள்வாரு முளர்.

## தீபாக்கினி சூரணம்.

காயம் 1. வசம்பு 2. வாய்விடங்கம் 3. இந்துப்பு 4. ஓமம் 5. கடுக்காய்த்தோல் 6 சித்திரமூலவேர்ப் பட்டை 7. கோஷ்டம் 8 திப்பிலி 9 சீரகம் 10. இவ்விலக்கங்களுக்கான பல நிறையுள்ள சரக்குகளைத் தனித்தனி பொன்மேனியாக வறுத்திடித்துச் சூரணித்துப் பின்னர்க் கலந்துகொண்டு கால் ரூபா எடை இருவேளையும் கொள்ள அசீரணம், இருமல், சுரம், பேதி, பாண்டு, அரோசிகம் முதலியன நீங்கும். இச்சா பத்தியம்.

## ஏலாதி சூரணம்.

இச் சூரணம் சமஸ்த பித்த ரோகங்களையும் போக்கும், காசா ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, காய்ந்த இலந்தைப் பழத்தை யிடித்து வடிகட்டின தூள், நெற்பொரி, தினைப்பொரி, கோரைக்கிழங்கு, மலாக்கச் சந்தனம் பருத்திக்கொட்டைப் பருப்பு வகைக்கு இரண்டுபங்கு பச்சைக்கர்ப்பூரம் அரிசிதிப்பிலி இவைவகைக்கு

ஒருபங்குகொண்ட சரக்குகளை நன்றாகத் தூள் செய்து கொண்டு சம எடை கற்கண்டுத் தூளோடு கலந்துகொள்க. 2½ வராகன் எடை தூளை 5 வராகன் எடை தேனில் மத்தி துண்ண வாத பித்த கப சம்பந்தமான வாந்தி யாவும் சுகமாவதோடு பல்வகைப் பித்தரோகமும் பறந்துபோ மென்க.

### ஏலாதி சூரணம் (வேறு).

1, 2, 3, 4, 5, 6 பங்குகளாக முறையே சுக்கு, அரிசி திப்பிலி, மிளகு, சிறுநாவற்பூ, இலவங்கப்பட்டை, ஏலக்காய் இவைகளைக் கூட்டி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தோடு சம எடை கற்கண்டுத் தூளும் சேர்த்து இருவேளையும் உண்டுவர அக்கினிமந்தம், உதரரோகம், வீக்கம், பாண்டு மூலம் முதலிய நோய்கள் விலகும்.

### வேறு.

இலவங்கம்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், சிறுநாவற்பூ வகைக்கு 1 பலம், பேரீச்சங்காய் 2 பலம், அதிமதுரம், திப்பிலி, திராக்ஷை வகைக்குப் பலம் 4. இவைகளைக் கூட்டிச் சேர்த்திடித்துச் சூரணித்துப் பாதி எடை சீனிக் கற்கண்டுப் பொடியும் கூட்டித் தேன்' நெய், பொரிமா, பால் இவைகளுள் ஏதேனுமொன்றோடு கலந்துண்ண பித்தம், வாந்தி, தாகம், தாபம், வறட்சி, காங்கை, கிரகணி, அதிசாரம், சீத ரத்தபேதி, வயிற்றுவலி, இருமல், க்ஷயம் இவை தீரும். பசி யதிகரித்துத் தேகம் வலுக்கும்.

### மல்லி சூரணம்.

ஆய்ந்தெடுத்த கொத்தமல்லி விதை 22 பங்கு, அதிமதுரம், சீரகம், சோம்பு, கருவேப்பிலை யீர்க்கு, விதை நீக்கின



நெல்லிமுள்ளி, காசா ஏலம், சடாமாஞ்சில், வெங்கம்பூர்ச் சந்தனத்தூள், சிறு நாவற்பூ, சன்னலவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை இவை வகைக்கு இரண்டு பங்கு கொண்ட சரக்குகளை வெயிலிலுலர்த்திச் சூரணித்து 44 பங்கு கற்கண்டுத் தூளும் கலந்து இருவேளையும் திரிகடி கொள்ளின், நீரெரிச்சல், நீர்குத்தல், கண்ணெரிச்சல், பித்தவெட்டையாலாய கைகால் எரிவு, பித்தரோகம், அரோசிகம், உஷ்ணரோகம், விக்கல், வாந்தி, வறட்சி, சொறி, தேக இளைப்பு, மேகசுரம் முதலியன நீங்கும். இச்சூரணம் ஒரு மண்டலம் கொள்ளவேண்டும். இதனை நவபாண்டத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு மண்டலம்கொள்ள விரும்பின் சூரணத்தை மூன்றுமுறை செய்துகொள்ளவேண்டும். காந்த, அயக்காந்த சிந்துரங்கள், அம்சமண்டூரம், வங்கபஸ்பம், நாகபஸ்பம் இவை சாப்பிடுபவர்கள் இந்தச் சூரணத்தில் நெல்லிக்காயளவு சேர்த்துக்கொள்ளுவதும் நன்றே.

### ஓம சூரணம்.

பெருங்காயம், செவியம், வாய்விளங்கம் இந்துப்பு, இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், கடுக்காய், சித்திரமூலம், ஓமம் முதலியவைகளை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 பங்குகளாகச் சேர்த்துக் கூட்டிச் சூரணித்துத் தினந்தினம் திரிகடி கொள்ளின் குன்மம், சூலை, மந்தாக்கினி, மகோதரம் பஞ்சகாசம் முதலியன நிவர்த்தியாகும்.

### கோஷ்ட சூரணம்.

காயம் 2 பங்கு. வசம்பு 4 பங்கு, திப்பிலி 6 பங்கு, சுக்கு 8 பங்கு, ஓமம் 10 பங்கு, கடுக்காய், 12 பங்கு, சித்திர

மூலம் 14 பங்கு, கோஷ்டம் 16 பங்கு கொண்ட சரக்குகளை முறைப்படிச் சூரணித்து அநுதினமும் இருவேளை அரைத் தோலாவீதம் வாயளவு சலத்தோடு உட்கொண்டால் அஜீரணம் நீங்கும்.

## சந்தனாதி சூரணம்.

கிச்சிலிக்கிழங்கு, கார்ப்போகத்தரிசி, நீரடிமுத்து, மைலாலாக்கடி, பூஞ்சாந்து, வெட்டிவேர், கஸ்தூரிமஞ்சள், குருவேர், கோரைக்கிழங்கு, அகில்கட்டை, தேவதாரு கிளியூரம்பட்டை சந்தனத்தூள், பளிங்குச் சாம்பிராணி, கௌளா, கல்பாசி, முதலியவற்றை வகைக்கொரு பலமாக இடித்துக் கூட்டி ஸ்நானம் செய்வதற்கு 10, 15 நிமிஷங்களுக்கு முன்னே தேகத்தில் பூசிவைத்திருந்து பின்னர் குளித்து முழுகினால் ஒரு வாரத்துக்குள் சொறி, சிரங்கு, தவளைச்சொறி, படை, கருமேகம், நமைச்சல், தினவு, வடுக்கள் முதலியன நீங்குவதுடன் நன்மணமும் மனமகிழ்வும் உண்டாகும். ஸ்திரீகள் இச்சூரணத்துடன் பச்சைப்பயிற்றைச் சேர்த்தரைத்துக் குளித்தலுமுண்டு. இக்குளிப்பு மாசில்லாத் தேகத்தையும் அழகினையும் கொடுக்கும். அந்நிய நாட்டுச் சவர்க்கார முதலியவைகளால் தேகத்தைக் கெடுத்துக்கொள்ளாமல் இதனை உபயோகிப்பதே நலம்.

## பித்த நாச சூரணம்.

ஏலம் கோஷ்டம் அதிமதுரம் சீரகம் நெற்பொரி இவை சம எடையாகச் சூரணித்து நேர் எடை சர்க்கரை கலந்து உண்டுவந்தால் பித்தநோய் குணமாகு மென்ப.



## வாக்கு வல்லப சூரணம்.

கோஷ்டம், அமுக்கிரா, இந்துப்பு, திப்பிலி, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, பொன்முசுட்டை, ஓமம் இவை சமபங்கும் இவற்றிற்குச் சமம் வசம்பும் கூட்டிச் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து நெய்யிலேனும் தேனிலேனும் இருவேளையும் திரிகடி கொள்ளின் ஒரு வாரத்தில் சாரீரமும் 2 வாரத்தில் புத்தி விசாலமும், 3 வாரத்தில் வாக்கு வல்லபமும் உண்டாகும்.

## பஞ்ச தீபாக்கினி சூரணம்.

சுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி, ஏலம், நற்சீரகம் இவை தனித்தனி சமநிறையுள்ள சூரணத்தோடு ஐந்து பங்கு சீனி சர்க்கரை கலந்து தேன் நெய் இவற்றுளொன்றில் அநுபானித்து உண்டுவந்தால் உஷ்ண நோய்கள் சூலை வாயு பித்த வாயு பொருமல் செரியாமாந்தம் மயக்கம் கிறுகிறுப்பு அஸ்தி சுரம் அஸ்திவெட்டை மூலவாயு இவை தீரும். புளிப்பு கசப்பு விலக்காவதுடன் போகமும் புகையும் ஆகாதென்ப.

## வேறு.

சுக்கு மிளகு அரிசிதிப்பிலி இந்துப்பு ஓமம் இவை வகைக் கொவ்வொரு பங்கும் சீரகத்தூள் இரண்டு பங்குமாகக் கலந்து அரை விராகனிடை பரிமாணம் கொடுத்துவந்தால் வாயு வயிற்றுப் பொருமல் அஜீரணம் இவை நீங்கும்.

## திராட்சை சூரணம்.

திராக்ஷை, நெற்பொரி, தாமரைக்கிழங்கு, அதிமதுரம், பேரீச்சங்காய், நன்னாரிவேர், மூங்கிலுப்பு, விலாமிச்சை வேர், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், கிரந்தி நாயகம், தக்கோலம், ஜாதிக்காய், ஏலம், சிறுநாவற்பூ,

இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, திப்பிலி, மல்லி இவைகளைச் சமஎடை சேர்த்தெடுத் திடித்துச் சூரணித்துக் காலை மாலை சர்க்கரைகூட்டி யுண்டுவர பித்தம், தாகம், மூர்ச்சை, வாந்தி, அருசி, பாண்டு, காமாலை, இரத்தபித்தம், தாபம், சுரம், பிரமேகம், ரத்தமூலம், க்ஷயம், மகோதர சம்பந்த நோய்கள் மர்மஸ்தான ரோக தோஷங்கள் இவை நீங்கும். இந்தச் சூரணத்தைத் தேன் நெய் பால் இவைகளுள் ஏதேனும் ஒன்றன் அநுபானத்திற் கொள்க.

### மஞ்சட் காமாலைச் சூரணம்.

சந்தனத்தூள், அதிமதுரம், கோரைக்கிழங்கு, தக்கோலம், கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, கொட்டைத்திராட்சை, பேரீச்சம்பழம், பொடுதலை, விலாமிச்சம்வேர், நெல்லிமுள்ளி இவை வகையொன்றுக்கு அரைப்பலம்வீதம் சேர்த் திடித்துச் சூரணித்துப் புதுப்பாண்டத்தில் வைத்துக் கொண்டு ஒருபலம் எடை இருவேளையும் பச்சரிசிக் கழுநீரில் கரைத்துட்கொண்டால் 20 நாளில் மஞ்சட் காமாலை மாயமாய்ப் பறக்கும். தனிச்சூரணம் கொண்டால் பித்த ரோகத்தால் உண்டான கைகால் எரிச்சல் முதலியன நீங்கும்.

### பாஸ்கர சூரணம்.

திப்பிலி, கண்டதிப்பிலி, தாளிசபத்திரி, மல்லி, கருஞ்சீரகம், லவங்கபத்திரி, சிறுநாகப்பூ, புளியாரைக்கீரை, வளையல் உப்பு, இந்துப்பு வகைக்கு 1 பலம், சுக்கு, மிளகு, சீரகம் வகைக்குப்பலம் ½, சன்னலவங்கப்பட்டை ¼ பலம், ஏலக்காய் பலம் ¼. மாதளப்பழத்தோல் பலம் 2, சறியுப்பு பலம் 2½, கல்லுப்பு பலம் 4, இவைகளில் உப்பைத் தவிர்த்து மற்றைய



வைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அதனோடு உப்புக்களையும் பொடித்துச் சேர்த்து மாதளம்பழச் சாற்றில் பாவனைசெய்துலர்த்தித் தானிய புடம் வைத்து ¼ தோலா வீதம் புளித்த மோரில் கலந்துட்கொள்ள அசீரணம், புளியேப்பம், வாந்தி, நெஞ்செரிவு, வயிற்றுப்பொருமல், சீரணிக்குங்காலத்தில் உண்டாகும் சூலை, சுரக்கட்டி (பிலீகோதரம்) பக்கச் சூலை (யக்ருதுதரம்) பித்தவாயு சம்பந்தமானநோய்கள் முதலியன நீங்கும்.

### மேகச் சூரணம்.

கொட்டைக்கரந்தை சிறுசெருப்படை, வெள்ளறுகு. இம் மூன்று சரக்குகளையும் உலர்த்திச் சமபாகமாய்ச்சேர்த்திடித்துச் சூரணித்துச் சமன் சர்க்கரை சேர்த்து 20 நாள் இருவேளையும் உட்கொள்ளின் மேகரோகம் நீங்கும்.

### மூங்கிலுப்புச் சூரணம்.

இலவங்கப்பட்டை 1 பங்கு, ஏலக்காய் அரிசி 2 பங்கு, அரிசிதிப்பிலி 4 பங்கு, மூங்கிலுப்பு 8 பங்கு, சீனாக்கற்கண்டு 16 பங்கு கொண்ட சரக்குகளைச் சேர்த்துச் சூரணித்துப் பால், நெய், தேன். வெந்நீர், பழச்சாறு, மாதளைச்சாறு, கருப்பஞ்சாறு, பன்னீர் முதலியவைகளு ளேதேனு மொன்றில் ¼ தோலா வீதம் உட்கொள்ள கைகால் எரிச்சல், தேக எரிச்சல், அக்கினி மந்தம், அரோசகம், நாவறட்சி, பித்தம், சூலை, இருமல், ரத்தபித்தம் முதலியன நீங்கும்.

### பித்த காங்கை சூரணம்.

கொத்துமல்லி நற்சீரகம் சம பங்கு வெங்காயம் இரு பங்கு அகத்திக்கீரை நான்கு பங்கு கொண்ட சரக்குகளை ஒன்றுசேர்த்து வேகவைத்து உலர்த்தி இடித்து வடித்துச்

சமநிறை பனவெல்லம் கூட்டிப் பத்துப் பதினைந்து நாட்கள் கொள்ள பித்த காங்கை விலகும்.

## நில ஆவாரைச் சூரணம்.

நிழலில் உலர்த்திச் சமூலத்துடன் இடித்தெடுத்துக் கொண்ட நில ஆவாரைச் சூரணத்துடன் தேன் பெய்துண்டால் உஷ்ணநோயும், கருவேலம்பட்டைச் சாற்றில் உண்டால் பற்குடைச்சலும், கோசலத்திற்கொள்ள சிரங்குகளும், ஆட்டு மூத்திரத்திற் கொள்ள மேக நோய்களும், மோரிற் கொள்ள சிறு விஷங்களும், ஆமணக்கெண்ணெயிற் கொள்ள எலிகடியும், வெண்ணெயுடன் உண்ண கிரிப்பூச்சிகள் உபாதையும் எருமைப்பாலில் உண்ண காணுக்கடிகளும், வேப்பம் பட்டைச் சாற்றில் உண்ண செவ்வட்டைக் கடிகளும், பருத்திச் சாற்றில்கொள்ள செய்யான்கடிகளும், எருமைச்சாணிப் பாலிற் கொள்ள பாண்டுநோயும் தீரும்.

## கண மாந்த நிவாரண சூரணம்.

ஆகாச தாமரையைச் சிறுக நசுக்கி நிழலி லுலர்த்திக் காயவைத்து இடித்து வடித்துச் சமநிறை நற்சீரகச் சூரணமும் பனவெல்லமும் கூட்டி யிருவேளை ஒருவாரம் திரிகடியளவு கொடுக்க கணமாந்தம் விலகும்.

## வல்லாரைச் சூரணம்,

ஆவின் பாலில் அவித்துலர்த்திய வல்லாரைச் சமூலச் சூரணம் பலம் 5 இளவறுப்பாய் வறுத்திடித் தெடுத்துக்கொண்ட இலவங்கம் ஏலரிசி சாதிக்காய் சாதிபத்திரி மாசக்காய் தாளிசபத்திரி திரிபலாதி வகைச் சூரணம் தனித்தனி அரைப்பலம் வீதம் உடன் கலந்து பத்துப்பலம் சீனிச்



சருக்கரையும் சேர்த்துக்கொண்டு திரிகடிப் பரிமாணம் ஒரு மண்டலம் கொள்ளின் மேகாதி நோய்கள், கைகால் காந்தல், இரந்திவலை, நீரெரிச்சல், கண்ணெரிச்சல், கண்புகைச்சல், மூலச்சூடு, நீர்ச்சூடு முதலியன விலகும். நாட்பட்ட நோய்களுக்கு இதனுடன் அப்பிரகச் சிந்தூரங் கலந்துண்பாரும் உண்டு. இந்தச் சூரணத்தைத் தைலாப்பியங்கனம் சௌளம் முதலிய காலங்களில் விலக்கல் நன்று.

## அமிர்தவல்லி சூரணம்.

* சீந்திற் சர்க்கரை 1 பலம், அதிமதுரம், நெல்லிவற்றல், ஏலம், சீரகம், சந்தனம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், நிலப்பனங்கிழங்கு, நெருஞ்சில்வித்து இவைகளின் சூரணம் வகைக்குக்கால்பலம் வீதம் கலந்துகொண்டுஉபயோகிக்கப் பிரமேகம், மூத்திரக்கிரிச்சிரம் இவை நீங்கும். 1 வராகனிடை சூரணம் கொள்ளலாம். தனிச் சீந்திற் சர்க்கரையை 3 முதல் 15 குன்றுமணி எடை வரையில் தினம் 3-4 வேளை நெய், தேன், சர்க்கரை, நற்சீரகச்சூரணம், ஆவாரம்பூச் சூரணம் முதலியவைகளுள் உட்கொள்ள தாகம், பிரமேகம், சுரம், அருசி, தேக எரிச்சல், சுவாச சம்பந்தமான நோய்கள் பாண்டு, மூலம், விக்கல், பெரும்பாடு, வெட்டை முதலிய ரோகங்களும் தீரும். இது நீரிழிவு நோவுக்கு ஏற்ற மருந்து.

---

* சீந்திற்கொடியை நறுக்கி யிடித்து நீரிலிட்டு ஒருநாள் ஊற வைத்துக் கடைந்து திப்பியைப் பிழிந்து எடுத்துவிட்டு வெயிலில் 2 மணி நேரம் வைத்துத் தெளிந்த பிறகு நீரை இறுத்துவிட்டுப் புது நீர் விட்டுக் கலக்கிவைத்துத் தெளிந்தபிறகு நீரை இறுத்துவிடவும், இவ்விதமாய் மூன்றுதரம் செய்து கடைசியிலிருக்கிற சருக்கரையை யெடுத்து உலர்த்திக்கொள்க.

இந்நோய் போக்க விரும்புவார் மூங்கிலுப்பு, ஏலரிசி, மாதளம்பூ சமநிறை சேர்த்திடித்து வடித்த சூரணத்துடன் சமநிறை கற்கண்டுப் பொடியும் கலந்து கால் தோலா வீதம் பசுப்பால் அநுபானங்களோடு உண்டுவர பிரஸ்தாப ரோயுமன்றி க்ஷயம், மதுமேகம், வெட்டை முதலிய ரோகங்களும் நிவாரணமாகும். நற்சுக முண்டாகும். ஸ்ரீ அமிர்தவல்லி திருவருளால் எல்லா நன்மையும் உண்டாகும் ஆகலின் அமிர்தவல்லிச் சூரணமே அனைத்திலும் நன்றென்க.

### சீரகச் சூரணம்.

ஒருநாள் முழுவதும் காடியில் ஊறப்போட்டுக் காயவைத்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொண்ட நற்சீரகம் கருஞ்சீரகம் இலவங்கப்பட்டை இலவங்கம் அதிமதுரம் கொத்தமல்லி வெந்தயம் இவற்றின் சூரணம் வகைக்கு முக்காற்பலம் வீதம் ஒன்றுசேர்த்து அதற்கு நேர் எடை சீனி கலந்து இருவேளை திருகடிகொள்ள நெஞ்செரிவு,கிறுகிறுப்பு, அதிதாக்கம், வயிற்றுப் பூச்சிகளாகிய கிரிப்பூச்சிகள், கல்லடைப்பு, தொண்டைப்புண், வாய்வேகம் (நாற்றம்) கபம் இவை நீங்கும். தேக பலமுண்டாகும். மூளை பலமுறும் ஜீரணசக்தி யுண்டாகும், இரைப்பை பலமுறும்.

## கஷாயம்.

### சுரக் கஷாயம்.

நிலவேம்பு, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, பற்பாடகம், சீந்திற்கொடி, வேப்பம்பட்டை இவை சமபங்கு இடித்து அரைப்படி சலத்திலிட்டு 2 மணி நேரம் ஊறியபின் அரை ஆழாக்குக்குக் குறையாமற்காய்ச்சி 4 மணி நேரத்திற்



கொருமுறையாக மூன்று வேளைக்குப் பகுத்துக்கொடுத்தால் குளிர்ச்சுரம் முதலிய எல்லாவகைச் சுரங்களும் விலகும்.

### வாத சுரக் கஷாயம்.

சீந்திற்கொடி, திராட்சை, மல்லி, சிற்றுமுட்டி, நன்னாரி வேர் இவை யைந்தையும் காற்பலம் விழுக்காடு அரைப்படி ஜலத்திட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடித்துக் கொடுக்கின் வாதசுரம் சுகமாம். இஃதொரு வேளைக்குரிய அளவாகலின் அப்போதைக்கப்போது புதிதாய்க் கஷாயஞ் செய்து ஆறு வேளைக்குக் கொடுத்தல் வேண்டும்.

### வேறு.

சுக்கு, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிறுகாஞ்சொறி இவைகளையும் முன்போலக் கஷாயமாக்கி யுண்பாரு முண்டு.

### பித்த சுரக் கஷாயம்.

திராட்சை, கோரைக்கிழங்கு, பற்பாடகம், கடுக்காய்த் தோல், கடுகுரோகணி, பச்சிலை இவைகளைக் காற்பலம்விழுக்காடு ஒன்றுசேர்த்துக் காய்ச்சிக் குடிக்கின் பித்தசுரம்போம். இவ்வாறு ஆறுவேளை கொள்ளவேண்டும். அப்போதைக்கப்போது அரைப்படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி வீசம்படி கஷாயமாகவே பருகவேண்டும். இதனால் நாவறட்சியும் குணமாகும். இவ்விதமே பற்பாடகத்தையும் திப்பிலியையும் சேர்த்துக் கஷாயஞ் செய்துண்பாரு முளர்.

### சிலேட்டும சுரக் கஷாயம்.

வகைக் கரைப்பலம் வீதம் அரைப்படி ஜலத்தில் ...க்கி இடப்பெற்ற சுக்கு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், ஆடா

தோடை, கடுகுரோகணி, சீந்திற்கொடி முதலியன சேர்ந்த திரவத்தை எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வேளாவேளை புதிய கஷாயமாக ஆறுவேளை உட்கொள்ளின் சிலேட்டும சுரம் சௌக்கியமாம்.

### வேறு.

சுக்கு, சீந்திற்கொடி, திப்பிலி, வேப்பம்பட்டை, நிலவேம்பு, கண்டங்கத்திரி, தண்ணீர்விட்டான் கிழங்கு, இச்சிலிக்கிழங்கு இவைகளை மேற்கண்ட அளவாய் உபயோகித்துச் சுகமுறுவாரு முண்டு.

### ஜன்னி பாதசுரக் கஷாயம்.

அதிமதுரம், கடுக்காய்த்தோல், ஆடாதோடை, தான்றிக்காய்த்தோல், பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, சீந்திற்கொடி, நெல்லிவற்றல், தேவதாருசக்கை, திராட்சைப்பழம் இவைகளை அரைப்பலம் விழுக்காடு ஒருபடி ஜலத்திலிட்டு அரைக்கால்படியாகக் காய்ச்சிக் காலை மாலை உட்கொள்ள ஜன்னிபாத ஜ்வரம் நிவிர்த்தியாம். அல்லாமலும் தினம் 1-க்கு 3, 4 தடவையாக விட்டுவிட்டு வரும் விஷமச்சுரமும், விடாச்சுரமும், ஒன்றுவிட்ட சுரமும், இரண்டு நாளுக்கொருமுறை வரும் சுரமும், தாபத்தை யதிகரிக்கப் பண்ணி திடீரெனச் சீதளத்தைத் தருஞ்சுரமும் நிவர்த்தியாம். கஷாயத்துடன் தேன் சேர்த்துஉட்கொள்ள வேண்டும்.

### திரிதீயச் சுரக் கஷாயம்.

கோரைக்கிழங்கு, சுக்கு, சீந்திற்கொடி, வெட்டிவேர், மல்லி, சந்தனம் இவை வகைக் கரைப்பல வீதம் தட்டிக்



கொட்டி ஒருப்படி சலத்திலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சித் தேனுஞ் சர்க்கரையும் கலந்தேனும் தனித்தேன் பெய்தேனும் உட்கொண்டால் மூன்றாம் முறைச்சுரம் பறக்கும். தனிச் சர்க்கரை கலப்பாரு முண்டு. நாவறட்சி சரீரதாபம் முதலியனவும் நீங்கும்.

### சாதுர்த்திக சுரக் கஷாயம்.

நெல்லிவற்றல், தேவதாருசக்கை, சுக்கு, சிறுமல்லிகை வேர், கடுக்காய்த்தோல், ஆடாதோடை இவைகளை முற்கூறியபடிக் கஷாயஞ் செய்துகொண்டால் நான்கா முறைச் சுரமும் அதனால் ஏற்படும் அக்கினிமந்தம், பெருமூச்சு, இருமல் முதலியனவும் நீங்கும்.

### மருதம் பட்டைக் கஷாயம்.

மருதம் பட்டையைக் கஷாயம்செய்து உட்கொள்ளின் ஹிருதயத்தைப்பற்றி 5 விதமாக வரும் ஹிருத்ரோகமென்னும் ஜன்னிபாத தொந்தரோகம் நிவர்த்தியாகும்.

### ஆடா தோடைக் கஷாயம்.

ஆடாதோடைஇலையைக் கஷாயஞ்செய்து தேன் சேர்த்துக்கொள்ள கப, பித்த சுரங்கள் குணமாகும். அன்றியும் க்ஷயமும் ரத்தபித்தமும் சுகமாகும் இவ்விலையுடன் கடுக்காய், திராட்சைப்பழம் இவைகளையும் சிதைத்துக் காய்ச்சி உட்கொண்டால் கொடூர ரத்த பித்தமும் இருமலும் தீரும். திப்பிலி கண்டங்கத்திரி இவைகளுடன் மேற்படி இலையையும் சேர்த்துக் கஷாயமாக்கித் தேன் கலந்து சர்பத்துப் பாகமாக்கி உபயோகித்தால் க்ஷயரோகம் நிவர்த்தியாகும்.

## நெருஞ்சிற் கஷாயம்.

நெருஞ்சிற் சமூலத்தை யிடித்துச் சலம்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிய கஷாயத்தில் தேனாவது பாலாவது சர்க்கரையாவது கலந்து குடித்தக்கால் மூத்திரக் கிரிச்சிரம் (அதிமூத்திரம், சொட்டுமூத்திரம்) அஸ்மரி (கல்லடைப்பு) இரத்த மூத்திர முதலியனவும் நிவர்த்தியாகும்.

## திரிபலைக் கஷாயம்.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவற்றின் தோல், தேவதாரு சக்கை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு இவைகளை நைய நறுக்கிக் கஷாயஞ்செய்து தேன் கலந்து கொள்ள சகல பிரமேக ரோகங்களும் நிவர்த்தியாகும்.

## சீந்திற் கோடிக் கஷாயம்.

சீந்திற் கொடியைக் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவற்றின் தோலோடு சமபங்கு சேர்த்துக் கஷாயஞ் செய்து தேனும் திப்பிலிப்பொடியும் கூட்டி நீண்டநாள் உபயோகித்துவர நேத்திர ரோகம் 96-ம் சுகமாம்.

## தேவதாரு கஷாயம்.

தேவதாரு சக்கை, கடுக்காய்த்தோல், ஆடாதோடை, சுக்கு. சிறுமல்லி, நெல்லிமுள்ளி இவை சமஎடையாகக் கூட்டிக் காய்ச்சி உட்கொள்ள அக்கினி மந்தமும், சுவாச ரோகமும் நான்காமுறைச் சுரமும் க்ஷயரோகமும் நிவர்த்தியாகும்.

## சீந்திற் கோடிக் கஷாயம்.

திப்பிலி, சீந்திற்கொடி இவைகளைச் சமமாகச்சேர்த்துக் காய்ச்சிய கஷாயம் நீண்டநாள் தொடர்ந்துவரும் சுரத்தைப் போக்கும்.



## பற்பாடகக் கஷாயம்.

திப்பிலி, பற்பாடகம் இவைகளைச் சேர்த்துக் காய்ச்சிய கஷாயம் பித்த சுரத்தை அக்கணமே போக்கும். தனிப் பற்பாடகக் கஷாயம் பித்த சுரத்தையும், தாகத்தையும், வாந்தியையும், மயக்கம், தலைச்சுற்று முதலியவைகளையும் கண்டிக்கும். மேற்படி சரக்குடன் சுக்கு, சந்தனம், குருவேர் இவையும் கலந்த கஷாயத்தால் பித்தசுரம் கண்டிப்பாய்க் குணமாகும்.

## வில்வக் கஷாயம்.

வில்வவேரின் பட்டை, சீந்திற்கொடி இவைகளு ளொன்றைக் கஷாயமிட்டுத் தேன் கலந்துகொண்டால் ஜன்னிபாத தோஷ சுர வாந்தி நீங்கும்.

## கருங்காலிக் கஷாயம்.

கருங்காலிக்கட்டை, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிக்காய்த்தோல் இவைகளைச் சமநிறை சேத்துக் கஷாயம்செய்து அதில வாய்விளங்கப்பொடியும் எருமைநெய்யும் கலந்து நீண்டநாள் உபயோகிக்கின் பகந்தர ரோகமெட்டும் பறந்துபோம். இக் கருங்காலியுடன் வேம்பு, பேய்ப்புடல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவைகளையும் சேர்த்துக் கஷாயமிட்டுக் குங்கிலியப்பொடி சிறிது சேர்த்து உபயோகிக்க மர்மஸ்தானங்களில் உண்டாகும் ரோகங்கள் யாவும் சொஸ்தமாகும்.

## விஷமச் சுரக் கஷாயம்.

பற்பாடகம், நிலவேம்பு, சீந்திற்கொடி, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு இவ்வைந்தையும் சமன் சேர்த்து நைய

நறுக்கிக் கஷாயமாக்கி உபயோகித்தால் வயிற்றுநோய் நீங்கும், ஜீரணமுண்டாகும், கிருமிகள் சாகும், ரத்த சுத்தியாகும். தேகபலமுண்டு, வாத பித்த கபச் சுரங்களும் முறைச் சுரங்களும் மலைச்சுரங்களும் விஷமச்சுரங்களும் நிவர்த்தியாகும்.

### சர்வ சுரக் கஷாயம்.

ஓரிலைத் தாமரை சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, மல்லி, சந்தனம் இவைகளைச் சமன் சேர்த்திடித்துக் காய்ச்சிக் குடித்தால் எல்லாச் சுர தாகங்களும் வாந்தியும் அருசியும் மார்படிப்பும் பல்வகைச் சுரங்களும் நீங்கும்.

### சர்வ பித்த சந்தனக் கஷாயம்.

சந்தனத்தூள், சுக்கு, கோரைக்கிழங்கு, குருவேர், வெட்பாலையரிசி இவைகளை அரைப்பலம் வீதம் சேர்த்திடித்து முக்கால்படி சலத்திலிட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிச் சருக்கரையோடு இருவேளையும் உட்கொள்ள நீர்க்கடுப்பு, சுரம், தாகம், காமாலை, பித்தரோகங்கள் யாவும் நிவர்த்தியாகும்.

### சன்னி பாத சுரக் கஷாயம்.

சந்தனத்தூள், பொன்முசுட்டை, அரிசிதிப்பிலி, கடுக்காய், தாமரைக்கிழங்கு, விலாமிச்சவேர், இலவங்கபத்திரி, கோரைக்கிழங்கு, ஆடாதோடை, சுக்கு, கடுகுரோகிணி, மல்லி, சிந்திற்கொடி, வெட்பாலையரிசி இவைகளைச் சமன் சேர்த்திடித்து ஒருபடிசலத்திலிட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி உட்கொண்டால் சுரவேகத்தால் உண்டான மலஜலக்கட்டுகள்



நிவர்த்தியாகும். வாந்தி கபம் தாபம் நாவறட்சி அருசி அதிசுவாசம், பிதற்றல் இவை நீங்கும்.

### கண்டமாலை நிவாரண கஷாயம்.

மாவிலிங்கப்பட்டைக் கஷாயத்தில் தேன் கலந்து கொள்ளின் கண்டமாலை நிவாரணமாகும். மலையகத்திப் பட்டைக் கஷாயத்தில் சுக்குப்பொடி கலந்து கொள்ளினும் அவ்வாறே.

### நீர் பிரிக்கும் கஷாயம்.

பசுப்பாலில் வெள்ளைச்சாரணைச் சாற்றைக்கலந்து உட்கொள்ள நீர் தாராளமாய்ப் பிரியும்.

### திரிபலைக் கஷாயம்.

கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் இவற்றின் தோலைச் சமமாகப் பொடித்துக் காய்ச்சித் தேன் கலந்து உட்கொள்ளக் கொழுப்பினால் உண்டாகும் ஸ்தூலரோகம் நிவாரணமாகும்; இதனைப் பசுநெய் அல்லது வெண்ணெயில் கொள்ள நேத்திர ரோகம் தீரும். சர்க்கரை கூட்டிக் கொள்ளப் பித்த ரோகம் சாந்தியாகும். கோசலத்தில் கொள்ளின் அண்ட விக்கம் நீங்கும். இக்கஷாயத்தை நீண்ட நாள் கொண்டால் தேகபலமும் நீண்ட வாழ்நாளும் உண்டாம். இது கொண்டு புண் இரணம் இவை சுத்திகரிக்கப்படின் சீக்கிரம் குணமாகும்.

### உதிரச் சிக்கல் நிவர்த்திக் கஷாயம்.

பிரசவித்த மாதர்களுக்கு உதிரம் கட்டுப்பட்டுப்போவதால் நாவுலர்ந்து சுரமுண்டாகுமாயின் முதிர்ந்தவேம்பின் பட்டையை ஒரு பிடியளவு நைய நசுக்கிக் கஷாயம்போட்டு மூன்றிலொன்றாகவற்றக் காய்ச்சிக் கால்படியளவு கொடுக்க

மேற்கண்ட ரோகம் நீங்கும். சுக்கு மிளகுபூண்டு கொடிவேலி இவைகளைச் சம எடை சேர்த்துக் கஷாய முறைப்படி அநுசரிக்க பிரசவஸ்திரீகளின் வயிற்றிற் றங்கிய அழுக்குகள் நீங்கும்.

### கையாந்தகரைக் கஷாயம்.

கரிசிலாங்கண்ணிச் சமூலத்தைப் புதுச்சட்டியிலிட்டு மேற்சட்டி மூடி அடுப்பிலேற்றிச் சாம்பலாகும் வரையிலெரித்து அதில் மல்லியும் ஒரு துண்டு சுக்கும் நறுக்கிப்போட்டு ஒரு படி தண்ணீர்விட்டுக் கஷாயம் செய்து உட்கொள்ள மூன்றும் முறைச் சுரம் நீங்கும் கஷாயம் எட்டிலொன்றாய் வற்றவேண்டும். பிரதிதினமும் புதிதாகச் செய்து கொள்ள வேண்டும்.

சுக்கு மல்லி சந்தனத்தூள் சீந்திற்கொடி வெட்டிவேர் கோரைக்கிழங்கு இவைகளைச் குடிநீர் முறைப்படிக் காய்ச்சித் தேன் சிறிது கலந்து கொடுக்க ஆங்கில மருந்துக்கும் அசையாத முறைச்சுரம் விலகும்.

### சர்வ சுரக் கஷாயம்.

ஆடாதோடை பேய்ப்புடல் கண்டங்கத்திரிவேர் பற்பாடகம் சீந்தில் நிலவேம்பு சுக்கு இவைகளையிடித்துக் காய்ச்சித் தேன் கலந்து கொண்டால் சர்வ விஷமச் சுரங்களும் நீங்கும்.

பேராமுட்டி வேம்பின் ஈர்க்கு சிறுகாஞ்சொறி சீந்தில் சுக்கு கடுகுரோகிணி இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுத்துச் சகல சுரரோகங்களையும் போக்கிச் சுகதேகி யாக்கும் பண்டித மணிகளும் உண்டென்ப.

### மருந்துண்ட வெப்பத்தாலான சீதபேதிக்குக் குடிநீர்.

ஆவாரை வேர்ப்பட்டை பலம் 1. முருங்கை ஈர்க்கு பலம் 2, வெள்ளை வெங்காயம் பலம் 2½ கொண்ட சரக்குகளைச் சிதைத்து இருநாழி நீரிலிட்டு அரை நாழி கஷாயமாக்கி வேளைக்கு 1 பலம் வீதம் கொடுக்க மேற்கண்ட சீதபேதி நீங்கும்.

### சிந்தூர வீறுணி.

அறுகம்வேர் மிளகு இவை வகைக்கொரு பலமாகவும் பூமாதுளம்பூ அதிமதுரம் கூகைநீறு இவை வகைக்கரைப் பலமாகவும் ஆறுபடி ஜலத்திலிட்டு எட்டிலொன்றாய்க்காய்ச்சி அரைக்காற்படி வீதம் ஆறுவேளை பாக்களவு வெண்ணெய் கலந்து கொள்ள சிந்தூரங்களுண்டதாலான வீறுதணியும்.

### இரச வேக சம்ரக்ஷணி.

இரசமுண்டு வாய்வெந்தால் ரோஜாப்பூ விதழ்களையேனும் ரோஜாமொட்டுகளையேனும் நீரிலிட்டு வேகவைத்து வடித்தெடுத்த கஷாயத்தில் சிறிது தேனிட்டு வாய்க்கொப்பளிக்கச் செய்வித்தலும் உண்டு. உள்ளுக்குக் கொள்வதுமுண்டு.

### தந்த ரோக நிவாரிணி.

இரண்டுபிடி வெள்ளறுகுச் சமூலத்தை ஒன்றரைப்படி ஜலத்திலிட்டு பிரதி பாகமாகக் காய்ச்சிக் கொப்பளிக்கச் செய்தால் தந்தரோகம் நிவாரணமாம்.

### சில்விட வேக நிவாரணக் கஷாயம்.

அரைப்பலம் நற் சீரகத்தைக் காற்படி ஜலத்திலிட்டு வீசம்படியாகக் காய்ச்சிய கஷாயத்துடன் தேன் சேர்த்து

ஆறுபொழுது இருவேளையும் உட்கொள்ளின் தாவர விஷம், வெறி நாய்க்கடி, பாஷாண, ரச விஷ வேகங்களும் பிறவும் நீங்குமென்று பெரியார் கூறுப.

### சர்வ பித்த ரோக நிவாரணக் கஷாயம்.

இருகைப்பிடி யளவுள்ள அகத்திக்கீரை, பத்துப்பலம் எலுமிச்சையிலை, காற்படி கொத்துமல்லி இவைகளைச்சேர்த்துக்கொண்டு, முந்தற இலையினங்களை நைய நசுங்க நன்கிடித்துப் பின்னர் மல்லியையும் உடைத்து 3 படி சலத்திவிட்டு அரைப்படியாகக் காய்ச்சி 6 பாகமாக்கிக் காலைமாலை 3 நாள்கொள்ளப் பித்தம் வாந்தி கிறுகிறுப்பு மயக்கம் இவை நிவர்த்தியாகும். பத்தியமில்லை.

### ஆரோக்கிய பரிபாலனக் கஷாயம்.

மிளகு அதிமதுரம் இவை சமநிறை சேர்த்திடித்துக் கஷாயஞ் செய்து காலைமாலையுட்கொண்டுவா பசிதீபனம் உண்டாகும். மூளை குளிரும். சரீரம் பலமுறும்.

இக்கஷாயத்தினை அப்போதைக் கப்போது புதிது புதிதாய்ச்செய்து கொள்க. கார மதிகமானால் சிறிது பனைவெல்லமும் சேர்த்துக் கொள்ளுக.

### பித்த சோகை நிவாரண கஷாயம்.

கரிசாலை நீர்முள்ளி நாயுருவி சுக்கு மிளகு சீரகம் இரும்புச் சிட்டம் இவை சமவெடை சேர்த்துக் கஷாயம் செய்து காலைமாலையுட் கொள்ளச் சோகை நீங்கும்.



### இரச வேக நிவர்த்திக் கஷாயம்.

உலர்ந்த ரோசாப்பூ விதழ்களையாவது, மொக்குகளையாவது நீரிலிட்டுக் கஷாயமாக்கிச் சிறிது தேன்கலந்து உட்கொண்டுவந்தால் இரச வேகவாய் வேக்காடு நிவர்த்தியாகும்.

### வீக்க நிவாரணக் கஷாயம்.

பெருஞ்சீரகம் கண்டதிப்பிலி அதிமதுரம் கோளுக்இலை வகைக்குக் காற்பலம் நைய நசுக்கி அரைப்படி சலத்திவிட்டு நாலொன்றாய்க் காய்ச்சிப் பிரதிதினமுங் காலையிற் கொள்ளப் பிரவிருத்தியாகும். பின்னர் வீக்கம் விலகும். 3-நாள் கொள்ளுக. அப்போதைக் கப்போது புதிய கஷாயம் செய்துகொள்க.

## பாகு இனம்.

### துளசி தளம்.

துளசியிலைச் சாறு நான்கு சேரும் சீனிச்சருக்கரை நான்கு சேரும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து இறக்கிக் கொண்டு ஒருபலம் வீதம் 2 பலம் ஜலத்தில் கலக்கிக் காலை மாலை யுட்கொள்ள தொற்று நோய், இரைப்பு இருமல் சுரம் இவை நீங்கும். மூளை சுத்திகரிக்கப்படும். இருதயத்துக்குப் பலமுண்டாகும். அறிவு விருத்தியாகும்.

### எலுமிச்சம்பழம்.

பத்துப்பலம் எலுமிச்சம் பழச்சாற்றுடன் முப்பது பலஞ் சீனிச்சருக்கரை சேர்த்துக் காய்ச்சிப் பதமாய் இறக்கிக் கொண்டு ஒருபலம் ஜலத்தில் அரைப் பலம் பாகு சேர்த்து உட்கொள்ள சீதபேதி தாகம் பித்தவாத ரோகம் முதலியவை தீரும்.

### தாமரைப்பூ.

12 பலம் உலர்ந்த தாமரைப்பூவிதழ்களை 2 படி கொதி வெந்நீரிலிட்டு 30 நாழிகை ஊற வைத்தெடுத்து வடிகட்டின ஜலத்தில் ஒரு வீசை சீனிச் சருக்கரை சேர்த்து மதுபாக மாய்க்காய்ச்சி இறக்கும் சமயத்தில்2 பலம் பன்னீர் சேர்த்து வடித்துச் சீசாவில் அடைத்து வைத்துக்கொண்டு அரைப் பலம் பாகை 2 பலம் சலத்துடன் சேர்த்து உட்கொள்ள மூலச்சூடு மலச்சிக்கல் நீர்க்கட்டு நீர்க்கடுப்பு இவை நீங்கி தேகங் குளிர்ச்சியா யிருக்கும்.

### வேறு.

13 பலம் தாமரைப்பூவை 4 படி ஜலத்திலிட்டு வாலை யில் வைத்துக் காய்ச்சி 2 படி தீநீர் எடுத்து அதில் 20 பலம் சீனிச் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிக்கொண்டு ஒரு பலம் வீதம் காலை மாலை உட்கொள்ள உஷ்ணத்தா லுண்டான ஒற்றைத் தலைநோய் பித்த வாந்தி வறட்சி யிருமல் பக்கவீக் கம்மார்பு வறட்சி இவைநீங்கி மலப்பிரவிருத்தி உண்டாகும்.

### ரோஜாப்பூ.

12பலம் ரோஜாப்பூவிதழை 3 படி சுத்த ஜலத்திலிட்டு வாலையில் வைத்து $1\frac{1}{2}$ படி தீநீரெடுத்துக்கொண்டு அதனோடு நான்குபலம் பன்னீரும் 60 பலம் சர்க்கரையும் சேர்த்துக் காய்ச்சி வடித்தெடுத்துக்கொண்டு ஒரு பலம் பாகும் இரு பலம் தண்ணீருமாகக் கலந்துகொண்டால் மூலச் சூடு மல பந்தம் உஷ்ணம் இவை தீரும்.

### வேறு.

பன்னிரண்டு பல ரோஜாப்பூவிதழை இரண்டரைப்படி ஜலத்திலிட்டு ஒரு படியாய்க் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிய



சாற்றில் 15 பலம் சர்க்கரை சேர்த்துக்காய்ச்சிப் பதத்தி லிறக்கிக்கொண்டு இரண்டு பலம் ஜலத்தில் ஒரு பலம் பாகு வீதம் சாப்பிட்டு வர சீதபேதி மலச்சிக்கல் நீர்க்கடுப்பு தேக எரிவு முதலியவை தீரும்.

### சந்தனம்.

2 சேர் சந்தனத்தூளில் 16 சேர் சுத்த ஜலம்விட்டு 2 சேராகச் சுண்டக்காய்ச்சி அதில் 3 சேர் சீனிச்சருக்கரை யும் தேவையான பன்னீரும் சேர்த்துப் பாகத்திலிறக்கிக் கொண்டு மேற்கண்ட அளவுபடி சாப்பிட்டுவரின் சுரம், மூலச்சூடு இரத்தக்கொதிப்பு, பிரமேகம் முதலியன தீரும்.

### வேறு.

கடைச்சல் பிடித்த சந்தனத்தூள் பலம் இருபதை 100 பலம் பன்னீரில் 60 நாழிகை ஊற வைத்து மறுநாட் காலை யில் அடுப்பி லேற்றி சிறு தீயா யெரித்து அரைப்பாகம் சுண் டின பிறகு வடித்தெடுத்துக் கொண்டு பன்னீர் விட்டரைத்த சந்தனம் பலம் இருபதைக் கரைத்து மீண்டும் அடுப்பேற்றி மூன்றி லொன்றாய்க்காய்ச்சி வடித்துத்திப்பி நீக்கிக்கொண்ட பின் 40 பலம் சீனிசர்க்கரை சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி எடுத்துக்கொண்டு மேற்கண்டபடி உட்கொள்ள சுரல் உஷ் ணம் தணியும். இருதயம் பலப்படும். அன்றியும் இருதயத் தின் எல்லா நோய்களும் போம். துர் இரத்த சம்பந்த நோய் களும் தொலையும்.

### நாரத்தம் பழம்.

இந்தப் பாகை எலுமிச்சம் பழப்பாகை முறைப் படியே செய்துகொள்ள வேண்டும். இது பித்தம் தாகம்

வாந்தி அரோசகம் வயிற்றிற் காணும் எரிச்சல் சுரம் இவைகளை நீக்கும்.

## இனிப்பு மாதளை.

இதுவும் எலுமிச்சம் பழப்பாகு முறையையே அநுசரித்தது. ஆனால் சிறிது பன்னீர் சேர்த்துப் பதத்தில் இறக்கிக் கொள்வது முண்டு. இது அழலை வாந்தி தாகம் சுரம் அருசி உஷ்ணம் இவைகளைப் போக்கும்.

## பச்சைத் திராக்ஷை.

எலுமிச்சம் பழச் சர்பத்துப்படியே செய்வித்துக் கொள்ளவேண்டும். அதனோடு வேண்டிய அளவு பன்னீர் சேர்த்துக் கொள்ளுவாரு முண்டு. இது கைகால் எரிச்சல், பித்தச்சூடு அரோசகம், தாகம் முதலியவற்றை நீக்கி இரத்த விருத்தியை யுண்டாகும்.

## வில்வம்.

அரைச்சேர் சுத்தஜலத்தில் ஒருபலம் வில்வப்பழத்தின் சதையைச் சேர்த்துப் பிசைந்துவடிகட்டிக்கொண்டு வேண்டுமான அளவு சர்க்கரையுஞ் சேர்த்துக்கொடுக்க ரோகத்தால் துர்ப்பல மடைந்தவர்களின் மலச்சிக்கல் நீங்கும். ஆனால் இம்மருந்தை ஒவ்வொரு வேளைக்கும் அப்போதைக்கப்போது புதிதாகச் செய்துகொள்ள வேண்டும்.

## புளிப்பு மாதளை.

ஒரு பங்கு சீனியும் 2 பங்கு புளிமாதுளம் பழச்சாறுங் கலந்து காய்ச்சிப் பதத்தி லிறக்கிக்கொண்டு அரைப்பலம் வீதம் கொள்ள வாந்தி மலப்போக்கு இவைநீங்கும். பித்த ரோகமும் சாதகமாம்.



## நன்னாரி.

மேற்றோலும் உண்ணரம்பும் போக்கிய 12 பலம் நன்னாரிவேரை இடித்து 4 படி ஜலத்திலிட்டு 2 படியாகக் காய்ச்சி வடித்து 40 பலம் சீனியுடன் கலந்து காய்ச்சி ஒரு அளவுக்கு 2 அளவு ஜலம் சேர்த்துச்சாப்பிட்டால் கைகால் எரிவு நாவறட்சி மேககாங்கை மருந்தீடு முதலியன நீங்கும்.

## நெருஞ்சில்.

சிறு நெருஞ்சிலைச் சமூலமாய் இடித்துப் பிழிந்தசாறு, சேர் 3. சீனிச்சர்க்கரை 40 பலம், நல்லதேன் 2 சேர் இவைகளை யெல்லாம் சேர்த்துப் பதத்தில் வடித்துக்கொண்டு பழச்சர்பத்து அளவுப்படி உட்கொண்டால் நீரடைப்பு கல்லடைப்பு நீர்ப்பை வெப்பம் முதலியன நீங்கி தாது புஷ்டியு முண்டாகும்.

## இஞ்சி.

தெளிந்து சுண்ணாம்பு நீங்கிய இஞ்சி ரசத்தை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு இரண்டு பாகம் சீனிச்சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிக்கொண்டு 1 அளவுக்கு 2 அளவு தண்ணீர்சேர்த்து உட்கொள்ள அஜீரணம் வயிற்றுப்பிசம் வயிற்றிரைச்சல் புளியேப்பம் பசியின்மை இவை நீங்கும்.

## வல்லாரை.

வல்லாரை யிலையைக் காயவைத்து ரோஜாப்பூச் சர்பத்து முறைப்படி செய்துகொள்க. அதன் அளவுப்படியே இதனையும் உபயோகிக்க மேக சம்பந்த காங்கை முதலியன நீங்கும்.

### காடி.

புளிங்காடி ஒருபங்கும் சீனிச்சருக்கரை இரண்டு பங்குமாகச் சேர்த்துக் காய்ச்சிய சர்பத்தில் 1 அளவுக்கு 2 அளவு தண்ணீர் சேர்த்துக் கொண்டால் சன்னிபாத சுரம் அஜீரணம் பித்த மயக்கம் இவை நீங்கும்.

### செம்பருத்திப்பூ.

செம்பருத்திப் பூவிதழ் 10 பலத்தை 4 படி கொதி வெந்நீரில் 1 ஜாமம் மூடிவைத்திருந்து, பிறகு வடித்து ஒரு வீசை சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி 1 அளவுக்கு 2 அளவு ஜலத்தோடு உட்கொண்டால் உஷ்ண இருமல், சுரத்தாகம், அதிமூத்திரம் இவை நீங்கி தேகம் குளிர்ந்து சுகமாயிருக்கும்.

### நாவற்பழம்.

நன்கு பிசைந்து வடிகட்டிய தனி நாவற்பழ விரசம் அரைப்படியுடன் ஒரு வீசை சீனிக்கற்கண்டு கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி ஆறவிட்டு, ஒருவராகன் எடை குங்குமப் பூவையும் கால் வராகனெடை பச்சைக் கருப்பூரத்தையும் $2\frac{1}{2}$ பலம் பன்னீர்விட்டுக் கல்வத்திலிட்டு அரைத்துச் சர்பத்தோடு கலக்கிச் சீசாவிற் பத்திரப் படுத்திக்கொண்டு வேளை 1-க்கு தோலா எடை 4 தோலா சலத்தோடு சேர்த்துச் சாப்பிட இரத்தமூலம் பெரும்பாடு அதிநீர்த்தாகம் இவை விலகும்.

### அத்திப்பழம்.

ரோஜா மொக்கு 4 பலம், சோம்பு 2 பலம், சீமை அத்திப்பழம் 2 பலம் இவைகளைத் தேனிற் பதப்படுத்தி வைத்



தெடுத்துக் கொண்டு, பிறகு 3 படி வெந்நீரில் 24 மணிநேரம் ஊறவைத்து மறுநாள் சிறுக எரித்து $1\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, அதனுடன் 43 பலஞ் சீனிச் சர்க்கரையைச் சேர்த்துத் தேன்பதமாகக் காய்ச்சி மலப்பிரவிருத்திக்காகக் காலை நேரத்தில் 1 பங்கு அல்லது $1\frac{1}{2}$ பங்குப் பாகுடன் 3 பங்கு தண்ணீர் கலந்து உட்கொள்ளின் இரண்டொரு முறை விரேசனமாகும். சூடுந்தணியும். வேண்டுமாயின் இதனுடன் $1\frac{1}{2}$ தோலா ரேவல் சின்னிப் பாலை வாதுமை எண்ணெய் விட்டு நெகிழ வரைத்து நெய்விட்டுக் குழைத்து ஷர்பத்திற் கலக்கிக்கொடுத்து 5, 6 முறை விரேசன மாக்குவிக்கும் பரிகாரிகளு முண்டு.

### வாதுமை.

ஒரு வீசை வாதுமைக் கொட்டையை உடைத்துப் பயறெடுத்து வெந்நீரில் ஊறப்போட்டு மேல் தோலை உரித்தெடுத்துச் சிறிது வெந்நீர் தெளித்தரைத்துத் தண்ணீர் பெய்து பிசைந்து பிசைந்து தேங்காய்ப்பால் எடுக்கு முறைப்படி பாலெடுத்துக்கொண்டு வடித்துக்கொண்ட பால் அரைப்படியானவுடன் $1\frac{1}{2}$ வீசை சீனிச் சருக்கரை சேர்த்துக் காய்ச்சித் தேன் பாகில் எடுத்துக்கொண்டு வேளை 1-க்கு 4 பங்கு பாலோடேனும் நீரோடேனும் பருகிவரின் தாதுவிருத்தியாகும்; உஷ்ணந் தணியும்.

### முள்ளங்கி.

சிவப்பு முள்ளங்கியை அரை வீசை தெரிந்தெடுத்துச் சிறுதுண்டஞ் செய்து மட்பாண்டத்திட்டு 4 படி ஜலம் விட்டுச் சிறுதீயா யெரித்துக் கிழங்கு வெந்து குழையும் சமயத்

தில் நன்கு பிசைந்து 2, 3 தடவை வடித்து அரை வீசை சர்க்கரை கூட்டித் தேன்பதத்தி லிறக்கிக்கொண்டு வேளை 1-க்கு 1 பங்குப் பாகுடன் 2 பங்கு சலம் சேர்த்துண்டுவர இருதயம் வலுக்கும். இரத்தம் சுத்தமாகும். இந்திரியம் கட்டும். மனந் திடப்படும்.

## வெற்றிலை.

200 வெற்றிலையை நன்கு நசுக்கி இரண்டு ராத்தல் சலம் விட்டு மூன்றிலொன்றாய் வற்றக் காய்ச்சி வெள்ளைச் சர்க்கரை $6\frac{1}{2}$ பலம் சேர்த்துப் பாகாகும் சமயம் குங்குமப்பூ சாதிக்காய் சாதிபத்திரி வெள்ளேலக்காய் அரிசி வகைக்குத் தோலா $\frac{1}{2}$ யும் இலவங்கம் தோலா $\frac{1}{4}$ம் பன்னீரால் அரைத்துக் கூட்டிக்கொண்டு $\frac{1}{2}$ தோலா வீதம் உட்கொண்ட மனிதர் மனச் சந்தோஷத்தையும் தாதுபுஷ்டியையும் சுத்த இரத்தத்தையும் பெறுவர்.

## காசினியிலை.

காசினியிலை ரசம் எடுத்துக் காய்ச்சி வடிகட்டியது பங்கு 13ம், வெள்ளைச் சர்க்கரை 20 பங்கும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி 1 தோலாப் பாகை 2 தோலா சலத்துடன் உட்கொள்ள நீர்க்கட்டு நீர் எரிச்சல், உட்காய்ச்சல் மலபந்தம் இவை நீங்கும்.

## பித்தச்சூடு நிவர்த்திப் பாகு.

பச்சைக்கொடி முந்திரிப் பழச்சாறு 15 பலத்துடன் சீனாக்கற்கண்டு 15 பலம் சேர்த்துப் பாகுசெய்து $2\frac{1}{2}$ பலம் பன்னீரும் பதத்திற் கலந்துகொண்டு இறக்கி, ஒரு பலம்



பாகோடு இருபலம் சலமும் கலந்து பருகி வர பித்தச் சூடு முதலியன பறந்துபோம்.

## யாளிவிரை.

ஐந்து பலம் நன்காய்ந் தெடுத்த ஆளிவிதையை 2 படி சலத்திலிட்டுக் கஷாயஞ்செய்து வடித்துக்கொண்டு 40 பலம் சீனியுடன் கலந்து பாகுசெய்து கொள்க. அப்பாகொடு 5 † வராகனெடை குங்குமப்பூவும் 5 வராகனெடை சந்தன அத்தரும் பன்னீரி லரைத்துச் சேர்த்து உடன்கூட்டிடுக. காலை மாலை $\frac{1}{2}$ பலம் சுத்த சலத்துடன் உட்கொள்ளப் பிரமியம் நீர்க்கடுப்பு நீரெரிச்சல் முதலியன நிவர்த்தியாகும். (விடை = வராகனெடை).

## மாத்திரை யினம்.

### ஏலம்.

ஏலம் வெற்றிலைக் காம்பு எலுமிச்சம்பழ விதை இவைகளைச் சமன் சேர்த்துப் பழச்சாற்றால் நன்கரைத்துக் குன்றுமணிப் பரிமாணம் மாத்திரைகள் செய்துகொண்டு தாய்ப்பால் சீரகக் கஷாயம் இவைகளில் ஏதேனும் ஒன்றுடன் கொடுக்கச் சர்வ வாந்தியும் வாசியாகும்.

## சச்சிதானந்த பைரவம்.

பாதரசம் நெல்லிக்காய்க் கந்தகம் நாபிக்கிழங்கு இவை சம எடை சாதிக்காய் 3 பங்கு மிளகு 6 பங்கு உள்ள சரக்குகளைச் சுத்திமுறைப்படி சுத்திபண்ணி இஞ்சிச் சாற்றால்

---

† ஒருபலத்தில் பத்திலொரு பங்கு. பொன் நிறுத்தலளவும். இவ்வளவினை யுடையதே.

3 நாள வரையில் கலுவத்திட் டரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திக் கொண்டு ஒரு மாத்திரை வீதம் 3 நாள் ஆறுபோது தேனி லிழைத்துக்கொடுக்க சர்வ சுரங்களும் நிவர்த்தியாகும். இச்சா பத்தியம்.

## சன்னிக்குக் குளிகை.

இரசம், கெந்தகம், தாளகம், துத்தம், நாபி, நேர்வாளம், வெண்காரம், அதிமதுரம், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய் இவைகளைச் சம வெடை சேர்த்து பிரமியிலைச் சாற்றால் ஆறுநாள் அரைத்துப் பச்சைப் பயறளவு மாத்திரைகள் செய்துகொண்டு இஞ்சிச் சாற்றிற் கொடுக்க 13 வகைச் சன்னிகளும் பறந்தோடிப் போகும். ஆளறியாச் சன்னிக்கு உச்சித் தலையைக்கீறி 2 மாத்திரை வைத்து அழுத்தித் தேய்த்துப் பிரமையைப் போக்கும் பண்டிதர்களு முண்டு.

## கோடா சூடிக் குளிகை.

சம வராக னெடையாகச் சுத்திமுறைப்படி சுத்திசெய்துகொண்ட இரசம் நாபி கந்தகம் அரிதாரம் அக்கிரகாரம் வெண்காரம் சுக்கு மிளகு திப்பிலி மனோசிலை கடுக்காய் நெல்லிவற்றல் தான்றிக்காய் இவைகளோடு சுத்திகரிக்கப்பட்ட நேர்வாளம் 13 வராக னெடையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனி ரசத்தால் 7 நாளும், கையாந்தகரைச் சாற்றால் 7 நாளும், பழச்சாற்றால் 7 நாளும் அரைத்துத் துவரைப் பிரமாணம் மாத்திரைகள் செய்துகொண்டு இஞ்சிச் சாற்றில் கொடுக்கச்சர்வ சுரங்களும் நீங்கும். ஆமணக்கெண்ணெயிற் கொடுக்க விரோசனமுண்டாகும். கோமயத்தில் கொடுக்க அல்லது பசு மோரிலிடக் கிறு கிறுப்பும், பழச்



சாற்றில் கொடுக்கச் சர்ப்ப விஷங்களும், அவ்வாறே பழச்சாற்றிலுரைத்துக் கொட்டின வாயில் தடவத் தேள் கடியும், பசு நெய்யிற் கொள்ள தேக வீக்கமும், கையாந்த கரைச் சாற்றில் கொடுக்கச் சன்னியும், நொச்சிச் சாற்றில் கொடுக்க வெள்ளைப் பிரமியமும், வெள்ளாட்டுப்பாலில் கொடுக்க இரத்தப் பிரமியமும், பிறவும் குணமாகும்.

## கோரோசனைக் குளிகை.

சுத்தஞ்செய்த ஓர் வராகனெடை அளவுள்ள கோரோசனை, குங்குமப்பூ, சுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி, ஜாதிக்காய், சிற்றரத்தை, வசம்பு வெள்ளைப்பூண்டு, ஓமம், முதலியவைகளைக் கல்வத்திலிட்டு, மணத்தக்காளி இரசமும் வெற்றிலைச் சாறும் சமவெடை சேர்ந்த திரவத்தால் நன்றாயரைத்துச் சுத்திசெய்த $2\frac{1}{2}$ வராகனெடைப் பூரத்தையுஞ் சேர்த்துத் தாய்ப்பால் கொண்டு நன்கரைத்துப் பாசிப்பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தித் தேனில் குழைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கச் சர்வ மாந்த நோய்களும் விலகும்.

## குகானந்த மாத்திரை.

ஏலம் சண்பகப்பூ அதிமதுரம் இலவங்கப்பட்டை கோஷ்டம் இவை தனித்தனி மும்மூன்று வராகனெடையாகத் தனித்தனிச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலிட்டுச் சுத்திசெய்த உலாந்தா லிங்கம் மூன்று வராகனெடை சேர்த்துப் பிள்ளைப்பாலால் நன்கரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகளாக்கித் தென்னங் குடுக்கையி லடைத்து வைத்துக் கொண்டு :—

வயதிற் கேற்றவாறு வேளை யொன்றிற்கு, ½. 1-2 ஆக
பஞ்சமூலிகைக் கஷாயத்திற் கொடுக்கின் சுரமும், இஞ்சி
ரசத்திற் கொடுக்கத் திரிதோஷங்களும், திரிகடுகுக் கஷாயத்
திற் கொடுக்கின் சன்னியும் தீர்தலோடு, சுக்குக் கஷாயத்
தில் கொடுக்கின் விரேசனமும் உண்டாகு மென்ப. பெரும்
பாலும் மாத்திரை வர்க்கங்களை யெல்லாம் நிழலிலேயே
உலர்த்திக் கொள்ள வேண்டும்.

## கோடா சுழிக் குளிகை.

சூதம் கந்தகம் அரிதாரம் நெறிவிஷம் நாபி வெள்ளைப்
பாஷாணம் கௌரி பாஷாணம் ஜாதிலிங்கம் வெண்காரம் அக்
கிராகாரம் திப்பிலி மிளகு நெல்லிப்பருப்பு கடுக்காய்ப்பொடி
தான்றிக்காய் ஆகிய இவை வகைக்கு ஒவ்வொரு வராக
னெடையாய்ச் சுத்திசெய்து சுத்திகரிக்கப் பெற்றுள்ள 30
வராகனெடை வாளத்தினையும் ஒன்று கூட்டிப் பொடியாக்கி
முறையே கையாந்தகரைச்சாறு, துளசிச்சாறு வெற்றிலைச்
சாறு வெள்ளாட்டுப்பால் இவைகளால் மும்மூன்று நாட்கள்
வரை நன்கரைத்து ஆமணக்கெண்ணெய் தடவப் பெற்றுள
கைகளால் சிறுபயறளவு மாத்திரைக ளாக்கி மூன்று தினம்
உலர்த்திக் காற்றுப் புகாப் பாத்திரத் தடைத்து வைத்துக்
கொண்டு கரப்பான் நோய்களுக்குக் காட்டாமணக்குப் பாலி
லரைத்துப் பூசியும், மண்டைக் கரப்பானுக்குக் காடிபி லரை
த்துக் கொடுத்தும் சிரங்குக்கு உத்தமா கர்ணிகைச் சாற்றி
லரைத்துப் பூசியும், ஒற்றைத் தலைநோய்க்கு நாரத்தைச்சாற்
றால் நசிய மிட்டும், காதிலிருந்து விழும்புழுக்கள் நீங்க நெல்
லிக்காய்ச் சாற்றில் கலந்து பிழிந்தும், காது நோய்க்குச்
சங்கிலை சாற்றோடு பிழிந்தும், உண்ணுக்கு வளர்ச்சிக்கு ஆட்டு



நெய்யி லிட்டும், பல்நோவுக்கு வேலம்பட்டைச் சாற்றோடு
உரைத்துப் பூசியும், சிலந்திக்குச் சங்கம்பழச் சாற்றொடு
கலந்து பூசியும், ஒட்டிய புண்ணுக்குக் கோதுமைப் பாலிற்
கலந்து கொடுத்தும், சூலைக்கு அரசம்பட்டைச் சாற்றிற்
கொடுத்தும், வாயுச் சூலைக்கு வெள்ளை வெங்காயச் சாற்றிற்
கலந்தும், பக்கச் சூலைக்குக் கருங்குருவை மாவொடு கலந்
தும், கருப்பச் சூலைக்குப் பிரமியிலைச் சாற்றிலும், விப்புருதிக்
குக் சொத்தான் சாற்றிலும், சந்து விப்புருதிக்கு உள்ளும்
வெளியுமாகக் கோமூத்திரத்திலும், கருப்ப விப்புருதிக்குச்
சிறுகீரைச்சாற்றிலும், சிலந்திகளுக்கு ஆடாதோடைச்சாற்றி
லும், வாதத்திற்கு இளவெந்நீரால் ஆட்டிய வெந்தய கல்கத்தி
லும், விரேசனத்துக்கு அத்தி அரசு பட்டைச் சாறுகளிலும்,
கிரகணிக்கு எருமை வெண்ணெயிலும், வாத கிரகணிக்குப்
பாவட்டை இலைச் சாற்றிலும், ஓடு கிரகணிக்கு எருமைத்
தயிரிலும், பித்த கிரகணிக்கு, நறுக்கு மூலத்தோடு சீரகம்
கலந்த சாற்றிலும், வலிகுன்மத்திற்கு வெந்நீர் விட்டரைத்த
முருங்கைப்பட்டைச் சாற்றிலும், குன்மத்திற்கு எருமைத்
தயிரிலும், வாயு குன்மத்திற்குக் கருகிய உமியைக் கரைத்த
நீரிலும், குன்மத்திற்கு நாய்வேளைச் சாற்றிலும், மேற்கொள
சைக்குத் தகர விதையைப் பொடித்திட்ட இளவெந்நீரிலும்,
கீழ்க்கௌசைக்கு மஞ்சட் சாற்றிலும், பிரமியத்திற்கு நரிப்
பயிற்றஞ் சாற்றிலும், இரத்த பித்தத்திற்கு நீலிச் சாற்றி
லும், சிலேட்டும பித்தத்துக்குத் துவரையிலைச் சாற்றிலும்,
செரியாக் குன்மத்திற்குச் சந்தன நீரிலும், தநுர்வாதத்திற்கு
முடக்கற்றான் சாற்றிலும், அற்பசி வாயுவுக்கு (அர்த்தித,
அர்த்தாங்க) திரிகடுகு, கடுகு, புளி வசம்பு இவை கூட்டி

வெந்நீரால் அரைக்கப்பட்ட சாற்றிலும், சந்துவாதத்திற்குச் சாரணைச் (சாட்டரணை) சாற்றிலும், ஊதுவாதத்திற்குக் கஞ்சியிலும், முள்ளடி வாதம் அல்லது முள்தைத்ததாலுண்டாய இசிவுக்கும் முள்ளந்தண்டு குடைச்சலுக்கும் கோவைப் பழச் சாற்றிற் பூசியும், நடுக்குவாதத்திற்குக் களாக்காய்ப் பருப்பிலும், தொடை வாதத்திற்கு எலுமிச்சம்பழம் அல்லது புளியில் உரைத்துப் பூசியும் குதிவாதத்துக்கு ஆமணக்கிலைச் சாற்றோடு கலந்து பூசியும், பித்த சன்னிக்கு ஊஞைஞ் சாற்றிலும், சிலேட்டும சன்னிக்குப் பூசனிக்காய்ச் சாற்றிலும், அலறு சன்னிக்குத் துவரையிலைச் சாற்றிலும், சுரத்திற்குச் சர்க்கரையும் சீரகமும் கலந்த நீரிலும் கொடுத்துக் குணமாக்குக.

வேறு.

தனித்தனி ஒவ்வோர் வராகனெடையாகச் சுத்திசெய்த இரசம் நாபி கந்தகம் அரிதாரம் அக்கிராகாரம், வெண்காரம் சுக்கு மிளகு திப்பிலி மனோசிலை கடுக்காய் நெல்லிவற்றல் தான்றிக்காய் முதலியவற்றுடன் நன்கு சுத்திசெய்த 13 வராகனெடை வாளத்தினையும் ஒன்றுகலந்து கல்வத்திட்டு முறையே குப்பைமேனி கையாந்தகரை எலுமிச்சம் பழம் இவற்றின் சாற்றால் எவ்வேழுநாட்கள் அரைத்துத் துவரைப் பரிமாணம் மாத்திரைகளாக்கிக் கொண்டு சர்வ சுரங்களுக்கு இஞ்சிச்சாற்றிலும், விரோசனத்திற்குச் சிற்றாமணக்கெண்ணெயிலும், கிறுகிறுப்புக்குப் பசுமூத்திரம் அல்லது மோரிலும், சர்ப்ப விஷங்களுக்குப் பழச்சாற்றிலும், விருச்சிக பாதைக்குப் பழச்சாறு கலந்த பூச்சிலும், வீக்கத்திற்குப் பசு நெய்யிலும், ஜன்னிக்குக் கையாந்தகரைச் சாற்றிலும்



வெள்ளைப் பிரமியத்திற்கு நொச்சியிலைச் சாற்றிலும், இரத்தப் பிரமியத்திற்கு வெள்ளாட்டுப்பாலிலும் கொடுத்துச் சுகங் காண்க.

வேறு.

ஒவ்வொரு வராகனெடையாய்ச் சுத்தி செய்யப்பட்ட இரசம் வெண்காரம் அரிதாரம் கந்தகம் கடுக்காய் தான்றிக்காய் நெல்லிப்பருப்பு (முள்ளி) சுக்கு மிளகு திப்பிலி நாபி இவைகளைக் கல்வத்திலிட்டு நாளொன்றுக்கு ஒவ்வோர் சாமமாக மூன்றுநாள் கையாந்தகரைச் சாற்றாலரைத்து ஆறவிட்டுப் பழச்சாற்றால் நான்காம் நாளும் ஒரு சாமம் அரைத்துப் பதத்தில் வழித்துச் சிறுபயறளவாக மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு:—

வயிற்றுப் போக்குக்குப் பசு நெய்யிலும், விரேசனத்திற்குச் சிற்றாமணக்கெண்ணெயிலும், பித்தத்திற்குக் கையாந்தகரைச்சாறு, பழச்சாறு, புளிச்சாறு இவைகளிலும், குன்மத்திற்குப் பேய்ப்பீர்க்கன்சாறு ஓமத்தூள் இவைகளொன்றிலும், சுரத்துக்குப் பசுநெய், மல்லி அல்லது புளியிலைச்சாற்றிலும், காலெரிச்சலுக்கு வெள்ளாட்டுப்பாலிலும், தாகந்தீர சீரகம் அல்லது நெல்லிக்காய்ச் சாற்றிலும், வாதத்திற்கும் வயிற்றுவலிக்கும் முருங்கைப்பட்டைச்சாறு அல்லது பசுநெய் இவைகளுடனும், கிராணிக்கு எருமைத்தயிரிலும், பிரமியத்திற்குக் கொம்மட்டியிலைச் சாற்றிலும், வாயு வாந்தி இவைகளுக்கு வசம்புத் தூளிலும், இடுப்புவலிக்குத் தனித்தனி மூன்று காசு எடையுள்ள வசம்பு ஓமம் இவைகலந்த சூரணத்திலும் கொடுத்து குணப்படுத்துக.

## பைரவ மாத்திரை.

இலிங்கம், நாபி, திப்பிலித்தூள், மிளகுத்தூள், வெண்காரம் இவை சமபங்கு சுத்திசெய்து கல்வத்திலிட்டுப் பழச்சாற்றால் பன்னிரு ஜாமமரைத்துப் பயறளவு மாத்திரைகளாக்கிக்கொண்டு சுரங்கள் நீங்கத் தேனிலும், ஜன்னி நீங்க இஞ்சிச்சாற்றிலும் 6 வேளை கொடுக்கச் சுகமாகும். பிணியாளன் வயதிற் கேற்றவாறு மருந்தைக் கூட்டியும் குறைத்தும் கொடுத்தலே மருத்துவர் கடனாம்.

### வேறு.

இலிங்கம், நாபி, கந்தகம், வெண்காரம், நவச்சாரம், வீரம் இவைகளைச் சமநிறை கலுவத்திட்டு இலவங்கம், ஜாதிபத்திரி, சுக்கு இவைகளும் அவ்வளவினையேகொண்டு கையாந்தரைச் சாற்றிலும், பிள்ளைப்பாலாலும் இரண்டிரண்டு சாமம் முறையே அரைதது பின் குமரிச்சாற்றால் ஓர் ஜாமம் நன்கரைத்துப்பயறளவு மாத்திரைகளாக்கிக்கொண்டு தேன், இஞ்சிச்சாறு இவைகளிற் கொடுக்கச் சுரம் நீங்கும்.

## பைரவானந்த மாத்திரை.

பாதரசம் நெல்லிக்காய்க் கந்தகம் நாபிக்கிழங்கு இவை வகைக்கொரு பங்கும் ஜாதிக்காய் மூன்று பங்கும் மிளகு ஆறுபங்கும் சேர்த்துச் சுண்ணாம்பு நீங்கிய இஞ்சிச்சாற்றால் மூன்றுநாளரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்திக்கொண்டு வேளை 1-க்கு ஒருமாத்திரையாகத் தேனிற் கொடுக்கச் சர்வ சுரமும் குணமாம்.



## ஆனந்த பைரவ மாத்திரை.

இரசம் கந்தம் இலிங்கம் கருநாபி வெண்காரம் இவைகளைச் சுத்திசெய்து இரண்டிரண்டு சாமம், பழம், இஞ்சி இவற்றின் ரசத்தாலரைத்து மிளகளவு மாத்திரைகளாக்கி வேப்பஞ் சிமிழி லடைத்து வைத்துக்கொண்டு ஒரு மண்டலம் வரை தானிய புடத்திட்டெடுத்துத் தேனிற் கொடுக்க ஜன்னி பாத சுரங்களும் வாதரோகங்களும் சர்வ சுரங்களும் நிவர்த்தியாம்.

### வேறு.

நாபி இலிங்கம் இரசம் மிளகு மனோசிலை இவைகளைப் பருத்தியிலை, கொடிக்கால் முருங்கையிலை, முள்முருக்கிலை, இவை சமபங்கு சேர்த்து இடித்தெடுத்த சாற்றால் நன்கரைத்து மெழுகு பதத்தில் வழித்தெடுத்துத் துவரைப்பரிமாணம் மாத்திரைகளாக்கிக்கொண்டு பரணியிற் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு அறுபத்துநான்கு சுரங்களுக்கும் அடியிற்கண்டுள்ள அநுபானங்களின்படி கொடுக்க.

தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு இளவெந்நீர் தேன் சுக்குக்கஷாயம் இவை எவற்றுளேனும் கொடுத்தலு மன்றி இலவங்கம் சீரகம் சாதிக்காய் சாதிபத்திரி தேசாவரம் கால் வராகனெடையும், அறுகம்புல் கால் பிடியும் அவுரிவேர்ப் பட்டை, மேற்றோல் நீக்கிய வில்வவேர்ப்பட்டை சமவராகனெடையும் ஒரு படி ஜலத்தில் நசுக்கியிட்டு அரைப்படியாகக் காய்ச்சிய நீரில் மூன்று வேளை ஒவ்வொரு மாத்திரையாகக் கொடுத்தும் சௌக்கியப்படுத்துக. வெந்நீ ரன்னம் தவிர மற்றவை யாகா.

### வேறு.

நாபி கந்தகம் இரசம் இவை சமபங்கு, ஜாதிக்காய் 3 பங்கு, மிளகு 6 பங்கு, இவைகளை விதிப்படி சுத்திசெய்து இஞ்சிரசத்தால் மூன்று நாளரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகளாக்கி உலர்த்தித் தேனிலுரைத்துக் கொடுக்கச் சர்வ சுரரோகங்களும் நீங்கும். பத்தியமில்லை.

### சுகானந்த பைரவ மாத்திரை.

இலிங்கம் நாபி கந்தகம் வெண்காரம் நவாச்சாரம் வீரம் இவை சம எடை சேர்த்து இலவங்கம் தாளிசபத்திரி சுக்கு முதலியவைகளையும் மேற்கண்ட அளவு சேர்த்துக் கையாந்தகரை பிள்ளைப்பால் இவைகளால் இரண்டிரண்டு சாமம் நன்கரைத்துப் பனிப்பயற்றினளவான மாத்திரையை நோக்கா நோக்க மறிந்து தக்க அநுபானங்களிற்கொடுக்கச் சுரம் குளிர் தளர் ஜன்னி சிலேட்டும ஜன்னி, இவைமுதலிபன யாவும் நீங்கும். சுகமுண்டாகும்.

### வேறு.

நன்கு சுத்திகரிக்கப் பெற்றுள்ள வாளம் 8 வராகனெடையுடன் இரசம் நாபி வெண்காரம் இவை வகைக்கொருவராகனெடையும் இலிங்கம் நாலு வராகனெடையும் ஒருங்கு சேர்த்து இஞ்சிச்சாற்றால் நன்கரைத்து மிளகளவு மாத்திரைகளாக்கிக் கொண்டு இஞ்சிச்சாறு தேன் நெய் சுக்குக்கஷாயம் இவற்று ளொன்றிற் கொடுக்க விஷமச் சுரமும் மலபந்தமும் வாயுவும் குடல்வாதமும் பறந்து போம்.

### வாந்தி பேதி நிவாரணக் குளிகை.

கர்ப்பூரம் ஐந்துவராகனெடையோடு அரை வராகனெடை அபினையும் சேர்த்தரைத்து மிளகளவு மாத்திரைக



ளாக்கிக்கொண்டு ரோகம் குணமாகும் வரையில் மணிக்கு ஒவ்வொரு மாத்திரைகளாக் கொடுத்துச் சிறிது தண்ணீரும் கொடுக்க. அபினி, மிளகு, காயம் இவை சம எடை சேர்த்து அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரையாக மணிக்கொருமுறை இருமுறையாகக் கொடுப்பாருமுளர்.

### வேறு.

இலிங்கம் கர்ப்பூரம் சாம்பிராணி இவை மூன்றையும் நன்கரைத்து மெழுகாக்கி மிளகளவு விழுங்கும்படி செய்து சிறிது தண்ணீரும் கொடுக்க. வயிற்று நோய் கண்டால் வெள்ளரி விரையை அரைத்துக் கொடுக்கவும்.

### கஸ்தூரி மாத்திரை.

இலிங்கம் நாபி கஸ்தூரி வெங்காரம் திப்பிலி மிளகு ஜாதிக்காய் சமபங்கு கூட்டி வெற்றிலைச் சாற்றால் அரைத்து மிளகளவு மாத்திரையாக ஜலதோஷம் சிரோபாரம் தொண்டைகட்டு, சளி இருமல் சுரம் இவை தீரக் கொடுத்துதவும் வைத்தியர்களும் உண்டு.

### கோரோசனை மாத்திரை.

கோரோசனை கர்ப்பூரம் பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ கோஷ்டம் கிராம்பு ஏலம் அக்கிராகாரம் ஜாதிக்காய் இவை சமபங்கு ஒன்று சேர்த்துச் சந்தனக் கட்டைக் கஷாயத்தால் மைய அரைத்துக் குன்றிமணி நிறையுள்ள மாத்திரைகளை வயசிற் கேற்றபடி வெற்றிலைச் சாறு, பிள்ளைப்பால் இவற்று ளொன்றில் கொடுக்க இருமல் மாந்தம் மேகவாயு இவை நீங்கும்.

### வேறு.

திரிகடுகு ஓமம் கோரோசனை அரத்தை ஜாதிக்காய் வெங்காயம் இவைகளைச் சமநிறை சேர்த்து மணத்தக்காளிச்

சாறு வெற்றிலைச்சாறு இவைகளால் முறையே ஒவ்வொரு சாமம் அரைத்துச் சுத்தியான பூரம் கால் நிறைசேர்த்துப் பிள்ளைப்பாலால் நன்கரைத்துக் கொண்டு மேற்கண்டுள்ளபடி மாத்திரைகளாக்கி மேற்படி அநுமானப்படி கொடுத்து வியாதிகளைப் போக்குக.

## குங்குமப்பூ மாத்திரை.

ஒரு பலம் குங்குமப்பூவோடு திரிகடுகு திரிபலை ஜாதிக்காய் கிராம்பு ஏலம் சந்தனத்தூள் மருதம் பட்டை கடுகுரோகணி இவை அரைப்பலம் வீதம் சேர்த்துக் கலுவத்திலிட்டுப் பழச்சாறு இஞ்சிச் சாறு கண்டக் கத்திரிப்பழச் சாறு இவ்வைகளால் ஒவ்வொரு சாமம் நன்கரைத்துப் பயறளவாக்கித் தகுந்த முறைப்படி தேனிற் கொடுத்து மந்தத்தையும், வெற்றிலைச் சாற்றிற் கொடுத்துக் குழந்தைச் சுரங்களையும், இஞ்சி தேன் இவைகளிற் கொடுத்து ஜன்னியையும் தனி இஞ்சிச்சாற்றில் கொடுத்துத் தோஷத்தையும் போக்குக.

## இராம பாணக் குளிகை.

இரசம் கந்தகம் நாபி வகைக்கொருபங்கும் ஜாதிக்காய் அரைப்பங்கும், மிளகு இரண்டு பங்கும், ஒன்று சேர்த்துக் கலுவத்திலிட்டுப் புளி இலைச்சாற்றாலரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் ஆக்கிக்கொண்டு வேளைக்கு ஒரு மாத்திரையாக மிளகுச் சூரணத்துடன் கொள்ள ஆமவாதம் என்னும் கீல்வலியும் வயிற்றுநோவும் அக்கினி மந்தமும் வாந்தி வயிற்றுப் போக்கு இருமல் முதலியனவும் தீரும்.



## விஷபாத ஜன்னிக் குளிகை.

சம நிறையாக நாபி இலிங்கம் இரசம் மிளகு மனோசிலை இவைகளைச் சுத்திசெய்து ஒன்று கலந்து வேலிப் பருத்தி யிலைச் சாற்றால் ஏழு நாழிகையள வரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைகளாக்கிக்கொண்டு ஒன்று வீதம் மாவிலிங்கப்பட்டை, வெள்ளெருக்கம்பட்டை, முருங்கைப்பட்டை இவை மூன்றுங் கலந்த கஷாயத்தில் 6 வேளை கொடுக்க ஜன்னி யாவுந் தீரும். இச்சாபத்தியம். அரிசிக்கஞ்சி ஆகாரம்.

## சன்னி பாதக் குளிகை.

தாளகம் ரசம் கந்தகம் லிங்கம் நாபி மனோசிலை வெங்காரம் இவை சமபங்கு கூட்டிப் பழச்சாறு இஞ்சிச்சாறு கொடிவேலிக் கஷாயம் இவற்றால் ஒவ்வொரு சாமம் ஆட்டி உழுந்தளவு மாத்திரைக ளாக்கிக்கொண்டு பிள்ளைப்பால் வெற்றிலைச்சாறு இஞ்சிச்சாறு சிற்றரத்தைச் சுரசம் தேன் முதலிய அநுபானங்களிற் கொடுக்க 13 வகைச் சன்னி பாதங்களும் (சுரங்கள்) தீரும்.

## வேறு.

இலிங்கம் நாபி வெண்காரம் திரிகடுகு திரிபலை ஆனைத் திப்பிலி சடாமாஞ்சில் இவை சமன் சேர்த்து இஞ்சி எலுமிச்சம்பழம் இவற்றின் சாற்றால் மூன்றுநாள் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாற்றில் கொடுக்க சர்வ சுரமும் சன்னிபாதமும் தீரும்.

## சர்வ சுரநாச குளிகை.

திரிகடுகு கந்தகம் ரசம் கோஷ்டம் சோரைக்கிழங்கு இலவங்கப்பட்டை நிலவேம்பு வாளம் இவை சமநிறை கலு

வத்திலிட்டு நொச்சிச்சாறு இஞ்சிச்சாறு இவற்றால் முறையே ஒவ்வொரு சாம மரைத்துக் குன்றுமணியளவு உப யோகிக்க வாத பித்த சிலேட்டும ஜன்னிபாத தொந்த விஷ மச்சுரங்கள் யாவும் தீரும்.

வேறு.

சுக்கு மிளகு திப்பிலி நாபி ரசம் கந்தகம் இவை வகைக்கு 4 பங்கும் ஊமத்தை விதை அரைப்பங்கும் சேர்த் துப் பழச்சாற்றால் 4 சாமம் அரைத்துக் குன்றிமணியளவு குளிகை செய்துகொண்டு இஞ்சி ரசம் தேன் சீனிசர்க்கரை முதலியவைகளுள் அநுமானித்துட்கொள்ள முறைச்சுரங் களும் குளிர்ச்சுரங்களும் தொந்த சுரங்களும் நீங்கும்.

வைரமணி மாத்திரை.

இலிங்கம் 8 பங்கு ரசச்செந்தூரம் 2 பங்கு இரசக் கர்ப்பூரம் 1 பங்கு வீரம் அரைக்கால்பங்கு சுத்திசெய்து சேர்த்து முன்னதாக ரசச்சிந்தூரத்தைப் பொடித்துப் பின்ன ரொன்றொன்றாய்ச் சேர்த்து நன்றாய்ப் பொடியாக்கிப் பழச் சாற்றால் 1 சாமமும் மேற்றோல் நீக்கிப் பிழிந்து சுண்ணாம் பும் போக்கிய இஞ்சி ரசத்தால் ஒரு சாமமும் அரைத்துக் குன்றிமணி யளவினதாகச் சர்க்கரையுடன் கொடுத்துப் பின் னர் மிளகுரசம் போதிய அளவு கொடுப்பின் 3 வேளைக்குள் எவ்வகைக் கொடிய சுரங்களும் நிவர்த்தியாகுமென்ப. அன் றியும் தக்க அநுபானங்களிற் கொடுக்க 5 வேளைக்குள் விரை வாத ரோகம் குணமாகும். மற்றையவைகளுக்கு மவ்வாறே.

தாளக மாத்திரை.

சுத்தியான தாளகம் மனோசிலை ஒவ்வொருபங்கு சுக்கு மிளகு திப்பிலி வகைக்கிரண்டுபங்கு கல்வத்திட்டு முதிர்ந்த



வேப்பம்பட்டைக் கஷாயத்தால் ஒருநாள் முழுவதும் அரைத்து மிளகளவுள்ள 1, 2 மாத்திரைகள் மிளகுக் கஷா யம் அல்லது இஞ்சி ரசம் இவைகளுள் கொடுக்க கபசம்பந்த விஷமசம்பந்த சீதசம்பந்த சுரங்கள் யாவும் படியும். இச்சா பத்தியம். கஞ்சி ஆகாரம்.

சிவப்பு மாத்திரை.

ஆவின் பாலில் 3 நாள்வரை ஊறிய வெண்ணபித் துண் டுகளைச் சுத்திசெய்து பின் சூரண சுத்தியும் செய்துகொண்டு சுத்தியான இலிங்கம் பொரித்த வெண்காரம் மிளகு திப்பிலி இவையும் சமவெடை கொண்டு பழரசத்தில் 8 சாமம் கை யோயா தரைத்துக் குன்றிமணி யெடை மாத்திரைகளாக்கிக் கொண்டு தக்க அனுபானத்துடன் கொடுக்கின் அர்த்தாங்க வாத மென்னும் பக்கவாதம் சுகமாகும். 2, 3 மாத்திரை களை எள் நெய்யிற் குழைத்து மேற்பூச்சுப் பூசிக் குணப்படுத் துபவரும் உண்டு. இஞ்சி அல்லது வெற்றிலை ரசங்களினனு மானத்தால் விஷபேதியும், சர்க்கரை அநுமானத்தால் சீத பேதியும், அபினிக்கலப்பால் அதிசாரமும் நிவர்த்தியாகும்.

வெண்காரக் குளிகை.

நாபி, இரசம், கந்தகம் இவை ஒவ்வொரு பங்கு வெங் காரம் 3 பங்கு இவைகளைக் கலுவத்திட்டுக் கரிசலாங்கண் ணிச்சாற்றால் 3 நாள் அரைத்துக் குன்றிமணியளவு உபயோ கிக்க வயிற்றுவலி அக்கினிமந்தம் அஜீரணம் இவை நீங்கும். மேற்கண்ட நாபி ரச கந்தகங்களோடு சுக்கு மிளகு இவைக ளையும் கொண்டு (வேறு முறையாக) மருந்தாக்கி மார்புவலி பித்தவாயு வயிற்றுவலி இவைகளைத் தீர்ப்பாரும் உளர்.

### கிராணிக் குளிகை.

அபினி இலவம்பிசின் மாசக்காய் புளியங் கொட்டைத் தோல் காசுக்கட்டி மாதுளம் பழத்தோல் சாதிக்காய் இவை வகைக்கரைப்பங்கு சேர்த்து எருமைத் தயிரில் மைபோலரைத்துக் காய்ச்சிப் பின்னரும் அவ்வாறே ஆறுமுறையரைத்தரைத்துக் காய்ச்சிச் சுண்டைக்காயளவு இலவங்கப் பட்டைக் கஷாயத்தில் கொடுத்தால் கிரகணி நோய் சொஸ்தமாகும். விஷபேதிக்கு வெந்நீரிற் கொடுக்க.

### கிரந்திக் குளிகை.

கொடிவேலி வேர்ப்பட்டையும் ஓமம் பூரம் பனவெல்லம் இவைகளும் சமநிறை கலுவத்திட்டு மைய அரைத்து மிளகளவு நாளொன்றுக்கு 2 ஆக 10 தினமுட்கொள்ள இரணம், கிரந்தி, யோனிப்புற்று சூலை கள்ளிப்பூக்கிரந்தி இலிங்கப்புற்று பௌத்திரம் பிளவை மார்புச்சிலந்தி விப்புருதி எண்வகைக்குன்மம், மேகவிரணம் இவை முதலியன நீங்கும்.

### வேறு.

பூரம் கந்தகம் பறங்கிச்சக்கை கருஞ்சீரகம் சமபங்கு கொண்டு கையாந்தகரைச் சாற்று லாட்டித் தான்றிக்காயளவு கொடுத்து உப்பு புளி நீக்கிய உணவு தந்து மேற்கண்டுள்ள ரோகங்களைப் போக்கும் பண்டிதர்களு முண்டு.

### வாத ராக்கத குளிகை.

திரிகடுகு ஓமம் கர்தகம் நாபி ரசம் மனோசிலை கொடிவேலி வாளம் சமவெடை சேர்த்து கரிசலாங்கண்ணிச்சாறு நெருஞ்சிற்சாறு இஞ்சிரசம் பழவிரசம் முதலியவைகளால் முறையே ஒவ்வொரு சாமமரைத்துச் சுண்டைக்காயளவு



வெந்நீரிலுட்கொள்ள ஆரம்ப ஆனைக்கால் சுரம், வாயுதங்கிய அண்டரோகம், சுரக்கட்டி முதலியன நீங்கும்.

### நேத்திர ரோக நிவாரண குளிகை.

சீனாக்கற்கண்டு வெள்ளிரேக்கு ஒவ்வொரு பங்கும் மாசக்காய் நெருஞ்சிற்பூ நந்தியாவட்டைப்பூ அவ்வைந்து பங்கும் சேர்த்துப் புளிமாதளை ரசத்தினால் அரைத்து நந்தியாவர்க்கப்பூ விரசத்தி லுரைத்திட பல்வகை நேத்திர ரோகமும் குணமாகும். முருங்கைக்கீரைச்சாறும் தேனுங்கலந்த அநுபானத்தில் கண்ணுக்கிட்டுக் கொள்வதும் உண்டு.

### சஞ்சீவி மாத்திரை.

சுத்தியான நாபி இரசம் இலிங்கம் அரிதாரம் பூரம் கந்தகம் இரசச்சிந்தூரம் முதலியவைகளை அரைப்பலம் வீதம் சேர்த்து இவைகளோடு மேற்கண்ட அளவுள்ள சுத்தியான வாளம் திரிபலை திரிகடுகு ஏலம் பத்திரி கிராம்பு இவைகளையும் சேர்த்து முறையே பழச்சாறு பிள்ளைப்பால் இவற்றால் ஒவ்வொரு ஜாமமும் குமரிச்சாற்றால் 4 ஜாமமும் கொன்றைப்பட்டைச் சாற்றால் ஒருசாமமும் அரைத்துப் பயிறளவு மாத்திரைகளாக்கிக்கொண்டு தாய்ப்பால் தேன் இஞ்சி ரசம் இவற்றுள் ஏதேனும் ஒன்றிற் கலந்துகொடுக்க சன்னி சுரம் முதலியன குணமாம்.

### வேறு.

சுக்கு மிளகு திப்பிலி பொரித்த வெண்காரம் ஓமம் கிராம்பு சுத்தியான லிங்கம் இவை வகைக்கரைப் பலம் சேர்த்துப் பழச்சாற்றால் நன்கரைத்து உழுந்துப் பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்திக்கொண்டு குழந்தைகளின் வய

ற்ற் கேற்ப 1, 2 மாத்திரைகளைத் தாய்ப்பாலிற் கொடுக்கச் சுரம் தீரும். துளசிச் சாற்றிற்கொடுக்கின் கடுஞ்சுரம்நீங்கும்.

## பற்பவினம்.

### வெள்வங்கம்

சுத்திகரிக்கப்பட்ட வெள்வங்கத்தை ஈசல் இறகைப் போல் மெல்லிய தகடாக்கி (தகடு சமதள முள்ளதாயிருத்தல் வேண்டும்) புளி இலையளவு துண்டுகளாக்கிக் கொண்டு கழுவியாடிய எள்ளுப் பிண்ணாக்கைத் தவிடு போலிடித்துத் தெள்ளிய தூளை வறட்டியிற் பரப்பி அதன்மேல் வங்கத்துண்டுகளை ஒன்றோடொன்று பொருந்தாதபடி அடுக்கி மேலே பிண்ணாக்குத்தூளைத் தூவிப் பரப்பி வேறொரு வறட்டியால் மூடி வைக்கோற்புரி சுற்றிச் சேற்றுற் கவசமிட்டு 50 வறட்டியிற் புடமிட்டு ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டு கலுவத்திட்டு பஸ்பமாக்கிக் கொள்ளவேண்டும். ஒன்றோடொன்று கலந்து பொரிந்ததும் பொரியாததுமாய் இருக்கும் துண்டுப் பொரிகளை நீக்கி விடவேண்டும். இப் பற்பம் அதிமூத்திரம் நீர்த்தாரை வேக்காடு வெட்டைச்சூடு முதலிய பிரமிய சம்மந்த நோய்களைப்போக்கும். இதனையுண்பார் வாயு பதார்த்தங்களையும் சீதள பதார்த்தங்களையும் நீக்கி இச்சா பத்தியமாய் இருத்தல் வேண்டும்.

இருவேளை ஒன்று அல்லது அரைப்பண வெடை நெய் வெண்ணெய் தேன் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் கொள்ள வெள்ளை நீங்கி தாதுகட்டி போகமும் உண்டாகும்.

மேற்கண்டபடி பிண்ணாக்குத் தூளில் வைத்தெடுக்காமல் பருத்திக் கொட்டையை இடித்துப்பரப்பி கவசம் முதலியன செய்யாமல் புடமிட்டு எடுத்துக்கொண்ட பற்பத்தை



மேற்கண்ட அளவு உட்கொண்டால் அதிதாகம் மேகவெட்டை அதிமூத்திரம் முதலியன குணமாகும்.

புளியனிலையளவாகத் துண்டிக்கப்பட்ட தகட்டை நொச்சியிலையுடன் பூவுஞ்சேர்த்து இடித்தெடுத்துக் கொண்ட சூரணத்தில் வைத்துப் புடமிட்டெடுத்துக் கொண்ட பற்பம் இருமலைப்போக்கி பசிதீபனம் தந்து தாதை அதிகரிக்கச் செய்து கபத்தையும் போக்கும்.

இவ்விதமே பூவரசம்பட்டைச் சூரணத்தில் வைத்தெடுக்கப்பட்ட பற்பம் சீப்பிடியாத அரையாப்பைப் போக்கும். அன்றியும் உடைந்த அரையாப்பின் இரணத்தையும் ஆற்றும்.

### வேறு.

25 வராக நிறையுள்ள சுத்தமான வெள்ளீயத்தை மெல்லிய தகடுகளாக்கி ஒன்றோடொன்று பொருந்தாதபடி கையநறுக்கிப் பரப்பப் பட்டுள்ளதும் ஒன்றரைச் சாண் சதுரமுள்ள ஒற்றைச் சாக்குத் துண்டின் மீதுள்ளதுமான பருத்திக் கொட்டைகளில் வைத்து கைய நசுக்கிய அப்பருத்தியால் மூடி சுருட்டிக் கட்டிக் கஜபுடமிடப் பற்பமாகும், இவ்வாறுய பற்பத்தைப் பணவெடை 3 நாள் தேனில் கொள்ள நீரிழிவு சுகமாகும்.

### முத்துச் சிப்பி

ஐந்து பலம் முத்துச் சிப்பியைப் பத்து வறட்டி நடுவில் வைத்துப் புடமிட்டு வெந்தபின் கலுவத்திலிட்டுக் குமரிச் சாற்றால் 2 சாம மரைத்து வில்லைசெய்து சூரிய வொளியில் உலர்த்தித் தேங்காய்ப் பிரமாணம் பொன்னாங்கண்ணிச் சாக்

தால் கவசமிட்டு 2, 3 சீலை செய்து சாம்பலிற் புரட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

இப்பற்பத்தினை இருவேளை $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பணவெடையாக நெய்யிற் பத்துநாள் கொள்ள கபரோகம்யாவும் சுகமாம் இச்சாபத்தியம்.

### படிக்காரம்

நாயுருவி சமூலத்தை நன்குலர்த்திச் சுட்டுச் சாம்பராக்கி அவ்வெடைக்குப் பத்துபங்கு நீர்விட்டுக் கரைத்து 2 மணி நேரம் தெளியவைத்துக் கலங்காமல் மறுபாண்டத்தில் வடித்து நீர் சுண்ட வெரிக்க அடியில் உப்புதங்கும். தங்கிய உப்பை உத்தாமணியிலைச் சாற்றால் 2 மணி நேரம் அரைத்து வில்லை செய்துகொண்டு இருபுடம் போட்டெடுக்கக் காரமுடையதாகும். இதனையொரு பீங்கான் தட்டில் வைத்துப் பனியில் வைக்கச் செயநீராகும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்திக்கொண்டு துண்டாக்கப்பட்டு இருப்புக்கரண்டியில் வைத்து நெருப்பனலில் வைத்துப் பொரித்த ஒரு பலம் படிகாரத்தை ஒரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலடக்கிச் சீலைசெய்து 15 வறட்டியிற் புடமிடப் பற்பமாம்.

இப்பற்பத்தை 1 அல்லது $\frac{1}{2}$ குன்றிமணி யெடை வெண்ணெயிற் கொள்ள எத்தகைய வாந்தியும் சுகமாகும். இரண்டாம் முறையாக இம்மருந்தை உபயோகிக்கவேண்டியதில்லை. ஒரே பிரயோகத்தில் குணந்தரும்.

### அப்பளாகாரம்.

முக்காற் சேர் அப்பளாகாரத்தை ஒரு வறட்டியின் மேல் பரப்பிக் கஜபுடம் போடப் பற்பமாகும். சாம்பற்



சேராதபடி பஸ்பத்தை யெடுத்துப் பொடித்துக்கொண்டு ஒரு பழ ரசத்தில் 2 பணவெடை கொள்ள தீபன முண்டாகும். பித்தவாயு குணமாகும். 10 நாள் மருந்து சாப்பிட வேண்டும். இச்சாபத்தியம்.

### பிரவாளம்.

இரண்டு பலம் பவளத்தை 60 நாழிகை பிள்ளைப்பாலில் ஊறவைத் தெடுத்து நிழலிலுலர்த்திக் கொண்டு ஒரு படி கொள்ளத்தக்க கலசத்தில் அரைவாசிக் குமரிச்சோறிட்டு நடுவிற் பவளத்தை வைத்து மறுபாதிக் கலசத்தையும் கற்றாழைச் சோற்றால் மூடி வாயோடு மூடி பலத்த 7 சீலை செய்து நன்றாய்க் காயவைத்துக் கனகஜபுடமிட்டுப் பவளத்தைப் பொடித்துக்கொண்ட பஸ்பத்தை வேளைக்கு $\frac{1}{8}$ வராகனெடையாக இருவேளையும் மண்டலம் கொண்டு பாலும் சேர்த்துக்கொண்டுவரின் என்புருக்கி பிரமியம் பித்தகாங்கை அஸ்திவெட்டை கபசம்பந்த நோய்கள் முதலியன சுகமாகும்.

### வேறு.

பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் வெந்நீரிற் கழுவி யெடுத்துக்கொண்ட 3 ரூபா வெடைப் பவழத்தைக் கலுவத்திட்டு அவ் வெடைப் பிடியானைச் சிறுநீர் விட்டிரண்டு நாளரைத்துப் பில்லையாக்கி இருநாள் வெயிலிலுலர்த்தி 5-ம் நாள் காலையிலகலிட்டுச் சீலைமண் செய்து காயவைத்து காட்டெரு வைக்கோல் உமி இவை கலவா 50 எருவையடுக்கி யதன்மத்தியில் மருந்தினைவைத்து மேலும் 50 எருவினை யடுக்கி மூடிப் புடம்போட்டு ஆறும் நாள்பிரித்து வில்லையைக் கலுவத்திலிட்டு முன் மாதிரியே பிடியானை நீர

தால் கவசமிட்டு 2, 3 சீலை செய்து சாம்பலிற் புரட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

இப்பற்பத்தினை இருவேளை $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பணவெடையாக நெய்யிற் பத்துநாள் கொள்ள கபரோகம்யாவும் சுகமாம் இச்சாபத்தியம்.

### படிக்காரம்

நாயுருவி சமூலத்தை நன்குலர்த்திச் சுட்டுச் சாம்பராக்கி அவ்வெடைக்குப் பத்துபங்கு நீர்விட்டுக் கரைத்து 2 மணி நேரம் தெளியவைத்துக் கலங்காமல் மறுபாண்டத்தில் வடித்து நீர் சுண்ட வெரிக்க அடியில் உப்புதங்கும். தங்கிய உப்பை உத்தாமணியிலைச் சாற்றால் 2 மணி நேரம் அரைத்து வில்லை செய்துகொண்டு இருபுடம் போட்டெடுக்கக் காரமுடையதாகும். இதனையொரு பீங்கான் தட்டில் வைத்துப் பனியில் வைக்கச் செயநீராகும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்திக்கொண்டு துண்டாக்கப்பட்டு இருப்புக்கரண்டியில் வைத்து நெருப்பனலில் வைத்துப் பொரித்த ஒரு பலம் படிகாரத்தை ஒரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலடைக்கிச் சீலைசெய்து 15 வறட்டியிற் புடமிடப் பற்பமாம்.

இப்பற்பத்தை 1 அல்லது $\frac{1}{2}$ குன்றிமணி யெடை வெண்ணெயிற் கொள்ள எத்தகைய வாந்தியும் சுகமாகும். இரண்டாம்முறையாக இம்மருந்தை உபயோகிக்கவேண்டியதில்லை. ஒரே பிரயோகத்தில் குணந்தரும்.

### அப்பளாகாரம்.

முக்காற் சேர் அப்பளாகாரத்தை ஒரு வறட்டியின் மேல் பரப்பிக் கஜபுடம் போடப் பற்பமாகும். சாம்பற்



சோரதபடி பஸ்பத்தை யெடுத்துப் பொடித்துக்கொண்டு ஒரு பழ ரசத்தில் 2 பணவெடை கொள்ள தீபன முண்டாகும். பித்தவாயு குணமாகும். 10 நாள் மருந்து சாப்பிட வேண்டும். இச்சாபத்தியம்.

### பிரவாளம்.

இரண்டு பலம் பவளத்தை 60 நாழிகை பிள்ளைப்பாலிலூறவைத் தெடுத்து நிழலிலுலர்த்திக் கொண்டு ஒரு படி கொள்ளத்தக்க கலசத்தில் அரைவாசிக் குமரிச்சோறிட்டு நடுவிற் பவளத்தை வைத்து மறுபாதிக் கலசத்தையும் கற்றாழைச் சோற்றால் மூடி வாயோடு மூடி பலத்த 7 சீலை செய்து நன்றாய்க் காயவைத்துக் கனகஜபுடமிட்டுப் பவளத்தைப் பொடித்துக்கொண்ட பஸ்பத்தை வேளைக்கு $\frac{1}{8}$ வராகனெடையாக இருவேளையும் மண்டலம் கொண்டு பாலும் சேர்த்துக் கொண்டுவரின் என்புருக்கி பிரமியம் பித்தகாங்கை அஸ்திவெட்டை கபசம்பந்த நோய்கள் முதலியன சுகமாகும்.

### வேறு.

பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் வெந்நீரிற் கழுவி யெடுத்துக்கொண்ட 3 ரூபா வெடைப் பவழத்தைக் கலுவத்திட்டு அவ் வெடைப் பிடியானைச் சிறுநீர் விட்டிரண்டு நாளரைத்துப் பில்லையாக்கி இருநாள் வெயிலிலுலர்த்தி 5-ம் நாள் காலையிலகலிட்டுச் சீலைமண் செய்து காயவைத்து காட்டெரு வைக்கோல் உமி இவை கலவா 50 எருவையடுக்கி யதன்மத்தியில் மருந்தினைவைத்து மேலும் 50 எருவினை யடுக்கி மூடிப் புடம்போட்டு ஆறும் நாள்பிரித்து வில்லையைக் கலுவத்திலிட்டு முன் மாதிரியே பிடியானை நீ

ளவு வெள்ளெருக்கம் பாலிட்டரைத்துக் காயவைத்து முன் னெரிப்பைப்போல் புடம்போட்டுப் பதினோராம் நாட்காலை யில் எடுத்துப்பார்க்க மூன்றும் பிறைநிறத்தை யொத்த பஸ் பம் தோன்றும். இது சுரத்தைப் போக்கும். சரீரத்தைத் திடப்படுத்தும்.

பண வெடை தேனிற் கொண்டால் புத்தி தடுமாறிச் சித்தப் பிரமைகொள் பித்த சரீரிகள் உத்தமராவர். எனவே உன்மாத சன்னியும் பித்தாதிக்கச் சரீரநோவும் நீங்கும்.

துளசிச் சாற்றுடன் கொள்ளுவார் குன்மம் உளைமாந் தம் அதிசாரம் க்ஷயரோகம் இவை நீங்கப் பெறுவர்.

பிரமியிலைச் சாற்றுடன் கொள்ளின் பித்த எரிவு பேதி கருப்பையின்நோய் சுகசன்னி பக்ஷங்கள் தோறும் மாறிவரும் முறைச்சுரம் இவை நிவர்த்தியாகும்.

பிரண்டையை வதக்கிப் பிழிந்த சாற்றுடன் கொண் டால் வாதபித்த சீதளங்களால் உண்டாகும் பித்தசன்னி விலகும்.

திப்பிலிக் கஷாயம் அல்லது அதன்சாறு இவைகளோடு கொண்டால் மூன்றும் முறைச் சுரம் இலிங்கரண ரோகம் குழந்தைகள் கபம் இவை நீங்கும்.

இஞ்சிச் சாற்றோடுண்டால் தேகத்தில் குறுக்காக ஓடி வலிக்கும் வலி முதலியன நீங்கும்.

பசு நெய்யோடுண்டால் கப அனல் விலகும். ஆனால் இம் மருந்தை உட்கொள்ளுங்கால் போகமும் புகையும் அறவே ஒழிக்கற்பாலதாம்.



## வேறு.

ஒன்றிரண்டாக நறுக்கப்பெற்ற ஒருபலம் பவளத்தைத் துண்டுகள் மறையத் தக்கபடி பழச்சாற்றில் ஊறவைத்து மலினம் நீங்க மறுநாட் கழுவி அதனெடைக்கு நேர் சுத்தி யான கர்ப்பூர சிலாசத்தை உடன் கூட்டிப் பிரண்டைச் சாற் றால் நான்கு சாமம் அரைத்துப் பில்லைகள் கலீரென வொலிக் கத் தக்கபடி வெயிலிலுலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து காயவைத்து 40 வறட்டியில் புடம்போட்டு மீண்டும் கலுவத் திட்டு கூறிய சாற்றாலேயே அவ்விதம் அரைத்து மறுமுறை யும் முன் சொன்னபடியே புடம்போட்டெடுத்துக் கலுவத்தி லிட்டுப் புளியாரைச் சாற்றால் 2 சாமம் அரைத்துப் பில்லை யாக்கி அகலிலிட்டு 40 எருவில் புடம்போட்டெடுத்தால் வெண்பொடியாம்.

இந்தப் பவளத் தவளப் பொடியைப் பாக்களவான பசு வெண்ணெயுடன் பணவெடை இருபது வேளை கொண்டால் எந்த மருந்துக்கும் விலகாத எல்லா மேகரோகங்களும் எலும்புருக்கி தித்திப்பு மேகம் முதலியனவும் நீங்கும்.

இது தேனுடன் செல்லுமேல் எவ்வகைப் புண்ணும் நமைச்சலும் வாயும் மேகச் சொறிச் சிரங்களும் நீங்குவ தோடு இருமல்நோய் சரீரவெப்பம் மேகமுதிர்ச்சியால்நேரும் உடம்பிளைப்பு அம்முதிர்ச்சியில் உண்டாகும் ஐயமும் நீங்கும்

## வேறு.

மூன்று நாளளவு பழச்சாற்றிலூறிய பவளத்தினைக் கழுவி யெடுத்துக்கொண்டபின்னர் மீண்டும் 3-நாள் இலந்தை யிலைச்சாற்றி லூறவைத்தெடுத்துக்கொண்டு அவ்விலைச் சாற்றினாலேயே அரைத்து அவ்விலைச்சாந்தினாலேயே கவ

சம் இட்டு 10 எருவில் புடமிட்டு எடுத்துக்கொண்டு திரும்பவும் வெள்ளாட்டுப்பாலால் அரைத்து வில்லை தட்டிக்காய வைத்து மேற்படி இலையினாலேயே கவசம்செய்து மறுமுறை 10 வறட்டியிற் புடமிடப் பற்பமாம், இப் பற்பத்தினை ½ அல்லது 1 பண எடை பசுவெண்ணெயிற் கொள்ள க்ஷயரோகம் பித்தகாசம் இளைப்பு இருமல் முதலியன நீங்கும்.

### வேறு.

இரண்டுபலம் சுத்தியான பவளத்தைச் சந்து பொருந்தத் தக்க அகலொன்றில் பூலாவிலைச் சாறுநிரப்பி அதிற் பவளத்தை அழுத்தி மேல் அகலால்மூடி சீலை மண்செய்து புடமிடப் பற்பமாகும். இதனை மேற்கண்டபடி உண்ண மேகம் நீங்கும், எட்டுவகை க்ஷயமும்போம். தேன் அநுபானம் கொள்வாரும் உளர். புகையும் போகமும் நீக்கிய இச்சா பத்தியமா யிருக்கவேண்டும்.

### வேறு.

5 பலம் பவளத்தை எலுமிச்சம்பழச சாற்றில் 3 நாள் முழுக்வைத்தெடுத்து 4-ம் நாள் நன்கலம்பி ஒரு சிறு குடுவையிற் போட்டு வெள்ளெருக்கம் பாலால் ஒருஅங்குலம் மிதக்க முழுக்காட்டி குடுவை வாய்மூடி சீலை செய்து காயவைத்துக் குழிதோண்டி 35 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும். அந்தப் பற்பத்தைப் பூலாப்பழச் சாற்றில் 4 சாமம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து அகலிலிட்டுச் சீலை செய்து காய்ந்தபின் முன்போல் புடமிடத் தவளநிற பஸ்பமாகும். முற்கூறியபடி இதனைக் கொள்ளச் சர்வ கபமும் மேகமும் உடல் எரிவு காங்கை நீர் எரிவு நீர்க்கட்டு முதலியனவும் குணமாகும்.



### நாகம்.

சுத்தியான நாகம் ஒன்றரைப் பலத்தோடு அரைப்பலம் சூதத்தையும் உருக்கிச் சேர்த்துக் கல்வத்திற் பெய்து கொண்டு ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பு ஒருபல வெடையையும் அவைகளோடு கலந்து வேலிப்பருத்திச் சாற்றில் 4 சாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி ஓட்டில்வைத்துச் சீலை செய்து 10 எருவில் புடம்போட் டெடுத்துக்கொண்ட பற்பத்தைப் பாலில் அவித்துலர்த்திச் சூரணித்துக்கொண்ட சம எடையுள்ள சுக்குச் சூரணமும் பனவெல்லமும் கலந்த அநுபானத்தில் ஒரு குன்றிமணி எடை கொள்ளின் சீழ் மூலம் சுகமாகும்.

### படிக்காரம்.

சிறிய மண் குடுவையில் ஒருபலம் பசுவெண்ணெயை இட்டு மத்தியில் 1 பலம் படிகாரத்தை வைத்து வாய்ப்புறம் ஓடுமூடி 3 சீலை செய்து 3 எருவில் புடமிட பூத்த பற்பமாகும். முசுமுசுக்கை இலையில் வைத்து மடித்து 3 குன்றி கொள்ள இருமல் தீரும். 7 நாள் சாப்பிடவேண்டும், நாளொன்றுக்கு ஒவ்வோர் இலையாக அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும், நெய் மோர் முதலியனவும் மற்றைய கெட்ட பதார்த்தங்களும் ஆகா.

### கந்தகம்.

இருப்புக் கரண்டியில் நெய்பெய்து உருக்கிய கந்தகத்தைப் பாலில் சாய்க்கவேண்டும், இம்மாதிரி 10 முறை செய்தல்வேண்டும். ஒவ்வொரு தடவைக்கும் புதிய பாலை உபயோகிக்கவும். இப்படிச் சுத்தியான கந்தகத்தை வெயி

வில் உலர்த்திக்கொள்ளுக. பின்னர் 1½-படி மருதம்பட்டைச் சாம்பலைக் குண்டுசட்டி யொன்றி லிட்டு மத்தியில் கந்தகத்தை யழுத்தி மூடி சிறு தீயாக எரிக்கவேண்டும். அப்போது பொங்கும் கந்தியின் துவாரவெடிப்பைத் திரும்பவும் அம் மருதம்பட்டைச் சாம்பலால் அழுத்தி மூடவேண்டும். ஆறின கந்தியைச் சாம்பல் நீக்கி யெடுத்துக்கொண்டு குப்பைமேனி யிலை சிறுகீரை யிலை இவைசேர்ந்த சாந்தால் செய்யப்பட்ட குகையுள் வைத்து மேற்படி மூலிகைகளின் பில்லைகளால் மூடி 4 சீலைமண் செய்து 3 எருவில் புடமிடப் பற்பமாகும் இதனை ½ மண்டலம் பணவெடை கொள்ள மேகப்படைகள், ரணங்கள், வெட்டை நோய்கள், கொறுக்குகள் முதலியன குணமாகும். மருதம்பட்டைச் சாம்பலில் இருந்தெடுத்துக்கொண்டபின் மேனிச்சாற்றால் அரைத்து மேற்படி குகைக்குள் வைத்து முன்முறை அநுசரித்து மருந்தாக்குவார்களு முண்டு.

### வேறு.

மேற்கண்டபடி ஆக்கிக்கொள்ளும் முறையில் மருதம்பட்டைச் சாம்பலில் அழுத்தப்பெற்ற கந்திக்கு மேல்மூடி மூடி மூடியின்மேல் சூடுகண்டபின் இறக்கி ஆற்றி எடுத்துக்கொண்ட வில்லையைக் கோவை செம்பருத்தி நந்திவர்க்கம் முதலியவற்றின் இலைகளைச் சமவெடை யரைத்துக் குகை பண்ணிக் காய்ந்தபிறகு அதற்குள் வைத்துக் கோழிப்புடம் போட்டுப் பற்பம் ஆக்குவாருமுளர்.

### சங்கு.

இரண்டு பலம் சிறு துண்டுகளாக நறுக்கப்பெற்ற சங்கைக் கீழ்க்காய்நெல்லி குப்பைமேனி இவை யொன்றின்



சாற்றின் 3 நாளூறவைத்துப் பின்னர் குடுவையிலிட்டு முன் எந்தச் சாற்றி லூறியதோ அந்தச்சாற்றைவிட்டே சில்லு மூடிச்சீலை செய்து காய்ந்தபின் 50 எருவிற் புடமிடப் பற்பமாகும். இதனை, 1 அல்லது ½ பணவெடைப்பழச்சாறு அல்லது வெண்ணெயில் கொள்ள விரைவில் மார்பு நோய், மார்பு எரிச்சல், மார்பு அடைப்பு, நீர்ச்சுருக்கு வெட்டை முதலியன நீங்கும் இச்சா பத்தியம்.

### மான்கொம்பு.

இரண்டு பலம் மான்கொம்பைச் சிறு துண்டுகளாக்கிக்கொண்டு ஒரு வறட்டியில் 5 பலம் கீழ்க்காய் நெல்லிச்சமூலச் சூரணத்தைப் (தூளை) பரப்பி அதன்மீது கொம்புத் துண்டுகளை வைத்து அவைகளை 5 பலம் கீழ்க்காய் நெல்லிச்சமூலத்தூளால் மூடி 30 எருவிற் புடமிட வெளுத்து கொம்பு நீறும். ஒரு வேளை கருக்கின் மீண்டும் முன்முறையே அநுசரித்துப் புடமிடத்தவள நீறும். அவ்வாறு நீற்ற நீற்றை மேற்சொல்லிய சாற்றாலாட்டி யரைத்து வில்லைதட்டி 15 எருவில் புடமிடப்பற்பமாகும். இந்தப் பற்பம் 2 பணவெடை வெண்ணெய் நெய் அநுபானத்தில் உடலிற்சேரின் அஸ்திச்சூடு, எலும்புருக்கிநோய் நீர்ச்சுருக்கு மேகவெட்டை பிரமேகம் முதலியன விலகும்.

### வேறு.

இரண்டுபலம் புள்ளிமான் கொம்பைத் துண்டு துண்டுகளாக்கிக் கோநீரில் ஒருநாளூறப்போட்டு மறுநாளலம்பி யெடுத்துக்கொண்டு 10 எருவில் புடமிட்டு வெந்தபின் கல்வத்திட்டு நல்ல சங்கிலைச்சாற்று லிரண்டு சாமம் அரைத்து வில்லைசெய்து காயவைத்துக் கழற்சியிலையை யரைத்து

விளாங்காய்ப் பிரமாணம் கவசஞ்செய்து சீலைமண் செய்து சாம்பலிற் புரட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும். இதனை மேற்கண்டவாறு கொடுக்க மேற்கண்டுள்ள நோய்கள் யாவும் சுகமாகும்.

## அஞ்சனக்கல்.

ஒருநாள் முழுவதும் புளியாரை யிலைச்சாற்றில் ஊறிச் சுத்திகரிக்கப்பட்ட வேண்டிய அஞ்சனக்கற்களைச் சிறுகீரைச் சாந்துக் குகையில் வைத்து மேல்மூடிச் சீலைமண் செய்து கஜபுடமிடப் பற்பமாகும், இப்பற்பம் தேனனுபானத்தில் கொள்ளுவார் இருபதுவகை மேகத்தையும் தள்ளுவாராவர்.

## வெள்ளி.

பத்து வராகனெடை வெள்ளிப்பொடியோடு கொய்து உலர்த்திச் சுட்டுச் சாம்பராக்கிய நுனி ஆலம் விழுதின் சாம்பலையும் உடன் சேர்த்து நுனி ஆலம் விழுதின் சாற்றால் 3 சாமம் அரைத்து வில்லை தட்டி அகலிலிட்டுச் சீலைசெய்து முழுப்புடமிடுக. இம்மாதிரி மும்முறை செய்திடுக. இவ்வாறாய் பற்பத்தை இருவேளை குன்றி எடை நெய்யிற்கொள்ள வெட்டை நீங்கி தாதுவிருத்தியாகும்.

## பூரம்.

சமநிறையான பூரத்தையும் படிக்காரத்தையும் பழச் சாற்றா லரைத்துக் காயவைத்து அகலில் மூடி 7 சீலை செய்து 30 எருவிற் புடமிடப்பற்பமாகும். அரைப்பு நல்லரைப்பாயிருத்தல் வேண்டும். இந்தப்பற்பம் வெட்டை, புண், வாயு ரோகம் முதலியவற்றை நீக்கிச் சுகம்தரும். இச்சாபத்தியம்.



## சலாசத்து.

பன்னிரண்டு மணிநேரம் இளநீரில் நன்கு மூழ்கி அமிழ்ந்து கிடந்த $2\frac{1}{2}$ பலம் சலாசத்தைச் சுத்தமாய்க் கழுவி மெல்லிய சீலையால் ஈரம் புலர்த்தி மண்முதலியன இல்லாத படி சுத்திசெய்து ஆவாரையிலைச்சாறு நெருஞ்சிற்சாறு இவற்றுளொன்றில் நான்கு சாமமரைத்து வில்லையாக்கிக் கனபுடமிட்டுப் பற்ப மாக்கிக்கொண்டு நவநீதம் கிருதம் இவை யொன்றில் பணவெடை கொள்ள சர்வ வெப்பு நோய்களும் குணமாகும். வில்லை நன்குகாய்ந்த பின்னரே கனபுடமிடல் நன்றாம்.

## சுவர்ணம்.

செம்மண் பூசி நெருப்பில் ஏழுமுறை காய்ச்சிச் சுத்தியான தங்கத் தகட்டை மீண்டும் மெல்லிய தகடாக்கி அந்நிறையளவுள்ள கந்தகத்தைக் கருப்பஞ் சாற்றாலரைத்துத் திரும்பவும் பூச்சுப்பூசிக் காயவைத்துக்கொள்க. இவ்வாறு 7 முறை கந்தகப் பூச்சு பூசிக்காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி வலுத்த சீலைமண்செய்து கஜபுடமிட்டுப் பார்க்கப் பற்பமாகும். இத்திற பற்பம அரைப்பணவெடை இருவேளை நெய் தேனனுபானங்களில் உட்செலின் க்ஷயம் நீங்கிச் சரீரம் வலுத்துப் பெருத்துச் சுக முண்டாகும்.

## செந்தூரவினம்.

### குமாரச் செந்தூரம்.

சூதம் காந்தம் கந்தகம் வெண்காரம் இந்துப்பு அயம் இவை முறையே 5, 7, 9, 8, 4, 12 பங்குகளாகச் சேர்த்துக் கலுவத்திலிட்டுக் கற்றாழைச் சாற்றால் 3 நாளரைத்து வில்லை

செய்துலர்த்தி ஒரு மட்பாண்டத்திலுள்ள 3 அங்குலகனதிக் கற்றுழைச்சோறு பரப்பிய பரப்பில் வைத்து மேலுமச்சோற்றால் மூடி சீலைசெய்து எட்டுச் சாமம் எரித்து, மீண்டும் முன் முறைப்படி எரித்தெடுக்கச் செந்தூரமாகும். இவ்வாறு ஆகிய செந்தூரத்தை $\frac{1}{4}$, $\frac{1}{2}$ குன்றி தேன் நெய் இவற்றுளொன்றிற் கொள்ளப் பித்தபாண்டு பல்வகைப்பேதி, பவுத்திரங்கள், ஈளை, இருமல், க்ஷயம், கண்டமாலை, சூலைகள், மூலரோகங்கள், நோய் தரும் நீர்ரோகங்கள் வாதப்பிடிப்பு நோய்கள், குன்மம், வெண் குட்டம் முதலிய நோய்கள் நீங்கிச் சுகமாகும்.

## அப்பிரேகம்.

சுத்திக் கிரமத்தில் கூறியுள்ளபடி எடுத்துக் கொண்ட அப்பிரேகத்தைச் சிவப்பு அல்லது பச்சைச் சிறு அம்மான் பச்சரிசியிலையின் தனிச்சாற்றால் எட்டுச்சாமம் ஓயாமலரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து காய்ந்தபின் பள்ளந்தோண்டிக் கஜபுடமிடுக. இவ்விதம் 5 புடமும் வெங்காயச் சாறுகொண்டரைத்து 3 புடமுமிடுக. அக்காலை அது வெளுப்பும் சிவப்புமான சிந்தூரமாகும். பின்னர் மாதளம்பழச் சாற்றுலரைத்து மேற் கூறியபடி 7 புடம் போடுக. அதன்பின் நல்ல செந்தூரமாகும். இதனை எல்லா மருந்துகளோடும் சேர்த்துத் தக்க அநுபானத்தில் சர்வ நோய்களுக்கும் கொடுக்கலாம். தனித்துத் தேன் 1 பங்கு நெய் 2 பங்கு சர்க்கரை 3 பங்கு சேர்த்துக்கொண்ட கலவையில் புளியங்கொட்டைப் பிரமாணமெடுத்துக்கொண்டு 1, 2 குன்றி செந்தூரம் இருவேளையும் கொண்டால் சமஸ்த ரோகங்களும் விலகும்.



## நாகம்.

பசு வெண்ணெயும் இலுப்பை யெண்ணெயும் தடவப் பெற்றுள்ள கரண்டியில் பத்துப்பலம் நாகத்தை 20 முறை வெள்ளாட்டுப் பாலிற் சாய்க்கவும். அப்போதைக் கப்போது வெண்ணெய் எண்ணெய் பால் இவை புதியனவாயிருத்தல் வேண்டும். பின்னர் புதிய சட்டியொன்றில் நாகத்தை உருக்குக. அவ்வாறு அது உருகிவருங்காலையில் வெடியுப்பு 4 பலம் ஓமம் படி $\frac{1}{2}$, சுக்கு பலம் 1, மஞ்சள் 1 பலம் தனித்தனி இடித்து ஒன்றுகலந்த தூளை சிறுகச் சிறுகத் தூவிக் கொண்டு வருக. அதன் பின்னர் செங்நாயுருவிச் சமூலத்தைத் துண்டுதுண்டாய் நறுக்கி அதிலிட்டு வறுத்திடுக. அப்போது செந்தூரம் மாதுளம்பூ வர்ணமாகும். ஒருவேளை செந்தூரம் பக்குவ முறைக்கு வந்திருக்கிறதோ இல்லையோ என்று ஐயுறுவார் சிலர் அதைச் சலத்தில் பரீக்ஷார்த்தமாகச் சிறிதிட்டுப்பார்த்து மிதப்பதுகண்டு ஐயம் நீக்குவதுமுண்டு. இவ்வாறு சித்திக்கப்பெற்ற சிந்தூரத்தைத் திரிகடிப்பரிமாண திரிகடுகுச் சூரணத்தோடு தேன் சேர்த்து 1 பணவெடை 20 நாள் இருவேளை கொண்டால், ஈழை காசம் இருமல் யாவும் நீங்கி. மாசுவாசம் மந்தாரகாசம், அரிகுரல், நெஞ்சுநோக்காடு சிலேட்டுமம் சிலேட்டுமச்சோபம் இவையும் நீங்கும். அன்றியும் பித்தசோகம் உஷ்ணகோபம் பிரமியம் கல்லடைப்பு பவுத்திரக்கட்டு இவை முதலியனவும் நீங்கும்.

இதில் ஒரு பணவெடை ஆவாரைத்தைலத்தில் சேர்த்த திரிகடி அவுரிவேர்த் தூளோடு உட்கொண்டால் நாட்பட்ட 20 வகைச் சலக்கழிச்சல்கள் ஒழியும். இவ்வாறு 40 நாள்

கொண்டால் மேற்படி வியாதி தீர்வதோடு மூத்திரக்கிரிச்சரமும் உள்ளுருக்கியும் ஒழியும்.

இதைக் கொடிவேலிச் சூரணத்தோடுகொள்ளின் எலிகடி ஈழை குன்மம் இருமலும் போகுமென்ப.

இதனை இரு பணவெடைக் கோரோசனையோடு தாய்ப்பாலும் சேர்த்து 1 பணவெடை கொண்டால் சுர நோய் பறக்கும்.

மேற்கண்ட அளவுபடி திரிகடி திப்பிலிப் பொடியுடன் 5 நாள் கொள்ள மூலக்கிராணி சுகமாகும்.

அந்த அளவின்படியே 3 பங்கு கிராம்பும் $\frac{1}{4}$ பங்கு ஜாதிக்காயும் சேர்ந்த பொடியோடு நெய் முட்டை வெள்ளைக் கரு இவைகளையும் சேர்த்துக் கொடுத்தால் தாதுவிருத்தி உண்டாகும்.

### இரசம்.

செங்கல் ஒன்றில் ஒருபக்கம் ஒருவிரற் கனம் குழி தோண்டி சமநிறைச் சாந்தான வெற்றிலைக்காம்பு மிளகு இவற்றின் சாந்தால் பாதி பள்ளத்தை நிரப்பி அதனுள் ரசம் 6 கழஞ்சு ஊற்றி அதன்மேல் மேற்படி சாந்தை அழுத்தி மேலே வேறொரு செங்கல்லை மூடி சீலைமண்செய்து காய வைத்து தலைகீழாகச் சாயாமல் கஜபுடமிடச் செந்தூரமாகும். இதனைப் பணவெடை தேனிற்கொள்ள வாயுரோகங்களும், பசுவெண்ணெயிற்கொள்ள மேகரோகங்களும் குணமாகும். ஏழுநாள் பத்தியம் இருத்தல் வேண்டும்.



### வேறு.

அரைவீசைக் கந்தகத்தைக் கலுவத்திலிட்டுக் கருப்புக்கிம்மாறு வெற்றிலைச் சாறுவிட்டுப் பத்து நாளரைத்துக் கள்ளுக்கடையில் அளவுக்காக உபயோகிக்கும் மொந்தை யொன்றில் முக்காற்பாகம் கந்தகத்தைப்போட்டு இடையிற் பள்ளஞ்செய்து அதில் பூத்துப்பலம் சூதத்தையிட்டு எஞ்சிய கந்தகத்தை அடையாகச் செய்து மேலிட்டு மெதுவாக அழுத்திக் குடுவையின் வாய்க்குப் பொருத்தமான அகல்மூடிச் சீலை செய்து சிறுகம்பியால் வரிந்துகட்டிக் குடுவை முழுவதும் 7 சீலை செய்து காயவைத்து ஒரு பெருஞ்சட்டியில் 3 அங்குலம் மணல் பரப்பி அதன் மத்தியில் பாத்திரத்தை வைத்து அது மறைய மண்ணிட்டு வாய்மூடிச் சீலைசெய்து 2 பகல் 1 இரவு முத்தீயாய் எரித்து 2 நாள் ஆறவிட்டு விட்டுப் பாத்திரத்திலுள்ள மருந்தைப் பார்க்க இரசகந்தகம் பாத்திரத்துப் பக்கம் மேல்பாகம் முதலிய விடங்களிலும் மேலேறி உருகிச் செந்தூரமாக இருக்கும். ஒருவேளை அடியில் வீழ்ந்தும் இருக்கும். இதனைப் பத்திரமாய் மண்சம்பந்தமில்லாமல் பெயர்த்தெடுத்துக் கலுவத்திலிட்டு அரைத்தெடுத்துக்கொண்டு $\frac{1}{8}$, $\frac{1}{4}$ குன்றி எடை நெய்யிலேனும் தேனிலேனும் இருவேளை கொள்ள மேகச்சுரம் சந்நிவாதப்பிடிப்பு மேகரணம்முதலியன குணமாகும்.

### வேறு.

சுத்தியான ரசம், கந்தகம் தனித்தனி ஒவ்வொரு சேர் கல்வத்திட்டுக் கருந்துளசி ரசத்தால் 2 நாளரைத்துக் காய வைத்து காசிக்குப்பியிற் போட்டு வாய்மூடி 7 சீலைமண் செய்து ஒரு பெரிய சட்டியில் 6 விரற்கடை மணல்போட்டு

அதன்மேல் வைத்து அந்தக் குப்பிமறைய மணல்போட்டுச் சட்டியை அடுப்பிலேற்றி மூவகை அக்கினியினாலும் முறையே ஒவ்வொரு நாளெரித்து ஆறவைத்து உடைத்துப் பார்த்தால் மாதுளம்பூப்போல் செவந்த சிந்தூரமாகும். இதனைப் பணவெடை தக்க அநுபானத்திற் கொடுக்கச் சன்னி பாத ரோகங்கள் நிவர்த்தியாகும்.

### வேறு.

வகைக்கொருபலமாக எடுத்துக்கொண்ட இரசம் கந்தகம் பொரித்த வெண்காரம் இவைகளைக் கலுவத்திட்டு 4 சாம மரைக்கக் கறுப்பாகும். இந்தக் கலவையைக் கொட்டைப் பாக்களவாகச் சிறுசிறு இரட்டுத்துணியில் முடிச்சுகளாகக் கட்டிக்கொண்டு முக்காற்பாகம் மணல்கொட்டிப் பரப்பிய சட்டியொன்றில் முடிச்சுக்கள் ஒன்றோடொன்று படாதபடி வைத்துச் சட்டியின் வரம்புவரையில் மண்ணிறைத்து மேலோடு மூடிச் சீலைசெய்து குழிதோண்டி 1. ஜாண் உயரம் எருவடுக்கிச் சட்டியைக் கவிழ்த்துப் புடமத்தியில் வைத்து அது மறைய எருவடுக்கித் தீயிட்டெரிக்கவேண்டும். மறுநாள் புடமெடுத்துத் துடைத்துப் பார்க்கின் பூலாப்பழ நிறமாயிருக்கும்; எனவே கருமைகலந்த சிவப்பு நிறமாகும்.

இதில் 1 $1\frac{1}{2}$ குன்றி எடை வீசம்படி எருக்கம் பழுப் பிலைச் சாற்றில் ஒன்றைவிட்டொருநாள் ஒருவேளை கொண்டால் மலப்பிரவிருத்தியாகும். பசுமோர் அன்னங்கொள்ள வேண்டும். விஷப்பாண்டு ஜுரம், மயக்கம், சோகை, காமாலை பாண்டு பைத்தியம் நீர்க்கோவை இவைதீரும்.

புளி போகம் புகை இவை கூடாது. மாமிசபட்சணிகள் வெள்ளாட்டு வற்றலை நெய்யிற் சேர்த்து உண்பதன்றி



இதனை அழிஞ்சில் வித்துத்தைலம் ஆவாரைத்தயிலம் இவைகளிற் கொண்டால் முறையே நீரிழிவு மூத்திரக் கிரிச்சனம், விப்புருதி வாயு வயிற்றுநோய் முதலியன நீங்கும்.

இதனைக் காட்டுக் கருணைக்கிழங்குச் சூரணத்துடன் சுக்கு திப்பிலிச் சூரணம் சமன் கலந்து திரிகடியளவான சூரணத்தோடு தேன்-நெய் இவற்றொளொன்றோடு இருவேளை மண்டலம்கொள்ள நவமூலமும் பவுத்திரமும் நீங்கும். (இது அநுபவமுறை.) கருணையைத் தோல்சீவி சிறுசிறு துண்டங்களாகச் சீவிக்கொண்டு இரவியிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ள வேண்டும்.

இதனை 40 நாள் இருவேளையும் தேனில் மேற்கண்டுள்ள அளவுகொண்டால் பதினெண்சூலையும் பறக்கும். கரப்பானும் கண்டமாலையும் காணாதோடும். அண்டவாதமும் அரையாப்புக்கட்டியும் அழிந்துபடும். தொடைவாழை காமாலை தொலைந்துபோம். எலிக்கடி சுரமும் சுவாசகாசமும் க்ஷயமும் யோனிசூலையும் போம்.

இதைச் சமநிறைக் கலப்புள்ள கிராம்பு அதிவிடயம் பத்திரி, ஜாதிக்காய்ச் சூரணத்தோடு கொள்ளின் கிராணி கருமேகம் அதிசாரமும் தீரும். சூரணம் திரிகடியளவினதாயும் செந்தூரம் $1\frac{1}{2}$ குன்றி எடையாயும் இருத்தல் நன்று. சூரணத்தோடு தேகசுபாவத்திற் கேற்றபடி நெய்யோ தேனோ சேர்த்துக்கொள்ளல் நன்று.

### வேறு

ஒரு சாமம் வரை மருதோன்றிச் சாற்றாலாட்டிய 1 பலங் கந்தகத்தின் சாந்தை ஒரு கலயத்தின் உட்புறம் பூசி

நிழலிற் காயவைப்பதுடன் அக்கலயம் பொருந்த மூடு மூடியின் கீழ்ப்புறமும் பூசிக் காய்ந்தபின் 1 பலம் வாலரசத்தைப் பெய்து ஓடு மூடி சீலைசெய்து புதுச்சட்டியில் 2 அங்குல உயரம் ஆற்றுப் பெருமணலைக் கொட்டி அதன் மத்தியில் கலயத்தைவைத்து அது தெரியாதபடி முழுவதும் மண் மூடி ஒரு வைக்கோற்றுரும்பை அதன்மீது பரீக்ஷார்த்தமாகப் போட்டுவைத்து (வேண்டுமானால் வாய் மூடி) காடாக்கினியாக எரித்தால் துரும்பு தீய்ந்து கரிந்து போம். சிற்சிலர் பக்குவம் தெரிந்துகொள்ள மண்மீது நெல்லைத்தூவி பொரியாவது கண்டு கொள்வது முண்டு. ஒரு சாதி விறகாயிருப்பதோடு 12 சாம எரிப்புமாயிருத்தலே நன்று. அடுப்போடு ஆறவிட்டு ஆறினபின் எடுத்துப்பார்க்கக் குருவிந்தம்போல் செவந்திருக்கும். இதனைப் பணவெடை பனைவெல்லத்தில் இருவேளை 3 நாள் கொண்டக்கால் வாயு வகையாவும் தீரும். இரத்த சுத்தி தாது விருத்தி இவையுண்டாம். நல்லெண்ணெய் புளி கடுகு ஆகா. பசுப்பால் நெய் வெள்ளாட்டுக்கறி துவரம் பருப்பு ஆகும்.

முதிர்ந்த ஆனை நெருஞ்சிற்காய்களை 2 படி தேர்ந்தெடுத்து மேற்படி இலைச்சாற்றில் ஒரு பகலு மிரவும் ஊற வைத்து மறுநாள் வெயிலிலுலர்த்திக் கொள்க. இவ்விதம் மும்முறை செய்து வஸ்திரகாயம் செய்துகொண்ட தூள் 1 சேரோடு முருங்கைப் பூவை யிடித்த சூரணம் ½ சேர் சேர்த்துக்கொண்டு சமநிறை சீனாக்கற்கண்டுப் பொடியும் கலந்து திரிகடியளவு சூரணக்கலவையுடன் மேற்கண்ட அளவு செந்தூரமும் கலந்து 20 நாள் இருவேளையும் கொண்டால் தாது முதலியன அதிகரிக்கும். கைகால் அசதி நீங்கும். 30 நாள்



வரை பத்தியம் கடைப்பிடித்தல் நன்று. சரீரத்துக்கு அதிக ஊட்டம் கொடுக்க வேண்டும்.

### வேறு

இரசம் கந்தகம் பூரம் வீரம் தாளகம் இலிங்கம் அயப் பொடி ஆதிய சரக்குகள் வகைக்கொரு பலமாய்த் தேர்ந்தெடுத்துக் கலுவத்தி லிட்டுக்கொண்டு 4 சாமம் வெள்ளைக் காட்டாமணக்குப் பாலாலாட்டிக் காசளவு வில்லை பண்ணிக் காயவைத்து அகலில் பரப்பி மேலகல் மூடிச் சீலை வலுவாக்கிக் காயச்செய்து குழியிட்டு, உலர்ந்த ஆவாரையிலை ஒரு மூட்டை கொண்டுவந்து அதிற் புடமிடின் மறுநாட் குளிர்ந்து நற் செந்தூரமாகும்.

பிணிக்கேற்றவாறு பத்தியம் போற்றல் நன்று. நெய்யிலேனுந் தேனிலேனும் 1 அல்லது ½ குன்றியளவு கொள்ளின் பாரிச வாயு பக்கச் சூலை பக்கவாதம் பித்தபாண்டு குன்மம் சுரம் முதலியன நிவர்த்தியாகும்.

### வேறு

ஒரு மட்பாத்திரத்தில் மணலிட்டு அடுப்பேற்றி எரிக்கும்போது அம்மணலின் நடுவே ஒரு ஓட்டுப் பாத்திரத்தை வைத்துச் சூடேறினவுடனே கொஞ்சம் கந்தகத்தைப் போட்டுருக்கி இரசத்தைவிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கந்தகத்தைப் போட்டுக் கிளறிக் கொண்டுவர அவ்விரு சரக்குகளும் உறவாகி ஒன்று சேர்ந்து மடிந்து கருநிறச் செந்தூரமாகும். இரசம் ஒரு அளவுக்கு 6 அளவு அதிகமாகக் கந்தகத்தைச் சேர்ப்பதே நன்றென்ப. எவ்வளவுக் கெவ்வளவு ஜாரண

நிமித்தம் கந்தி சேர்க்கப் பெறுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மருந்தின் குணமதிகரிக்கின்ற தென்பதோடு ரசவேகமும் மட்டுப்படு மென்பர் ஆயுர்வேத நூலாய்ந்தோர். ரசத்தோடு சமநிறை கந்திசேரின் ஜாரித ரசச் சிந்தூரமாம். 2, 3, 4, 5, 6 பங்குகள் கந்தி கலந்தால் அவை முறையே துவி, திரி, சதுர், பஞ்ச, ஷட்குண பலிஜாரித ரசச்சிந்தூர மெனப் பெயர் பெறும். இவையிற்றைப் பற்பல அநுபானங்களிற் கொள்ள பவுத்திரம் பறங்கிப்புண் கண்டமாலை கிரகணி அதிசாரம் வாயுரோகம் ஆறுவிரணம் குஷ்டம் முதலியன நிவர்த்தியாகும்.

## சண்டமாருத செந்தூரம்.

சுத்திகரிக்கப் பெற்ற இரசச் செந்தூரம் 1. கந்தகம் 2. வீரம் 2. இலிங்கம் 8. பூரம் 10 பங்குகள் கொண்ட சரக்குகளைக் கலுவத்திலிட்டு 4 சாமம் நன்கரைக்கப் பவளநிறச் செந்தூரமாகும். இதனை இருவேளை தேன் நெய் இவற்றுளொன்றில் 1 குன்றி கொள்ள சுரம் சன்னி குன்மம் பீலிகை வாயு சூலை பவுத்திரம் கண்டமாலை அரையாப்பு முதலியன தீரும். செந்தூர அளவுக்கேற்றபடி சமவெடைக் கர்ப்பூரம் சேர்த்தரைத்து வாந்திபேதிக்குக் கொடுத்து வாசியாக்கும் பண்டிதரும் பலருளர்.

## மால்தேவி செந்தூரம்.

அரிதாரம் மனோசிலை இலிங்கம் கந்தி இருப்புப்பொடி நாகம் இரசம் இவை வகைக்கொரு வராகனெடை ஒன்று சேர்த்து மலைவேப்பம்பட்டைச் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 5 எருவில் புடமிட செந்தூரமாகும். 1 குன்றிமணி வெண்ணெயிற் கொள்ளக் குன்மமும் சூலையும் குணமேயாகும். பல்வகை நோயும் பறந்தேபோகும்.



## இராமபாண செந்தூரம்.

வீரம் இரசம் பூரம் இலிங்கம் அயம் இவை சமநிறை சுத்திகரித்து வெள்ளைச்சாரணைச் சாற்றால் 12 சாமமரைத்து $\frac{1}{2}$ அணா அளவு வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து உலரப்பண்ணி மணலிட்ட சட்டியொன்றின் மத்தியிலிட்டு மணலால் மூடி மேற்சட்டி கவிழ்த்துச் சீலைமண் வலுவாக்கி அடுப்பேற்றி வேப்பன்விறகால் எட்டுச்சாமம் எரித்து ஆற்றிப் பிரித்தெடுத்துக் கொள்க. சிந்தூரம் அருணன் நிறமாகும். வறுத்த மிளகுச் சூரணத்தில் அரிசிஎடைச் சிந்தூரம் கொள்ளின் விடபேதி நீங்கும். இஞ்சிச் சுரசத்திற் கொள்ள இசிவு நீங்கும். திரிகடுகு வறுக்கப்பட்ட சூரணத்தில் தேனுடன்கொள்ள வாதரோகம் உஷ்ணரோகம் முதலியன யாவும் நீங்கும். சுக்கு, மிளகு, திப்பிலி, மல்லி சீரகம் இவை பொடித்த தூளோடு தேன் சேர்த்துக்கொள்ள சத்திகுன்மம் தீரும். ஆடாதோடைவேர், தூதுளைவேர், கண்டங்கத்திரிவேர், இம்புறுவேர், துளசிவேர் இவை வகைக் கரைப்பலம் சேர்த்து நையநறுக்கி புதுப்பானையில் போட்டு 4 படி ஜலம்விட்டு மிளகு $\frac{1}{2}$ பலம் பூண்டு $\frac{1}{2}$ பலம் தட்டிப் போட்டு 1 படியாக வற்றக்காய்ச்சி $\frac{1}{8}$ படி கஷாயத்தில் 1 பணவெடை கொடுக்க க்ஷயரோகங்கள் நிவர்த்தியாகும்.

ஜாதிக்காய் ஜாதிபத்திரி கிராம்பு அதிவிடயம் பூண்டு இவைகளை வெதுப்பித் தூளாக்கித் திரிகடி யெடுத்துத்

தேன் சேர்த்துப் பணவெடை கொள்ள அசீரணம், கடுப்பு கிராணி சுகமாகும். தோல் சீவிய காட்டுக் கருணைக்கிழங்கை உலர்த்திப் பொடித்துச் சுக்கு திப்பிலி சூரணத்தோடு கலந்து தேன் பெய்து பணவெடை செந்தூரம் கலந்துகொண்டால் மூலரோகங்கள் குணமாகும்.

சுக்கு இஞ்சி அதிமதூரம் சிற்றரத்தை இந்நான்கும் கலந்த சுரசத்தில் ($\frac{1}{8}$ படி) பணவெடை கொள்ள சுரம்போம்.

கொடிவேலிக் கஷாயம் $\frac{1}{8}$ படி யளவில் பணவெடை கொள்ள சன்னி வகை 13 ம் தீரும்.

கட்டுக்கொடிச்சாறும் முசுமுசுக்கைச்சாறும் சமபங்கு கலந்த $\frac{1}{8}$ படி சாற்றில் கொள்ள நீரிழிவு தீரும்.

வெற்றிலையிற் பணவெடை கொடுத்தால் பிரசவித்த பெண்களுக்குச் சூதகம் கிரமமாகும்.

திரிகடுகுச் சூரணத்தில் தேன்பெய்த ரசாயனத்தில் கொள்ளப் பட்சவாதம் குணமாகும்

நெல்லிமுள்ளி வில்வவேர் சீரகம் சுக்கு சிற்றுமுட்டி வேர் நெற்பொரி வகைக்கொருபலம் இளவறுப்பாய் வறுத்து 4 படி ஜலம்விட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி 6 வேளையாகப் பணவெடைச் செந்தூரத்தோடு கொடுக்கச் சகல ரோகங் களும் நீங்கும்.

## அயம்

அயம் 1 பங்கு சாரம் $2\frac{1}{2}$ பங்கு தேர்ந்துகொண்டு இருப்புச் சட்டியில் சாரம்விட்டு வறுத்துக்கொண்டுவர சிவந்து



(சூரணச்) செந்தூரமாகும். இதனை வெண்ணெய் நெய் அநுபானங்களில் கொடுக்க கிராணிரோய் நீங்கும். இச்சாபத்தியம். சாரத்தை நீக்கிக் கந்தம் கலந்து செய்வதொரு முண்டு.

## வேறு.

ஓரிரவு பழச்சாற்றல் ஊறிய அயப்பொடியை நன்கலம்பி அகண்ட மண்ணோ டொன்றிலிட்டு அடுப்பேற்றிப் பழுத்த தென்னமட்டைத் துடுப்பால் வறுக்கச் சிந்தூரமாகும். இதனைத் தக்க அநுபானங்களிற் கொடுக்கப் பாண்டு சோகை காமாலை முதலிய நோய்கள் யாவும் பறக்கும். இரத்த விருத்தி யுண்டாகும்.

## வேறு.

தான்றி நெல்லி சீந்தில் கடுக்காய் இவற்றின் சூரணம் வகைக்கொரு சேர்சேகரித்து அவற்றோடு 1 சேர் அராவிய அயப்பொடியும் கலந்து ஒரு மட்கலத்திட்டு ஒருபடி நாவற் பழச்சாறும் ஒருபடி நாவற்பட்டைச்சாறு அல்லது மேற்படி கஷாயமும் கலந்து 2 தினம் அசையாமல் நிழலில் வைக்க அயப் பொடி துவர்த்திரவத்துடன் கலந்து கரைந்து பக்குவப்படும். பின்னர் இரவியில் உலர்த்தி இருப்புச் சட்டியிலிட்டுச் செந் நிறமாமாறு வறுக்கவும். வறுப்பு பக்குவ வறுப்பா யிருக்க வேண்டும். அது பொடியுடன் சம்பந்தப்பட்டுள்ள சரக்குகள் எல்லாம் சாம்பலாகிக் காற்றுடன் சம்பந்தப்பட்டு வெளி யேறவும் அயம்மாத்திரம் தங்கி நிற்கவும் தக்கவறுப்பாய் இருக்கவேண்டும். அதன் பின்னர்ப் பெருந்தீயிட அயம் சிவந்திருக்கும் சமயம் நோக்கி ஒருசேர் பசுவின்நெய் விடப்

பற்றி எரியும்; பிறகு தானே தணிய அயம் மாதுளம்பூ நிற மாய்ச் சிவந்திருக்கும்.

இதனை நாளைக்கிருவேளை பணவெடை நெய்தேன் இவைகளிற் கொள்ளக் காமாலை சோகையாதி கடும்பிணி யாவுந்தீரும். மதுமேகம் பாண்டு பாடு பித்தமும் போகு மென்ப. தேகமும் வலுத்து நல்ல தீரமும் அதிகமாமே. ஆயி ரம் புடத்தே வந்த அயமுமே நிகராதிந்தச் செந்தூரத்தை ரோகத்தின் வலிவு மெலிவுக் கேற்றவாறு கூட்டியும் குறைத் தும் புளிதள்ளியும் கொண்டு இச்சாபத்தியமா யிருத்தலே நன்று.

## காந்தம்.

ஒருநூறு வருஷத்து இரும்பு அரப்பொடி, ஊசிக்காந் தம் நெல்லிக்காய்க் கந்தகம் வகைக்கு அரைச்சேர் கலுவத் திட்டு கற்றாழைச்சாறுவிட்டு 12 நாளுக்குள்ளே 48 சாம மரைத்து ஒட்டைச்சாண் உயரமும் 1 முழ அகலமுமுள்ள சட்டியின் மத்தியில் ஷை மருந்தை 4. விரற்கடை வட்ட மான அடையாகச் செய்து வைத்துச் சட்டியின் வாயைத் துணியால் மூடிக்கட்டி 3 நாள் வெயிலில் வைத்துக் காய்ந்த பிறகு துணியை எடுத்துப்போட்டு வேறொரு சட்டியால் மூடிச் சீலைமண் செய்து சட்டிபொருந்தத் தக்கதோர் அடுப்பி லேற்றி 4 சாமம் கமலாக்கினியாய் எரித்துப் பின்னர்ப் பெருவிறகுகளால் 20 சாமம் வடவாக்கினிச் சுவாலையிட்டு எரிக்க இந்த 24 சாம எரிப்பால் அடுப்பில் தணல் நிறைந் திருக்கு மாகலின் நீர்கொண்டு அவிக்காது குறடுகொண்டு அனலை எடுத்துப் போடுக. ஆனல் முற்றிலும் தணலை



எடுத்துவிடற்க. சுவாலையை மாத்திரம் தணித்திடுக. அந்தப் பாத்திரம் 3 நாள் தன்னிற்றானே அடுப்பில் ஆற வேண் டும். மருந்தில் மண்விழாதபடி சீலையை எடுத்துப் பார்க்க மருந்து மிருதுவான பூவைப்போல செவந்திருக்கும்.

இரத்தங் குறைந்து உடல் வெளுத்திருப்பவர்கள் சீர கம் மிளகு சுக்கு கற்கண்டு இவை சமஞ்சேர்த்துப் பொடித்த ½ வராகனெடைப் பொடியொடு ½ வராகனெடை நெய்யும் சேர்ந்த அமிர்தத்தில் ½ வராகனெடை செந்தூரம் கொள்ளு வார்களாக. காலம் 1 மண்டலம். இச்சாபத்தியம்.

அரை வராகனெடைச் சங்கம் வேர்ச்சாந்தில் கொள்ளு பவர் பித்தபாண்டு வயிறு வீக்கம் பித்தவெட்டை ஊது காமாலை கைகால் வீக்கம் விஷபாண்டு முதலியன நீங்கப் பெறுவர். இந்தச் சாந்தை ½ சேர் வெள்ளாட்டுப் பாலோடு கலந்து கொள்ளவேண்டும். மருந்துண்ட பிறகு ஷை பச்சைப் பாலைக் கொஞ்சம் பருகவும் வேண்டும். சாயந்திரம் ஷை பாலைக் கொஞ்சம் காய்ச்சிக் குடிக்கவேண்டும். இவ்விதம் 7 நாள் இருவேளையும் மருந்து கொள்ளுக.

மேற்கண்டுள்ள கொடிய வியாதியாளர்கள் காய்ச்சிய வெள்ளாட்டுப்பாலில் சிறிது சர்க்கரை சேர்த்துக்கொண்டு 7 நாளளவு உப்பில்லாப் பத்தியங் கோடல் வேண்டும். எட் டாம்நாள் தொட்டு சங்கிலையோடு சேர்த்து வறுக்கப்பட்ட உப்பைச் சேர்த்துக் கொண்டு புளி தாளிப்பு நீங்கிய அரைக் கீரை கத்தரிப்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு முதலிய கறிகள் சேர்த்துக்கொண்டு பால் மோர் நீக்கி 7 நாள் மறுபத்தியம் போற்றல் வேண்டும். இவ்வேழுநாளும் பால் சங்கம்வேர்

சேர்ந்த அநுபானம் நீக்கித் தேனனுபானம் கோட லழகாம். 15ம் நாள் ஓமம் தடவி ஆரோக்கிய ஸ்நானம் செய்தல்வேண்டும். பின்னர் 2 நாள் கிரமித்து எள்ளெண்ணெய் ஆமணக்கெண்ணெய், நெய் சேர்ந்த முக்கூட்டு முழுக்கு எடுத்துக் கொள்ளுக. அன்றுமுதற் புளி சேர்த்துக் கொள்ளுக.

ஒருவேளை வியாதியாளர்களின் தன்மைக் கொவ்வாவிடின் பத்தியத்தை நீக்கி இச்சாபத்தியம் கடைப்பிடிக்கச் செய்வித்துத் தேனனுபானத்தில் ½ பணவெடை ஒரு மாதம் கொடுக்க ஷை வியாதி நீங்கி வீரியவிருத்தி இரத்தவிருத்தி யிவையுண்டாகும்.

வெள்ளாட்டுப்பாலைச் சேர்க்காவிட்டால் தேனனுமானம் 7 நாள் கொண்டு வெந்நீர் அன்னம் கொள்ளுக. மிளகு கருவேப்பிலை இரண்டையும் பொடித்துத் தொட்டுக் கொள்ளலாம்.

சரீர பலமற்றவர்கள் உப்பில்லாப் பத்தியத்தை 5 நாளாகவும் 3 நாளாகவும் கொண்டு மறுபத்தியத்தையும் குறைந்த நாட்களாக்குவாருமுண்டு. பின்னர்ப் பத்தியமின்றித் தீர்க்கமாய் மருந்துண்டு வியாதி போக்குவாருமுளர்.

சிறுநாவற்பூ காய்ந்த வில்வப்பிஞ்சு கிராம்பு ஜாதிக்காய் திப்பிலி சீரகம் கசகசா வகைக்கு ½ வராகனெடை வறுத்துப் பொடித்த பொடி ½ வராகனெடையோடு ½ வராகனெடை செந்தூரம் கலந்து தேனனுமானத்திற் கொள்ள கிராணிவகைகள் யாவும் நிவர்த்தியாகும். நாளொன்றுக்கு இருவேளையாக ஒரு மண்டலம் கொள்ளவேண்டும்.



ஒரு வாட்டியிற் கோழிப்புட மிட்டெடுத்த ⅛ சேர் அப்பளாகாரத்தைச் சூரணித்துப் பொடித்த ½ வராகனெடை எடுத்துக்கொண்டு பாத்திரத்திலிட்டு அரைப்பழச்சாறுவிட்டு ¼ பணவெடை செந்தூரம் போட்டுக்கொண்டு இருவேளை ½ மண்டலம் உட்கொண்டால் அக்கினிமந்தம் பித்தகுன்மம் பித்தவாயு இவை மூன்றும் நிச்சயமாய்க் குணமாகும்.

## வெள்வங்கம்.

சுத்தியான வெள்வங்கம் ஒரு பலத்தோடு பாலரசம் 1 பலத்தையும் தொந்தித்துக் கந்தகம் 1 பலம் கூட்டி யரைத்து உறவான பின் ஒரு பலம் நவாச்சாரத்தையும் சேர்த்து 4 சாமம் அரைத்துக் குடுவையிலிட்டு வாயை பலபக் கல்லால் மூடிச் சீலைசெய்து குடுவை முழுமையும் 7 சீலைமண் செய்து உலர்த்தி வாலுகா யந்திரத்திலிட்டு 4 சாமம் எரித்து ஆறவிட்டுக் குடுவையை உடைத்துப் பார்க்கத் தங்கநிறச் சிந்தூரமாகும். இதனை வெண்ணெயிற் குழைத்துண்ண வெட்டை உஷ்ணம் இருமல் மேககாரகம் கிருமி நீங்கும். வால்மிளகுத்தூள் சந்தனம் தேன் வெண்ணெய் நெய் முதலிய அநுபானங்கள் பலக்குறைவைப் போக்கி வலுவையும் பலத்தையும் தரும்.

## வாந்திபேதி நிவாரண செந்தூரம்.

சுத்தியான எட்டுப்பங்கு இலிங்கம் நான்கு பங்கு பூரம், வீரம் இரசச்செந்தூரம் கந்தகம் இவை வகைக்கிரண்டிரண்டு பங்குகள் தேர்ந்தெடுத்துக் கலுவத்திலிட்டுத் தாய்ப்பாலால் நான்கு சாமம் அரைத்து வெயிலில் காயவைத்துப் பொடித்துக் குன்றியெடை தேன் முதலிய அனுபானங்களில் கொள்ளுக.

மேற்கண்டபடி ஆக்கிக்கொண்ட சிந்தூரத்துடன் வெங்காரப்பொடி சமவெடை கொடுத்து வீருன மருந்தாக்குவாருமுளர். அவ்வாறு செய்பவர் பாதி வெங்காரத்தைப் பொடித்து ஒரு சிறு ஓட்டின்மேல் அடைபோல சந்தில்லாமல்பரப்பி அதன்மேல் செந்தூரத்தை வைத்துப் பரப்பி மீதி வெங்காரப் பொடியையும் அதன்மேல் தூவி மூடிவிட வேண்டும். பிறகு தீபம்போல் சிறுதீயிட வேண்டும். வெங்காரம் அடைபோலக் கீழும்மேலுமாகக் கட்டிக் கொள்ளும். மேல் கவசம் கீழே படியுமாறு தோசை திருப்புவதுபோல் திருப்பிப் போடவேண்டும். வெங்காரம் உருகிக் கரைந்து அடையாவதே அடையாளமெனக் கொண்டு இறக்கிக் கீழேவைத்து ஆறின பிறகு கலுவத்திட்டுப் பொடித்துக் கொண்டு 2 குன்றியளவு தேனில் கொடுக்கவும். இம்மருந்தில் விஷவஸ்துக்கள் அதிகம் கலந்திருந்தாலும் கேட்டை விளைக்காது.

இந்த நோயில் வைத்தியன் அவசியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டே உண்டு. அவை ஒன்று கை கால் ஜில்லிப்பு. மற்றொன்று தாது. இந்த நோயாளிக்குப்பாதமும் உள்ளங்கைகளும் முதன் முதல் சில்லிட ஆரம்பிக்கும். சரீரம் வியர்க்கும். இத்தன்மைத்தான இலட்சணங்களைக் கண்டவுடனே தாமதிக்காமல் மருந்தைக் கொடுக்க வேண்டும். மேற்கண்ட அவஸ்தையைச் சீதளமெனச் சுதேச வைத்தியர் கூறுவர்கள். இத்திற அவஸ்தையைப் பரிகரிப்பதில் வீரத்தைத் தவிர வேறெந்த மருந்துக்கும் வலுவே இல்லை. எந்த நோய்க்குச் சீதமதிகரிக்கினும் வீரமே சிறந்ததாம். தனித்தும் வீர செந்தூரத்தைக் கொடுக்கலாம். ஆனால்



இந்த வாந்திபேதிச் செந்தூர மருந்தோ 30 நிமிஷத்தில் குணந்தரும். படுத்த நாடி ஓடும். அவயவங்களில் உஷ்ணம் உண்டாகும். குரல் ஒலிக்கும். கைவிட்ட ஆங்கில மருந்துகளைப் போலாகாது குணந்தரும். ஒருவேளை மருந்துண்டு $\frac{1}{2}$ மணி நேரத்திற்குள் உஷ்ணம் பிறக்காவிட்டால், மறுபடியும் அதே அளவில் உபயோகிக்கக் குணந்தரும்.

நோயாளிக்கு ஆயுர்ப்பாவம் முன்பின்னாக விருந்தாலும் இம்மருந்து குணந்தரும். இந்த மருந்தில் யோசிக்காது செய்யவேண்டிய காரிய மொன்றுண்டு. அதாவது உஷ்ணம் பிறக்க வேண்டியதற்கு $\frac{1}{2}$ மணி நேரத்திற்கு ஒருமுறை மருந்தை விடாது கொடுக்கவேண்டு மென்பதே. இதை மறக்கவே கூடாது. இதை வியாதியின் கடுமையில்தான் கொடுக்கவேண்டும் என்கிற நியதியில்லை. வியாதியின் ஆரம்பம் கடினம் இறுதி ஆகிய எந்தக் காலத்திலும் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம் எனினும் வியாதியின் துவக்க காலத்தில் முற்சொன்ன இவ்வாந்திபேதிக் கட்டுமருந்து கை கூடுவதுபோல் மற்றொன்றும் கைகூடிவராது.

## உப்பு.

சிறு சிறு படையைச் சாறு பிழிந்து 5 பலம் சோற்றுப்பு இட்டு 4 சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து 15 எருவில் புடமிடச் சிந்தூரமாம். இதனைக் கோதுமைப் பிரமாணம் தேனிலிழைத்துக் கொடுத்தால் வாந்திபேதி, சூலை, வயிற்றுநோய், சீதளம், ஜன்னி முதலியன தீரும். இச்சா பத்தியம்.

## அயம்.

நயத்த 4 பலம் இருப்புப்பொடியை இஞ்சி ரசத்தால் சுத்திசெய்து வரப்பு முள்ளிச்சாற்றால் 4 சாம மரைத்து வில்லை தட்டிக் காயவைத்து 12 எருவிலிடப் பலிதமாகும். அவ்வாறான சிந்தூரத்துடன் தனித்தனி ஒவ்வொரு வராக னெடை ரசம், கந்தகம், பொட்டிலுப்பு இவை சேர்த்துமேற் படி சாறுவிட்டு 2 சாம மரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முன்போல ஓட்டிவிட்டு 12 எருவில் புடம்போடச் செந்தூர மாகும். இம்மாதிரி முப்புடமிடுவாரும் உண்டு. இதனை 1. 1½ அரிசியளவு தேனில் கொடுக்க தேகம் வலுக்கும். இரத் தம் சுத்தமாகும். சுரம் சன்னி சீதளம் இவை நீங்கும். இச்சாபத்தியம் இருப்பதே நன்று.

## வீரம்.

சுத்தி முறைப்படி நன்கு சுத்திகரிக்கப் பெற்ற சம வெடை வீரம் கந்தகம் லிங்கம் சுத்தியான இரும்பு அரப் பொடி இவைகளைக் கலுவத்திலிட்டு இளநீர் விட்டரைத்துப் பின்னர் ஓர் கரண்டியில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து ஆறின பிறகு கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொண்டு அரிசி எடை தேனில் குழைத்துத் தினம் 3 வேளை கொடுக்கக் காய்ச்சல் விலகி வியர்வை காணும், பெருமூச்சு நோய் போகும். சீதளத்தால் உண்டாகும் வியர்வையைப் போக் கும். நோய் நிலைமைக்கேற்க மருந்தைக் கூட்டியும் குறைத் தும் கொடுப்பதுடன் தேக நிலைமையையும் கவனிக்க வேண்டும்.



## அக்கினி குமார செந்தூரம்.

சுத்திசெய்த ரசம் கந்தகம் நாபி எஃகு அரப்பொடி இவை சமம் சேர்த்துச் சிறு சிறுபடைச் சாற்றால் 3 நாள் அரைத்து துதுளைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிற் காயவைத்துப் பிறகு காசிக்குப்பியிற்போட்டு வாய் மூடி 7 தரம் சீலைசெய்து வாலேந்திரத்தில் 4 விரற்கிடை மணலைக்கொட்டி அதன் மத்தியில் குப்பியை வைத்துச் சட்டி நிறைய மணலைப்போட்டு அடுப்பேற்றிக் கமலாக்கினியாகப் பன்னிரண்டு சாமம் எரித்து ஆறின பிறகு பொடித்துக் கொண்டு உழுந்தளவு இஞ்சிரசத்தில் கொண்டால் சுரம் சுர தோஷம், சன்னிபாதம் இவை சௌக்கியமாகும்.

### மெழுகு இனம்.

17093

### கஸ்தூரி.

கஸ்தூரி 1 பங்கு குங்குமப்பூ 2 பங்கு கோரோசனை 3 பங்கு ஒன்று சேர்த்துப் பிள்ளைப் பாலலாட்டி எடுத்துக் கொண்டு தேனும் இஞ்சிரசமும் பெய்து கலந்து கொடுக்கப் பிள்ளைகளுக்கு உண்டாகும் மாந்த சுரம் போகும். இது ஒரு வேளையின் மருந்தாகலின் அப்போதைக் கப்போது செய்வித் துக் கொள்ளுக.

### வேறு.

குங்குமப்பூ கஸ்தூரி கோரோசனை பச்சைக் கர்ப்பூரம் இரசச்செந்தூரம் வகைக்கு ⅛ வராகனெடை சேர்த்துத் தேன் பெய்தரைத்து இஞ்சிரசமும் வெந்நீரும் கலந்து சிறிது சீனியும் உடன் கொண்டு மருந்தில் ஆறிலொரு பங்கைக் கொடுக்கச்சன்னியும் சுரமும் தோஷமும் போகும்.

வேறு.

கஸ்தூரி கோரோசனை குங்குமப்பூ பச்சைக்கருப்பூரம், இரசச் செந்தூரம் இவை வகைக்குக் கால் வராகனெடையும் அக்கிராகாரம் அதிமதுரம் அரிசிதிப்பிலி தாளிசபத்திரி கிராம்பு சிறுதேக்கு சிற்றரத்தை மிளகு இவை தனித்தனி இடித்தெடுத்த சூரணம் வகைக்குக் கற்பல எடையும் ஒன்று சேர்த்துத் தேன் பெய்தரைத்து மெழுகாக்கிக் கொண்டு குன்றிப்பரிமாணம் இஞ்சிரசம் தேன் இவைகளுள் கொடுக்கச் சுரம், சீதளம் முதலியன தீரும், சூரணங்களைத் தேன்விட்டு முன்னதாக அரைத்துக்கொண்டு அவற்றோடு கஸ்தூரிவகைகளையும் பின்னிட்டு அரைத்துக் கொள்ளுக.

இலிங்கம்.

பூரம், சாரம், இலிங்கம் இவை சமவெடைக் கல்வத்திட்டு மைய வரைத்துக் கொண்டு அதனுடன் பளிங்குச் சாம்பிராணி கர்ப்பூரம் இவை மேற்கண்டவாறு தனித்தனிச் சமவெடை ஒன்று கூட்டி யரைத்து மெழுகாக்கி உபயோகிக்கப் பிரசவித்த பெண்களின் கர்ப்பாசாய அழுக்கு நீங்கும். தேன் அல்லது பனவெல்ல அநுபானமே நன்று.

காந்தம்.

வீரம் பூரம் லிங்கம் இரசம் ரசச்செந்தூரம் இந்துப்பு வெண்காரம் மடற்காந்தம் இவை வகைக்கு வராகனெடை ஒன்று வீதம் சேர்த்தரைத்துச் சமஎடை கேர்வாளஞ் சேர்த்துப் பின்னுமொரு முறை கல்வத்திட்டரைத்துக் கொள்வதன்றி இச்சரக்குகள் யாவும் மெழுகுபதமாம் வரையில் வேண்டிய அளவு சிற்றாமணக்குப் பருப்பு மிட்டரைத்துக்



கொண்டு சிறுசுண்டைக்காய்ப் பரிமாணம் உபயோகிக்க எல்லா நோய்களும் நீங்கும்.

சுக்கு மிளகுக் கற்கத்திற் கொடுக்கச் சூலை நீங்கும்.

எருக்கம் பழுப்புக் கற்கத்திலுபயோகிக்கச் சகல சர்ப்ப விஷமும் நீங்கும்.

பனவெல்லத்திற் கொடுக்கப் பிரவிருத்தி உண்டாகும். பேதி அதிகமானால் சுத்தோதக ஸ்நானம் செய்தல் வேண்டும்.

வீரம்.

வீரம் லிங்கம் பூரம் ரசம் இவை வகைக்கு 1 வராகனெடையும் நவாச்சாரம் வெடியுப்பு பொரித்த வெண்காரம் கர்ப்பூரம் பளிங்குசாம்பிராணி வகைக்கு 2 வராகனெடையும் பச்சைக் கர்ப்பூரம் கோரோசனை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடையும் குங்குமப்பூ 5 வராகனெடையும் குரோசாணி ஓமச்சூரணம் 10 வராகனெடையும் தாளிசபத்திரிச் சூரணம் 14 வராகனெடையும் ஒன்று சேர்த்துத்தாய்ப்பால்விட்டுத் தினமொன்றுக்கு ஒரு சாமமாக 3 நாள் அரைத்து மெழுகாக்கிக்கொண்டு குன்றிப் பரிமாணம் காலை மாலை 1 வாரம் கொள்ளச்சூதகவாயு சர்வாங்கவலி மேகவாயு அண்டவாயு கீல்வாயு கைகால் குடைச்சல் பாரிசவாயு குடல்வாயு முதலிய பல் வகை வாதரோகங்களும் நிவர்த்தியாகும், இச்சா பத்தியம்.

வேறு.

வீரம் 1 பங்கு இலிங்கம் $\frac{3}{4}$ பங்கு சுக்கு $1\frac{3}{4}$ பங்கு ஒன்று சேர்த்துத் தேன் பெய்தரைத்து மெழுகாக்கிக் கொண்டு சுத்த ஜலத்தில் பயிறளவு கொடுக்கக் கிரந்திவகை யாவும் நீங்கும்.

மிளகுப் பரிமாணம் ஆமணக் கெண்ணெயிற் கலந்து மேற்பூச்சுப் பூச இரணங்கள் ஆறும். அன்றியும் அவ்வாறு கொள்ளுபவர் திரிகடுகுக் கஷாயத்தில் பயறளவு உட்கொள்ளவும் வேண்டும்.

வெள்ளாட்டுப் பாலில் கொள்ள வெட்டை தீரும்.

தாய்ப்பால் தேன் இவை ஒன்றனுட் கொள்ளச் சன்னி தோஷம் ஏழும் நீங்கும்.

பறங்கிச்சக்கைக் கஷாயத்திற் கொள்ள நீர்ச்சுருக்கு நிவர்த்தியாகும்.

### வேறு.

வீரம், பூரம், ரசம், லிங்கம் இவை வகைக்கு அரைப் பலமும் நவாச்சாரம் பளிங்குச் சாம்பிராணி கர்ப்பூரம் பொரித்த வெண்காரம் வெடியுப்பு வகைக்கு 1 பலமும் சேர்த்துக் கல்வத்திட்டு சமவெடை நேர்வாளங் கலந்து தேன் சேர்த்து 3 நாளரைத்துக் கொண்டு குன்றி பரிமாணம் பனவெல்லத்தில் உபயோகிக்க வாதபித்த கபசம்பந்த நோய்கள் யாவும் நிவர்த்தியாகும்.

### வேறு.

வீரம் $\frac{1}{4}$ பலமும் சாரம் 1 பலமும் பயிற்றங் கள்ளிச் சாறு 1 படியும் ஒன்று சேர்த்துக் கொதிக்க வைத்துப் பதத்தில் வழித்துக் கலுவத்திலிட்டுத் தேன் விட்டரைத்துப் பனவெல்லத்தில் கடலைப் பிரமாணம் கொள்ளச் சூதகவாயும் மகோதர நோயும் தீரும்.

### கலிங்கம்.

ஆற்றுத் தும்மட்டிச்சாறு வெள்ளுள்ளிச் சாறு நொச்சிச் சாறு வகைக்குப் படியளவு சேர்த்துப் பாண்டத்திட்டு விங்



கம் ஓமம் பொரித்தகாயம் வெண்காரம் மிளகு வாளம் வகைக்கு ஒரு பலம் வீதம் பொடித்துப் போட்டுச் சுண்ட வெரித்து மலைத்தேனுல் ஒரு சாமம் ஆட்டி சிறு சுண்டைக்காயளவு பனவெல்லத்திற் கொள்ளச் சூதகவாயு குன்மம் முதலிய வாதரோகங்கள் யாவும் தீரும். இச்சா பத்தியம்.

### காயம்.

வளையலுப்பு கரியுப்பு வெடியுப்பு கல்லுப்பு இந்துப்பு வகைக்கு ஒரு பலமாகக் கலுவத்திட்டுப் பிரண்டைச்சாறு முருங்கப்பட்டைச்சாறு குப்பைமேனிச்சாறு நொச்சிச்சாறு குமரிச்சாறு இவற்றால் தனித்தனி முறையே இரண்டிரண்டு சாமமரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலிலிட்டு வாய் மூடி சீலைசெய்து 10 வறட்டியிற் புடமிட்டு எடுத்துக் கொண்ட வில்லைகளின் எடைக்கு நான்கிலொரு பங்கு காயம் சேர்த்துத் தேன்விட்டரைத்து மெழுகாக்கிக்கொண்டு $\frac{1}{4}$ வராகனெடை பனவெல்லத்திற் கொள்ள வயிற்றுப்பசம் குடல்வாதம் அண்டவாதம் சர்வாங்கவாதம் பதினெண்சூலை கிராணி குன்மம் வாதரோக வகைகள் யாவும் தீரும்.

### பூரம்.

திரிகடுகு திரிபலை திரிபத்திரி வகைக்குப் பலம் 1 பூரம் $\frac{1}{2}$ பலம் இலிங்கம் 1 வராகனெடை ஒன்று சேர்த்துக் கழற்சிக்காயிலைச்சாறு வெள்ளுள்ளிச்சாறு தேன் இவைகளால் ஒவ்வொரு சாமமரைத்து மெழுகாக்கிக் கடலைப் பரிமாணம் 5 நாள் கொள்ள வாதவீக்கச் சுரம் வாதக்குடைச்சல் குடல் வாதம் பக்கசூலை ஏகபீஜவலி முதலியன நிவர்த்தியாகும். இச்சா பத்தியம். (திரிபத்திரி—சாதிபத்திரி—இலவங்கப் பத்திரி—தாளிசபத்திரி).

வேறு.

ஓமம் பலம் 2 இலிங்கம் பூரம் வகைக்கு வராகனெடை 5. ஒன்று சேர்த்துத் தாய்ப்பாலால் 4 சாமமரைத்துக்கொள்வதோடு தேன் பெய்து 1 சாமமும் அரைத்துக்கொண்டு தேன் இஞ்சி முதலியவற்று ளொன்றிற் கடலைப்பரிமாணம் கொடுக்கச் சன்னியும் சுரதோஷங்களும் நீங்கும்.

வேறு.

பூரம் பலம் 1. இரசச் செந்தூரம் பலம் 1. கந்தகம் பலம் 2. இவைகளைத் தேன் கலந்தரைத்து மெழுகாக்கி 14 உருண்டைகள் செய்து பனவெல்லத்தில் அந்தி சந்தி கொள்ளப் பிரமியம் நுணுக்கிரந்தி பறங்கிப்புண் லிங்கப் புற்று கைகால் முடக்கு சூலைப்பிடிப்பு சிறுபிளவை முதலியன நீங்கும். வறுத்த உப்புஞ் சுட்ட புளியும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இலிங்கம்.

சாதிலிங்கம் வெண்காரம் வகைக்கு 2 வராகனெடை கொட்டை முத்துப்பயறு 4 வராகனெடை வாளப்பருப்பு 8 வராகனெடை ஒன்று சேர்த்துத் தேன் பெய்தரைத்துக் குன்றியளவு (பனவெல்லத்தில்) கொண்டு குளிர்ந்த சலமும் சிறுதுட்கொண்டால் விரோசனமாகும். வெந்நீர் கொண்டால் பேதி நிற்கும். வாதரோகங்களும் வாசியாகும்

இரசம்.

இலிங்கம் ரசம் இரசச் செந்தூரம் வீரம் பூரம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை பொடித்துக்கொண்டு ஓமம் பலம் ஒன்றே கால் உடைத்துப் பாதி ஓமத்தை அகன்ற பாத்திரத்தில் பரப்பி அதன்மீது பொடித்த சரக்குகளையும் பரப்பி மீதி ஓமத்தாளால் மூடி மேற்சட்டி மூடாது அடுப்பேற்றி ஓமம்



சிவந்த சமயங் கண்டு இறக்கிக் கலுவத்திட்டுத் தேன் கலந்தரைத்து மெழுகாக்கி முன்னனுமானப்படி சுண்டைக்காய்ப் பரிமாணம் இருவேளை ஏழுநாள் கொள்ள, சூலைப்பிடிப்பு பௌத்திரம் ஆறுவிரணம் பிரமியம் அரையாப்பு நிதம்பசூலை கண்டமாலை சூசிகாவாயு கரவாதம்இருவகை ரகஸ்ய ஸ்தானப் புற்றுக்கள் சுரோணிதவாயு சொறிச்சிரங்குகள் விஷபேதி புறவீச்சு முதலியன நீங்கும்.

வேறு.

வீரம் இரசகர்ப்பூரம் லிங்கம் இரசச் செந்தூரம் சுத்தியான வாளம் வகைக்கு ஒரு வராகனெடையாகக் கொண்டு உள்ளிச்சாற்றாலாட்டிய மெழுகைப் பனவெல்லத்தில் மிளகளவு கொள்ள உதரச் சிக்கல் சூதகவாயு இவை நீங்கும்.

கந்தகம்.

சுத்தியான ஒரு பலம் கந்தகத்தைச் சட்டியிலிட்டு பிரயராக்கத எண்ணெயால் சிறுகச் சிறுகத் தீபாக்கினியில் உருக்க மெழுகாகும். அதனை மேற்கண்ட அளவு கொள்ள குடல்வாயு பீஜவாதம் சொறிச்சிரங்கு பாண்டு வீக்கம் இவை சுகமாகும். இச்சா பத்தியம்.

சாரம்.

ஒரு பலம் நாட்டுச் சாரத்தைக் கொடிக்கள்ளிச்சாறு வேளைச்சாறு வெள்ளெருக்கம்பால் கொடிக்கள்ளிப்பால் இவைகளில் முறையே ஒவ்வொரு சாமம் சுருக்குக்கொடுத்து கொடிக்கள்ளிப் பாலாலாட்டிய மெழுகை முன்னனுமானப்படி கொள்ள நடுக்குவாதம் முடக்குவாதம் குடைச்சல் வாதம் மகோதரம் நீராம்பல் வாயுக்கட்டி குன்மக்கட்டி முதலியன தீரும். பேதி அதிகமானல் பழச்சாறு கொள்ளவேண்டும்.

## நவ லவணம்.

பூநீர் பாறை கரி இந்து வெடி கல் மூங்கில் வளையல் உவர் சம்பந்தமான இவ்வகை ஒன்பது உப்புக்களையும் ¼ பலம் வீதம் ஒன்று சேர்த்துச் சட்டியிலிட்டுப் பேய்த்தும்மட்டிச்சாறு ¼ படியும் பசுப்பால் ¼ படியும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றித் தீபாக்கினியாய் எரித்துத் ஆத்திவேரால் கிண்டிக்கொண்டுவந்து குழம்பாகும் சமயம் பொடித்த பூரம் ½ பலமும் வீரம் ½ பலமும் சேர்த்துக் கிளரிப் புகையாமல் மெழுகு பதத்தி லிறக்கிக் கலுவத்திட்டுச் சுக்கு மிளகு திப்பிலி இவை வடித்த சூரணம் வகைக்கு வராகனெடை 3 ம், நேர்வாளம் வராகனெடை 5 ம், சேர்த்துத் திரிபலைக் கஷாயத்தால் 1 சாமமும் தாய்ப்பாலால் 7 சாமமும் அரைத்து எடுத்துக்கொண்ட மெழுகை மிளகளவு முன்னனுமானத்தில் கொள்ளச் சூலை மகோதரம் சூதகவாயு பாரிசவாயு கிரந்தி மேகம் நீர்க்கோவை தமரகம் விஷவாதம் முடக்குவாதம் அண்டவாதம் குன்மம் முதலிய நோக்காடுகள் நீங்குவதோடு புத்திரவாதமும் போம்.

## பால ரசம்.

பறங்கிச்சக்கை திப்பிலி இலவங்கம் தனித்தனிப் பொடித்த சூரணம் வகைக்கு இரண்டிரண்டு வராகனெடையும் வாலரசம் 2 வராகனெடையும் நான்கு வராகனெடைக் கரும்பு வெல்லமும் கலந்து கல்வத்திட்டரைத்து மெழுகாக்கிக்கொண்டு இருவேளை 7 நாள் பனவெல்லத்தில் ¾ வராகனெடை உட்கொண்டு உப்பில்லாப் பசுப்பாற் கஞ்சி ஆகாரம் செய்து கொண்டு வந்தால் மேகம் வெள்ளை தடிப்புப் புண்கள்



அழிகிரந்திகுழி கிரந்திவகைகள் அரையாப்பு ஆதிய மேகச் சூலைகள் கால்கை முடக்கு வாதங்கள் முதலியன நீங்கும்.

## தைல வினம்.

### குமரி.

கழுவியாடிய நல்லெண்ணெயுடன் சமநிறை குமரிச்சாறு உடன்கூட்டி எரித்து முழுகிவரின் உஷ்ண நிவாரணமாம். இத்தைலம் கோடைக்கேற்ற தென்ப. ஜலம் நீங்கக் காய்ச்சிடுக.

### பொன்னாங்கண்ணி.

ஆவின்பால் பொன்னாங்கண்ணிச்சாறு நல்லெண்ணெய் வகைக்கொரு படியுடன் கையாந்தகரைச்சாறு ஆமலகச்சாறு வகைக்கரைப்படி உடன் சேர்த்துப் பசுப்பாலி லரைக்கப்பட்ட அதிமதுரம் ½ பலமும் கலந்து காய்ச்சி முழுகிவரின் உட்சுரம் உஷ்ணம் கைகால் எரிச்சல் முதலியன யாவும் சுகமாம்.

### வேறு.

காணிச்சாறு காற்படியும் கரிசாலைச்சாறு அரைக்காற்படியும் எண்ணெய் பத்துப் பலமும் சேர்த்துக் காய்ச்சிப் பதமுறு முன் பசும்பாலாலாட்டி யரைத்தெடுக்கப்பட்ட 2½ பலம் நற்சீரகச் சாந்தையும் கலந்து தைல பதத்தில் இறக்கிக்கொண்டு ஸ்நானம் செய்துவரின் பித்தாதிக்கத்தால் ஏற்பட்ட கண்மறைவு சொஸ்தமாகும். கண் பிரகாச முறும். பகல் நித்திரை புலாலுணவு போகம் இவை யாகா.

### தாமரை.

எள் நெய்படி இரண்டுடன் 2 படி தாமரைச் சாறும் உடன் கலந்து பதமாகக் காய்ச்சி இறக்கிப் பூலாக் கிழங்கு

பச்சிலை இவை வகைக்கிரண்டு வராகனெடை பொடித்துப் போட்டு வடித்து முழுகிவரின் கண்ணெரிச்சல் நீங்கி தேக காந்தி யுண்டாய் நீர்க்கடுப்பு விலகி தாதுபலத்து தேகம் எப்போதும் குளிர்ந்திருக்கும்.

### கீழாநெல்லி.

ஒரு தூக்கு கீழ்க்காய் நெல்லிச் சமூலத்தை யிடித்து 4 மரக்கால் ஜலத்திலிட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சித் திலதைலம் 2 படி சேர்த்து 5 பலம் சர்க்கரை உடன் கூட்டிக்கொண்டு பசுப்பாலால் அரைக்கப்பட்ட 1 பலம் சமநிறையுள்ள கடுக்காய்த்தோல் வேப்பப் பிசின் சாந்தையும் சேர்த்துக் காய்ச்சிச் சொரசொரப்பு அடங்கிக் குளிர்ந்த பின் முழுகிவரின் பித்தசம்பந்த நோய்யாவும் சுகமாகும்.

### அறுகு.

கணுக்கள் நீக்கப்பட்ட பத்துப்பலம் அறுகம் வேரைக் குறுணி நீரில் நசுக்கிக் காய்ச்சி எட்டிலொன்றாய் வடித்த கஷாயத்தில் 1 படி எண்ணெய்யைக் கலந்து பால்வார்த்தரைக்கப்பட்ட கார்ப்போக அரிசி கோஷ்டம் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையும் சேர்த்துக் காய்ச்சிச் சிலநாள் தானியபுடமிட்டு முழுகிவந்தால் சிறு சந்ததியினும் சிறந்த பலனைத்தரவல்ல இவ்வறுகின் தைலம் மண்டை வலி மஞ்சண் மூத்திரப் பெருக்கு இவற்றைக் குணப்படுத்திப் பைத்திய சைத்தியங்களையும் போக்குமென்று வைத்தியர் கூறுவர்.

### வல்லாரை.

அரைப்படி சிற்றாமணக் கெண்ணெயுடன் காற்படி வல்லாரைச் சாற்றைக்கூட்டி யெரித்து வரும் சமயம் ஆவின்



பாலா லாட்டப்பட்ட அரைக்காற்படி வெந்தய கற்கத்தையும் உடன் சேர்த்துப் பக்குவத்தில் இறக்கிச் சிறிது சர்க்கரை கூட்டிச் சிறுகரண்டி யளவு உட்கொள்ளச் செய்யின் சிறு குழந்தைகளின் கணச்சூடு மாறும்.

### தேங்காய்.

தேங்காய்ப்பால் செம்பருத்தியிலைச்சாறு சிற்றாமணக் கெண்ணெய் வகைக்கொருபடி சேர்த்து அடுப்பேற்றிப் பதவேளைக்குச் சிறிதுமுன் வஸ்திரகாயஞ்செய்து வகையொன்றுக்கு $1\frac{1}{4}$ வராகனெடையுள்ள மிளகு கிராம்பு திப்பிலி சுக்கு ஏலம் பூரம் இவற்றின் சூரணங்களையும் கொட்டிக்காய்ச்சி வடித்துச் சிறுகரண்டிப் பரிமாணம் உள்ளுக்குக்கொடுத்தால் கிரந்தி சூலைமுதலியன நீங்கும். இச்சாபத்தியம்.

### நொச்சி.

நல்லெண்ணெய் நொச்சிச்சாறு இவைவகைக்கு அரைப்படி ஒன்றுசேர்த்து வகைக்கு $\frac{1}{2}$ பலம் நிறையுள்ள பெருஞ்சீரகம் சதகுப்பை இவைகளைப்பாலிட்டு அரைத்துக் கலந்து கொள்வதுடன் $\frac{1}{2}$ பலம் பாற்சாம்பிராணியையும் பொடித்துக்கொட்டி வடித்து முழுகி வரின் எழுநாயிறு படுஞாயிறு என்னும் இருவகைத் தலைவலிகளும் நீங்கும். பிடரிவலி, புருவநோய் மண்டைக்குடைச்சல் கபாலச்சூலை ஒற்றைத் தலைநோய் இவைகளும் சுகமாகும்.

### சந்தனம்.

நான்கு மரக்கால் ஜலத்தில் 2 வீசை சந்தனத்தூளையிட்டுக் கஷாயமாக்கி வடித்துக்கொண்டு 10 சேர் பசுப்பாலும் 10 சேர் எள்நெய்யும் சேர்த்துக் காய்ச்சுக. பின் வஸ்திரகாயம்செய்து வகைக்கு ஒவ்வொரு வராகனெடை

யாகத் தயாரித்துள்ள வெண்சந்தனத்தூள் செஞ்சந்தனத்தூள் மரமஞ்சள் கஸ்தூரி மஞ்சள் தேவதாரு சடாமாஞ்சில் தக்கோலம் வாய்விளங்கம் நெல்லிமுள்ளி கோஷ்டம் பூலாங்கிழங்கு நீலோற்பலக்கிழங்கு விலாமிச்சைவேர் வெட்டிவேர் அதிமதுரம் ஏலம் சிறுநாகப்பூ லவங்கப்பட்டை பத்திரி மல்லி சண்பகப்பூ மொட்டு கோரைக்கிழங்கு இலுப்பைப்பூ மகிழம்பூ பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ இவற்றின் சூரணங்களையும் சேர்த்துக்கொள்ளுக. தைலபக்குவத்தில் விறக்கிக்கொள்ளுக. இவ்வாறான தைலத்தை முழுகிவரின் மேககாங்கை இருமல் சொறிச்சிரங்கு கண்ணெரிவு கண்புகைச்சல் அஸ்திசுரம் கைகால் எரிவு தலைவலி மயிர் உதிர்தல் புண் புரை மயக்கம் மூளைக்கொதிப்பு முதலியன நீங்கும். சரீரம் அழகுறும்.

## வேம்பு.

ஒன்று சேர்ந்த காற்படி ஆடாதோடைச்சாறு காற்படி வேப்பெண்ணெயோடு வகைக்கு ஒன்றே காற்பல வீதம் திப்பிலி சிற்றரத்தை பூண்டு இவைகளை யரைத்துக்கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து எடுத்துக்கொண்டு சுக்குக்கஷாயம் வெற்றிலைச்சாறு இஞ்சிச்சாறு வெந்நீர்முதலிய அநுபானங்களில் 10 சொட்டுவீதம் குழந்தைகளுக்குக் கொடுக்க மாந்தசுரம் மாந்த இசிவு வலிப்பு சுரம் தெற்கத்திக்கணை முதலியன விலகி உஷ்ணாதிக்கம் உண்டாக்கி மலப்பிரவிருத்தியும் உண்டாகும். இதனைப் பாலாமிர்தமெனப் பெரியோர் கூறுவர்.

## வில்வம்.

ஒவ்வொன்றரைப்படி வீதம் மிசிரித்துக்கொண்ட பசுப்பால் நல்லெண்ணெய் இவற்றுடன் நான்குபடி ஜலத்திலிடப்



பட்டு காலொன்றாய்க் குறுக்கிய அவ்வைந்து பல நிறையுள்ள வில்வவேர் வில்வப்பழம் இவை கலந்த கஷாயத்தையும் 2 பலம் சந்தனக் கற்கமும் சேர்த்துக் காய்ச்சி ஸ்நானம் செய்துவர அதியுஷ்ணம் பித்தவெட்டை இவை தீரும்.

## நெல்லிக்காய்.

பொன்னாங்கண்ணி, கையாந்தகரை, நெல்லிக்காய் இவற்றின் சாறு ஒவ்வொருபடியும் பசுப்பால் நல்லெண்ணெய் ஒவ்வொருபடியும் கலந்துகொள்ளுக. இம் மிசிரத்தோடு பசுப்பாலிட் டரைத்த வகைக்கொரு பல எடையுள்ள சிற்றரத்தை அதிமதுரம் கடுகுரோகிணி கோஷ்டம் வெட்டிவேர் சந்தனம் விலாமிச்சைவேர் இவற்றின் கற்கத்தையும் கலந்து காய்ச்சி முழுகிவர உஷ்ணம் நீங்கிக் குளிர்ச்சியுண்டாகும். பித்தநோய் விலகி சிரோரோகம் நீங்கும். நேத்திரம் ஒளிரும். தேகம் மிளிரும்.

## கரிசாலை.

கரிசாலைச்சாறு காணிச்சாறு கீழாநெல்லிச்சாறு பசுப்பால் நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி சேர்த்து அதில் வகையொன்றுக்குக் காற்பலம் வீதம் பாலிலரைத்த கற்கமாகிய அதிமதுரம் கடுகுரோகிணி விலாமிச்சவேர் நெல்லிமுள்ளி கோஷ்டம் சந்தனம் பேரரத்தை வெட்டிவேர் கோரைக்கிழங்கு இவைகளையும் கலந்து காய்ச்சி வடித்து முழுகிவந்தால் கண்ணெரிவு போகும். மூளை குளிர்ந்திருக்கும். சிரரோகம் நீங்கும். நேத்திரம் பிரகாசிக்கும். சரீரம் காந்தியாய் இருக்கும்.

## அகத்திக்கீரை.

அரைப்படி அகத்திக்கீரைச் சாறும் அரைப்படி நல்லெண்ணெயும் கூட்டி ஒருபலம் கோஷ்டக் கற்கமுங் கலந்து காய்ச்சி முழுகிவரின் தேகம் குளிரும்.

## இலந்தை.

இலந்தையிலைச் சாறு 1 படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, ஈருள்ளிச்சாறு $\frac{1}{4}$ படி பழச்சாறு $\frac{1}{4}$ படி குமரிச் சோறு 1 பலம் ஒன்றுசேர்த்து 2 பலம் கருஞ்சீரகத்தைப் பொடித்துக் கொட்டிக் காய்ச்சி வடித்து முழுகிவரின் பித்த வெட்டை நீங்கும்.

## கணச்சூட்டிற் கெண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, குமரிச்சோறு தேங்காய் அளவு சிறுக அரிந்து தூளாக்கிய வெங்காயம் 10 பலம் வெந்தயத்தூள் $\frac{1}{4}$ பலம் ஒன்றுசேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கிச் சிறுகரண்டியளவு குழந்தைகளுக்குக் கொடுத்துவரின் பதினெண்வகைக் கணங்களும் நீங்கும். தேகம் குளிரும் அழகும் மிளிரும்.

## வேறு.

சிற்றாமணக்கெண்ணெய் $2\frac{1}{2}$ சேர், மணத்தக்காளி வெங்காயரசம் வில்வயிலைச்சாறு வகைக்கு $2\frac{1}{2}$ பலம், வெந்தயக் கற்கம் $2\frac{1}{2}$ பலம் ஒன்றுசேர்த்துக் காய்ச்சிச் சிறுகரண்டியளவு கொடுக்கக் கணச்சூடு தணியும். தேகம் ஒளிரும்.

## வேறு.

விளக்கெண்ணெய் அரைப்படியும் வல்லாரைச்சாறு அரைப்படியும் வெந்தய கற்கம் ஒரு பலமும ஒன்றுகூட்டிக்



காய்ச்சிக் கரண்டியளவு கொடுத்துவரின் கணம் க்ஷணத்தில் நீங்கும். காய்ச்சிய எண்ணெயிற் பொரித்த நற்சீரகம் அரைப் பலமும் பனவெல்லம் 2 பலமும் பொடித்துப்போட்டு வடித்துக் கொடுப்பதே மேல். அதைச் சூரியோதயத்தில் தான் கொடுக்க வேண்டும்.

இம்முறை நல்லமுறையாகலான் இது வாய்நாற்றம் அஸ்திச்சூடு நாபிவிரணம் முதலியவற்றைப் போக்கும். அப்பியங்கன காலத்தும் க்ஷௌரகாலத்தும் இதை உபயோகிக்கக்கூடாது.

## வேறு.

வல்லாரையிலை மணித்தக்காளியிலை பொடுதலையிலை பொன்னாங்கண்ணி நல்லதுளசியிலை முடக்கற்றான்இலை இரட்டைப் பெருமட்டையிலை ஆடாதோடாயிலை, கையாந்தகரை இவைகளைத் தனித்தனி பிழிந்தெடுத்த சாறு வகைக்கு $\frac{1}{8}$ படி, இளநீர் வெங்காயச்சாறு கற்றாழைமடற்சோறு (குமரி) வகையொன்றுக்கு $\frac{1}{2}$ படி சிற்றாமணக்கெண்ணெய் படி 1. இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளுக. சாதிக்காய் சாதிபத்திரி ஏலரிசி வால்மிளகு வாய்விடங்கம் அதிமதுரம் அரிசிதிப்பிலி மிளகு சிறுலவங்கப் பட்டை உரித்தபூண்டு இவை வகை 1-க்கு 2 வராகனெடை ஆக பொன்வறுப்பாய் வறுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளுக. கல்லுப்பு சீமைக் கல்நார் வகைக்கு 2 வராகனெடை பொடித்துக் கொள்ளுக. பனங்கற்கண்டு 12 பலம் பொடித்துக்கொள்ளுக. இவ்விதம் சேர்த்துக்கொண்ட எல்லாப் பொடிகளையும் முன் தயாரித்துள்ள எண்ணெயிற் கலந்து மிசிரித்துக்கொண்டு $\frac{1}{4}$ மண்டலம் தானியபுடமிட்டு

¼ பல அளவு சிறுவர்களுக்குத் தாய்ப்பாலிலும் பெரியவர்களுக்கு இளநீரிலும் காலை வேளையில் கொடுத்தால் கணச்சூடு எட்டும் வெட்டைச்சூடு வகைகளும் அஸ்திசுரம் முதலியனவும் நீங்கும். கோழிமார்பு புறப்படலும் போம். பித்த சம்பந்த உஷ்ணரோய் யாவும் நீங்கும். 20 நாள் சாப்பிட வேண்டும்.

### கரப்பானுக்கு எண்ணெய்.

⅛ படி மேல்தோல் நீக்கிய வெள்ளைக் குன்றிமணிப் பருப்பைப் பசுப்பாலில் 1 நாள் ஊறவைத்துக் கழுவி பசும் பால் விட்டரைத்துப் பசுப்பாலிலேயே கரைத்து கழுவியாடிய ½ படி நல்லெண்ணெயிற் கலந்து காய்ச்சிப் பதத்தி லிறக்கிக் கடுகை நீக்காமல் வைத்துக்கொண்டு 3 நாள் காலை மாலை சிறுகரண்டியளவு உட்கொள்வதுடன் மேற்பூச்சும் பூசிவரின் கரப்பான் கருங்கரப்பான் செங்கரப்பான் மண்டைக் கரப்பான் கரப்பான்புண் முதலியன தீரும். ஆரம்ப கரப்பானுக்கு ஒருநாள் மருந்தே போதுமானது. பால்சாதம் கொள்ளவேண்டும். வறுத்த துவரை சேர்த்துக்கொள்ளலாம்

### குமரி.

கற்றாழைச்சாறு வெள்ளாட்டுப்பால் எண்ணெய் வகைக்கு 2 படி. திரிகடுகு திரிபலை சடாமாஞ்சில் கோஷ்டம் அதிமதுரம் சீரகம் ஏலம் இலவங்கப்பட்டை பச்சிலை கிச்சிலிக்கிழங்கு, பூலாப்பூ, இலவங்கப்பத்திரி செவ்வல்லிக் கிழங்கு ஓமம் கஸ்தூரிமஞ்சள் கிராம்பு சந்தனம், கடுகுரோகிணி சண்பகப்பூ ஆனைதிப்பிலி மந்திஷ்டி கொம்புமஞ்சள் வகைக்குப் பலம் ½. இவைகளைத் தைல முறைப்படிக் காய்ச்சி முழுகிவரின் உஷ்ண ரோகங்கள் எல்லாம் நீங்கும்.



### சுர நாச தைலம்.

அசுவகந்தி சதகுப்பை கோஷ்டம் மரமஞ்சள் கொம்பரக்கு சிற்றரத்தை கடுகுரோகணி அதிமதுரம் கோரைக் கிழங்கு கடுகு வகை 1-க்கு ¼ பலம் சேர்த்துக் கொண்ட பசுப்பால் கற்கத்தை 2 சேர் நல்லெண்ணெயுடன் காய்ச்சி முழுகிவந்தால் பல்வகைச் சுரங்களும் பறந்துபோம்.

### கொம்பரக்கு.

நடுவிலுள்ள குச்சுபோக்கிய கொம்பரக்கு இரண்டு சேரை எட்டுச் சேர் தண்ணீரிற் கலந்து 2 சேர் கஷாயமாகக் குறுக்கித் தயிர்த்தெளிவு சலம் சேர் எட்டோடு நல்லெண்ணெய் 2 சேரும் கலந்து பாத்திரம் மாற்றிப் பசுப்பாலால் அரைக்கப்பட்ட வகைக்கு 2 வராகனெடை அளவுள்ள மருளுங்கிழங்கு கோரைக்கிழங்கு தேவதாரு கடுகுரோகிணி அதிமதுரம் அசுவகந்தி அரத்தை பெருஞ்சீரகம் சந்தனத் தூள் கோஷ்டம் வால்மிளகு மஞ்சள் இவற்றின் கற்கத்தை 2 படி ஆவின்பாலோடு சேர்த்துக் கூட்டிக் காய்ச்சி முழுகி வந்தக்கால் சர்வ சுரங்களும் போகும். க்ஷய சம்பந்த சுரமும் எலும்புருக்கியுங் கூட சொஸ்தமாகும்.

### மிளகு.

2 படி எண்ணெயில் ½ படி மிளகு ¼ படி ஏலம் இவைகளைப்பொடித்துக் கொட்டி ½ வராகனெடை அளவுள்ள பூரத்தையும் அந்த அளவுள்ள கந்தகத்தையும் பொடித்து டோலாந்த்ரமாகக் கட்டியழுத்திச் சூரியபுடமிட்டு முழுகிவர நேத்திர சம்பந்த நோய் அகல்வதுடன் பீனசமும் போகும். மேக காங்கை அசதி இவையும் போம்.

## கீழ்க்காய் நெல்லி.

2 படி எண்ணெயில், 4 மரக்கால் சலத்தில் இடித்து போடப்பட்டு எட்டொன்ருய்க் காய்ச்சப்பட்ட 1 தூக்கு கீழாநெல்லிச் சமூலங்கலந்த கஷாயத்தைக் கூட்டிப் பசுப் பாலாலாட்டப் பட்ட 1 பலம் கடுக்காய்த் தோல் 1 பலம் வேப்பம் பிசின் கற்கத்தையும் 5 பலம் சர்க்கரையும் கலந்து காய்ச்சி முழுகி வந்தால் பித்தசம்பந்த நேத்திரரோகம் யாவும் குணமாகும். நேத்திரம் பிரகாசிக்கும்.

## சந்தனம்.

மிகவும் மென்மையாக இழைக்கப்பெற்ற 1 சேர் சந் தனத்தூளைப் பாண்டத்திட்டு 16 சேர் சலம்விட்டு 3 நாள் ஊறவைத்துக் கமலாக்கினியாய் எரித்து 2 சேர்கஷாயமாக வடித்து 5 சேர் நல்லெண்ணெயைக் கலந்து மூடிவைத்து, எஞ்சிய சந்தனச் சேற்றில் மீண்டும் பத்துச்சேர் தண்ணீர் விட்டுக்காய்ச்சி ஒருசேராக்கி மேற்கண்ட தைலத்தில் கலந்து மணம் போகாதபடி நன்குமூடி, விலாமிச்சைவேர் நன்னாரி வேர் கோரைக்கிழங்கு அதிமதூரம் ஏலம் இலந்தைமரப் பட்டை தண்ணீர்விட்டான் கிழங்கு காரகில் இவை வகைக் கொரு பலமாக நன்கிடித்து வேறுபாண்டத்திட்டு 16 சேர் ஜலம்விட்டு ஒரு நாளூறவைத்து 2 நாளெரித்து 2 சேர் கஷாயமாக்கித் தைல கலசத்தில் கலந்துமூடி, இருவகை இலவங்கப்பட்டைகள் தாளிசபத்திரி லவங்கப் பத்திரி கிராம்பு பூஞ்சாந்துப்பட்டை கிளியூரல்பட்டை தேவதாரு அரத்தை அசுவகந்தி விலாமிச்சு மரமஞ்சள் சாதிக்காய் நன் னாரிவேர் அகரு இவைவகை 1 க்கு 1 வராகனெடை ஆகவும் ஏலம் சடாமாஞ்சில் கோஷ்டம் அதிமதூரம் சண்பகமொட்டு



கஸ்தூரி மஞ்சள் சதகுப்பை வகை 1 க்கு $1\frac{1}{2}$ வராகனெடை ஆகவும் சோம்பு கௌளா வகைக்கு 2 வராகனெடையாகவும் மச்சோலம் கோரைக்கிழங்கு வெட்டிவேர் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையாகவும் மகிழம்பூ, மருமுதலிய மண வஸ்துக் கள் வேண்டிய அளவும் பசும்பால் விட்டரைத்துத் தைலத் திட்டு, 4 சேர் ஆவின்பாலும் கலந்துகொண்டு (கோடை காலத்துக்கு உபயோகிக்க வேண்டுமானல் 2 சேர் தயிர்த் தெளிவும் [தயிர்மஸ்து] கலந்துகொண்டு) பக்குவமாய்க் காய்ச்சிப் பாத்திரம் மாற்றித் தெளியவைத்து ஆறின பின் வேண்டுமளவு புனுகு சவ்வாது முதலியவாசனை வருக்கங் களையும் கலந்துவைத்து முழுகிவந்தால் பிரமேகவகை இரு மல் பித்தநோய் முதலியனயாவும் தீர்ந்துதேகம் குளிர்ச்சி யாய் இருக்கும். நேத்திரம் பிரகாசம் மிகும்.

## ஆமலகம்.

முதிர்ந்த நெல்லிக்காய்ச் சாறுபடி 8. பொன்னங் கண்ணி கற்றாழை செவ்விளநீர் சிறுகீரை முசுமுசுக்கை கையாந்தகரை பசுப்பால் இவைவகைக்கு 2 படி நல்லெண் ணெய் 4 படி ஒன்றுகலந்து, வகைக்கு $12\frac{1}{2}$ பலம் வீதம் இடிக்கப்பெற்ற வெட்டிவேர் விளாமிச்சை வேர் வில்வவேர் கீழ்க்காய் நெல்லி அறுகம்வேர் நன்னாரிவேர் முதலியவற்றை 6 மரக்கால் நீரிவிட்டு 2 படியாக வற்றக்காய்ச்சி வடிக்கப் பெற்ற கஷாயத்தில் வகைக்கு $\frac{1}{2}$ பலமாக எடுத்துக்கொண்ட சண்பகப்பூ தாளிசபத்திரி கருஞ்சீரகம் அதிமதூரம் கோஷ் டம் ஏலம் குரோசாணி ஓமம் பச்சைப்பூலாக்கிழங்கு கஸ் தூரி மஞ்சள் சடாமாஞ்சில் மூத்தக்காசு சீரகம் மல்லி சாதிக் காய் சாதிபத்திரி லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி சுக்கு

மிளகு திப்பிலி கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல் பூஞ்சாந்துப்பட்டை சோம்பு வால்மிளகு சந்தனம் (மந்திஷ்டி) மந்திட்டி சிறுநாவற்பூ சதகுப்பை அமுக்கிறுக்கிழங்கு முதலியவற்றை அரைத்துத் தைலகடத்திட்டுப் பக்குவத்தில் இறக்கி முழுகிவந்தாற் கண்ணெரிச்சல் அந்திமாலை நேத்திரகாசம் சாளேசரம் பித்தவெட்டை பித்தவாயு பிரமியம் உடம்பெரிச்சல் கைகால் காந்தல் உஷ்ணநோய்கள் மேகவெட்டை வாயூறல் ஒக்காளம் முதலான பிணிகள் யாவும் நீங்கும். அன்றியும் நேத்திரரோகம் 96ம் தீரும்.

## விலாமிச்சு.

விலாமிச்சை வேர் சந்தனம் ஆவாரம்பட்டை இவை வகைக்கு அவ்வைந்துபலம் இடித்து குறுணி நீரிட்டு $\frac{1}{2}$ படியாகக் குறுக்கி நல்லெண்ணெய் சமனெடை சேர்த்து நன்னாரி வேர்ப்பட்டை 1 பலம் பசுப்பாலால் அரைத்துச்சேர்த்துக்காய்ச்சி முழுகிவந்தால் மேக சம்பந்தநோய் எல்லாம் நீங்கும்.

## கூந்தல் வளரும் தைலம்.

ஒருபடி வெண்ணெயை வகைக்கிரண்டு படியாகச்சேர்த்த எருமைப்பால் நெல்லிக்காய்ச்சாறு இவற்றோடு காய்ச்சி முழுகிவந்தால் தலைமயிர் நன்குவளரும். அழகுண்டாகும்.

## பீநச நிவாரண தைலம்.

நல்லெண்ணெய் கரிசலாங்கண்ணிச்சாறு நெல்லிக்காய்ச்சாறு இவைவகைக்கு ஒவ்வொருபடி ஒன்று கலந்து, கையாந்தகரைச் சாற்றாலாட்டிய 3 பல அதிமதுரச் சாந்தினை



யும் சேர்த்துக் காய்ச்சி வாரமிருமுறை முழுகிவந்தால் பீனசம்போம். காசு எடை நசியம் இடுவாரும் உளர்.

## பிரதர (பெரும்பாடு) நிவாரண தைலம்

நல்லெண்ணெய் நாவற்பட்டை ஓதியம்பட்டை அத்திப்பட்டை நெல்லிக்காய் கரும்பு வகைச்சாறு ஆவின்பால் ஆவின்நெய் முதலியன தனித்தனி $\frac{3}{4}$ படி சேர்த்து ஒன்றாக்கித் தாளிசபத்திரி சாதிக்காய் ஏலம் கிராம்பு பேராத்தை அதிமதுரம் நிலப்பனங்கிழங்கு வகைக்கொருபலமாகத் தேங்காய்ப் பாலிட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சிக்காலையில் 1 கரண்டிவீதம் உட்கொண்டால் பெரும்பாடு இரத்தபாடு நீர்ச்சுருக்கு பிரமியம் நீர்க்கட்டு சதையடைப்பு முதலியன நீங்கும். வறுத்த உப்பு பால் தயிர் இவைசேர்த்துக் கொள்ளலாம்.

## இரண நிவாரண தைலம்.

சங்கவேர் பூவரசம்பட்டை சிவனார்வேம்பு வாலுளுவை வகைக்கு ஒருவீசைசேர்த்து குழித்தைலமிட்டு உள்ளுக்கும் மேலுக்கும் பணவெடை உபயோகித்துவந்தால் சகல விரணங்களும் நீங்கும்.

## ஆதண்டைத் தைலம்.

ஆதண்டை வேர் எருக்குவேர் வெண்ணொச்சி வேர் சிற்றாமுட்டிவேர் சங்கவேர் இவை வகையொன்றுக்கு 10 பலம் இடித்து 16 படி நீரிலிட்டு 2 படியாகக்குறுக்கிய கஷாயத்தில் எருக்கம் பழுப்புச்சாறு எண்ணெய் வகைக்கு $2\frac{1}{2}$ சேரும் வேப்பெண்ணெய் $1\frac{1}{4}$ சேரும் பழச்சாறு 1 படியும் கலந்து சுத்தியான திரிகடுகு மஞ்சள் வசம்பு வெள்

ளுள்ளி ஓமம் ஏலம் இவை வகைக்கொரு பலம் அரைத்துச் சேர்த்துச் சிறுதீயாக எரித்து இறக்கிவியாதி நோக்கத்திற் கேற்றபடி முழுகிவந்தால் மண்டைக்குத்தல் மண்டையிடி கரப்பான் காதுமந்தம் பீநசம் சூலேவகை வாதரோகவகை முதலியன யாவும் தீரும்.

### தேங்காய்.

பொட்டிலுப்பு கல்லுப்பு இந்துப்பு வளையல்உப்பு சோற்றுப்பு காயம் வகைக்குப்பலம் ¼ பூண்டு பலம் 2. சுத்தியான வாளம் பலம் 1 தேங்காய் 5. இவைகளில் தேங்காயைத் துருவி பாலெடுத்து அப்பாலால் மேற்கண்ட வகைகளை அரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி இறக்கிக் கொள்ளுக. பால், நீராகாரம், காபி, தேத்தண்ணீர் இவைகளில் 10 சொட்டுக் கொடுக்கப் பிரவிருத்தியாகும். புளிரசச் சோறு கொள்ளுக.

### பீஜ வாதரோக நிவாரண தைலம்

தக்காளிச்சாறு விளக்கெண்ணெய் தழுதாழைச் சாறு வகைகளில் முதலிரு சரக்குகளை ஒவ்வொருபடியாகவும் பின்னுள சரக்கை அரைப்படியாகவும் சேர்த்து வெந்தயம் சீரகம் அவ்வைந்துபலம் கூட்டியரைத்துக் கூட்டிக் காய்ச்சிக் கரண்டிவீதம் கொள்ளப் பீஜரோகம் தீரும். வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### காங்கை நிவாரண தைலம்.

தேங்காய்ப்பால் ஈருள்ளி விளக்கெண்ணெய் பசுப்பால் வகைக்கு ஒவ்வொருபடியும் ஒருபலம் தென்னவெல்லமும் சேர்த்து எரித்துக் கற்கபதத்தில் இறக்கி ஒருகரண்டி வீதம்



1 வாரம் உட்கொள்ளத் தேககாங்கை கைகால் காந்தல் வயிற்றெரிவு இருமல் அஸ்திகாங்கை பிரமியம் முதலியனயாவும் சுகமாகிச் சரீரம் புஷ்டியாயிருக்கும். ஆரோக்கியம் உண்டு. நன்மையுண்டு.

## இலேகிய இனம்.

### ஆமலகம்.

பசுப்பாற் காய்ச்சும் பானையில் முற்றிய நெல்லிக்காய் இரண்டுபடியும் ஒருசேர் சீரகமும் தேன் நான்குசேரும் ஐந்துசேர் சீனிச்சருக்கரையும் ஒன்றுசேர்த்து வாயை ஓடுமூடி சீலைசெய்து சுத்தமானபூமியில் ஒருமண்டலம் புதைத்து வைத்திருந்து பின்னரெடுத்து ஒரு மண்டலம் இருவேளையும் உண்டுவந்தால் பித்தச்சூடு தணியும். போகம் ஆகாது. ஆரோக்கிம் உண்டாகும்.

### கண்டங் கத்திரி.

நாற்பது பலம் உலர்ந்த கண்டங்கத்திரிச் சமூலத்தை 8 படி சலத்திலிட்டு ஒருபடியாகச் சுண்டக் காய்ச்சிய நீரில் 1 படி பாலும் 20 பலம் பனவெல்லமும் சேர்த்துப் பாகாக்கிக் கொள்வதுடன் வகைக்கொரு பலமாக இளம் வறுவலில் எடுத்திடித்துக் கொண்ட சுக்கு மிளகு திப்பிலி தான்றிக்காய் மாசக்காய் கடுக்காய் வாய்விடங்கம் ஓமம், குரோசானி ஓமம் லவங்கப்பட்டை சீரகம் மோடித்திப்பிலி கோஷ்டம் தாளிசபத்திரி அக்கிராகாரம் முதலியவற்றின் சூரணங்களையும் கலந்துகொண்டு பசுநெய் தேன் இவை பப்பத்துப் பலம் கலந்து மெழுகுபதத்தி லிறக்கிக் கொட்டைப்பாக்களவு இருவேளையும் 10, 20 நாட்கள் உண்டுவரின் கழல்வாதம் பக்க

சூலை கிருமி நாகப்பூச்சி இவற்றின் தொந்தரை, கருப்பவாயு, இருமல் சுவாசம் கபம் பித்தம் உஷ்ணம் இவை தீரும்.

திரிகடுகு.

பசுப்பால் 2 படியும் பனவெல்லம் பத்துப் பலமும் கலந்த பாகில் இளம்வறுவலில் சூரணிக்கப்பட்ட தனித்தனி ஒவ்வொரு பல வெடையுள்ள சுக்கு மிளகு திப்பிலி சீரகம் ஏலம் முதலியவைகளைக் கொட்டிக் கிண்டிக்கொண்டே வந்து பதம் முடியும் சமயம் தேன் நெய் பப்பத்துப் பலமும் கலந்து ஆக்கிக்கொண்ட லேகியத்தைக் கழற்சிக்காயளவு 10 நாள் சாப்பிட்டுவர வாயுவகை உஷ்ணம் எரிவு வயிற்றுப் பொருமல் அஸ்தி சுரம் அத்திவெட்டை வாந்தி ஆசனக் கடுப்பு, சர்வாங்க நோய் முதலியன நீங்கும்

மாதுளம்பழம்.

புளிமாதளை புளிநாரத்தை எலுமிச்சை இஞ்சி இவைகளின் ரசம் தனித்தனி படி $\frac{1}{8}$ பசுப்பால் படி $\frac{1}{2}$ பத்துப்பலம் சீனி இவை சேர்ந்த பாகில் வஸ்திரகாயம் செய்த சுக்கு பறங்கிச்சக்கை சீரகம் ஏலம் வெள்ளைமிளகு சன்னராஷ்டகம் இவற்றின் தூள் வகைக்கொருபலம் சேர்த்துக் கிண்டி இறக்கிக்கொண்ட லேகியத்தில் காலை மாலை கழற்சிக்காய்ப் பரிமாணம் $\frac{1}{2}$ மண்டலங் கொள்ள வாந்தி மயக்கம் பித்தம் பித்தவாயு மார்புநோய், வயிற்றுப்பசம் உஷ்ணபேதி முதலியன நீங்கும். பத்தியமே இல்லை. இம்மருந்தில் தேனும் நெய்யும் கலப்பே இல்லை.

பூசுணிக்காய்.

(சாம்பல்) கல்யாணப் பூசுணைக்காய்ச் சாறு, பசும்பால் தனித்தனி 2 படியாகச் சேர்த்துத் தனித்தனி எட்டெட்டுப்



பலம் சர்க்கரையும் நெல்லிமுள்ளிச் சூரணமும் உடன்கலந்து கிளறி லேகியமாக்கிக்கொண்டு $\frac{1}{2}$ பலம் வீதம் உபயோகிக்கக் காமாலை, தாகம், தாபம், எரிச்சல், அமலபித்தம் ரத்தபித்தம் இவை தீரும். சர்க்கரையை அதிகப்படுத்திக்கொண்டு தேனும் நெய்யும் சேர்த்துக் கொள்ளுவாரு முண்டு.

வேறு.

ஆவின்பால் பூசனிக்காய்ச்சாறுவகைக்கிரண்டுபடியுடன் பன்னிரண்டுபலம் சர்க்கரையும் சேர்த்துப் பாகுபெறும் சமயம் வஸ்திரகாயம்செய்த 1 சேர் நெல்லிமுள்ளிச் சூரணமும் கலந்து 6 பலம்நெய்பெய்து ஆற்றி இரண்டுபலம் தேன் சேர்த்துப் பாக்களவு இருவேளைகொள்ள இரத்த சம்பந்த பித்தம், காமாலை அதிதாகம், தாபம், வயிற்றெரிவு முதலியன தீரும். தேகதிட முண்டாகும்.

வேறு.

நன்கு முதிர்ந்த காயைத் தேங்காய்த் துருவல்போல் துருவிப் பிழிந்த சாற்றில் 50 பலம் சீனுக்கற்கண்டு சேர்த்துப் பாகு சமயத்தில் சுக்கு சீரகம் அரிசிதிப்பிலி வகைக்கு 1 பலமும் லவங்கபத்திரி பட்டை சிறுநாகப்பூ மிளகு மல்லி வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதமும் பொடித்துக்கொட்டி, முன் தயாரித்துள்ள 50 பலம் பூசுணைக்காய்த் துருவலையும் நெய்யிற் கொட்டி நீர்சுண்ட வதக்கிச் சேர்த்துக்கொண்டு $1\frac{1}{4}$ சேர் நெய்யும் 2 பலம் தேனும் பெய்து கழற்சிக்காய்ப் பரிமாணம் காலை மாலை உட்கொள்ள சரீர இளைப்பு தாகம் தாபம் பிரமியம் கைகால் எரிவு இருமல் வாந்தி வறட்சி எலும்புருக்கி நோய் பிரதரம் மேக காங்கை மூலச்சூடு இவை நீங்கும். தேகம் புஷ்டிக்கும். (பிரதரம்—பெரும்பாடு.)

## வில்வம்.

நன்கு இழைக்கப்பட்ட பத்துப்பலம் வில்வவேர்த் தூளை 20 சேர் சலத்தில் 2 நாள் ஊறவைத்து $2\frac{1}{2}$ சேர் கஷாயமாகக் குறுக்கிச் சுண்ணும்பு நீக்கிய இஞ்சிரசம் ஒரு சேரும் இரண்டு சேர் சீனியும் சேர்த்துக் காய்ச்சுக. லேகிய பதத்தில் சுக்கு மிளகு திப்பிலி திரிபலை (தனித்தனி)பட்டை பத்திரி ஏலம் தாளிசபத்திரி, சடாமாஞ்சில், கிராம்பு கோஷ்டம் அதிமதுரம், சீரகம் ஓமம் வாய்விளங்கம் கோரைக் கிழங்கு கொத்துமல்லிவிதை, கொடிமுந்திரிப்பழம், பேரீச்சங்காய் ஆகிய 21 சரக்குகளின் தனித்தனி 4 விராகனெடை சூரணங்களைக் கலந்து கிண்டிக்கொள்க. ஆறியபின் $\frac{1}{4}$ சேர் தேனைப் பெய்து திரட்டிக்கொண்டு அக்கினிமந்தம் அரோசகம் இருமல் அஸ்திசுரம் பித்தவாதம் பேதி பித்தசூலை இவை நீங்கப் பாக்குப் பிரமாணம் இரு வேளையும் கொள்ளுவார்களும் உண்டு. லேகியத்தைப் பாத்திரத்திற் சேர்த்துக் கொண்டபின் வாய்மூடி 10 நாள் தானியபுடம் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

### வேறு.

வில்வவேர் மேற்படி பழச் சத்து திராட்சை அதிமதுரம் வகைக்குப் பப்பத்துப்பலம் சேர்த்து இடித்து 4 படி சலத்திலிட்டு நாலிலொன்றாய்க்காய்ச்சிச் சீனிக்கற்கண்டு 30 பலம் கூட்டிப் பதமான சமயத்தில் வஸ்திரகாயம்செய்த அதிமதுரம் ஏலக்காய் சிற்றரத்தை லவங்கப்பட்டை லவங்கபத்திரி மஞ்சிட்டி வெண்சந்தனம், இரத்தசந்தனம் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் பேரீச்சங்காய் நன்னாரி வேர் சிறுதேக்கு இலவம்பிசின் தக்கோலம் விலா



மிச்சைவேர் வெட்டிவேர் மல்லி சிறுநாகப்பூ கிராம்பு சாதிக்காய் (முழுதிராட்சை) அரைத்ததிராட்சை இவை வகைக்கு ஒருபலம் சேர்த்துக்கிண்டி நெய்பலம் 20-ம், தேன்பலம் 10-ம் பெய்து இலேகியமாக்கிக்கொண்டு காலைமாலை உட்கொள்ள அதிக தாகம் வறட்சி நீர்க்கடுப்பு ஆயாசம் மேகரோகங்கள் நீர்ப்போக்கு சுவாசரோகம் க்ஷயம் காசம் மூர்ச்சை பெரும்பாடு ஆறுவிரணம் முதலியனயாவும் சுகமாகும்.

### வேறு.

வில்வவேர் பத்துப்பலத்தை 4 படி சலத்திலிட்டு எடுத்துக்கொண்ட ஒருபடி கஷாயத்தில் சுண்ணும்பு நீக்கிய இஞ்சிரசம், பழரசம், புளிப்பு மாதளம்பழரசம். வகைக்கு 1 சேர், நாணற் கரும்புவெல்லம் 2 சேர் இவைகளைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதங்கண்டு வஸ்திரகாயம் செய்துள்ள ஏலம் கிராம்பு லவங்கப்பட்டை சுக்கு மிளகு திப்பிலி சிறுநாகப்பூ அதிமதுரம் கோஷ்டம் செவ்வியம் பேரரத்தை தாளிசபத்திரி அக்கிராகாரம் ஜாதிக்காய் ஜாதிபத்திரி சிற்றரத்தை வகை 1 க்கு $2\frac{1}{2}$ விடை ஆக கூட்டிச்சேர்த்துக் கிண்டிக்கிளறி நெய் தேன்முதலின கலந்துகொண்டு காலைமாலை சுண்டைக்காய்ப்பிரமாணம் பிரசவித்த ஸ்திரீகளுக்குக்கொடுக்க வாந்தி மயக்கம் வயிற்றுப்போக்கு கிறுகிறுப்பு முதலியன தீரும். இச்சாபத்தியம்.

## நிலப்பனங் கிழங்கு.

தண்ணீர் விட்டான்கிழங்கு, அதிமதுரம், நெருஞ்சில் வித்து, பூனைக்காலிவித்து, முள்ளிலவம் பிசின், சர்க்கரை, தேன், நிலப்பனங்கிழங்கு இவை சமநிறை சேர்த்து முறைப்

படி லேகியம்செய்துகொண்டு நாள் 1 க்கு இருமுறை கொண்டால் தாது விருத்தியும் தேகபலமுமுண்டாகும்.

## முருங்கைப்பூ.

முருங்கைப்பூ படி 1. பசும்பால் படி $\frac{1}{2}$, இளநீர்படி $\frac{1}{2}$, பருத்திக்கொட்டைப் பால்படி $\frac{1}{2}$, ஒன்று சேர்த்துச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி சிறு தீயாயெரித்துப் பூக்குழைந்து பக்குவமாகும் சமயங்கண்டு நன்கு பிசைந்து வடித்துக் கொண்ட நீரில் 15 பலம் சர்க்கரையும் சேர்த்துப் பாகுபதமாகும் சமயம் வஸ்திரகாயம்செய்த சாதிக்காய் மராட்டிமொக்கு கிராம்பு லவங்கப்பட்டை சுக்கு சீரகம் வால்மிளகு மிளகு கசகசா ஏலரிசி தேற்றான்கொட்டை பூனைக்காலி வித்து பூமிசர்க்கரைக்கிழங்கு நிலப்பனங்கிழங்கு இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனிடை சேர்த்துக் கிண்டிக்கிளறி தேன் நெய் இவைகளும் முன்பின்னாக வகைக்கிரண்டரைப் பலம் விட்டுப்பிசைந்து கொண்டு மேற்கண்ட அளவுகொள்ள உஷ்ணம்போம். தாதுபுஷ்டி உண்டாகும். புஷ்டி தரத்தக்க ஆகாரம் கொள்ளவேண்டும்.

## முருங்கைப் பிசின்.

தேங்காய்ப்பால்படி $\frac{3}{4}$ பன்னீர்படி $\frac{1}{2}$ சர்க்கரைபலம் 30 சேர்த்துக் கரைத்துவடித்து அடுப்பேற்றிப்பாகு சமயத்தில் முருங்கைப்பிசின் 2 பலம் சாதிக்காய் ஏலம் லவங்கம் லவங்கப்பட்டை மராட்டிமொக்கு வகைக்கு 1 பலம், இலவம்பிசின் கசகசா வகைக்கு 2 பலம் சூரணித்துக் கொட்டிக் கிளறி நெய் பலம் 16-ம், கோதுமை நொய் 15 பலமும் கலந்து கொண்டு வேக்காடும் பதமும் கண்டு நறுந்தேன் 6



பலம் பெய்து புன்னைக்காய் வீதம் காலைமாலை உட்கொள்ள அக்கினிமந்தம் சொறி மேககாங்கை பித்தசூடு நாபிரணம் முதலியன நீங்கும்

## நெருஞ்சில்.

50 பலம் நெருஞ்சிற் சமூலத்தை நையநறுக்கிப் பத்துப் படி சலத்திலிட்டு காலொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு 3 சேர் சர்க்கரை சேர்த்துப் பாகுசெய்து பதங்கண்டு வஸ்திரகாயம் செய்த சுக்கு மிளகு திப்பிலி இலவங்கப்பட்டை, பத்திரி, சிறுநாகப்பூ ஏலம் மருதம்பட்டை ஜாதிக்காய் வெள்ளரிவிதை வகைக்கு ஒரு பலமும் மூங்கிலுப்பு 3 பலமும் சூரணித்துக் கொட்டிக் கிளறி நெய்யும் தேவையானல் தேனும் சேர்த்துக்கொண்டு நீரடைப்பு பிரமியம், நீர்க்கடுப்பு மேகரோகம் உஷ்ணரோகம் முதலியன நீங்க காலை மாலை உட்கொள்ளுவார்களும் உண்டு.

## திராக்ஷை.

பன்னிரண்டு பலம் திராட்சையை நன்கரைத்து 30 பலம் சீனக்கற்கண்டு பாகிலிட்டுச் சூரணித்த இலவங்கபட்டை பத்திரி ஏலம், சிறுநாகப்பூ திப்பிலி சந்தனத்தூள் சாதிக்காய் அதிமதுரம் நன்னாரிவேர் பேரீச்சங்காய் நெற்பொரி வெட்டிவேர் நெல்லிமுள்ளி கோரைக்கிழங்கு விலாமிச்சைவேர் மூங்கிலுப்பு வகைக்கொருபலம் இடித்துக் கொட்டி 2 சேர் நெய்யும் 5 பலம் தேனும் சேர்த்துக் காலை மாலை கழற்சிக்காய்ப் பரிமாணம் கொள்ள அசீரணம் பித்த வாயு இருமல் மார்புவலி இவை நீங்கித் தேகம் திடமுறும்.

## சிவகரந்தை.

நிழலில் உலர்த்தி யிடித்தெடுத்துக்கொண்ட வஸ்திர காய 7 பல சிவகரந்தைத் தூளோடு கடுக்காய் தான்றிக்காய் நெல்லிமுள்ளி ஏலம் வாலுளுவை கருஞ்சீரகம் கார்ப்போக வரிசி வகைச் சூரணம் வகைக்கு அவ்வைந்து வராகனெடை சேர்த்து $2\frac{3}{4}$ சேர் நாணற்கரும்புப் பாகிலிட்டு 5 பலம் நெய்யும் 2 பலம் தேனும் கலந்துகொண்டு கழற்சிக்காய்ப் பரிமாணம் சாப்பிட்டுவர தோலைப்பற்றிய நோய்கள் யாவும் நீங்குவதோடு அசுத்தரத்த நோய்களும் நிவர்த்தியாகும். நேத்திர ரோகங்களும் நீங்கும்.

## அசுவகந்தி.

பொன் வறுவலில் இடித்தெடுத்துக் கொண்ட சுக்கு மிளகு திப்பிலி அரத்தை கண்டதிப்பிலி சீரகம் லவங்கப் பட்டை ஏலம் லவங்கபத்திரி தாளிசபத்திரி கிராம்பு சிறு நாகப்பூ கொடிமுந்திரி பேரீச்சம்பழம் இவைகளின் வஸ் திரகாயச் சூரணம் வகைக்கு 1 பலமும், நரம்பு நீக்கிய கண்டங்கத்தரி வேர்ப்பட்டை 1 பலமும் அமுக்கராக் கிழங்கு 20 பலமும், உள்வேர் நீக்கிய தூதுவளை வேர்ப்பட்டை 1 பலமும் பக்குவப்படி சேர்த்துப் பத்துப்பலம் சீனியும் 1 சேர் பசுப்பாலும் சேர்ந்த பாகில் கொட்டிக்கிளறி நெய் தேன் இவை எட்டெட்டுப்பலம் சேர்த்துப்பிசைந்துகொண்டு காலை மாலை பாக்குப்பரிமாணம் ஒருமண்டலம் சாப்பிட சகல விதமான இருமலும் அக்கினி மந்தமும் தீரும். இச்சா பததியம்.

## அதிமதுரம்.

அதிமதுரம் நெருஞ்சில் முள்ளிலவம் பிசின் நிலப்பனங் கிழங்கு பூனைக்காலிவித்து தண்ணீர்விட்டான் கிழங்கு சர்க்கரை தேன் சமன் சேர்த்து லேகியமாக்கிக் கொண்டு உட்கொள்ள அபார தாதுபுஷ்டி உண்டாகும்.



## நெல்லிக்காய்.

பூணில்லா உலக்கையால் இடித்துப் பிழிந்த நெல்லிக் காய் இரசம் 4 படியுடன் சீனிச்சருக்கரை 25 பலம் சேர்த்துப் பாகுசெய்து அப்பாகில் அரிசிதிப்பிலிச் சூரணம் எட்டுப்பலமும் அதிமதுரம் சுக்கு மூங்கிலுப்புவகைக்கு ஒவ் வொருபலமும் திராட்சைப்பழக்கற்கம் எட்டுப்பலமும் சேர்த்து நெய்யிட்டு லேகியமாக்கிக்கொண்டு தானிய புடமிட்டுக் கொட்டைப் பாக்களவு காலை மாலை உட்கொள்ள காமாலை எரிச்சல் அதியுஷ்ணம் பாண்டு பித்தவெட்டை தாபம் தாகம் பித்தவிகாரம் முதலியன நீங்கும்.

## ஈந்து.

பேரீச்சங்காய் நெற்பொரி மூங்கிலுப்பு திராட்சை திப்பிலி இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகைக்கு 2 பலம்சேர்த்து 2 சேர் சீனிப்பாகில் கலந்து கிண்டி 4 பலம் நெய்யும் 2 பலம் தேனும் பெய்துகொண்டு உண்டுவர எல்லாவகைப் பித்தரோகங்களும் இருமலும் தீரும்.

## கண்டங்கத்திரி.

வகைக்குக் காற்படி வீதங் சேகரித்துக் கொண்ட கண்டங்கத்திரி தூதுவளை மணித்தக்காளி சங்கிலை ஆடாதோடை. இவற்றின் சாறுகளோடு ஐந்து பலம் சீனி கலந்து காய்ச்சிய பாகில் சுக்கு அரத்தை திப்பிலி இவற்றின் வஸ்திரகாயச் சூரணங்களை வகைக்கு $1\frac{1}{4}$ பலம் சேர்த்து 3 பலம் நெய்விட்

டுக் கிளறிக்கொண்ட லேகியத்தைக் காலே மாலே உபயோகிக்கக் கபநோய் விலகும். பசி எடுக்கும்.

## திரிகடுகு.

திரிகடுகு வகை திரிபலேவகை சீரகம் கொடிவேலி பேதிக்கிழங்கு இவை சமநிறைச்சூரணமும் இவைகளுக்குச் சமவெடை பனவெல்லமும் சேர்த்து லேகியம்செய்து கொண்டு சாப்பிட்டுவர சுகபேதி உண்டாகும். அன்றியும் பித்த சாந்தியும் பசிதீபனமும் சூலே சம்பந்த நோய்களும் நீங்கும்.

## மதன காமேசுவரம்.

24 பலம் சர்க்கரையை 1 படி பாலிலிட்டுப் பாகாக்கி அப்பாகில் நன்கு வஸ்திரகாயஞ் செய்துகொண்ட சுக்கு அதிமதுரம் கிராம்பு பெருஞ்சீரகம் மிளகு நீர்முள்ளிவிரை, வால்மிளகு ஆனைதிப்பிலி அரிசிதிப்பிலி, பூனைக்காலிவிரை மல்லி தாளிசபத்திரி கோஷ்டம் கருஞ்சீரகம் லவங்கபத்திரி நிலப்பனங்கிழங்கு மதன காமேசுவரப்பூ தக்கோலம் திராட்சை உழுந்து கடுக்காய் தான்றிக்காய் நெல்லிமுள்ளி சிறுநாகப்பூ கசகசா ஏலம் சாதிக்காய் சாதிபத்திரி கஸ்தூரி மஞ்சள் இலவம்பிசின் சண்பகப்பூ லவங்கப்பட்டை அசுவகந்தி முதலியவற்றின் சூரணங்களை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதம் கொட்டிக்கிண்டி லேகியபக்குவத்தில் $\frac{1}{2}$ பலம் சுத்தமான கஞ்சாவை $\frac{1}{2}$ படி பாலிலும் $\frac{1}{2}$ நீரிலும் ஊறப்பண்ணிக் காய்ச்சிப் பிழிந்தெடுத்துக் கொண்டபாலில் 1 சேர் நெய்யைவிட்டுக் காய்ச்சிச் சொரசொரப் படங்கியவுடன் கலந்துகொண்டு வேண்டுமளவு தேன் பெய்தெடுத்துக் கொண்டு உபயோகிக்க



ளை இருமல் அக்கினி மந்தம் சூலேமுதலியன நீங்கி தாது புஷ்டியும் தேகதிடமும் தேககாந்தியும் உண்டாகும். புஷ்டியான ஆகாரம் கொள்ளுக.

## தூதுளை.

தூதுவளையின்பூ முருங்கைப்பூ இவைவகைக்கு 4 பலமும் சதாவேரிக்கிழங்கு ஒருபலமும் நன்கு சூரணித்து நான்குபடி ஆவின்பாலிற் கலந்து காய்ச்சித்திரண்டு வரும் சமயத்தில் 12 பலம் சீனிசேர்த்து லேகியபக்குவத்தில் $\frac{1}{2}$ படிநெய்யும் $\frac{1}{4}$ படிதேனும்சேர்த்துத்தான்றிக்காய்ப் பரிமாணம் உட்கொள்ள நீண்டநாட் பிரமியம் என்புருக்கிப் பிரமியம் முதலியனதீரும். சௌக்கியம் உண்டாகும். பலமுண்டு.

## வெள்ளுள்ளி.

அரைப்படி ஆவின்பாலில் 5 பலம் உரித்தவெள்ளைப் பூண்டையும் $\frac{1}{2}$ பலம் காயத்தையும்போட்டு அடுப்பேற்றிக் கிண்டிப்பதம் கண்டு சீனிமுதலியன சேர்த்துக்கிளறி லேகியமாக்கிக்கொண்டு அளவின்படி உபயோகித்து வந்தால் வயிற்றுப்பொருமலும் வயிற்றுவலியும் தீரும்.

## சீரகம்.

ஆவின்பால் அரைப்படியும் சர்க்கரை ஒருசேரும் அமைந்த பாகில் வஸ்திரகாயம்செய்து வகைக்கிரு பலநிறையுள்ள ஆவாரைவிதை மிளகு சீரகம் இவற்றின் சூரணங்களைக் கொட்டிக்கிண்டி நெய்யும்தேனும் பெய்து பதத்திலிறக்கிப் பாக்களவு இருவேளையும் கொள்ள (மூச்சுவிடமுடியாத) அதிக கஷ்டமான இருமல் குணமாகும்.

## வேந்தயம்.

வேண்டிய அளவு சுத்தமான வெந்தயத்தை அதுமுழுக ஜலம்விட்டுக் கொதிக்க வைத்துவிதை வெந்தவுடனே நீரை வடித்துவிடுக. இம்மாதிரி ஐந்துமுறை செய்க. பின்னர் அவ்விதையை மைய அரைத்திடுக. அரைத்தெடுத்துக் கொண்ட சாந்துக்குச்சரி எடை கோதுமைமாவும் வேண்டிய பசுப்பாலும் சேர்த்து அடுப்பேற்றிக் கூழ்ப்பாகமாகும் சமயம் சர்க்கரை நெய்முதலியன கலந்துகொள்க. லேகிய பதத்தில் இறக்கி ஆற்றித்தேன் பெய்துகொள்ளுக. இருவேளையும் அளவின்படி இதனை உண்டிடுக. உண்ணுநர் சரீரம் கொழுமைபெறும். அழகுபெறும். வலுவுபெறும். தாதுவிருத்தி பெறும்.

## ஜாதிக்காய்.

பொன்னிறமே யென்னவெதுப்பிய ஜாதிக்காய் நற்சிரகம் ஜாதிபத்திரி மாசக்காய் அரிசிதிப்பிலி மிளகு சுக்கு வால்மிளகு கிராம்பு இவைகளை நன்கிடித்து வஸ்திரகாயம் செய்தெடுத்துக்கொண்ட சூரணங்கள் வகைக்குக் காற்பலம் வீதம் ஒன்று சேர்த்து 3 பலம் தேன்பெய்து திரட்டி யுருட்டி இலேகியமாக்கிக் கொண்டு கழற்சிக்காய்ப் பரிமாணம் உண்டுவரின் மூலக்கடுப்பு மூலக்கிராணி வயிற்றளைவு முதலியன தீரும். தீபன சக்தியுண்டாகும்.

## தேன்னம்பூ.

தென்னம்பூ, வெள்வேலம்பட்டை, அரசம்பட்டை ஆலம்பட்டை ஒதியம்பட்டை கருவேலம்பட்டை, ஆவாரம் பட்டை, அத்திப்பட்டை, நாவற்பட்டை விடதாரிவேர்,



மாம்பட்டை முதலியவற்றை வகைக்கிரண்டிரண்டு பலம் நன்கிடித்தெடுத்துக் கொள்ளுக. இந்தப்பட்டை வகைத் தூள்களை நான்குபடி சலத்திலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிடுக. இவ்வாறு வற்றக்காய்ச்சிய நீரை ஓர்வாய் அகண்ட பாத்திரத்தில் மாற்றிக்கொள்ளுக. பின்னர் அதில் உரித்த எட்டுப்பலம் நிறையுள்ள ஒருதலை வெள்ளுள்ளியை வேகப் பண்ணுக. வெந்தபின் நன்குகடைந்திடுக. கடைந்தபின் 4 பலம் பனவெல்லம் சேர்த்துக்கொள்ளுக. பாகுபதம் வந்தபின் 2 வராகனெடை அபினியைப்பாலிற் கரைத்துச்சேர்த்திடுக. பின்னர்ச்சூரணிக்கப்பட்ட ஜாதிக்காய் ஓமம் அதிவிடயம்முதலியவற்றை இரண்டிரண்டுவராகனெடைசேர்த்து லேகிய பதங்கண்டு போதிய நெய்சேர்த்து இறக்கிக்கொண்டு இருவேளை கழற்சிக்காய்ப் பரிமாணம் 21 நாளுண்ண மூலம் மூலக்கிராணி உஷ்ணம், உஷ்ணபேதி முதலியன நிவர்த்தியாகும். இச்சாபத்தியம்.

## தீநீர் இனம்.

## ஏலம்.

ஏலக்காய் வெட்டிவேர் சடாமாஞ்சில் சந்தனத்தூள் இவை வகைக்கு அவ்வைந்து பங்குகள், எலுமிச்சம்பழத்தோல் 3 பங்குகள் சேர்த்து நைய நறுக்கி 4 படி ஜலத்திலிட்டு ஓரிராப்பக ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு 2 படியாக இறக்கிக்கொண்டு 2 பலம் வீதம் உட்கொள்ளச் செய்தால் இரைப்பை ஈரல் இருதயம் முதலியன பலப்பட்டு நரம்புகளின் மாசுநீங்கி உற்சாக முண்டாகும். இதிற் காணும் அளவினைப் பலவெடைகளாகக் கொள்ளுக.

### பெருஞ்சீரகம்.

சோம்பு 24 பலம் அகிற்கட்டைத்தூள் 1 பலம் இடித்த ஓமமும் உலர்ந்த புதினாவிலையும் $1\frac{1}{2}$ பலம் சேகரித்துக் கொண்டு 6 படி ஜலத்தில் 1 நாள் ஊறவைத்து வாலையிலிட்டு 3 படி திரவமாக இறக்கிக்கொண்டு $\frac{1}{2}$ பலம்வீதம் உட்கொள்ளச்செய்தால் வயிற்றுப்பசம் வயிற்றுவாயு முதலியன நீங்கிப் பசியதிகரிக்கும்.

### தாமரைப்பூ.

30 பலம் புதிய செந்தாமரைப்பூ விதழ்களை மூன்றரைப் படி சுத்த சலத்திலிட்டு ஒருநாள் ஊறவைத்து வாலையிலிட்டு 2 படி தீநீர் எடுத்துக்கொண்டு 2 பலம் வீதம் உட்கொண்டால் ஒற்றைத் தலைநோய் இரத்தக்கொதிப்பு பித்தசுரம் வறட்சியான இருமல் விலாவீக்கம் விடாச்சுரம், இருதயத் துடிப்பு நுரையீரல் வீக்கம் முதலியன விலகும். ஸ்ரீ லட்சுமி கடாக்ஷம் உண்டாம்.

### வெண்டாமரைப்பூ.

20 பலம் புதிய புநித வெண்டாமரைப்பூ விதழ்களை 2படி சலத்திலிட்டு முன்முறைப்படி 1 படி தீநீர் இறக்கிக்கொண்டு முன்னளவுப்படி சிறிது சீனிகலந்து உட்கொண்டுவந்தால் உட்கொதிப்பு நீர்த்தாரை எரிவுமுதலியன நீங்கி ஆரோக்கியமும் ஸ்ரீ சரஸ்வதி கடாக்ஷமும் உண்டாகும்.

### ஓமம்.

ஒரு வீசை ஓமத்தை பிடித்து 8 படி சலத்திலிட்டு ஊறவைத்து 4 படி தீநீர் எடுத்துக்கொண்டு 1 பலம் வீதம்



4, 5 முறை கொள்ள அஜீரணம் வாந்திபேதி இவை குணமாகும்.

### புதினா.

நிழலிலுலர்த்திய 20 பலம் புதினாவை ஐந்துபடி ஜலத்திலிட்டு ஒருநாளூறவைத்து மறுநாள் வாலையிலிட்டுப் பிரதிபாகம் தீநீர் சேகரித்துக்கொண்டு ஆகாரத்திற்கு முன் ஒரு பலம் வீதம் உட்கொண்டுவரின் சுரம் போம். சோறு செரிக்கும். பித்தம் சாந்தியாகும்.

### சந்தனம்.

அரைவீசை உயர்ந்த சந்தனக்கட்டைத் தூளை 4 படி சலத்தில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து வாலையிலிட்டுப் பிரதிபாகம் தீநீர் தயாரித்துக்கொண்டு உபயோகித்துவரின் இருதயம் மூளை இவை பலப்படும். இத்தீநீரில் மிதக்கும் எண்ணெய்யே அத்தரெனப் பெயர் பெறும்.

### ஆவாரம்பூ.

மூன்றேகாற் பலம் உலர்ந்த ஆவாரம்பூவோடு அவ்வெடைக் காவுஸ்பான் பூவையும் ஒருபலம் ஏலக்காயையும் உடன் சேர்த்துக்கொண்ட கலவையுடன் $2\frac{1}{4}$ படி பாலும் $2\frac{1}{4}$ படி சலமும் கலந்தேனும் $4\frac{1}{2}$ படி தனிப்பாலேனும் அல்லது $4\frac{1}{2}$ படி தண்ணீரேனும் பெய்துகொண்டு 5 நாழிகை வரையில் ஊறவைத்திருந்து முறைப்படி பிரதிபாகம் தீநீரெடுத்துக்கொண்டு அநுதினமும் 2, 3 தடவை உபயோகிக்க மதுமேகத்தாலாய அதிதாகம் நீர்ப்பிரளயம் தேக எரிவு சாதாரண அதிதாகம் முதலியன குணமாகும்.

## துத்திச் சமூலம்.

சின்னஞ் சிறு துண்டுகளாக்கப்பட்ட உலர்ந்த சீமைத் துத்திச் சமூலத்தையும் அவ்வாறே சிதைக்கப்பட்ட பச்சை வெட்டிவேரையும் சந்தனக்கட்டைத் தூளையும் வகைக்குப் பப்பத்துப்பல வெடை சேகரித்து 3 படி சுத்த சலத்தில் ஓரிரா ஊறவைத்து 1 படி திரவமாக்கிக்கொண்டு $2\frac{1}{2}$ பலம் விழுக்காடு உபயோகிக்க மேகவியாதி நீரெரிவு சூடு இவை நீங்கி ஈரலும் இருதயமும் வலுக்கும்.

## மணித்தக்காளி.

20 பலம் மணத்தக்காளி வற்றலை நைய நசுக்கி 5 படி நீரில் ஓரிரவு ஊறவைத்து அரைவாசியாகத் தீநீர்கொண்டு 2 பலம் வீதம் குடித்துவந்தால் உஷ்ணப் பிணிகள் யாவும் நீங்கும். அம்மைவார்த்து இருப்பவர்களின் கொதிப்பும் அடங்கும்.

## தாழம்பூ.

20 பலம் தாழம்பூவை நார்நாராகக் கிழித்து நிழலிலுலர்த்தி 5 படி சலத்திலிட்டு அரைப்பங்கு தீநீர்சேகரித்து முறைப்படி உண்டுவரின் மணித்தக்காளித் தீநீர் செய்யும் நன்மை யாவும் செய்யும். இத்தீநீர் செய்யும் முறைப்படியே சந்தனக்கட்டை நன்னாரிவேர் காசினியிலை முதலியவற்றின் தீநீர்களையும் செய்வித்துக்கொள்க. இவை யாவும் பிரஸ்தாப நோய்களையே பரிகரிக்கும்.

## காவுஜுபான்.

வேண்டிய அளவு காவுஜுபானை பத்துப்பங்கு தண்ணீரில் 12 மணி நேரம் ஊறவைத்து ஜலத்தை வாலை மட்பாண்டத்திலிட்டு ஊறிய சரக்கையும் துணியில் முடிந்து பிரதிபாகம் தீநீர் இறக்கிக்கொண்டு உபயோகிக்க தளர்ச்சியான உறுப்புக்கள் பலமுறும். பித்தம் மனத்தடுமாற்றம் மார்புத் துடிப்பு இருதயத்துடிப்பு மூர்ச்சா அவஸ்தை முதலியன நீங்கும். தேகபலமுண்டாகும்.



## ஓமம்.

40 பலம் இடித்த ஓமத்தூளோடு பத்துப்பலம் கர்ப்பூரத் தூளும் சேர்த்து 6 படி நீரில் ஊறப்பண்ணி 3 படி திரவமெடுத்து 1 பலமாகக் கொள்ள விரைவில் அசீரணம் வயிற்றுப் பசம் புளியேப்பம் வாந்திபேதி முதலியன நீங்கும்.

## அகில்.

நீரில் அமிழத்தக்க அகிற்கட்டை 1 பலம், ஆல்பகரா பலம் 3. ஏலக்காய் காசினிவிதை ரோசாப்பூ இவை வகைக்குப் பலம் $2\frac{1}{4}$. உலர்ந்த புதினா 5 பலம் சேகரித்து மணத்தக்காளித் திரவம் 2 படி கொத்துமல்லிக் கீரை ரசம் $\frac{1}{2}$ படி புதினாக்கீரை ரசம் படி $\frac{1}{4}$ இவை கலந்த திரவத்தில் சிதைத்து வாலையேற்றிப் பிரதிபாகம் தீநீராக்கிக்கொண்டு 1 பலம் வீதம் உட்கொள்ள ஜீரணசக்தி தீபனசக்தி ஆதிய விர்த்தியாகி இரைப்பை பலப்பட்டு வயிற்றுவலி வாயுநோய் நீங்கி தேகம் சுகமுறும்.

## சோம்பு.

40 பலம் பெருஞ்சீரகத்தைப் பன்னிரண்டுபடி தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து 6 படி தீநீரெடுத்து உபயோகிக்கத் தாகம் நீங்கும். சிறுநீர் மலம் இவற்றின் சீர்கேட்டைப்

போக்கும். பிரசவித்த ஸ்திரீகளுக்கு இந்தத் தீநீரை கொதிப்பேற்றி ஆறப்பண்ணிக் கொடுக்க அழலை (தாகம்) நீங்கும்.

### சிவகரந்தை.

ஒரு வீசைச் சிவகரந்தைச் சமூலத்தை நைய நசுக்கி 3 படி சலத்தில் ஊறவைத்துப் பிரதிபாகம் தீநீர் இறக்கி 1 பலம் வீதம் உபயோகிக்க மேக காங்கை நிவர்த்தியாகும்.

### பால்.

வகைக்குக் காற்பல வீதம் மணித்தக்காளி வற்றல் காசினிவிதை இவைகளையும், சீந்தில் சர்க்கரை மூங்கிலுப்பு வகைக்கு அரைப்பல வீதமும் ஒன்றுசேர்த்து நைய நறுக்கி 4 படி பசுச் சுயப்பால் அல்லது தண்ணீர்கலந்த பாலில் ஒரு சாமம் ஊறவைத்து வாலையிலிட்டு 2 படி தீநீர்வாங்கி வேளை யொன்றுக்கு 2 வாயளவு 3 வேளை உட்கொண்டுவர நாவறட்சி அதிநீர்ப்போக்கு அதியுஷ்ணம், உஷ்ணநீர் இறக்கம் முதலியன நீங்கித் தேகந் திரைமாறி புஷ்டியுண்டாகும்.

### போதுவினம்.

### சுவர்ந பூபதி.

கந்தகம், நவாசாரம், வெள்வங்கம், இரசம் இவை வகைக்கு 2 பலம் சேகரித்து வங்கத்தை யுருக்கி யிரசம்விட்டுத் தூள் செய்துகொண்டு கந்தகமும் பின்னர்ச் சாரமும் இட்டரைத்துக் குப்பியில் அடைத்துச் சட்டியில் துவாரம்செய்து குப்பிக்கு மத்தியில் வெண்டயங்கட்டி வலுக்கச் சீலைசெய்து சட்டியிலிட்டு 4 சாமம் எரித்தால் பூபதியாகும். இதைச்



சமயோசித அநுபானத்தில் சுர முதலிய எல்லா நோய்களுக்கும் கொடுக்கலாம். இச்சாபத்தியம்.

### ஈச்வர பூபதி.

இலிங்கம் பலம் 1. பூரம் பலம் $\frac{1}{2}$. வீரம் பலம் $\frac{1}{2}$. தூள் செய்துகொள்க. ஒரு சட்டியில் பட்டணம்படி யளவுள்ள உப்பும் செங்கல்மாவும் சமவெடை யழுத்தி அதன் நடுவில் முன் தூள்செய்து வைத்திருக்கிற மருந்தை வைத்து மேற்சட்டிக்குக் கலியாண முருங்கையிலையை நன்றாய்த் தேய்த்துப் பூசிக் காயவைத்துக்கொண்டு மேலேமூடி வலுக்கச் சீலைமண்செய்து 4 சாமம் எரிக்கவும். மேற்சட்டி காயாமல் ஈரத்துணியால் மூடிவைக்கவும். ஆறினபின் இறக்கி எடுத்துக்கொள்ளவேண்டியது. சன்னி சுரம் முதலியன நீங்கத் தேனில் அரிசிஎடை கொடுத்து உடனே இஞ்சி சுரசம் கொடுக்கவேண்டும். சுக்குச் சாந்தில் கொடுத்தால் வயிற்றுவலி நீங்கும்.

### இரச பதங்கம்.

வகைக்குக் காற்பலமாக சாதிலிங்கம் நாபி கந்தகம் மிளகு சுக்கு வசம்பு மனோசிலைமுதலிய சேர்த்து ஊமத்தைச் சாற்றால் மைபோல் அரைத்துக் குகைசெய்து உலர்த்திக் கொள்ளுக. மண்சட்டி யொன்றில் 6 விராற்கனம் இடித்த உப்பை அழுத்தி வைத்துக்கொள்க. உப்புத்தூள் மத்தியில் ஷை குகையை அழுத்தி அதில் பிரம ராக்கசியிலைச் சாற்றாற் சுத்திசெய்த $1\frac{1}{4}$ பலம் ரசத்தைப் பெய்து மேற்சட்டிமூடி 7 சீலைசெய்து 120 நாழிகை முத்தீயிட்டு எரித்துப் பஸ்பமாக்கிக் கொள்ளுக.

½ பணவெடை சர்க்கரையில் கொள்ள சத்தி குன்மம் போம். வெண்குட்டம் போம். வாதம் கெர்ப்பசூலை குடல் வாதம் சுரம் படர்தாமரை கருப்படை ஆறாப்புண் சூலை வயிற்றுக்கட்டி கபாலசூலை, இவைகள் எல்லாம் நீங்கி தேகம் திப்புரவாய் இருக்கும். வறுத்த உப்பு. இச்சா பத்தியம்.

## வேறு.

சீனக்காரம் விடை 5. வெடியுப்பு விடை 5 நவச்சாரம் விடை 3 சூடம் விடை 1 சங்குபாஷாணம் விடை 1 வீரம் விடை 1 வெண்காரம் விடை 1 துரிசு விடை 1 லிங்கம் விடை 1 பூரம் விடை 1 கல்லுப்பு விடை ½ ரசம் விடை 5 இவைகளில் பொடிக்கத்தக்கவைகளைத் தனித்தனிப் பொடித்துப் புதுச்சட்டியின் நடுவில் முதலிற் சீனக்காரப் பொடியிற் பாதியைப்பரப்பி முறையே வெடியுப்பு நவாச்சாரம் உப்புப் பொடித்தூள் வகை ப்பாதிபரப்பி சூடம் வீரம் வெண் காரம் துரிசு லிங்கம் பூரம் என்னும் இவ்வாறு சரக்குகளின் தூளையும் ஒன்றுகலந்து பாதிப்பாகத்தை முன்பரப்பிய தூள் களின் மேல்பரப்பி நடுவில் விரலாற் பள்ளஞ்செய்து, அதில் பாஷாணப்பொடியிற் பாதியைப்பரப்பி அப்பள்ளத்தில் ரசத் தைப்பெய்து எஞ்சிய பிரதிபாகப் பாஷாணப்பொடியையும் அதன் மேற்பரப்பி அதன்மேல் உப்புப்பொடி பின்னர்நவாச் சாரப்பொடி. அதன்மேல் வெடியுப்புப்பொடி அதன்மேல் சீனக்காரப்பொடி இவைகளைப்பரப்பி மெதுவாய் அழுத்தி மேற்சட்டி மூடி 7 சீலைசெய்து உலர்த்தி வாலையடுப்புப் போன்ற அடுப்பேற்றி கருவேல் விறகால் 1¼ நாழிகை கமல மாகவும் 1¼ நாழிகை தீபமாகவும் 1¼ நாழிகை காடாகவும்



எரித்து மறுநாள் பதங்கங்கண்டு அரிசி எடை ரசதாளிவாழைப் பழம் சுக்கு பனவெல்லம் இவ்வநுமானங்களில் சரீர நிலை மைக்கேற்றபடி 7, 5, 3 வேளைகொடுக்க அரையாப்பு பிர மியம் புண் சூலை முடக்குவாயு மேகரிணம் மேகவாயு மர்மப் புற்று குன்மம்முதலியன தீரும். தூர்வியாதிகளுக்கு உப் பில்லாப் பத்தியமும் மற்றவியாதிகளுக்கு இச்சா பத்தியமு மாய் இருக்கவேண்டும். (விடை=வராகனெடை)

## வீரபதங்கம்.

கௌரி இருபங்கு வீரம் ஒருபங்கு சேகரித்துப் கௌரி யைப் பொடித்துப் பிரதிபாகம் ஒருசட்டியிற் பரப்பி நடுவில் வீரத்தைவைத்து எஞ்சிய கௌரியையும் பரப்பிமெல்ல விர லால் அழுத்திச் சீலைமண்செய்து ஒருசாதி விறகால் 1½ சாமம் எரித்துத்தக்க அநுமானங்களிற் கொடுக்கக் காதக ஜின்னி விஷபேதிமுதலியன நிவாரணமாகும்.

## குழந்தைகளுக்குச் சுகபேதி.

(இனிப்போடு கூடியது)

திராட்சை கற்கண்டு சுத்தியான வாளம் வகைக்குப் பலம் 5. கடுகுரோகணி பலம் 3. சுக்கு ஓமம் மிளகு வகைக்கு வராகனெடை 1. ஒன்றுசேர்த்துக் கல்வத்திட்டு நறுநெய்யும் புதுத்தேனுமிட்டு 4 சாமம் அரைத்துச் சாடியிற் பெய்துகொண்டு மிளகளவு குழந்தைகளின் வயசுக்கேற்றபடி கொடுக்கலாம். அடை முதலிய பலகாரங்களில் தடவியும் கொடுக்கலாம். பேதியதிகமானல் மோர்சாதம் கொடுக்கவும். வசம்பைச் சுட்டுக் கருக்கிக் காய்ச்சிக் கொடுக்க. சாயந்திரம் வசம்புக் கஷாயம் உட்கொள்ளச் செய்க.

### ஆடாதோடை லேகியம்.

இடித்துப் பிழிந்து வடித்து எடுத்துக்கொண்ட 1 படி ஆடாதோடை இலைச் சாற்றில் தனித்தனி அவ்வைந்துபலம் கடுக்காய் திப்பிலிச் சூரணமும் இலவங்கபத்திரி ஏலக்காய் இலவங்கப்பட்டை சிறுநாவற்பூ இவற்றின்சூரணம் வகைக்கு மும்மூன்று பலமும் கற்கண்டு சூரணம் 15 பலமும் சேர்த்துக் காய்ச்சிச் சுண்டிவரும் சமயம் பத்துப்பலம் தேன்கூட்டி விடாமல் கிளறி லேஹ்ய பாகத்தில் இறக்கிக் கொள்ளுக. தாமிர பாத்திரத்தில் ரசத்தைக் காய்ச்சி லேகியம் செய்து கொள்ளவேண்டும், தினம் 1-க்கு 1 தோலாவாக 3 தரம் உபயோகிக்கவேண்டும். இது காசம் சுவாசம் க்ஷயம் இவைகளைப் போக்கும். க்ஷயரோக சம்பந்த மூச்சுத்திணறலையும் மூக்கு பல் இவைகளிலிருந்து திடீரென்றோ வழக்கமாகவோ இரத்தம் கசிதலையும் போக்கும்.

### நிம்பாதிக் கஷாயம்.

வேப்பம்பட்டை பலம் 2. சீந்திற்கொடி பலம் 1. பேய்ப்புடல் பலம் 1. ஆடாதோடை பலம் $1\frac{1}{2}$. கண்டங்கத்திரி பலம் $1\frac{1}{2}$ இடித்து ஒருபடி ஜலம் சேர்த்துப் பதினாறில் ஒரு பங்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி சிறிதளவு வேண்டுமானால் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவேண்டும். இது ஒரு வேளைக்கான அளவு. நாள் 1-க்கு 3 வேளை பருகவேண்டும் 4, 5 நாள் சாப்பிடவேண்டும். நாட்பட்ட சுரத்துக்கு 2, 3 வாரம் உபயோகிக்க. இது பித்த சுரத்துக்கும் குளிர்காய்ச்சலுக்கும் சிலாக்கியமானது.

### நெல்லிக்காய் லேகியம்.

வெடித்து முதிர்ந்த நெல்லிக்காய்ச்சாறு ஒருபடியுடன் திப்பிலிச் சூரணம் 6 பலமும் அதிமதுரச் சூரணம் 2பலமும்



திராட்சைப்பழ கற்கம் 4 பலமும், 12 பலம் சர்க்கரையும் சேர்த்துச் சிறுகச்சிறுக எரித்துக் காய்ச்சி இறுகிவரும் சமயம் 6 பலம் தேன்பெய்து கிளறி இறக்கி மட்பாத்திரம் அல்லது பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்திக் கொண்டு வேளை 1-க்கு $\frac{1}{4}$ பலம் வீதம் உட்கொண்டுவந்தால் அரோசகம், அக்கினிமந்தம் காமாலை ஈரல்நோய் முதலியன சுகமாகும்.

### வச்சிரகண்டி மாத்திரை.

சுத்தியான உலாந்த லிங்கம் வராகனெடை 8. ரசசெந்தூரம் வராகனெடை 2, ரசகர்ப்பூரம் வராகனெடை 1: வீரம் வராகனெடை $\frac{1}{8}$. இவைகளுள் ரசச்செந்தூரத்தைக் கலுவத்திலிட்டுப் பொடிசெய்து பின்பு ஒவ்வொன்றாய் முறையே சேர்த்து மிகவும் நுட்பமாய் அரைத்துப் பின்னர் பழச்சாற்றால் ஒரு சாமம் அரைக்கவும். பிறகு 1 சாமம் தோலும் சுண்ணாம்பும் நீங்கிய இஞ்சிரசத்தால் அரைக்க. குன்றிப் பரிமாணம் மாத்திரைகளாக்கி நிழலிலுலர்த்திச் சர்க்கரையில் 1 மாத்திரை கொண்டு அதன்மேல் இஞ்சிரம் 1 $1\frac{1}{2}$ பலம் குடிக்க வேண்டும். 3 வேளைக்குள் கொடிய சுரங்கள் நீங்கும். தக்க அநுபானங்களில் 10 நாள் கொடுத்தால் பிரமேகம் புண் கண்டமாலை முதலியன நீங்கும். 5 நாளைய மருந்தில் பீஜவாதம் முதலியன நீங்கும் புளி புகையிலை ஆகாது.

### கந்தக தைலம்.

தாளகம் வராகனெடை 1. வெடியுப்பு 1 பலம் வீரம் சாரம் வரைக்கு வராகனெடை 2 கந்தகம் பலம் 5 கலுவத்திட்டு பசுநெய் சிறிது சிறிதாகக் கொடுத்து 4 சாமமரைத்து

எல்லாச் சரக்கும் உறவாகும்படி குழம்பு பதப்படுத்திக் கொண்டு ஒரு முழம் வெள்ளைத்துணியில் தடவி திரிபோலத் திரித்து இரும்புக் குறட்டினால் பிடித்துக்கொண்டு கீழே ஒரு கோப்பையை வைத்துத் திரியைக் கொளுத்திவிட்டுச் சொட்டும் தைலத்தைச் சேர்த்துக் கொள்ளுக. தீயின் சுடர் குன்றின் கீழ்ச்சேர்ந்திருக்கும் தைலத்தில் சிறிது முகந்து திரிமீது விடுக. இம்மாதிரியாக அத்திரியிலுள்ள வஸ்துக்கள் எல்லாம் தைலமாம்படி சேர்த்துக்கொண்டு வேளை 1-க்கு 7. 8. துளிவரையில் 1 வராகனெடை சர்க்கரை அநுமானத்தில் இருவேளை தேக நிலைமைக் கேற்றபடி $\frac{1}{4}$. $\frac{1}{2}$. மண்டலம் உட்கொள்ள கிராணி திமிர் குட்டம். குன்மம், செம்படை கரும்படை கண்டமாலை. ஊறல்படை புண்புரைகள் சூலைகள் புற்று முதலிய பலநோய்களும் நிவர்த்தியாகும் பத்தியமில்லை. நல்லதேக காந்தியுண்டாகும்.

## ஏரண்ட லேகியம்.

16 பலம் ஆமணக்குக் கொட்டையைத் தண்ணீரில் வேகவைத்து எடுத்து மேலோடு போக்கி 4 படி பாலிற் சேர்த்துக் கமலாக்கினியால் அரைவாசி சுண்டினதும் 8 பலம் நெய்யையும் 32 பலம் கற்கண்டுப் பொடியையும் சேர்த்து நன்குபாகமாகக் கிளறி அடியிற் கண்டுள்ள வஸ்திரகாளிதம் செய்யப்பட்ட சூரணங்களைக் கலந்து லேகியமாக்கிக் கொள்ளுக.

சரக்குகளின் விவரம்:—வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை அளவுள்ள ஓமம் மஞ்சள் மரமஞ்சள் கோஷ்டம் தேவதாரு, வாலுளுவை, சித்திரமூலம், செவ்வியம் லவங்கப்பட்டை ஏலக்காய் லவங்கபத்திரி சிறுநாகப்பூ சுக்கு மிளகு திப்பிலி



கிரந்தி தகரம் காவட்டம்புல் சடாமாஞ்சில் கிச்சிலிக்கிழங்கு வில்வவேர் கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல் நெல்லிக்காய்த்தோல் தண்ணீர்விட்டான்கிழங்கு நெருஞ்சில் தாமரைக்கிழங்கு வாய்விடங்கம் பொன்முசுட்டை கொட்டைக்கரந்தை அமுக்கிருக்கிழங்கு சிற்றாமுட்டி நற்சீரகம் முதலியவை வகைக்கு வராகனெடை $2\frac{1}{2}$.

இதை $\frac{1}{2}$ தோலா உட்கொள்ள வாதரோகங்கள் சுகமாகும். வயிற்றுவலி போம். நீர்க்கோவை வயிற்றுப்பொருமல் மூத்திரப்பைச்சூலை மலபந்தம் குன்மம் இடுப்புவலி இவைகள் குணமாகும். கீல்வாயு அறவே நீங்கும்.

## நாக்குப்பூச்சி நிவர்த்திக் கஷாயம்.

ஓமம் புரசவிரை பேய்பீர்க்கு பிரண்டை வகைக்கொரு பலம் இடித்து $\frac{1}{2}$ படி சலத்திலிட்டு $\frac{1}{8}$ படியாகக் காய்ச்சி 3 நாள் காலையிற் சாப்பிட நாக்குப் பூச்சிகள் பந்து பந்தாய் விழும். மாம்பருப்பை அரை வராகனெடை பொடித்து வெல்லத்தில் வைத்துக்கொடுக்க பொடிக்கிருமிகள் ஒழியும்.

## சூதகவாயுவால் உண்டாகும் வயிற்றுவலிக்குக் கிருதம்.

உரித்த பூண்டு பசும்பால் வகைக்குக் காற்படி இஞ்சிரசம் அரைப்பலம் இந்துப்பு ஒருபலம் காயம் அரைப்பலம் பனைவெல்லம் ஒரு பலம் இவைகளைப் பசும்பாலில் அரைத்துக் கரைத்து வெளியாகும் நாளிலிருந்து 5 நாள்வரை கரண்டியளவு சாப்பிட சூதகவலி பிள்ளையில்லாமை ருதுகுன்மம் முதலியன தீரும். பாலும் சோறும் கொள்ளவேண்டும். வேறொன்றும் ஆகாது.

## சீந்திற் கஷாயம்.

சீந்திற்கொடி அதிவிடயம் மல்லி சுக்கு வில்வவேர் வெட்டிவேர் கோரைக்கிழங்கு நிலவேம்பு வெட்பாலை பொன் முசுட்டை தாமரைக்கிழங்கு செஞ்சந்தனம் வகைக்கு ஒவ்வொருபலம் இடித்து 1 படி ஜலத்திலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி ஆறின பிறகு 3 வேளையாகக் கொள்ள அதிசார சுரம் அதி தாகம் இருதயத்துடிப்பு இவை நீங்கும்.

## வயிற்றுப் பொருமல் நிவாரணி.

சீரகம் கருஞ்சீரகம் திப்பிலி இந்துப்பு மிளகு சுக்கு ஓமம் இவை சமவெடை இச் சமவெடைக்கு எட்டிலொரு பங்கு பெருங்காயம் சேர்த்துச் சூரணஞ்செய்து $\frac{1}{2}$ தோலா முதல் 1 தோலா வரையில் உட்கொள்வதுடன் வெந்நீரும் கொள்ள குடலைப்பற்றிய சகல கோளாறுகளும் வயிற்றுப் பொருமலும் தீரும்.

## தாளிசபத்திரி சூரணம்.

ஏலக்காய் லவங்கப்பட்டை வகைக் கரைப்பங்கு தாளிசபத்திரி ஒருபங்கு மிளகு 2 பங்கு சுக்கு 3 பங்கு திப்பிலி 4 பங்கு மூங்கிலரிசி 5 பங்கு, சரக்குகளைக் கிரமப்படி வஸ்திரகாயஞ் செய்து 32 பங்கு சீனி சேர்த்துப் பெரியவர்கள் $\frac{1}{2}$ ரூபா எடையும் சிறுவர்கள் $\frac{1}{8}$ ரூபா எடையும் இருவேளை கொண்டால் பெருஞ் சுவாசம் காச ரோகம் ஜலதோஷம் அஜீரணம் இவை நீங்கும். தினம் 3 வேளை உபயோகித்தால் தீபன சக்தியுண்டாகும்.

## ஜலமஞ்சரி.

அயம் காந்தம் படிக்காரம் கல்நார் வெண்காரம் சலா, சத்து (குழந்தைகளுக்குப்) பால் புகட்டும் சங்குப்பொடி



கந்தகம் சால்திரபேதி இவை வகைக்கு 1-க்கு வராகனெடை 2. இவற்றின் மொத்த எடைக்கு வெடியுப்பு சேர்த்துக் கல்வத்திலிட்டு மெழுகு பதமாய் அரைத்துக் குகைபிற்பெய்து நெருப்பிலிட்டு உருகினசமயத்தில் எடுத்து ஆறவிட்டு பணவெடையாகக் கரிசாலைக் கஷாயம் வெந்நீர் இளநீர் இவைகளிற் கொடுக்க சோகை வீக்கம் கௌசை பாண்டு நீராமை முதலியன நில்லாமல் ஓடும்.

## சிந்தாதி எண்ணெய்.

விளக்கெண்ணெய் 1 சேர் தேங்காய்ப்பால் 8 சேர் வேலிப்பருத்திச் சாறு 8 சேர் கருள்ளிச்சாறு 1 சேர் காயம் உள்ளி வெண்காரம் காட்டெருமைப் பால் கடுக்காய் இந்துப்பு கருஞ்சீரகம் திப்பிலி வகைக்கு 1 கழஞ்சு வாளம் 1 பலம் சேர்த்துக் கல்வத்திலிட்டு மைபோலரைத்துப் பாண்டத்திட்டுக் குழப்பி ஒரேசாதி விறகால் எரிக்க எண்ணெய் சுத்த சலம்போலிருக்கும். அதனை வடித்து 1 கழஞ்சுவீதம் அந்தி சந்தி 12 நாள் சாப்பிட சொறி சிரங்கு அழலை தாகம் விக்கல் குன்மம் கௌசை கிரந்தி அரையாப்பு சூலை பரங்கிப்புண் உட்கௌசை நாக்கடைப்பு கருப்பசூலை கண்ணெரிவு பூச்சிவெட்டு சூதகவலி வெட்டை துர்மாமிச வளர்ச்சி பௌத்திரம் நீராம்பல் வாய்ப்புண் ஊதுவாயு இவை தீரும். இச்சாபத்தியம்.

## தீபன கற்கம்.

மிளகு சீரகம் கண்டதிப்பிலி அரிசிதிப்பிலி மேல்தோல் சீவின இஞ்சி சதகுப்பை கிராம்பு இவைகள் சம எடை சேர்த்துச் சுத்த ஜலம் விட்டு நன்கரைத்து வெயிலிலுலர்த்தி

மறுபடியு மிடித்து வஸ்திரகாயஞ் செய்து வெந்நீரில் திரிகடி கொள்ள தீபன விருத்தியாகும்.

### பாவனக் கடுக்காய்.

100 சூரத்துக் கடுக்காய்களை அரிசி கழுவிய நீரில் போட்டு 3 நாள் ஊறவைத்து நான்காம் நாள் சுத்த ஜலம் விட்டுக்கழுவி மறுமுறையும் முன் ஊறவைத்தபடி 3 நாள் ஊறவைத்து ஏழாம் நாள் ஜலம்விட்டுக் கழுவி மறுமுறையும் கழுநீரில் 3 நாள் ஊறப்போட்டு 10 ம் நாள் சுத்தசலத்தால் அலம்பி விதைகளை நீக்கி மட்பாண்டத்தில் சேர்த்து எட்டுச் சேர் பசுமோர்விட்டு விதையெடுத்த கடுக்காயின் நிறைக் கேற்ற கடலுப்பும் கலந்து அடுப்பேற்றி மெதுவாய் எரித்து நீர் வறண்டபின் சுக்கு இந்துப்பு ஓமம் வகைக்கு விடை 7. திப்பிலி கண்ட திப்பிலி சித்திர மூலவேர்ப்பட்டை செவியம் வகைக்கு விடை $3\frac{3}{4}$ நன்கிடித்துச் சூரணித்து வஸ்திர காயஞ்செய்து தூவிப்பழச்சாறு $\frac{5}{8}$ படி கூட்டி வெயிலில் வைத்து மறுநாள் தோலும் சுண்ணும்புநீறும் போக்கிய $\frac{5}{8}$ படி இஞ்சிரத்தைச்சேர்த்து வெயிலிலுலர்த்திப் போசனத் துக்கு முன்னும் பின்னுமாக உட்கொண்டால் மந்தம், இருமல், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, சூலை வாந்திநோய் மூலம் அரோசகம் அன்னத்துவேஷம் பீலிகை பீநசம், பல் வகைப் பாண்டு பித்தம் இரத்த பித்தம்முதலிய ரோகங்கள் நீங்கும். சரீரம் வலுக்கும்.

கடுக்காயின் பிரபாவம் பற்றிக்கூறும், அரிய பெரிய நூல்கள் அனந்தம் உண்டு. கடுக்காயிற் பல்வகையுண்டு. அததற்குப் பற்பல நாமங்களும் வருண பேதங்களும் பிறவு முண்டு.



எஃதெவ்வாறாயினும் கடுக்காயைப் போன்றுமனிதர்க்கு நன்மை புரியும் நற்பொருள் வேறொன்றுமின்று. ஏற்றுக் கெனின் பெற்றதாயும் கடுக்காயும் ஒன்று என்றும் பெரும் புகழ் படைத்திருத்தலால்.

> "கடுக்காயுந் தாயுங் கருதிலொன் றென்றாலுங்
> கடுக்காயத் தாய்க்கதிகங் காணீ—கடுக்காய்நோ
> யோட்டி யுடற்றேற்று முற்றவன்னை யோசுவைக
> ளூட்டியுடற் றேற்று முவந்து."

என்னும் சிந்தாமணியின் நந்தாவுரையை நானிலங் கடைப்பிடித்து நன்மைபெற்று வாழுமாக. சுபம்.

## கலம்பகம்.

### அபாயத்தில் அநுசரிக்க வேண்டிய சிற்சில அத்தியாவசிய சிகிச்சைகளும் பிறவும்.

### தண்ணீரில் விழுந்தவன்.

இவனை விரைந்து தூக்கி அதிசீக்கிரம் அவனது வாயி லும் மூக்கிலும் புகுந்துள்ள சலத்தைத் துடைத்தல் வேண்டும். வாயைத்திறந்து அது மூடிக்கொள்ளாதபடி மரக்கட்டை யொன்றைச் செருகல்வேண்டும். அவனைக் குப்புறப்படுத்தி அவனது கக்ஷங்களிற் கைகளைச்செலுத்தி நுரையீரலிலுள்ள நீர் எல்லாம் வாயாலும் மூக்காலும் வந்துவிழும்படி இடுப்பை மட்டும் தூக்கிப்பிடித்தல் வேண்டும். இவ்வாறு நீர் வெளி யான பின் உடம்பைக்கீழே விட்டுவிட வேண்டும்.

பின்னர்த்துணியைச்சுருட்டி அடிவயிற்றின் கீழ்வைத்து விட்டு முதுகின்மேற் கையை வைத்துப் பலமாக அழுத்தி யழுத்திக் கைகளை எடுத்துவிடவேண்டும். இம்மாதிரி பன்

முறைசெய்தல்வேண்டும். இப்படிச்செய்வதால் நுரையீரற் கண்ணுள்ள காற்று வெளியேறும். அழுத்துவதை நிறுத்தின் காற்று நுரையீரற்கண் நுழையும்.

நீரில் விழுந்தவனுக்கு ஏதேனும் சுவாசக்குறி தோன்றின் மேற்கண்ட முறையை ஒருமணிவரையில் செய்தல் வேண்டும். உதவிக்கு இன்னும் வேறொருவர் பக்கத்திருப்பின் அவரைக்கொண்டு மூழ்கினவன் உடம்பை நன்றாய்த்தேய்க்கச் சொல்ல வேண்டும்.

சீசாக்களிலாவது வாய்குறுகிய பாத்திரங்களிலாவது வெந்நீரை நிரப்பி அவன் உடம்பின் பக்கத்தில் வைப்பது நல்லமுறை. இவ்வெந்நீர் அதிக சூடுடையதாயிருப்பின் மூச்சடைபட்டுள்ள உடம்பைச் சுட்டுவிடும்.

இம்முறைகளையன்றிச்சர்வ சாதாரணமாக அவனைச் சக்கரத்திற் குப்புறப்படுத்திச் சுற்றுவதும். தலைகீழாய்ப் பிடித்துக்குலுக்குவதும,முதுகை மேற்புறப்படுத்திக்கொண்டு தும்பி சுற்றலைப்போற் சுற்றலும் பிறவும் அவ்வளவு ஏற்ற முறைகளாகா.

### நெருப்புத் தீயுண்டவனும், வெந்நீர்க்கோப்புளம் உள்ளவனும்.

தீயிற் பட்டவிடத்தைக் குளிர்ந்த தண்ணீரில் வைப்பதுண்டு. பின்னர்த்தேங்காய் எண்ணெயையும் முட்டை வெள்ளைக் கருவையும் பூசுவார்கள். ஈரத் துணியைப் புண்ணின்மேல் ஒவ்வொரு தினமும் பற்பல தடவைபோட்டு வைப்பது உண்டு.

தீப்பட்ட விடத்தை நறுந்தேனால் பூசிவைப்பின் எரி கொப்புளங் காணாது, உப்பு, சுண்ணாம்பு, வாழைப்பட்டைச்



சாறு உருளைக்கிழங்கு இவைகளைப் பூசிவைத்து கொப்புளங் காணாப்படி சாந்தி செய்வாருமுளர். எரி கொப்புளங் கண்டபின் உலர்ந்த அரசம் பழுப்பைக் கருக்கித் தேங்காய் எண்ணெயுடன் கலந்து பூசிவரின் நாற்றம் நீங்கிப் புண் விரைவில் குணமாகும்.

தீப்பட்டு இரணம் கண்டால் இலுப்பைக் கட்டையை மேற்றோல் நீக்கிச் சந்தனம்போ லரைத்துத் தடவுவாரும் உளர்.

வெந்நீர் விரணம், நெருப்புக்காயம், சர்க்கரைப் பாகு பட்ட காயம், சுடு எண்ணெய்க் காயம் இவைகட்கும் இம்முறைகளையே அநுசரிக்கவேண்டும்.

சரீரத்தில் கொதிக்கும் வெந்நீர்படின் கொப்புளங்கள் கிளம்புகின்றன. இக் கொப்புளங்களில் நீர் சேர்ந்து அதிக வேதனை யுண்டானால் ஊசியால் கொப்புளங்களைக் குத்திச் சுண்ணாம்புத் தெளிவு ஜலத்தில் நல்லெண்ணெய் சேர்த்துக் குழப்பி அதில் துணியை நனைத்துப் போட்டுவரவும். துணி காயாமல் ஷை தைலத்தை விட்டுக்கொண்டு வரவும்.

தேங்காய் எண்ணெயைத் தடவி வாழையிலையை வைத்துக் கட்டிக்கொண்டு வருவாருமுளர். இவ்வாறு செய்யின் அற்ப ரிணங்களும் ஆறும். நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டும்.

### எலும்பு முறிந்தவன்.

முறிபட்டவனுக்கு வைத்தியன் உதவி அவசியம் வேண்டும். வைத்தியன் சமீபத்தில் இல்லாதபோது சிறிது தேர்ச்சியுள்ள வாலிபச் சாரணர்களின் உதவியேனும் வேண்டும்.

இவ்விருவர் உதவியும் இல்லாதபோது நோய்ப்பட்டவனை அசையாமற் படுக்கவைத்துக் கொள்வதே முதன் முதல் செய்விக்கவேண்டிய முக்கிய வேலையாம்.

மரக்கிளைகள் முறிவுண்ட முனைப்பாகங்களில் சிறும்புகள் தோன்றுவதுபோல என்பு முறிந்த விடங்களில் சிறும்புகள் வெளிப்பட்டு மாமிசத்தையும் தோலையும் கிழித்துக் கொண்டு மேற்கிளம்பி புண்களை உண்டாக்காதபடி அசையா வண்ணம் செய்விப்பது மேல்.

கை எலும்பு முறிபட்டவனுக்கு 2 அங்குல அகலமும் 1 அடி நீளமுமுள்ள பிளாச்சு போதுமானது. கால் முறிவுண்டவனுக்கு 2 அங்குல அகலமும் கால் நீளத்துக்கும் வற்ற பிளாச்சும் வேண்டும். என்பு முனைகள் பொருந்தும் படியும் வலியுண்டாகாதபடியும் துணி மடிப்புகளோடு கட்டி வருதல் வேண்டும்.

## சுளுக்கு உண்டவன்.

முட்டுகளை விரைவாகத் திருப்புவதினாலேயே இஃதுண்டாகிறது. பெரும்பாலும் மணிக்கட்டும் கணுக்காலும் சுளுக்குவதுண்டு.

எவ்வளவு சூடு பொறுக்கமுடியுமோ அவ்வளவு சூடுள்ள வெந்நீர் நிரம்பிய பாத்திரத்தை அவ்வவ்விடங்களில் வைப்பதே மேல்.

## முட்டுகள் பிசகல்.

எலும்புகள் அவை இருக்கும் இடங்களை விட்டுப் பிசகினால் முட்டுகளை அசைக்க வியலாது. அதைப் போக்க வேண்டுமானால் (திரும்பப்) பொருந்தச் செய்விக்கவே வேண் வேண்டும். தக்க மனுஷர்கள் மூலம் சிகிச்சை செய்து



கொள்ளவேண்டும். 2. 1 நாள் சுணங்கினால் அதிக கஷ்டம் உண்டாகும்.

## தேள்.

கொட்டினவுடனே நவாச்சார ஜயநீர் வெடியுப்புத் திராவகம் இவைகளில் ஒன்றைத் தடவினால் விஷம் முறிந்துவிடும். விஷ மேறிவிட்டால் நாயுருவிக் கொழுந்தைக் கசக்கித் தடவலாம். கத்தரிக்காயைச் சுட்டுப் பிசைந்து கொட்டினவிடத்திற் கட்டிவந்தால் வேதனை நீங்கும். ஆளிவிரையும் உப்பும் சேர்த்து அரைத்துத் தடவுவாருமுளர்.

## நண்டுத்தெறுக்கால்.

எட்டிவேர்ப் பட்டையை அரைத்துச் சுண்டைக்காய்ப் பருமன் வீசம்படி சலத்துடன் உட்கொண்டு, கொட்டுவாயில் கத்தரிக்காயைச் சுட்டு வைத்துக்கட்ட விஷம் நீங்கும்.

## பாம்பு.

எருக்கிலைக் கொழுந்தை யரைத்துக் கழற்சிக்காய்ப் பருமன் உட்கொள்ளலாம். கொழுந்தையேனும் மென்று தின்னலாம். விழுங்க மெல்ல சக்தியற்றவர்கள் சலத்திற் கரைத்துக் குடிக்கலாம். இதன்பின் வெங்காயச்சாறு போதுமான வரையில் கொடுக்கவேண்டும். இந்தச் சாற்றைக் கலிக்கமாகவும் உபயோகிப்பர். மூக்கில் நசியமாகவும் உபயோகிக்க காதுகளிலும் பிழிந்திடுக. இம்மூன்று முறைகளையும் உள்ளுக்குக் கொடுத்தபிறகே செய்யவேண்டும்.

## தாம்பூல மயக்கம்.

சுருள்ளி 1. 2. தின்னத்தீரும். மெல்ல முடியாவிடின் சாறாக உபயோகிக்க. மார்பு அடைப்பு மயக்கம் வாந்தி வேர்வை இவை முதலியனவும் நீங்கும்.

## எலிகடி.

எலிகடியுண்டவர்கள் $\frac{1}{32}$ படி குப்பைமேனிச்சாறும் $\frac{1}{32}$ படி நல்லெண்ணெயும் சேர்த்துச் சாப்பிடவேண்டும். வறுத்த உப்பு சேர்ந்த கஞ்சி கொள்ளவேண்டும்.

## சரமண்டலம் சீதமண்டலம் நண்டுத்தேறுக்கால் முதலிய கடிகளுக்கு.

பெருந்தும்மட்டி சிறுதும்மட்டிப் பழங்களை வரகு வைக்கோலால் கொளுத்திக் கம்பளியில் வைத்துப் பிழிந்த சாறும் புளியைத் தண்ணீர் தெளித்து இடித்துப் பிழிந்தசாறுச சமஎடை கூட்டி வெயிலில்வைத்து இறுகினபின் பருத்திக் கொட்டைப் பரிமாணம் உள்ளுக்குக் கொடுக்கத் தீரும். வறுத்த உப்பு சேர்நத கஞ்சி நல்லது.

## நாய் நரி கடிகளுக்கு.

நல்லெண்ணெப்படி $\frac{1}{2}$ சிறுபடைச்சாறு படி $\frac{1}{8}$ கலந்து 5 நாள் கொள்ளவேண்டும். வறுத்த உப்பு சேர்த்த கஞ்சி கொள்ளவேண்டும். ஆறும் நாள் யாவும் சேர்த்துக் கொள்க. பிரண்டையும் வெங்காயமும் சேர்ந்த சாந்தை 3 தடவை கடிவாயிற் கட்டட் நாய்க்கடி நீங்கும்.

## நாபி உண்டவன்.

1 கடுக்காய் 3 தான்றிக்காய் 1 நெல்லிக்காய் இவைகளை இளநீரிலரைத்துத் தேங்காய்ப் பாலில் கரைத்துக் கொள்ள பச்லச நாபி விஷம் போகும்.

## காது குத்தல்.

மருள், இலைக்கள்ளி, திருநீற்றுப்பச்சை இவைகளுள் ஒன்றின் சாற்றைக் காதில் ஊற்றித் துணியால் அடைத்து



வைக்கவேண்டும். இதில் வீக்கம் கண்டால் காயம், சுக்கு, அபினி இவைகளைச் சேர்த்து அரைத்துப்பூசி அனலிற் காய்ச்சிவர வீக்கம் நீங்கும்.

## நீர்ச்சுருக்கு

வேண்டிய இளநீரில் திருநீற்றுப்பச்சை விதையை 1-மணி நேரம் ஊறவைத்துக் குடிக்க நீங்கும். தனி இளநீரும் கொள்வதுண்டு. முள்ளங்கிச் சாற்றோடு வெள்ளைச் சருக்கரை கலந்துண்பாரு முளர்.

## தேக ஸ்தூலம் நீங்க.

4 குன்றி கொம்பரக்கைத் தூளாக்கிக் காடியுடன் கலந்து 40 நாள் சாப்பிடப் பெருத்த சரீரம் சிறுக்கும்.

## கண்மறைவு.

கருங்காலியைச் சலத்திலிழைத்து நேத்திரத்தில் தீட்டிவர நீங்கும். கடுகு ரோகணியைத் தூளாக்கி மைபோலிடக் கண்மறைவு நீங்கி ஒளியுண்டாகும்.

## கண்டமாலை.

கருங்காலித்தூளை சாராயத்துடன் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தைக் கொள்ள நீங்கும்.

## தேமல்.

மான்கொம்பைக் காடியிலிழைத்துப் பூசி மாலையில் குளித்துவர தேமல் போம். மார்புவலிக்குத் தண்ணீரிலிழைத்துப் பூசிக் குணமுறுவாரும் உள்ளுக்குக் குடித்துச் சுகப்படுவாரும் உண்டு. பலகறை (கவடி) யையும் வெண்காரத்தையும் பழரசத்தில் உரைத்துப் போடுவாரு முண்டு.

பாடு

பூமாதுளம்பூவும் காவிக்கல்லும் தனித்தனி ½ வராகனெடை அரைத்துட்கொள்ளத் தீரும்.

நீர்ச்சுருக்குப் பிரமியம்.

பொரித்த படிக்காரம் சீனக்கற்கண்டு நெல்லிவற்றல் சூரணம் இவை சமவெடை சேர்த்து வேளை யொன்றுக்கு 1 வராகனெடை வீதம் பசுமோரில் கலக்கி தினம் 3 வேளை 1 வாரம் குடிக்க தீரும்.

பல்வலி எயிறுகரைதல்.

தனித்தாளிசபத்திரிச் சூரணத்தால் பல்விளக்க வலி நீங்கி எயிறு பலத்துப் பல் கெட்டிப்படும்.

உடம்பு அசதி.

5 மிளகு 4 கிராம்பு வேண்டிய அளவு இலவம்பூமொட்டு இவை சேர்த்துக் கழற்சிக்காய்ப் பரிமாணம் சாந்தாக்கி 3 நாள் கொள்ளச் சுகமாகும்.

பித்த கிறுகிறுப்பு நீங்க.

சீனக்கற்கண்டு சீனிச்சர்க்கரை நற்சீரகம் பசுநெய் பழச்சாறு இவை தனித்தனி 2 பலம் ஒன்று சேர்த்துக் காலையில் படுக்கையிலிருந்து எழும்பும் முன்னே 1 கரண்டி வீதம் 20 நாள் கொள்ள எல்லாப் பித்த மயக்கங்களும் விலகிப் போகும்.

கைகால் எரிவு.

பிள்ளைப்பாலும் ஆமணக்கெண்ணெயும் நன்கு மத்தித்து உள்ளங்கை உள்ளங்கால்களில் பூசி சூடுபிறக்க 3 நாள் தேய்க்கச் சுகமாகும்.



பிள்ளை மாந்தம்.

இரட்டைப் பேய்மிரட்டியிலையை உப்புவறுத்த சட்டியில் வதக்கிச்சாறு பிழிந்து 3 நாள் 1 சங்களவு கொடுக்க நீங்கும். மேற்படிசாற்றை விலா விருபுறங்களிலும் பூசவேண்டும். காட்டுமொச்சையிலையை இவ்விதம்செய்து நோய் நீக்குவாருமுளர்.

கருமேகம்.

அவுரிவிதை, கடுகு இவை சமவெடைப் பழச்சாற்றுலரட்டித் தடவி மாலையிற் குளித்துவர நீங்கும்.

பௌத்திரம்.

கரட்டோணானைப் பிடித்துக்கால் தலைவாங்கி சதையை நசுக்கிப் பௌத்திரக்கண்களில் வைத்துக்கட்ட பூச்சிகள் நீங்கிவிடும். பின்னர்க் காட்டு மரவட்டையைக் காயவைத்துப் பொடித்து ரணத்திற்போட்டுக் காட்டாமணக்கு பாலும் நல்லெண்ணெயும் கலந்து சீலையில் நனைத்துப்போட ரணம் ஆறும்.

வயிற்றுக் கடுப்பு.

ஆனை நெருஞ்சி யிலையை ஒருபல அளவு எருமைத்தயிரிலரைத்து 3 நாள் 6 வேளைகொள்ள நீங்கும்.

முத்தினமாம் பட்டையை இடித்துப்பிட்டவியல் செய்து துட்டெடை நற்சீரகம் அரைத்துக்கலந்து எருமைத்தயிரோடு 6 வேளை கொள்ளுவதும் உண்டு.

ஆவாரை வேர்ப்பட்டை மேற்படி பூவரும்புசமவெடை அரைத்து எருமைத்தயிரிற் கொள்வதும் ஒருமுறை.

### பிரமியத்தால் உண்டான இருமல் நீங்க.

$\frac{1}{2}$ பலம் முசுமுசுக்கை வேரை நன்றாய் அரைத்துப் புது வெண்ணெயில் வடையாகச்சுட்டு 6 வேளை உண்ணப்பித்த வெட்டையும் இருமலும் தீரும்.

### படர் தாமரை.

சட்டித்தகர விரையை மோர்விட்டரைத்து 1 வாரம் பூசிக்குளிக்க படர் தாமரை சுகமாகும்.

### இலிங்கப் புற்று.

பாம்பிற்குத் தண்ணீர் கொண்டுபோகும் ஊமச்சிக்கூடு என்று வழங்கும் நத்தையைப் புளியிலைச்சாற்று லரைத்துப் பூசினால் புற்றும் உள் இரணங்களும் நீங்கும். அந்தப் பூச்சைப்புளியிலைச் சாற்றால் கழுவிவிடவும். அப்போதைக் கப்போது புதிது புதிதாகக் களிம்பு செய்துகொள்ளவேண்டும்.

### நுணைக்காய்க் கிரந்தி.

வைக்கோலால் வாட்டிய கொடிக்கள்ளிச்சாறு $\frac{1}{4}$ படியைக் காலைமாலை பகிர்ந்து சாப்பிட்டு உப்பில்லாக்கஞ்சி கொள்ள வேண்டும். இம்மாதிரி 5 நாள் செய்யவேண்டும். பின்னர் 4 நாள் மருந்தின்றி வறுத்த உப்பிட்ட கஞ்சியை உண்டு பத்தியம் காக்கவேண்டும். 10-ம் நாள் கஞ்சிதேய்த்து முழுகி 11-ம் நாள் ஆமணக்கெண்ணெய் ஸ்நானம் கொள்ளவேண்டும்.

கிரந்தி இரணமா யிருந்தால் காசுக்கட்டியை உமிழ் நீரி விழைத்து மேற்பூச்சு பூசவேண்டும்.

### கிரந்திப் புண்.

வெள்ளைக் கொன்றைப்பட்டையை அரைத்துப் பசு மோரிற் கலந்து காற்படி இருவேளை பகிர்ந்து உட்கொள்ள



வேண்டும். மேற் பூச்சும் பூசுக இவ்வாறு 7 நாள் செய்திடுக. இச்சா பத்தியம் இருந்திடுக.

### பாண்டு வீக்கம்.

நூறு வருடஞ்சென்ற (கொல்லன்) கிட்டத்தை நன்குடைத்து நையக்கலுவத்திட்டு ஓயாது அரைத்துப் பின்னர்க் கரிசாலைச் சாற்றால் 3 நாள் நன்கரைத்துத் தேற்றான்கொட்டைப் பிரமாணம் உண்டைசெய்து 7 நாள் சாப்பிடவேண்டும். வீக்கம்தீரும். இச்சாபத்தியம். கிட்டம் மடியும்படி அரைத்துக்கொள்ளவேண்டியது வைத்தியன் கடமையாகும்.

### மார்புவலி மார்படைப்பு மார்புநோய் உருத்திரவாயு இவை நீங்க.

7. இலைக்கள்ளி நுனிக்கொழுந்து. 5 மிளகு. 3 வெள்ளுள்ளித் திரிபு. இவைகளை ஒன்று சேர்த்து நன்கரைத்து உருண்டைசெய்து சாப்பிடவேண்டும் இஃது ஒருவேளைக் கேற்ற மருந்து இவ்விதம் அந்தி சந்தி 2 வேளையும் கொள்ள வேண்டும். 5 அல்லது 7 நாள் கொள்ளவேண்டும் திருநீற்றுப் பச்சிலைச்சாற்றில் சர்க்கரை கலந்துண்ண மார்புவலிதீரும்.

### பீஜவாதம், வீக்கம், ஒற்றைப்பீசப்பெருக்கம் பீஜஇறக்கம்.

2 படி வரகரிசியை நன்றாய்ப் பொரியும்படி வறுத்துச் சூரணம் செய்துகொண்டு ஒருபடி ஒட்டகச் சிறுநீரில் பிசறி சூரியபுடம் வைத்துத் திரிகடி இருவேளையும்கொள்ள மேற்கண்ட நோய்கள் நீங்கும். இச்சாபத்தியம்,

### மல ஜல பந்தன நிவாரணி.

சுட்ட ஒரு மஞ்சட்கொம்பைச் சுண்ணாம்போடு சேர்த்தரைத்து வெந்நீரில் கொள்ள மல சலம் தாராளமாய் இறங்கும்.

## பாஷாணம்.

இப்புகை தாவப் பெற்றவர்கள் கோவையிலைச் சாற்றைத் தலைக்குத் துவளல் இட்டுக்கொள்வதுடன் உள்ளுக்கும் ஒரு கரண்டி கொள்ளவேண்டும். இவ்விதம் 3 நாள் கொள்ளவேண்டும்.

## காமாலை.

வெள்ளாட்டுப் பாலும் கோழியவரைச் சாறும் சரிபாகம் கலந்து 7 நாள் சாப்பிட்டு உப்பு புளி தள்ளிப் பின்னர் 3 நாள் வறுத்த உப்பும் கஞ்சியும் கொள்க.

## பிரமியமும் இருமலும் நீங்க.

வஸ்திரகாயம் செய்த ஒரு பலம் நற்சீரகத்தை ஒருபடி பசும்பாலும் ஒருபடி முசுமுசுக்கைச் சாறும் சேர்ந்த பாண்டத்திலிட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி நெய்யும் தேனும் பெய்யாது லேகிய பதத்தி லிறக்கிக்கொண்டு 2 வராகனெடை 2 வேளையும் கொள்ளவேண்டும்.

## நீரடைப்பு நீங்க.

ஒருவருடனும் பேசாமல் நடந்துபோய்ச்சங்கஞ்செடியை அடைந்து இலை பறித்துக்கொண்டுவந்து ஒருவருடனும் பேசாது அரைத்து நெய்யிற் குழைத்துக் கழற்சிக்காய்ப் பிரமாணம் 3 நாள் சாப்பிடச் சுகமாகும். $1\frac{1}{4}$ வராகனெடை வால்மிளகுத் தூளை 1 சேர் சலத்திற் கலந்து தினம் 1-க்கு 3 வேளை கொடுக்க நீங்குவதும் உண்டு.

## விரேசனம்.

விளக்கெண்ணெய் 1 பலம் மிளகுத்தூள் $\frac{1}{2}$ பலம் கற்கண்டு தூள் $\frac{1}{2}$ பலம் ஒன்று சேர்த்து உட்கொள்ள நன்கு விரேசனமாகும்.



## காதிரைச்சல்.

வேளையிலைச்சாறும் நல்லெண்ணெயும் சமன்கூட்டி காதிற் பெய்து கொள்ளவேண்டும்.

## பிரமேக நிவாரணி.

ஒரு சேர் புளியங்கொட்டையை நைய நசுக்கி $\frac{3}{8}$ படி ஜலத்திலிட்டு ஓரிரவு ஊறவைத்துப் பிசைந்து வடித்துக் கொடுக்கவும் இஃது ஒருவேளை அளவு. அன்றுடகம் செய்து கொள்ளவேண்டும். உறைப்பு உதவாது இச்சாபத்தியம்.

## பல்விஷ நிவாரணி.

ஒரு பலம் நற்சீரகத்தை $\frac{1}{2}$ படி சலத்திலிட்டு நாலொன்றாய்க் குறுக்கி 1 பலம் தேன் பெய்து கொடுக்க வேண்டும். இது ஒருவேளை. இம்மாதிரி 6 பொழுது கொடுக்க ஸ்தாவரவிஷம் சங்கமவிஷம் ரசவேகம் பாஷாணவேகம் வெறிநாய்க்கடி முதலியன தீரும்.

## மிருக நகக் காயங்கள்.

தேனும் ரோஜாப்பூ எண்ணெயும் கலந்து காயங்களிற் பூசிவர புரையோடாமல் காயம் ஆறும்.

## அபினி.

அபினி போதை நீங்க சுத்த தேனை உட்கொள்ள வேண்டும். ஆனால் உடனே வாந்தி பண்ணி விடவேண்டும்.

## வாய் வேக்காடு.

மருதோன்றி இலையைக் கஷாயம்செய்து வாய்க் கொப்பளிக்க வேக்காடு நீங்கும்.

## பல்லில் இரத்தம் வடிதல்.

சம எடை சுக்கு இந்துப்பு கடுக்காய் காசுக்கட்டி இவைகளைச் சேர்த்துப் பொடித்துப் பல்துலக்கிவர இரத்தம் வடிதல் நின்றுபோகும்.

## அடிபட்டு இரத்தங் கட்டிய வீக்கம்.

காம்பாய்ந்த வேப்பிலையை அரைத்து நல்லெண்ணெய் கலந்து களியாக்கி அடிபட்ட விடங்களிற்கட்ட குணமாகும்.

## மாலைக் கண்.

கருந்துளசிச் சாற்றைக் கண்களில் 2. 1. துளி மூன்று நாள் வரை விட்டுவர அந்தி மாலைநீங்கும்.

## சிரங்கு.

சுத்தியான கந்தகம் இரசம் நீரடிமுத்து வகைக்கு விடை ¾ கொண்ட சரக்குகளை விரை நீக்கிய ஊமத்தங்காய்க்குள் புகுத்தி மூடி சாணியால் கவசமிட்டு 5.6.எருவில் புடமிட்டுக் காயோடு எருமை வெண்ணெய் கொண்டரைத்துக்குழப்பி 2. 3. மணிநேரம் வைத்திருந்து ஸ்நாநம் செய்துவரச்சுகமாகும்.

இதுவுமேயன்றி ஆவரைக்கொழுந்து 1 பலம் பருப்புக் கந்தகம் காலரை எடை ஒன்றுசேர்த்து நல்லெண்ணெய் ஊற்றியரைத்து நல்லெண்ணெயிற் குழப்பி மேலுக்குத்தடவிவர சொறியுஞ் சிரங்கும் தீரும். இந்தச்சுத்தியான பருப்புக் கந்தகங்கலந்த கற்கத்திற் குன்றிப்பரிமாணம் உள்ளுக்குக் கொள்ளுவாருமுண்டு. முதிர்ந்த பூவரசம்பட்டைத் தூளைத் தேங்காய் எண்ணெயிற் கூட்டி சூரியபுடமிட்டும் தடவுக.

## கீல்வலி.

வெள்ளைக்காட்டாமணி இலைச்சாறும்பசுப்பாலும் சமன் கலந்து ⅛ படி அளவு உட்கொள்ள கில்வாயு நீங்கும். உப்பில்லாப் பத்தியம்

## சரீர எரிவு.

$\frac{1}{16}$ படி வீதம் தட்டைப்புங்கன் இலையைச்சாறு பிழிந்து 3 நாள்கொள்ள எரிச்சல் நீங்கும்.



## கண்ணிற் பூ விழுந்தால்.

புங்கன்வேரைக் கழுதைப்பாலி லிழைத்துப் போட்டேனும், காடியும் கழுதைப்பாலும் கலந்து கண்ணிலிட்டேனும் தேற்றான் கொட்டையைப் பழச்சாற்றில் உரைத்துப்போட்டேனும், கொவ்வையிலைச் சாற்றைப்பெய்தேனும், ஒற்றை நந்தியாவர்த்தப் பூச்சாற்றில் சொக்க வெள்ளியை உரைத்திட்டேனும் நீக்கவேண்டும்.

## பூனைக்கடி.

குப்பைமேனி வேரை அரைத்துப் புன்னைக்காய்ப் பரிமாணம் பசுப்பாலிற் சேர்த்து உட்கொள்ளத் தீரும்.

## கண் சிவப்பு.

சந்தனத்தை உரைத்துக் கழற்சிக்காய்ப் பரிமாணம் உண்டைசெய்து அதனுள் நறுக்கிய 1 வெங்காயத்தை வைத்துத்துணி மூலமாய்ப் பிழியவேண்டும்.

## கட்டிகள்.

சுண்ணாம்பும் மஞ்சளும் கலந்தாவது, அழுக்கிருவும் சுக்குங் கலந்தாவது, சுண்ணாம்பும் தேனும் கலந்தாவது முட்டை வெள்ளையம்புளியும் சுண்ணாம்பும் கலந்தாவது முகத்தை விலக்கிப் பற்றுப்போடவேண்டும். கட்டி கரைந்து விடும். சிற்சில சமயம் அமுங்கியும் போம்

அத்தியிலை தழுதாழையிலை வாதநாராயணன் இலை (வாதமடக்கி இலை) ஊமத்தையிலை, காட்டாமணக்கிலை இவைகளை வதக்கிக் கட்டினாலும் கூடிய சீக்கிரம் பழுக்கும். அல்லாமலும் அரிசிமா கோதுமைமா வாழைப்பழம் ரொட்டி பழைய சாதம் முதலியவைகளைக் களிகிண்டி கட்டுவதும் உண்டு. இந்த முறை வேதனையைத் தணிக்கும். சீக்கிரம்

பழுக்கும். கட்டிமேல் அபினியை உரைத்துப்போட எரிச்சலும் நோவும் குறையும். சீழ்க்கொண்டால் விரைவிற் சீயை வெளிப்படுத்தத் தக்க பக்குவம் செய்தல் வேண்டும். முள்ளிக்கீரைச் சாம்பல் உத்தாமணிப்பால் முதலியன கட்டி வாயைத்திறப்பிக்கும் முறைகளாம். வாட்டிய ஊமத்தை இலையை எண்ணெயிற் தடவிப்போட்டுச் சுகப்படுத்துவது நமது பழையமுறை.

கட்டிகள் உடைய.

முள் உள்ள சப்பாத்திப்பூவை [நாகதாளி] அரைத்துக் கட்டியின்மேற் பூசி அது விழாதபடி ஒரு இலையை வைத்துத் துணியாற் கட்டிவைத்தல் விரைவில் உடைந்துபோகும்.

பிரசவ வேதனை தீர.

அரைத் துட்டெடைக் குங்குமப்பூவையும் அரைத் துட்டெடைப் பெருஞ் சீரகத்தையும் சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுக்க வேதனை தீர்ந்து சுகப்பிரசவமும் ஆகும்.

சீதபேதி.

புளித்த எருமைத் தயிரைச் சுடுசாதத்தில் கலந்து கொடுப்பதும், வெங்காயத்தை நெய்யில் வறுத்துக் கொடுப்பதும், அத்திப்பாலை வெண்ணெயிற் கலந்து கொடுப்பதும், கசகசா லேகியம் கொடுப்பதும், மோரில் ஊறிய சுக்கை மோர் விட்டரைத்து வில்லையாக்கி அரசிலையாற் கவசித்து மோரிலேயே வேகப்பண்ணிய களியைக் கொடுப்பதும், மோர்விட்டிடித்த அத்திப்பட்டைச் சாற்றில் 1 வாயளவு 4, 5 தடவை கொடுப்பதும், இடித்த தென்னம்பூ விரசத்தை 4, 5 முறை மேற்கண்ட அளவு கொடுப்பதும், ஒரு வராகனெடை வெந்தயத்தை வாயிற்கொட்டி சுத்த சலத்தை விழுங்கக் கொடுப்பதும் விளாங்காய்க் கஷாயத்தைத் தினம் 1-க்கு 4, 5



தடவை கொடுப்பதும், ஆமணக்கெண்ணெயில் வறுக்கப்பட்ட கடுக்காய்ப்பூவைப் பொடித்துத் தேன் கலந்து கொடுப்பதும், சவ்வரிசிக் கஞ்சியிற் பால் சேர்த்துக் கொடுப்பதும் ஆகிய பல்வகைச் சிகிச்சைகளுள் ஏதேனு மொன்றைச் செய்து சீதபேதியைப் போக்குவாரும் உளர்.

இரத்த பேதி.

கால் துட்டெடை ஏலத்தையும் அரைத்துட்டெடை சிறு நாவற்பூவையும் பசுப்பாலி லரைத்து 3 நாள் 6 வேளை சாப்பிடவும். பின்னர் சவ்வரிசிக் கஞ்சியைச் சாப்பிடுக. வயிற்றில் வலியிருப்பின் ஆமணக்கெண்ணெய் தடவுக.

பொன்னுக்கு வீங்கி.

இதனைப் புத்தாலம்மை யெனப் பகர்வர். பொன்வாடைபடுமாறு பொற் சரட்டைக் கழுத்திற்கிடுவாரு முளர். இஃது ...ச்சில் விழுங்கற் கேலா இன்னல் விளைக்கவல்லது.

இதற்கு வெந்நீர் ஒற்றடம் கொடுக்கலாம். சூடேறிய துணியையும் ஒற்றுக்கொடுக்கலாம். அமுக்கிருக்கிழங்கை இழைத்து ...க்கத்தின்மேல் பற்றுப்போடலாம். பேதிக்குங் கொடுக்கலாம்.

குரல் கம்மல்

வெங்காயத்தை வேவித்துண்டாலும் விளாம்பிசினை ...யிலடக்கிக்கொண்டு அதன் ஊறலையுண்டாலும் சுகமாகும்.

வயிற்று வலி.

சம எடை உப்பு சுக்கு வசம்பு இவைகளைப் பொடித்துப் பனைவெல்லத்திற் பிசைந்துண்ண வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி உஷ்ணவாயு இவைதீரும்.

இதுவுமேயன்றி அரைப்படி சலத்தில் காற்பலமிளகை உடைத்துப்போட்டு $\frac{1}{16}$ படியாகக்குறுக்கிச் சாப்பிட உடனே வயிற்றுவலி தீர்க்கும்.

சமவெடை சுக்கு மல்லி பெருஞ்சீரகம் முருங்கை வேர் இவைகளை இடித்துக் கஷாயமிட்டுச் சிட்டிகை வெடியுப்புச் சேர்த்துக் கொடுத்திடுக.

வலி யதிகமானால் கலைக அரைத்துப்பற்றும் போடலாம். சுக்கும் கிராம்பும் சேர்த்துக் கஷாயமிட்டும் கொடுக்கலாம்.

1 பலம் முள்ளிக்கீரைவேரையும் $\frac{1}{4}$ பலம் ஓமத்தையும் 1 பூண்டையும் அரைத்து உட்கொள்ளின் அதிசீக்கிரத்தில் யாவரும் ஆச்சரியப்படும்படி வயிற்றுவலி நிவர்த்தியாகும்.

இடுப்புவலி.

முதிர்ந்த தேங்காய் ஒன்றைத் துருவிப் பாதிப்பூவை வேட்டில் இட்டு அதன் மத்தியில் 2 பலம் உரித்த பூண்டை வைத்துப் பிரதி பாகப்பூவையும் மேலே சேர்த்து மூடி எரித்து அவித்துப் பூவோடு பூண்டையும் உண்டால் தீரும். இவ்விதம் 3 வேளை உண்ணவேண்டும். இச்சாபத்தியம். சாதிபத்திரியைத் தேனிலரைத்துப் பூசவும் குணந்தரும்.

வயிற்றிரைச்சல்.

வெள்ளுள்ளி ஒன்றை மஞ்சட்சாந்தால் கவசித்து அடுப்பிட்டுச் சுட்டுப்பூண்டுத் திரிபுகளைத் தின்ன நீங்கும்.

இவ்விதமே அரைத்த உப்பால் கவசித்த சுக்கைப்புடமிட்டு உப்பை நீக்கிச் சுக்கைச் சூரணித்துச் சாப்பிட்டு வெந்நீரருந்தவும் சுகமாகும்.

பளியேப்பம்.

நற்சீரகம் உப்பு மிளகு சமனடை தூள்செய்து வாயிலிட்டு வெந்நீர் கொள்ளச் சுகமாகும். கஞ்சி சாப்பிடுவது நல்லது.



அஜீரணம்.

சுக்கு மிளகு ஓமம் இவைகளை மேற்சொன்னபடி உபயோகிக்க அஜீரணம்போம். வெட்பாலையரிசியும் பெருங்காயமும் சமஅளவுபொடித்து 5, 6, வேளை கொடுக்கவும் போம்.

வயிற்றுப்புசம்.

திரிகடுகுக் கஷாயம் சுகப்படுத்தும். மலப்பிரவர்த்திக்கு விரேசனமும் எடுத்துக் கொள்ளலாம்.

பல்வலி.

உப்பை வறுத்து ஒற்றிடம் கொடுக்கலாம். அபினியை உரைத்துத் தடவலாம். சுக்கையேனும் அக்கிரகாரத்தையேனும் வாயிலடக்கிக் கொள்ளலாம். வேலம்பட்டைக் கஷாயத்தைக் கொப்புளிக்கலாம்.

உப்பு மிளகு நெய் இவைகளைக் கலந்தரைத்துப் பல்லில் வைப்பதும், உப்பையும் பளிங்கையும் சேர்த்து கசக்கி வைப்பதும் உண்டு.

புழுப்பல்.

அபினியையும் கர்ப்பூரத்தையும் சேர்த்து உருண்டை செய்து பல்லிடை வைத்தால் சுகந்தரும்.

இரத்த வாந்தி.

கோவை வேரை அவின்பாலி லரைத்துச் சர்க்கரையும் எச்சாறுங் கலந்து 3 நாள் உட்கொள்ள நீங்கும்.

உதிரக்சிக்கல்

சுக்கு மிளகு திப்பிலி சிற்றரத்தைச் சமவெடை தேனிட்டரைத்து மெழுகு பதமாக்கிக் கொண்டு 1 குன்றி பனவெல்லத்தில் கொடுக்கச் சுரம் சன்னி இசிவு வயிற்றுச்

சிக்கல் இவை நீங்கும். பிரசவத்துக்குப் பின் வயிற்றிற் றங்கியுள்ள அழுக்குகளும் நீங்கும்.

கண்ணோய்.

சூடேறிய இருப்புத் தகட்டில் படிகாரத்தைப் பொரித்துப் பழரசம் விட்டரைத்துக் கண்ணைச் சுற்றிப் பற்றுப் போடலாம். கண்ணில் விழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

கற்றாழைச் சோற்றில் பொரித்த படிக்காரத்தைக் கலந்து துணியில் வைத்து ஒற்றிடம் கொடுக்கலாம். கொம்மட்டிப் பழரசத்தைச் கண்ணுக்கிடலாம். வெங்காயச் சாற்றையும் உபயோகிப்பதுண்டு.

பால் சுரம்.

இது பிரசவித்த பெண்களுக்கு நேரும் நோய். இது பால் கட்டால் உண்டாவது. மல்லிகை மொக்கை (மலரக்கூடிய பக்குவத்திலுள்ளது) மார்பில் வைத்துக் கட்டி வருவதே நல்ல முறை. முல்லைப்பூவைக் கொள்வாரும் உண்டு.

வதக்கிய வெற்றிலை, மொச்சைக்கொட்டைக் கூழ், பன்னீரால் குழைக்கப்பட்ட மொச்சைமாவு, அரைத்த வெங்காயம் இவைகளைப் பூசிச் சுகப்படுத்துவது முண்டு.

ஜலதோஷம்.

நெருப்பில் வெல்லத்தை யிட்டாவது, வெந்நீரிற் கொச்சி செங்கல் இவைகளை யிட்டாவது, இன்னும் பல் வகைப்பழக்கத்திலுள்ள வேறுகளை யிட்டாவது சுகப்படுத்துவாரு முளர்.

சுக்கு மிளகு அரத்தை அதிமதுரம் இவைகளின் கஷாயத்தை உட்கொள்வது முண்டு.



மஞ்சள் மிளகு இவைகளு ளொன்றைச் சுட்டுப் புகையை ஆக்ராணமாக்கிக் கொள்வாரு முண்டு.

கொள்ளுக்கஞ்சி கோரோசனை மாத்திரை கஸ்தூரி மாத்திரை முதலியவற்றுள் பின்னைய விரண்டும் சிறு குழந்தைகளின் ஜலதோஷத்தைப் போக்கும்.

சாம்பிராணி சுக்குகஸ்தூரிமஞ்சள் புழுங்கலரிசி இவைகளை அரைத்துப்பற்றுப்போடலாம். தலையிலும் தேய்க்கலாம். தலைவலியுண்டானால் தான் இம்முறையை அநுசரிக்கவேண்டும்.

தலைநோய்.

நவாச்சாரமும் சுண்ணாம்பும் கசக்கி மோக்கச் சுகமாம். வாலாஜாப்பேட்டைச் சர்க்கரையைத் தீயிலிட்டு வேது பிடிக்கலாம். தாய்ப்பாலில் ஊறிய சுக்கைத் துணியிலிட்டு ...யமிடலாம். கலிக்கமும் இடலாம்.

மயிர் உதிர்வு.

மயிர் உதிர்ந்த விடத்தில் பிரதிதினமும் வெங்காய சாறு அல்லது பாவலிலைச்சாறு தடவிவரச் சுகமாகும்.

பக்குவ மடையா மங்கையர்.

செம்பருத்தியிலை, பூ, தேங்காய் இவை சமவெடை ...ரைத்த எலுமிச்சங்காய்ப் பரிமாணம் இருவேளையும்கொள் ...ப் பெண்கள் விரைவில் சமைவார்கள்.

மார்புச்சளி.

சமவெடை தூதுளை கண்டங்கத்திரி இவற்றின் சாறு ...ளை முரித்துச் சீனிபோட்டுக் குடித்தால் சளிக்கட்டு கபக் ...ட்டு இவை நீங்கும்.

தேக காங்கை.

கற்றாழை மடலைப்பிளந்து வெந்தயத்தை ஓரிரவு அதனுள் வைத்திருந்து வெந்தயத்தை மாத்திரம் பசுப்பாலிலரைத்துச் சாப்பிடவேண்டும். இதனால் காங்கை நீங்கும்.

மண்டைக் குற்றல்,

மகிழம் வித்தைத் தாய்ப்பாலி லரைத்து நசியமிடக் குணமாகும்.

குளிர்ச் சுரம்.

மிளகாய் குப்பைம்மேனியிலை சமவெடை அரைத்துச் சுண்டைக்காய்ப் பரிமாணம் கொடுக்கச்சுகமாகும்.

புற்றுக்கடி.

எருக்கின்பாலும் எருமை வெண்ணெயும் மத்தித்துச் தடவிவரச் சுகமாகும். வங்கும் நீங்கும். சொறி முதலியனவும் போம். (வங்கு = முகத்தில் படரும் கறுப்பு)

கண் மங்கல்.

சந்தனம் கற்றாழைச்சோறு அதிமதுரம் இவை சம வெடை அரைத்துத் துணியிலிட்டுத் தண்ணீர் வடிந்தபின் தாய்ப்பாலிலரைத்துத் தலையிற் பற்றுப்போடக் கண் மங்கலும் எரிவும் நீங்கும்.

ஆண்மை.

வெள்ளாட்டுப்பால் $\frac{1}{16}$ படி வெள்ளைக் குன்றிமிலைச் சாறு $\frac{1}{16}$ படி கலந்து 3 நாட்கள் காலையில் மாத்திரம் உட் கொண்டு உப்பில்லாச் சோறு உண்டுவந்தால் ஆண்டன்மை யுண்டாகும்.

வாந்தி.

கருவேப்பிலை ஈர்க்கைத் தாய்ப்பால் விட்டரைத்து பிழிந்து கிராம்பும் திப்பிலியும் சமவெடைப் பொடித்துப் போட்டுக் குடிக்க நிவர்த்தியாகும்.

வறட்சி யிருமல்.

கருதாலி யிலையை நெய்யில் வதக்கிச் சாப்பிடத்தீரும்



அருசி.

மாதுளம்பழ ரசத்தோடு இந்துப்பும் நெய்யும்சேர்த்துச் சாப்பிட நீங்கும்.

மார்புச் சிலந்தி.

கந்தகம் ரசம் ஊமத்தைவிரை சமவெடை, நல்லெண்ணெயிலரைத்துப் பூசிவரச் சுகமாகும்.

நாக்கு முள்.

இஞ்சிரசம் பழச்சாறு இந்துப்பு இவைகளைச் சமன் கலந்து உட்கொள்ள நாக்குமுள்ளும் போய் அருசி அக்கினி ந்தம் முதலியனவும் குணமாகும்.

வாய்ப்புண் தொண்டைப்புண்.

கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல் நெல்லி முள்ளி னைக்காஞ் சொறிவேர் சாதிபத்திரி மரமஞ்சள் சீந்திற் கொடி இவை சமஞ்சேர்த்துக் கஷாயமிட்டுத் தேன் கலந்து உட்கொள்ள வாய்ப்புண்ணுந் தொண்டைப்புண்ணுங் குணமாகும்.

விக்குள்.

சுக்கு திப்பிலி நெல்லிவற்றல் இவைகளைச் சமபாகஞ் சூரணித்துத் தேனுஞ் சர்க்கரையும் கலந்து கொள்ள நீங்கும்

கொட்டைப் பாக்கு நற்சீரகம் இவை சமன்கருக்கிச் சூரணித்துத் தேனில் மத்தித்து நாவிற் றடவிவரவும் சுகமாம்.

சர்க்கரைத்துண்டைக் காடியில் நனைத்துத் தின்ன விக்கல் நீங்கும்.

அக்கினிமந்தம்.

பழரசம் இஞ்சிரசம் சமன் சேர்த்து வேண்டிய அளவு இந்துப்பும் கலந்துகொண்டு போசனத்துக்குமுன் சாப்பிடக் குணமாகும்.

வாந்திபேதியில் உண்டாகும் வாந்தி.

ஒரு பிடி ஓமத்தைச்சட்டியிட்டுச் சாம்பராக்கியதில் ½ படி சலம்விட்டு நாலொன்றாய்க் குறுக்கிக்கொடுக்கக் குணமாகும்.

பல்லசைவ.

மாசக்காய் கடுக்காய் ச... படிக்கா... துரிசு கொம்பரக்கு இலை... ாச் சமனொ... ரிடித்துப் பல் துலக்கிவர அசைவு நீங்கும்.

ஒற்றைத் தலைநோய்.

கொட்டைப்பாக்களவு இலுப்பைக் கட்டியைத் ணீரிலூறவைத்துச் சீலையிற் பொதிந்து நோக்கா பக்கத்துக்காதிற் பிழிய ஒற்றைத் தலைவலி சுகமாகும்.

கைகால் குடைச்சல்.

பூமிச்சர்க்கரைக் கிழங்கைச் சுத்தசலத்தில் அரைத் பூசிவரக் கைகால் குடைச்சல் தீரும்.

அடிபட்டுக் கண் கலங்கியகண்.

ஊமத்தையிலையைக் கசக்கி 3 துளி கண்ணில் இட் கொள்வதுடன், அவ்விலைச்சக்கையோடு 5மிளகையும்சேர் அரைத்துக் கண்ணின்மேல் வைத்துக்கட்டவும் சுகமாகும்.

பிரமேகம்

2 பலம் முள்ளுக்கீரைவேரை நசுக்கி ½ படி ஜலத் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சிக் காலைமாலை சாப்பிட் வரத் தீரும். மூத்திரக்கட்டை விரைவில் உடைக்கு.

மாந்தம்.

இலைக்கள்ளிப்பாலும் ஆமணக்கெண்ணெயும் சேர்த்துக்காய்ச்சி வடித்து 4. 5 சொட்டு உட்கெ ...ள்ளைகளுக்குண்டான பால் கட்டு குணமாகும்.



மேற்படி இலையை நெருப்புத் தணலில் வாட்டிச் சாறு பிழிந்து கரண்டியளவு கொடுத்தால் சகலமாந்தமும் கபக்கட் டும் நீங்கிச் சுகமுண்டாகும். தாய் வெந்நீரன்னங் கொள்ள வேண்டும்.

ஊமத்... வளர்ச்சி.

அக்கிர... சுகமாகு...

தகட்டின்மேல்...

கல...

...ந்த...

...மறி

...யந்துபோம்.

...மூக்கு.

...டைந்து இரத்தம் வரினும் பீநசத்தால் இரத் வரினும் அதிமதுரத்தூளை 2 சுட்டிகை இழுக்கவேண்டும்.

நீரேரிச்சலும் பிரமியமும்.

ஆனை நெருஞ்சிற் சமூலத்தை 1 படி சலத்திலிட்டு ...டியர்க் குறுக்கி வடித்து காலை மாலை 10 நாள் உட் ...சரீரம் வெளிவரும்சமயம் உண்டாகும் நோவும்

...ரிச்ச...

...ர்க்கி...

½...

...ட்டு 18 ... சிறிது ...

சிறுநீர் ... ளுள்ள சகல...

... தின்ற பி...

இக் நிழ்க்கா ...கலவிவோர், கடுச்

குடை 2. மிளகு ... சேர்த்த...

மோரிற் கரைத்து ஒரு சங்களவு மூன்றுநாள் உள்[illegible]
கொடுக்கச் சுகமாகும்.

சுத்தமாய்ப் பிழிந்து வடித்து எடுத்துக்கொண்ட[illegible]டும் [illegible]
மைச் சாணிப்பால் தெளியில் ஒரு சங்களவு உள்[illegible]
கொடுக்க மண் முதலியன வெளிப்பட்டு விடும்.

## உருளைக்கிழங்கு.

[illegible]யின் பால் முருங்கைப்பூச் சாறு செவ்வி[illegible] கட்டு
கெல்லிகாயச சாறு [மொந்தன்] [illegible]க்கட்டைச[illegible]
தேங்காய்ப் பால் செங்கரும்பு சம் கிழ[illegible]
ணீர் விட்டான் கிழங்குச் சாறு இவை[illegible]
படியும் 1 வீசைச் சீனிகற்கண்டும் [illegible]
பண்ணி பக்குவங்கண்டு ஏற்கனவே[illegible]
செய்து உதிர்த்து வைத்துள்ள ஒரு வீ[illegible]
மசியலையும் கலந்துகொண்டு சிறிது கோரததுகுள[illegible]
யொன்றுக்கு 1 பலம் வீதம் வெந்திரகாயஞ் [illegible]
சுக்கு மிளகு திப்பிலி ஏலரிசி சன்னரிவேர் பறங்[illegible]
இவற்றின் சூரணங்களையும் கொட்டி 2 சேர் நெய்[illegible]
கிண்டி இறக்கிச் சூரியபுடமிட்டு நாள் 1க்குக் [illegible]

[illegible]

சிறிது [illegible]
உள்ள சகல[illegible]
தின்ற பின்[illegible]
இர[illegible]ழ்க்கா[illegible] கலவிவேர், கடு[illegible]
கு 2. மிளகு [illegible]